# தமிழ்மொழி கற்பித்தல்

வளநூல் - இரண்டாம் ஆண்டு

(ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி)



தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம்

# தமிழ்மொழி கற்பித்தல்
## (Teaching of Tamil)

### இரண்டாம் ஆண்டு

### வளநூல்

### ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்


## தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

கல்லூரிச்சாலை, சென்னை - 600 006

© தமிழ்நாடு அரசு
முதற் பதிப்பு - 2009

# வளநூல் ஆசிரியர் குழு

**வல்லுநர்**
முனைவர் **த. பரசுராமன்**
முதுநிலை விரிவுரையாளர்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
இலாஸ்பேட்டை, புதுச்சேரி - 605 008

**மேலாய்வாளர்**
முனைவர் **இ. கோமதிநாயகம்**
முதுகலைத் தமிழாசிரியர் (ஓய்வு)
11/83, காசி எஸ்டேட், ஜாபர்கான்பேட்டை
சென்னை - 600 083

**நூலாசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்**
**த. தனுஷ்கோடி**
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவனம்
காளையார் கோயில் - 630 551,
சிவகங்கை மாவட்டம்.

**நூலாசிரியர்கள்**

**கோ. பழநிவேல்முருகன்**
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவனம்
முனைஞ்சிப்பட்டி, நெல்லை மாவட்டம்

**எ. முத்துக்கிருஷ்ணன்**
தேர்வுநிலைத் தமிழ் விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவனம்
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்

முனைவர் **பா. கிருட்டிணமூர்த்தி**
விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவனம்
சென்னை - 600 005

**விலை: ரூ.**

வளநூல் தயாரிப்பு: தமிழ்நாடு அரசுக்காக **ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம்,** சென்னை - 600 006.

இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

## *இயக்ககத்திலிருந்து...*

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

மாணவர்களின் திறமைகளை வளப்படுத்துவதும் சுயக் கட்டுப்பாட்டை வளர்ப்பதும் சிறந்த கருத்துகளைக் கேட்டுணரச் செய்வதும் எதையும் கற்றுக்கொள்வதில் முனைப்பை ஏற்படுத்துவதுமெனக் கல்வியின் பரிமாணங்கள் பலவாகும். இக்கல்வியைக் 'கலைத்திட்டம்' (Curriculum) எனும் முறையான ஒழுங்கமைப்புடன் அளித்தலே கல்வி நிறுவனங்களின் தலையாய பணியாகும்.

கலைத்திட்டம் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், சூழலுக்குச் சூழல், தேவைக்கேற்ப, கற்பவர்க்கேற்ப மாற்றி வரையறுக்கப்படுகிறது. தேசிய ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம், தற்போதைய கல்வி அமைப்பிற்கெனத் "தேசியக் கலைத்திட்டம் 2005"ஐ (NCF 2005) வடிவமைத்துள்ளது.

1. பள்ளிக்கு வெளியில் பெற்ற கற்றல் அனுபவ அறிவைப் பள்ளி அறிவோடு தொடர்பு படுத்துதல்.
2. மனப்பாடம் செய்வதைத் தவிர்த்துப் பொருள்புரிந்து கற்பதை உறுதிப்படுத்துதல்.
3. பாட நூல்களுக்கு அப்பாற்பட்டும் படித்தறிதல் மற்றும் செய்தி திரட்டுதல்.
4. தேர்வு முறைகளை மேலும் நெகிழ்வாக்கி வகுப்பறைக் கற்றல் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.

முதலியன இதனுடைய வழிகாட்டும் கோட்பாடுகளாகும். இதன் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்: 82, பள்ளிக்கல்வித் துறை(யு1), நாள்: 05.04.2007 இன்படி ஆசிரியர் கல்விப் பட்டயப் படிப்பிற்கான கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2008 - 2009 ஆம் கல்வியாண்டுமுதல் நடைமுறையிலுள்ள இப்புதிய கலைத்திட்டத்தின்மூலம் மாணவ ஆசிரியர்கள் கீழ்க்காணும் திறன்களைப் பெறுவர்.

> தொடர்ந்து அறிவைப் பெருக்கும் திறன்

> அறிந்தவற்றைச் செயல்படுத்தும் திறன்

> தம் திறமைகளை அறிந்து அவற்றிற்கேற்ப வாழும் திறன், பிறரோடு ஒருமித்து வாழும் திறன்

> அனைத்துப் பாடப்பகுதிகளிலும் அதிகபட்சக் கற்றல் அடைவுபெறும் திறன்

> ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடும் திறன்

> ஆய்வு மனப்பான்மை, புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றில் செயல் திறனை மேம்படுத்தித் தொலைநோக்குப் பார்வையில் சிந்திக்கும் திறன்

மேலும், இக்கலைத்திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களையும் கொண்டுள்ளது.

> மாணவ ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தி, அவர்களின் முழு ஆளுமையை வெளிக்கொணர்தல்

> மாணவ ஆசிரியர்களிடம் நன்னெறி, நாட்டு ஒருமைப்பாடு, மனித நேயப் பண்புகளை வளர்த்தல்

> வளரிளம் பருவக் கல்வி, உடல் நலக்கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி, மக்கள் தொகைக் கல்வி, சுற்றுச்சூழல் கல்வி, மனித உரிமைக் கல்வி, சாலைப் பாதுகாப்புக் கல்வி, அமைதிக் கல்வி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல்

மேற்கண்ட நோக்கங்களில் அடைவுபெற,, இரண்டாண்டு ஆசிரியர் கல்விப் பட்டயப் படிப்பிற்கு எட்டுப் பாடங்கள் மற்றும் ஒன்பது செய்முறைப் பயிற்சிகள்(Practicum) உருவாக்கப்பட்டுள்ளன.

| வ. எண் முதலாமாண்டுப் பாடங்கள் | இரண்டாமாண்டுப் பாடங்கள் |
|---|---|
| 1. கற்கும் குழந்தை (Learning Child) | இந்தியக் கல்விமுறை (Indian Education System) |
| 2. கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும் (Facilitating and Enhancing Learning) | கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும் (Facilitating and Enhancing Learning) |
| 3. தமிழ்மொழி கற்பித்தல் | தமிழ்மொழி கற்பித்தல் |
| மலையாளமொழி கற்பித்தல் | மலையாள மொழி கற்பித்தல் |
| தெலுங்குமொழி கற்பித்தல் | தெலுங்குமொழி கற்பித்தல் |
| உருதுமொழி கற்பித்தல் | உருதுமொழி கற்பித்தல் |
| மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) | மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) |
| 4. ஆங்கிலமொழி கற்பித்தல் (Teaching of English) | ஆங்கிலமொழி கற்பித்தல் (Teaching of English) |
| 5. கணிதம் கற்பித்தல் (Teaching of Mathematics) | கணிதம் கற்பித்தல் (Teaching of Mathematics) |
| 6. அறிவியல் கற்பித்தல் (Teaching of Science) | அறிவியல் கற்பித்தல் (Teaching of Science) |
| 7. சமூக அறிவியல் கற்பித்தல் (Teaching of Social Science) | சமூக அறிவியல் கற்பித்தல் (Teaching of Social Science) |

| வ. எண் முதலாமாண்டுச் செய்முறைப் பயிற்சிகள் | இரண்டாமாண்டுச் செய்முறைப் பயிற்சிகள் |
|---|---|
| 1. குழந்தையை உற்றுநோக்கல் மற்றும் தனி மாணாக்கர் ஆய்வு | செயல் திட்டங்கள் |
| 2. பள்ளிப் பார்வை | கலைக்கல்வி மற்றும் பணியனுபவம் |
| 3. கதை கூறுதல் | கணினிக் கல்வியியல் |
| 4. உடற்கல்வி, உடல் நலக்கல்வி மற்றும் யோகக் கல்வி | உடற்கல்வி, உடல் நலக்கல்வி மற்றும் யோகக் கல்வி |
| 5. சுய வளர்ச்சிப் பணிமனை | சுய வளர்ச்சிப் பணிமனை |
| 6. கற்றல் கற்பித்தல் பொருள்கள் | கற்றல் கற்பித்தல் பொருள்கள் |

சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் பி.எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், கோவை பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் தொலைவழிக் கல்வி இயக்குநர் முனைவர் எஸ். சுவாமிநாத பிள்ளை, கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ். இலட்சுமி, சென்னைக் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் வி. கணபதி, திண்டுக்கல் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஜி. பங்கஜம், புதுச்சேரி விநாயகா மிஷன் பல்கலைக்கழகக் கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் கே. சுப்பம்மாள், சென்னைப் பல்கலைக்கழகத் தற்போதைய கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் டி. குமரன், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகக் கல்வியியல் பேராசிரியர் முனைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகிய குழுத் தலைவர்கள் பல அமர்வுகளில் கலந்துரையாடி, நூல்கள் பல ஆய்ந்தும் தேர்ந்தும் கருத்துகளைப் பகுத்தும் தொகுத்தும் எளிமைப்படுத்தி வளநூல்களை உருவாக்க வழிகாட்டியுள்ளனர்.

ஒவ்வொரு வளநூல் குழுவும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், வட்டார வள மையம், பள்ளிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த கல்வியாளர்களை மேலாய்வாளர்களாகவும் ஒருங்கிணைப்பாளர்களாகவும் நூலாசிரியர்களாகவும் கொண்டுள்ளது. மேலும், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழக ஆசிரியர் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி.கே. லில்லி, சென்னை ஆதர்ஷ் கல்வி நிறுவனங்களின் கல்வியியல் ஆலோசகர் முனைவர் என். லலிதா, கிருஷ்ணகிரி முன்னாள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் கே. நாராயணப் பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழக உருதுமொழித் துறைத் தலைவர் முனைவர் எஸ். சையத் சஜித் ஹுசைன் ஆகியோரைக் குழுத் தலைவர்களாகக் கொண்டு சிறுபான்மைப் பாடங்களுக்கும் வள நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் முனைவர் ஏ.எம். மூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளையின் The School அமைப்பைச் சார்ந்த திருமதி சுமத்ரா ஆ.கௌதமா, தன்னார்வக் கல்வியாளர்களான ஆமுக்தா மால்யதா மஹோபாத்ரா மற்றும் முனைவர் பாலாஜி சம்பத் (எய்ட்-இந்தியா), வேதாத்ரி மகரிஷி மனவளக் கலை மன்றத்தின் உதவிப் பேராசிரியர் டி.என். அருளானந்தம், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர் முனைவர் த. பரசுராமன் ஆகிய கல்வியாளர்களும் வள நூல்கள் உருவாக்கத்திற்குப் பங்களித்துள்ளனர்.

கற்பித்தல் என்னும் ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து தானே கற்றல் என்னும் மாணவர் மையக் கல்விக்கு மாறியுள்ள இன்றைய தொடக்கக் கல்விமுறை, செயல்கள்வழிக் கற்றலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இப்புதிய வள நூல்களின் ஒவ்வோர் இயலும் செயல்களைக் கொண்டு தொடங்கி மாணவர்கள் தாமாகவே கருத்தை அறிந்துகொள்வதாகக் கட்டமைக்கப் பட்டுள்ளன. மாணவ ஆசிரியர்கள், நூலகங்களைப் பயனபடுத்துதல், பள்ளி மாணவர்களிடம் கற்றல் திறனை மேம்படுத்தத் தமது வகுப்பறைக் கற்பித்தலை வலுப்படுத்துதல், உற்றுநோக்கும் திறன், வகுப்பறை மேலாண்மை, பாடப்பொருளறிவு, துணைக்கருவிகள் மற்றும் கற்றல் பொருள்களைப் பயன்படுத்தும் திறன், தலைமைப் பண்பு, குழந்தை உளவியலை அறிந்திருத்தல் முதலிய அனைத்துத் திறன்களையும் அடைய வள நூல்கள் வழிகாட்டும். இவ்வள நூல்களைக் கற்பதன்மூலம் பணி ஈடுபாடும் (Commitment) விரிந்த அறிவும் பரந்த ஆற்றலும் (Competence) பொறுப்புணர்வுடன் மாணவர் மனங்கொள்ளத்தக்க வகையில் கருத்துகளை எடுத்துரைக்கும் மாண்பும் (Communication) உடைய நல்லாசிரியர்கள் உருவாவார்கள்.

வள நூல் (Source Book) என்பது கற்பதற்கான வளங்கள், ஆதாரங்கள் முதலியன எங்கெங்கே உள்ளன என்பதைக் காட்டும் வழிகாட்டியே. அதிலிருந்து கற்றலை விரிவுபடுத்தித் தேவையான செய்திகளை ஆங்காங்கே திரட்டி மாணவர்களது அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் திறன்களை மேம்படுத்துவதும் தரமான ஆசிரியக் கல்வி பெற வழிவகுப்பதும் வழிகாட்டுவதும் ஆசிரியக் கல்வியாளர்களின் கடமையாகும். புதிய வள நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை முழுமையாக உள்வாங்கி, முறையாகப் படித்துப் பயனடைவது அனைத்து மாணவ ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

வள நூல்களைச் செம்மையாக உருவாக்க உதவிய அனைத்துக் கல்வியாளர்களுக்கும் கற்பிக்கவிருக்கும் ஆசிரியக் கல்வியாளர்களுக்கும் கற்கவுள்ள மாணவ ஆசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த பாராட்டுகள்!

**இயக்குநர்,**
**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம்,**
**சென்னை - 600 006.**

# நுழைவாயில்

அன்பார்ந்த ஆசிரியர் கல்விப் பயிற்றுநர்களே! மாணவ ஆசிரியர்களே!

முதலாம் ஆண்டு வளநூலைத் தொடர்ந்து இரண்டாம் ஆண்டிற்கான இந்த வளநூல் தற்போது உங்கள் கைகளில் தவழ்கிறது. வளநூலின் அமைப்பு, பயிற்றுநர்களிடமும் பயிற்சிபெறும் மாணவ ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கப்படும் செயல்பாடுகள் ஆகியவற்றை நீங்கள் தற்போது நன்கு அறிந்திருப்பீர்கள். இருப்பினும், மேலும் சிலவற்றை நினைவூட்ட விரும்புகிறோம்.

கல்விச் செயல்பாட்டில் நாம் சில நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அவற்றிலிருந்து விலகும்போது நமக்கு அவை தவறாகப்படு கின்றன. சான்றாக, ஒரே ஒரு வினாத்தாள் திட்ட வரைவை அடிப்படையாகக்கொண்டே தேர்வு இருக்கவேண்டும் என்பது. நமக்கு அடிப்படை பாடத் திட்டமே. பாடத்திட்டம் கூறும் திறன் களின் அடைவைச் சோதிப்பதற்கு வினாத்தாள் திட்ட வரைவுகள் பலவற்றை உருவாக்க முடியும். எனவேதான் வளநூலில் மாதிரியாக இரண்டு வினாத்தாள் திட்ட வரைவுகள் கொடுக்கப் பட்டுள்ளன.

இதேபோல்தான் வளநூலும் பாடத்திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள திறன்களையும் கருத்துகளையும் அடைவதற்கான வழிவகைகள் ஒவ்வோர் இயலிலும் தொகுத்துக் கூறப் பட்டுள்ளன. ஆனால், இவை முழுமையானவை எனச் சொல்ல முடியாது. இவற்றையும் இவற்றோடு பயிற்றுநர்கள் தமது சொந்த அனுபவங்களையும் பிற நூல்களில் கற்றவற்றையும் ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். அவர்களும் தாமாகத் தேடிப் படிக்க வேண்டும். இவற்றோடு சொந்தமாகச் சிந்தித்தவற்றையும் இணைத்துத் தேர்வுகளில் விடைதர வேண்டும். வளநூலில் ஒரு கருத்து இல்லை என்பதற்காக அது தேர்வில் சோதிக்கப்படக் கூடாது என்பதன்று. பாடத்திட்டத்தை ஒட்டியதாக அது அமையுமானால், அதற்கு விடைதர ஆசிரிய மாணவர்கள் கடமைப்பட்டவர்களாகிறார்கள். இதற்கேற்ப அவர்கள் உருவாக்கப்படவேண்டும்.

தமிழ் மொழித்திறன் பகுதியில் கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் உரைநடை, செய்யுள் ஆகியவற்றில் சில எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. இலக்கணம், மொழிப்பயிற்சி ஆகியவற்றில் புதிய பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆசிரிய மாணவர்கள் பத்தாம் வகுப்பு வரையில் இடம்பெறத்தக்க இலக்கியங்களைப் புரிந்து கொண்டு சுவைக்கவும் தாமாகவே எளிய படைப்புகளை உருவாக்கவும் திறன்பெறச் செய்ய வேண்டும்.

பாடத்திட்டம் உருவாக்கியதிலும் முதலாம் ஆண்டு வளநூலை உருவாக்கியதிலும் தலைமையேற்றுப் பணியாற்றிய அமரர் பேராசிரியர் அ. கணபதி அவர்கள் அமைத்த அடித் தளத்தையொட்டியே இவ்வளநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வளநூல் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், அரசு நிதியுதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் ஆகியோர்களின் கருத்துகளைப் பெற்றுக் (Field Tryout) கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளிச் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வளநூலை மேலும் செழுமைப்படுத்துவது கல்வியாளர்களாகிய உங்கள் கைகளில் உள்ளது. உங்கள் பணி சிறக்க வாழ்த்துகள்!

ஆக்கியோர்.

# பாடத்திட்டம்

## தமிழ்மொழி கற்பித்தல்

### முன்னுரை

மக்களைப் பிற உயிர்களிடமிருந்து வேறுபடுத்துவது மொழி. தாய்மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்குரிய கருவியாக மட்டுமல்லாமல், பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகிறது. எனவே, ஒருவன் பண்பட்ட மனிதனாக உருவாவதில் மொழிக்கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், பிற பாடங்களைச் சிறப்பாகக் கற்றுக்கொள்வதற்கும் மொழி அடிப்படையாக அமைகிறது. அத்துடன், மொழிப்பாடம் திறன் பாடம் என்பதால், பிற கருத்துப் பாடங்களைக் கற்பிப்பதிலிருந்து வேறுபட்டும் நிற்கிறது. மொழிப் பாடத்தில் திறன் வளர்ச்சி முதன்மை நோக்கமாகவும் கருத்துப் பாடத்தில் பாடப்பொருளறிவு முதன்மை நோக்கமாகவும் அமைகின்றன. ஆகவே, மொழி கற்பித்தலில், குறிப்பாகத் தாய்மொழி கற்பித்தலில் கூடுதல் திறன் பெறுவது தொடக்கநிலை ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாகும்.

### கற்றல் விளைவுகள்

இப் பாடத்திட்டத்தைப் பின்பற்றிக் கற்கும் மாணவ ஆசிரியர்கள்:

- சூழ்நிலைக்கேற்பவும் பேசும் பொருளுக்கேற்பவும் மொழியைப் பிழையின்றிப் பயன்படுத்தும் திறன் பெற்றிருப்பர்.
- ஐந்தாம் வகுப்புவரை பாடநூல்களில் இடம்பெறும் இலக்கியங்களைப் பற்றி ஆழ்ந்த அறிவும், உயர்நிலைப் பள்ளிப் பாடநூல்களில் இடம்பெறும் இலக்கியங்களைப் பற்றி அகன்ற அறிவும் பெற்றிருப்பர்.
- ஐந்தாம் வகுப்புவரையுள்ள தமிழ்ப் பாடப்பகுதிகளைக் கற்பிக்குந்திறன் பெற்றிருப்பர்.
- மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை வளர்க்கும் முறைகளைப் பின்பற்றுவர்.
- பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்குமுள்ள வேறுபாடறிந்து இரண்டையும் அவற்றிற்குரிய சூழ்நிலைகளில் பயன்படுத்தும் திறன் பெற்றிருப்பர்.
- தமிழ் கற்பிப்பதற்குரிய பாடங் கற்பிப்புத் திட்டம் தயாரித்துப் பயன்படுத்தும் முறையைப் பின்பற்றுவர்.
- பயிற்சிகள் தயாரித்து மாணவர்களின் சொற்களஞ்சியம் பெருக்குவதற்கான திறன்பெற்றிருப்பர்.
- தமிழைக் கற்பிப்பதற்குத் துணைக்கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்தும் திறன் பெற்றிருப்பர்.
- தமிழ்ப் பாடநூலை மதிப்பீடு செய்யும் திறன் பெற்றிருப்பர்.
- மாணவர்களின் தமிழ்மொழித் திறனை மதிப்பீடு செய்ய உதவும் பலவகை வினாக்களை உருவாக்கி வினாத்தாள் திட்ட வரைவு தயாரிப்பர்.
- மாணவர்கள் தமிழில் செய்யும் பிழைகளை இனங்கண்டு, அவற்றை நீக்குவதற்குரிய பயிற்சிகளைத் தயாரித்துப் பிழைகளைக் களையும் திறன் பெற்றிருப்பர்.

# பகுதி - அ. தமிழ்மொழித் திறன்

## அ. செய்யுள்

பத்தாம் வகுப்புவரையிலுள்ள பாடநூல்களில் அமைந்த கீழுள்ள செய்யுட் பகுதிகளைப் பற்றிய அறிவு பெறுதல்.

### அறவுரைப் பகுதி

1. நாலடியார்
2. நீதிநெறி விளக்கம்

### தொடர்நிலைச் செய்யுள்

3. சிலப்பதிகாரம்
4. பெரியபுராணம்

### மறுமலர்ச்சிப் பாடல்கள்

5. பாரதியார் கவிதைகள்
6. கவிமணி கவிதைகள்

- சொற்களைப் பிரித்தல்
- உரைநடைப்படுத்துதல்
- பொருள் கூறுதல்
- நயம் பாராட்டுதல்

## ஆ. உரைநடை

இருபதாம் நூற்றாண்டு உரைநடையாசிரியர்களின் நூல்களைப் படித்துப் பொருளறிவதுடன், அவர்களின் நடைச் சிறப்பையும் சொற்களஞ்சியத்தையும் அறிந்து போற்றுந் திறன் பெறுதல்.

1. மறைமலையடிகள்
2. மு. வரதராசன்

- சொல்வளம் பெறுதல்
- உரைநடைச் சிறப்பு உணர்தல்

## இ. இலக்கணம்

கீழுள்ள இலக்கணப் பகுதிகள்பற்றிய தெளிவான அறிவுபெறுவதுடன் உரியவகையில் பயன்படுத்துந் திறன்பெறுதல்.

1. வினை - வினைமுற்று - எச்சம் - பெயரெச்சம் - வினையெச்சம்
2. தன்வினை, பிறவினை - செய்வினை, செயப்பாட்டு வினை
3. இனங்குறித்தல்
4. வழக்கு - இயல்பு - தகுதி
5. தொகைநிலைத் தொடர் - தொகாநிலைத் தொடர்
6. மெய்யீற்றுப் புணர்ச்சி (ணகர னகர ஈறு, மகர ஈறு, லகர ளகர ஈறு, வருமொழித் தகர நகரத் திரிபு)
7. அணி (உவமை, எடுத்துக்காட்டு உவமை, பிறிதுமொழிதல், தற்குறிப்பேற்றம்)

**ஈ. படைப்பாற்றல்**

மாணவ ஆசிரியர்களின் மொழித்திறன் வளர்ப்பதற்கான பயிற்சி அளித்தல்

1. பேச்சாற்றலை வளர்த்தல்

2. கவிதை எழுதுதல்

3. சிறுகதை எழுதுதல்

குறிப்பு: இப்பகுதியில் பாடப்பொருள்பற்றி நேரடியான வினாக்கள் அமையா. மொழித்திறன் வினாக்களே அமையும்.

## பகுதி - ஆ. தமிழ் கற்பித்தல்

| தலைப்பும் உட்பிரிவுகளும் | செய்முறை |
|---|---|
| **இயல் 1: பாட ஏற்பாடு** | |
| - பாட ஏற்பாடு<br>- பாடத்திட்டம்<br>- பாடநூல்<br>- பாட ஏற்பாடு, பாடத்திட்டம், பாடநூல் தொடர்பு<br>- பாடநூல் ஆய்வு<br>- பாடநூலும் ஆசிரியர்களும் | ஏதேனும் ஒரு வகுப்புப் பாடநூலை மதிப்பீடு செய்தல் |
| **இயல் 2: சொற்களஞ்சியம் பெருக்குதல்** | |
| - சொல் அமைப்பு, பொருள், பயன்பாடு<br>- அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்தும் சொற்களஞ்சியம்<br>- அடிப்படைத் திறன்களும் சொற்களஞ்சியம் பெருக்குதலும்<br>- பாடங்களைக் கற்பித்தலும் சொற்களஞ்சியம் பெருக்குதலும்<br>- சொற் பயிற்சிகள்<br>- சொல் விளையாட்டுகள் | சொல் விளையாட்டு, சொற் பயிற்சிகள் தயாரித்து நடத்துதல் |
| **இயல் 3: உயர்நிலைத் திறன்கள்** | |
| - கடிதம் எழுதுதல்<br>- கட்டுரை எழுதுதல்<br>- பேச்சாற்றல்<br>- படைப்பாற்றல் (கவிதை, கதை எழுதுதல்)<br>- கலந்துரையாடலை நெறிப்படுத்துதல் | ஐந்து மாணவர்கள் கொண்ட குழுக்களாகப் பிரித்துக் குறிப்பிட்ட தலைப்பில் கலந்துரை யாடுதல். அதை ஒரு மாணவர் ஒருங் கிணைத்துநடத்துதல். இவ்வாறு எல்லா மாணவர்களும்செய்ய வாய்ப்பளித்தல். பாதிக் கதையைச் சொல்லி மீதிக் கதையை முடிக்கும் பயிற்சியளிக்கப் பல கதைகளைத் தொகுத்தல் |

| இயல் 4: பிழை ஆய்வும் குறை களைதலும் | |
|---|---|
| - தவறு, பிழை வேறுபாடு<br>- கற்றலில் பிழையின் இடம்<br>- பிழை காணல்<br>- பிழை வகைகள்<br>- காரணம் காணல்<br>- பிழை நீக்கும் பயிற்சிகள் | குறிப்பிட்ட வகைப் பிழைகளுக்கான பிழை நீக்கும் பயிற்சிகள் தயாரித்தல் |
| **இயல் 5: தமிழ் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பம்** | |
| - மொழிப் பயிற்றாய்வுக் கூடம்<br>- கணினியும் தமிழும்<br>- தமிழ் மென்பொருள்கள்<br>- இணையம்<br>- தமிழ் இணையப் பல்கலைக்கழகம்<br>- பல்லூடகமும் தமிழ் கற்பித்தலும் | மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தைப் பயன்படுத்தி, கேட்டல் திறனை வளர்க்கும் பாடல்கள் தயாரித்தல்<br><br>கணினியில் நழுவங்கள்தயாரித்தல் (Power Point Presentation) |
| **இயல் 6: தேர்வும் மதிப்பீடும்** | |
| - அளவீடு, தேர்வு, மதிப்பீடு<br>- ஒவ்வொரு திறனையும் மதிப்பிடும் முறை<br>- வினாத்தாள் வடிவமைப்பு<br>- தேர்வைத் திட்டமிடல்<br>- தொடர் மதிப்பீடு | வினாத்தாள் திட்ட வரைவு தயாரித்தல் |

# செய்முறைப் பயிற்சிகள்

மாணவ ஆசிரியர் மொழித்திறனில் வல்லமை பெற்றவராகத் திகழ ஒவ்வொரு நாளும் மொழிப் பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். பயிற்சி நாள்கள் ஒவ்வொன்றும் மொழித்திறன் அடைவுநாள் எனக் கூறுமளவிற்குப் பயிற்சி பெறல்வேண்டும். பயிற்சியே மனிதனை முழுமைபெறச் செய்கிறது (Practice makes man perfect). அதற்காக ஒவ்வோர் இயலிலும் மாணவ ஆசிரியர்கள் செய்யவேண்டிய பயிற்சிகள் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன. இப்பட்டிய லுடன் மேலும் எவற்றையெல்லாம் சேர்க்க இயலுமோ அவற்றையெல்லாம் சேர்த்துப் பயிற்சி யளித்து மொழித்திறனில் முழுமையான அடைவுபெறச் செய்வது கல்வியாளர்களின் கடமை யாகும்.

## பகுதி - அ

| இயல் | செய்முறைப் பயிற்சி |
|---|---|
| **1. தமிழ் மொழித்திறன் வளர்த்தல்** | 1. தொகைச் சொற்களின் தொகுப்புத் தயாரித்தல்.<br>2. பாடநூலில் இடம்பெற்றுள்ள ஏதேனும் ஓர் உரை நடைப் பகுதியை எழுதி, அதிலுள்ள அரிய சொற்கள், மரபுத்தொடர்கள், மேற்கோள்கள் ஆகியவற்றைச் சுட்டுதல்.<br>3. முதல் வகுப்புமுதல் பத்தாம் வகுப்புவரையுள்ள பாடப்பகுதியில் இடம்பெறும் பாரதியார், கவிமணி ஆகியோரின் கவிதைகளில் ஏதாவது ஒன்றனை எழுதி, நயம் பாராட்டுதல்.<br>4. ஆறுமுதல் எட்டாம் வகுப்புவரையுள்ள பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஏதேனும் ஒரு செய்யுளை எழுதி, அருஞ்சொற்களுக்கு விளக்கந் தருதல்.<br>5. முதல் வகுப்புமுதல் ஐந்தாம் வகுப்புவரையுள்ள பாட நூலில் இடம்பெற்றுள்ள அறவுரைப் பகுதி ஒன்றனை எழுதி, அதனைப் பொருள்புரியும்வண்ணம் பிரித்து எழுதுதல்.<br>6. டாக்டர் மு.வ.வின் உரைநடைப் பகுதியில் ஓரிரு பத்திகள் எழுதி, அதன் உரைநடைச் சிறப்பு எழுதுதல்.<br>7. சொந்தக் கற்பனையில் ஏதாவது மூன்று தலைப்பில் கதை, கவிதை எழுதுதல்.<br>8. மறைமலையடிகளின் உரைநடைப்பகுதியில் ஓரிரு பத்தி எழுதி, அதன் சொல்வளத்தைச் சுட்டுதல்.<br>9. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிலப்பதிகாரப் பகுதி ஒன்றினை எழுதி உரைநடைப்படுத்துதல். |

| | **பகுதி - ஆ** |
|---|---|
| **1. பாட ஏற்பாடு** | 1. பாட ஏற்பாடு, பாடத்திட்டம், பாடங் கற்பிப்புத் திட்டம்,பாடங்கற்பித்தல் குறிப்புஆகியவற்றிற் கிடையேயுள்ள தொடர்பினை ஒப்படைப்பாக எழுதுதல்.<br>2. முதல் வகுப்புமுதல் ஐந்தாம் வகுப்புவரையுள்ள பாடநூல்களில் ஏதேனும் ஒரு நூலை மதிப்பீடு செய்தல். |
| **2. சொற்களஞ்சியம் பெருக்குதல்** | 1. ஓரெழுத்து ஒருமொழிச் சொற்களைத் தொகுத்துப் பொருளெழுதி வாக்கியத்தில் அமைத்தல்.<br>2. ஒருபொருள் குறித்த பலசொற்கள், பலபொருள் குறித்த ஒருசொல் தொகுப்புத் தயாரித்தல்.<br>3. சொல் விளையாட்டுகளைத் தொகுத்தல்.<br>4. தொகைச் சொற்களைத் தொகுத்து விரித்தெழுதுதல்.<br>5. மரபுத்தொடர்கள், இணைச்சொற்கள் தொகுப்புத் தயாரித்தல். |
| **3. உயர்நிலைத் திறன்கள்** | 1. இன்றைய சமுதாயத்தில் பெண்கள் நிலை, மக்கள்தொகைப் பெருக்கம், அறிவுப் பெருக்கம், சுற்றுச்சூழல் சீர்கேடு போன்ற தலைப்புகளை மாணவர் குழுக்களுக்குக் கொடுத்துக் கலந்துரையாடச் செய்தல்.கலந்துரையாடிய செய்தியைப் பதிவு செய்தல்.<br>2. அலுவலகக் கடிதம், உறவுமுறைக் கடிதம் எழுதச் செய்தல்.<br>3. குறிப்பிட்ட தலைப்புக் கொடுத்துக் கட்டுரை எழுதச் செய்தல்.(3)<br>4. குறிப்பிட்ட தலைப்புக் கொடுத்துப் பேசச் செய்தல், பேசிய செய்தியைப் பதிவு செய்தல்.(2)<br>5. கதையின் தொடக்கத்தைக் கூறி, அதனை முடிக்கச் செய்தல். இவ்வாறு கூறும் கதைகளைத் தொகுக்கச் செய்தல். (3) |
| **4. பிழை ஆய்வும் குறை களைதலும்** | 1.மாணவர்களிடம் காணப்படும் ஒப்புமையாக்கப் பிழைகளைக் கண்டறிந்து பட்டியலிடுதல்.<br>2. வாக்கியப் பிழைகளைப் பட்டியலிடுதல். |

| | |
|---|---|
| | 3. வரிவடிவத்தில் ஏற்படும் பிழைகளைப் பட்டியலிட்டு, நீக்கும் முறைகளைச் சுட்டுதல்.<br>4. ஒலிப்புப் பிழைகளைப் பட்டியலிட்டு அவற்றை நீக்கும் முறைகளைச் சுட்டுதல். |
| **5. தமிழ் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பம்** | 1. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தைப் பார்வையிட்டு,அதன் அமைப்பு முறையையும் இடம்பெற்றுள்ள கருவி களையும் பயன்பாட்டையும் தொகுத்தல்.<br>2. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின்வழி கற்பிக்க பாடப்பொருள் ஒன்றனைத் தயாரித்தல்.<br>3. ஐந்தாம் வகுப்பில் ஏதாவது ஒரு பாடப்பகுதியைக் கற்பிக்க கணினியில் நழுவங்கள் (Power Point Presentation) தயாரித்தல்.<br>4. தமிழ்மொழியில் கணினியின் பயன்பாட்டுப் பட்டியல் தயாரித்தல். |
| **6. தேர்வும் மதிப்பீடும்** | 1. ஐந்தாம் வகுப்பிற்கு அலகுத்தேர்வு நடத்துவதற்குத் தேவையான வினாத்தாள் திட்ட வரைவும் வினாத்தாளும் தயாரித்தல்.<br>2. ஐந்தாம் வகுப்பு உரைநடைத் திறனைச் சோதிக்க உதவும் புறவய வினாக்களைத் தொகுத்தல்.<br>3. ஐந்தாம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரையுள்ள வினாத்தாள்ஒன்றின் நிறைகுறைகளை ஆய்வு செய்தல்.<br>4. கேட்டல், பேசுதல் திறன்களை மதிப்பிடுவதற்கான முறைகளைப் பட்டியலிடுதல்.<br>5. சிறந்த தேர்வின் பண்புகளை விளக்குதல். |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | **பகுதி - அ** | |
| 1. | தமிழ் மொழித்திறன் வளர்த்தல் | 1 |
| | **பகுதி - ஆ** | |
| 1. | பாட ஏற்பாடு | 38 |
| 2. | சொற்களஞ்சியம் பெருக்குதல் | 47 |
| 3. | உயர்நிலைத் திறன்கள் | 64 |
| 4. | பிழை ஆய்வும் குறை களைதலும் | 91 |
| 5. | தமிழ் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பம் | 108 |
| 6. | தேர்வும் மதிப்பீடும் | 138 |
| | **பின்னிணைப்புகள்** | |
| 1. | வினாத்தாள் திட்ட வரைவுகள் | 161 |
| 2. | மாதிரி வினாத்தாள்கள் | 163 |
| 3. | அகமதிப்பீட்டுச் செய்முறைப் பயிற்சி | 167 |
| 4. | பார்வை நூல்கள் | 168 |

# பகுதி - அ

# 1. தமிழ் மொழித்திறன் வளர்த்தல்

## அறிமுகம்

நல்ல ஆசிரியர் ஒருவர், தம் மாணவர்களுக்கு எவ்வாறு சிறப்பாகக் கற்பிக்கவேண்டும் எனத் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. அவர், தாம் கற்பிக்குந் துறையில் நல்ல புலமை உடையவராக இருத்தல் வேண்டும். தமிழ் கற்பிப்பவர் மொழி கற்பித்தல் முறைகளை அறிந்தவராக இருப்ப தோடு, மொழியை ஆளுந்திறன் கைவரப் பெற்றவராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் செய்யும் பிழைகளை அறிந்து திருத்த முடியும்; மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் திகழ முடியும். இதனைக் கருத்திற்கொண்டே இவ்வியலில் மாணவ ஆசிரியர்கள் தமிழ்மொழியில் தங்கள் திறனை வளர்த்துக்கொள்ள செய்யுள், உரைநடை ஆகியவற்றைப் புரிந்து பயன் படுத்தவும், இலக்கணப் பகுதிகளைப் புரிந்துகொள்ளவும், படைப்பாற்றல் பெறவும் வழிகாட்டுதல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி மாணவ ஆசிரியர்கள் தமிழ்மொழியில் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## படிநிலைகள்

1. செய்யுள்
   - அ) சொற்களைப் பிரித்தல்
   - ஆ) பொருள் அறிதல்
   - இ) உரைநடைப்படுத்துதல்
   - ஈ) நயம் பாராட்டுதல்
2. உரைநடை
   - அ) மறைமலையடிகள்
   - ஆ) மு. வரதராசனார்
3. இலக்கணம்
   - அ) வினைமுற்று, வினை எச்சம்
   - ஆ) தன்வினை, பிறவினை
   - இ ) செய்வினை, செயப்பாட்டு வினை
   - ஈ) இனங்குறித்தல்
   - உ) வழக்கு
   - ஊ) தொகைநிலைத் தொடர்
   - எ) தொகாநிலைத் தொடர்
   - ஏ) மெய்யீற்றுப் புணர்ச்சி
   - ஐ) அணி
4. படைப்பாற்றல்
   - அ) பேச்சாற்றல்
   - ஆ) கவிதை எழுதுதல்
   - இ) சிறுகதை எழுதுதல்

# 1. செய்யுள்

தமிழ்மொழியில் செய்யுள் சிறப்பிடமும் உயர்நிலையுங் கொண்டதனால் மொழிப்பாடங் கற்பித்தலில் செய்யுளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. செய்யுள் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்தும் வாயிலாகவும் நயமான கருத்தினை நயமான சொற்களால் நயம்பட உரைக்குந் திறனுடையதாகவும் விளங்குவது. இதில் காதலுணர்வுகளும் வீரவுணர்வுகளும் ஏக்கங்களும் தவிப்புகளும் பெருமிதங்களும் மகிழ்வுணர்வுகளும் வெளிப்படும். சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் செய்யுள் நடை, ஆழ்ந்த விரிந்த செறிவுமிக்கது. ஒவ்வொருவரிடமும் உறங்கிக் கிடக்கும் உணர்வுகளைத் தட்டியெழுப்பி உருக்கொடுத்து நற்பயன் விளைவிக்கும் வழிகளைத் தேடச் செய்யுளிலக்கியம் பயன்படும். இப்பயன்களைக் கருத்திற்கொண்டே பள்ளி, கல்லூரிப் பாடங்களில் செய்யுட் பாடம் இடம்பெறுகிறது.

## அ) சொற்களைப் பிரித்தல்

ஒருசொல்நீர்மை, பொருள்தெளிவு, எழுத்துச் சிக்கனம், புணர்ச்சி விதிகள் முதலிய பல காரணங்களுக்காகச் செய்யுளிலக்கணம் கூட்டுச்சொற்களாக எழுதப்படுகின்றன. உரைநடையை விடச் செய்யுளில் சொற்சேர்ப்பு மிகுதியாகக் காணப்படும். இதனைக் காணும் மாணவர்கள், அதனைக் கடினமாக உணர்ந்து செய்யுள் படிப்பதை வெறுப்பாக நினைக்கின்றனர். இவ்வாறு எழுதுவது தமிழ்மொழித்திறனின் உயராற்றல் என்பதையும் இது தமிழ்மொழிக்கே உரிய சிறப்புக் கூறு என்பதனையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். செய்யுளிலுள்ள சொற்களைப் பிரிக்கவும் அச்சொற்கள் எவ்வாறு புணர்ந்தன என விளக்கமாகக் கூறுவதும் தமிழ்மொழி ஆசிரியரின் முதற் கடமையாகும். இதற்கு இலக்கண அறிவும் பயிற்சியும் தேவை. விதிவரு முறை, விதி விளக்குமுறைகளில் எளிய எடுத்துக்காட்டுக்களைக் கூறிச் சொற்களைப் பிரித்துக் காட்டும்போது மொழி கற்றலில் மாணவர்களுக்கு ஆர்வந்தோன்றும். கவிதைகளில் எழுத்துப் புணர்ச்சி, சொற்புணர்ச்சி இயல்பாயுள்ளன. நம்மையறியாமலேயே நாம் இவ்வாறே உச்சரித்தும் வருகிறோம். இது எழுத்து வடிவத்தில் பார்க்கும்போது புரியாததுபோலத் தோன்றுகிறது; விரைவாக உச்சரிக்கும்போதும் பேசும்போதும் இப்புணர்ச்சிகளைக் கேட்டு மகிழலாம். இருப்பினும், குழந்தைகளுக்குப் பாடங் கற்பிக்கும்போது ஒவ்வொரு சொல்லையும் அறியச் செய்வதற்கும் அருஞ்சொற்பொருள் கூறுவதற்கும் புணர்ந்த சொற்களைப் பிரித்துக் காட்டுகிறோம். தமிழ் கற்பித்தலில் இதனை ஒரு படிநிலையாகக்கொண்டு கற்பிக்கவேண்டும். இல்லையெனில், நீண்ட சொற்களைக் கண்டு மாணவர் மருண்டுவிடுவர்.

முதலாம் ஆண்டில் '**தாமின்புறுவது, விண்ணதிர்ந்தது, உலகெலாம், நன்றியறிதல், தீயணைத்தல், படையெடுத்தல், பலவணி, சேயடி, சேவடி**' முதலிய சொற்களைப் பிரிக்கும் முறைகளை நன்னூல் நூற்பாக்கள் ஐந்தனைப் பயன்படுத்திப் பயிற்சி பெற்றிருப்பீர்கள். அவற்றை இரண்டாம் ஆண்டிலும் நினைவுகூர்ந்து பயன்படுத்தவேண்டும்.

இனி, மெய்யீற்றுப் புணர்ச்சிகளில் **ண**கர, **ன**கர ஈறுகள்; **ம**கர ஈறு; **ல**கர **ள**கர ஈறுகள் எவ்வாறு திரிகின்றன என்பதைக் கற்கவிருக்கிறீர்கள். இலக்கணப் பகுதியில் மெய்யீற்றுப் புணர்ச்சி என்னுந் தலைப்பில் மேலும் விரிவாகக் காணலாம்.

**தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்**
**குற்றங் கடிந்த வொழுக்கமுந் - தெற்றெனப்**
**பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்**
**நல்வினை யார்க்குங் கயிறு.** ( திரிகடுகம் -23)

இத்திரிகடுக வெண்பாவில் 'ம'கர ஒற்று வல்லெழுத்துகளுக்கு இனமாகத் திரிந்துள்ளது. 'க'கரத்திற்கு இனமாக 'ங்', ஆகவும், 'த'கரத்திற்கு இனமாக 'ந்' ஆகவும் மகரவொற்றுத் திரிந்துள்ளது.

| | | |
|---|---|---|
| தானங் கொடுக்குந் | = | தான**ம்** கொடுக்கும் |
| யார்க்குங் கயிறு | = | யார்க்**கும்** கயிறு |
| கொடுக்குந் தகைமை | = | கொடுக்**கும்** தகைமை |
| ஒழுக்கமுந் தெற்றென | = | ஒழுக்க**மும்** தெற்றென |

இவ்வாறே பிறவும். நாம் பேசும்போது இவ்வினமிகலை உணரலாம். 'பாடம் படித்தான்' எனச் சொல்வதற்கும் 'பாடம் சொல்லித் தருகிறார்' எனச் சொல்வதற்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணரலாம். பாடம் சொல்லித் தருகிறார் எனச் சொல்லும்போது, 'பாடஞ் சொல்லித் தருகிறார்' என்னும் உச்சரிப்பு வருகிறதல்லவா? விரைவாகப் பேசும்போது நம்மையறியாமல் இயல்பாகப் புணர்ந்தே பேசுகிறோம். 'அவரிட**ஞ் சென்**று பாட**ங் கேட்**டேன்; அவரும் பாட**ஞ் சொ**ன்னார்; பின்னர்த் தேனு**ந் தி**னைமாவு**ந் தி**ன்றோம்'. 'தான**ங்கொ**டுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா?' இவற்றைச் சொல்லிப் பாருங்கள், இதனை,

**மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்**
**வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.** ( நன். 219)

என நன்னூல் நூற்பா கூறும்.

**தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்று மொழிமூ விடத்து மாகும்** (நன். 154)

இவ்விதியின்படி 'ம'கரம் கெடவும் திரியவும் செய்யும். இவ்வாறு புணர்வதை விகாரப் புணர்ச்சி யென்பர்.

(எ.கா.) மரம் + வேர் = மரவேர் ( 'ம்' கெட்டது)

'பொரு ணீங்கிய' = பொருள் + நீங்கிய என இரு சொற்கள் புணர்ந்துள்ளன. நிலைமொழி ஈறான 'ள்', வருமொழி முதலான 'நீ'யுடன் புணர்ந்து 'ணீ'என மாறிற்று.

இதனை,

**லளவேற் றுமையிற் றடவு மல்வழி**
**அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி**
**மேவி ன ணவு மிடைவரி னியல்பும்**
**ஆகு மிருவழி யானு மென்ப.** (நன். 227)

லகார, ளகார இரண்டு நிலைமொழியீறுகளும் வல்லினம் வருமொழியாக வரும்போது, வேற்றுமை யில் முறையே றகார, டகாரங்களாம்; அல்வழியில் றகார, டகாரங்களுடனே உறழ்வனவாம்; இருவழிக்கண்ணும் மெல்லினம் வரின் னகார, ணகாரங்களாம்; இடையினம் வரின் இயல்பாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| (எ.கா.) | கல் + குறை | = | கற்குறை | (ல் > ற்) |
| | சொல் + நயம் | = | சொன்னயம் | (ல் > ன்) |
| | சொல் + தொடர் | = | சொற்றொடர் | (ல் > ற்) |
| | கல் + தாழை | = | கற்றாழை | (ல் > ற்) |
| | பொருள் + தொடர் | = | பொருட்டொடர் | (ள் > ட்) |
| | முள் + குறை | = | முட்குறை | (ள் > ட்) |
| | மருள் + நீக்கியார் | = | மருணீக்கியார் | (ள் > ண்) |
| | பொருள் + நயம் | = | பொருணயம் | (ள் > ண்) |

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள கீழ்வரும் வரிகளைப் பிரித்துக் காண்போம்.

**ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள்**
**இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகவையான்** (சிலப்பதிகாரம்)

இவ்விரு வரிகளிலும் எண்ணுப் புணர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. அவை 'ஈராறாண் டகவையாள்', 'ஈரெட்டாண் டகவையான்' என்பன.

ஈராறாண்டகவையாள் = இரண்டு + ஆறு + ஆண்டு + அகவை + ஆள் எனவும்,
ஈரெட்டாண்டகவையான் = இரண்டு + எட்டு + ஆண்டு + அகவை + ஆன் எனவும்

சொற்களைப் பிரிக்கலாம்.

உயிர் வரும்போது, இரண்டு > ஈர் எனத் திரியும்.

இதனை, **ஒன்றன் புள்ளி ரகர மாக**
**இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே** (நன். 189) என நன்னூல் கூறும்.

ஈர் + ஆறு = ஈராறு ( **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் இயல்பே**)

ஈராறு + ஆண்டு = ஈராறாண்டு ( **உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்** )

ஈராறாண்டு + அகவை = ஈராண்டகவை (**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**)

ஈராறாண்டகவை + ஆள் = ஈராறாண்டகவையாள் ( **இ ஈ ஐ வழி யவ்வும்**)

**ஈரெட்டாண்டகவையான்** என்னும் சொற்றொடரும் இவ்வாறே புணர்ந்தது.

பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, தொண்ணூறு, ஈராயிரம், மூவாயிரம், நாலாயிரம், ஐயாயிரம், பதினாயிரம், எண்பதினாயிரம் ஆகியவற்றுக்கான புணர்ச்சி விதிகளை நன்னூல் நூற்பாக்களைப் பயன்படுத்திப் பிரித்தறிக.

ஈ) **காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினார்,** இந்த இரட்சணிய யாத்திரிக வரியைப் பின்வருமாறு பிரித்துக் காணலாம்.

காண்டகு = காண் + தகு (**னலமுன் றனவும் ணளமுன் டணவும்**
**ஆகுந் தநக்கள் ஆயுங் காலே** - நன். 237)

சேவடியிலும் = சே + அடி + இல் + உம்

= சே + அடி = சேவடி ( **ஏமுன் இருமையும்**)
= அடி + இல் = அடியில் (**இ, ஈ, ஐவழி யவ்வும்)**
= அடியில் + உம் = அடியிலும் (**உடல்மேல் உயிர்வந்து ...)**

இவ்வாறு செய்யுளில் புணர்ந்த சொற்களைக் காணுந்தோறும் அவற்றைப் பிரித்தறிதலோடு, எவ்வாறு புணர்ந்தது எனக் கண்டறிந்தால், செய்யுளை எளிதாகப் பிரித்துப் பொருளறியலாம். நம் மொழி மரபுகளைப் பொன்னேபோல் போற்றிப் பயன்படுத்துவது மொழியைப் பேணுதலாகும்.

## ஆ)பொருள் அறிதல்

ஒவ்வொரு வகுப்பிலும் ஆயிரக்கணக்கான சொற்களை மாணவர் கற்றும் பொருளறிந்தும் பயன்படுத்தியும் வருகின்றனர். எத்துணை ஆண்டுகள் பயின்றாலும் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் கற்றுவிட இயலாது; கற்றாலும் உரிய இடத்தில் பயன்படுத்துவது அரிது; அதனினும் அரிது நினைவிற் கொள்ளல். மொழியில் சில ஆயிரம் சொற்களையே நாம் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதால் அவை அறிந்த சொற்களாகி விடுகின்றன; எளிதில் பொருள் விளங்குகின்றன. சில சொற்களைக் கேட்டிருப்போம்; சில சொற்களைப் படித்திருப்போம்; ஆனால், அவற்றை எங்கும் பயன்படுத்தியிருக்கமாட்டோம். ஏன் சில சொற்களை இதுவரை கண்டிருக் கவும் மாட்டோம்; கேட்டிருக்கவும் மாட்டோம். அகராதி முழுவதையும் படித்திருந்தாலும் அதில் இடம்பெறாத சொற்களும் இருக்கலாம்; புதிதாகச் சொற்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம்; அல்லது

பொதுச் சொல்லாக இல்லாமல் துறை சார்ந்த சொற்களாகவும் இருக்கலாம். ஆகவே, சொற்களுக்கு உரிய பொருளை அறிந்துகொள்வதனாலும். அச்சொற்கள் கையாளப்பட்டுள்ள இடம் நோக்கிப் பொருள் அறிந்துகொள்வதனாலும் பொருள் தெளிவு ஏற்படும். இதற்கு அகராதி பெரிதும் உதவும். அகராதியானது, ஒரு சொல்லுக்குரிய நேர்பொருளை முதலிலும், கையாளப்படும் இடம் நோக்கி வரும்பொருளைப் பின்னரும் கூறும். அகராதியில் ஒரு சொல்லுக்குப் பலபொருள் கூறப்பட்டிருக்கும்போது, இடம்நோக்கிப் பொருள் கொள்வதே பொருத்தமாக அமையும்.

**கல்வி, தமிழ்** என்னும் அறிந்த சொற்களுக்குக் கழகத் தமிழகராதி, மதுரைத் தமிழகராதி, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ஆகியன என்னென்ன பொருள்களைக் கூறுகின்றன எனக் கண்டறிக.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல். (குறள்: 643)**

இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள **பிணிக்கும், வேட்ப** ஆகிய இரு சொற்கள் மாணவர்களுக்கு அருஞ்சொற்களாக அமையும்; இவ்விருசொற்களில் **பிணி** என்னுஞ் சொல்லைக் கேள்விப் பட்டிருப்பர். ஆனால், அச்சொற்கான பொருள் **நோய்** என்னும் அளவிலேயே மாணவர் பொருளறிந்திருப்பர். மேலும், நோய் என்னும் பொருளில் 227,734, 736, 949, 1014, 1102 ஆகிய குறள்களிலும் வள்ளுவர் கையாண்டுள்ளார். ஆனால், இக்குறளில் இப்பொருள் பொருந்தவில்லை. **பிணிக்கும்** என்னும் சொல் அப்படியே அகராதியில் காணப்படுகிறதா எனப் பார்த்தால் அப்படியொரு சொல் காணப்படவில்லை. பிணி, பிணிகை, பிணிதல், பிணித்தல், பிணிப்பு, பிணிமுகம் என்னுஞ்சொற்களே காணப்படுகின்றன. பின் எவ்வாறு பொருளறிவது என்னும் மயக்கம் மாணவர் மனத்தில் எழும். அவ்வாறெழும்பொழுது, அச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காணவேண்டும். பிணிக்கும் என்பதன் வேர்ச்சொல் **பிணி** என்பதாகும். **பிணி** என்னுஞ் சொற்குக் கழகத் தமிழகராதி, **கட்டு; நோய்; பின்னல்; துன்பம்;பிணியென்னேவல்; கட்டுகை; பற்று; அரும்பு; நெசவுத்தறியின் நூற்படை** எனப் பலபொருள் கூறுகிறது. இத்தனை பொருள் கூறினால் எதனை எடுத்துக்கொள்வது என்னும் மயக்கம் ஒவ்வொருவருக் குள்ளும் வருவது இயற்கை. எடுத்துக்கொண்ட குறளில் தெரிந்த சொற்களுக்கான பொருளைக் கொண்டு பொருத்தமான பொருளைத் தெரிவு செய்யவேண்டும். இக்குறளில் கேட்டார், கேளார், மொழி, சொல் ஆகிய சொற்களைக்கொண்டு இக்குறள் கேட்டல், பேசுதலைக் கூறுகிறது என்பதனை அறிய முடிகிறது. ஆகவே, இக்கருத்துக்குப் பொருட்பொருத்தமான சொற்களாகக் **கட்டு, கட்டுகை, பற்று** ஆகியன உள்ளன. **பிணி** என்னும் சொல்லின் நேர்பொருள் கட்டு என்பதாகும். கேட்டாரைக் கட்டுவிப்பதும், பேசியவரின்மீது பற்று ஏற்படுத்துவதும் சொல் அல்லவா! **அண்ணா,** தம் பேச்சால் கூட்டத்தினரைக் கட்டிப்போட்டார். எனவே, இக்குறளில், **பிணி** என்னுஞ் சொல்லுக்குச் சொல்லால் கவர்ந்திழுத்துக் கட்டிப்போடுதல் எனப் பொருள் கொள்ளவேண்டும். இதே சொல்லாட்சியை 570 ஆவது குறளிலும் திருவள்ளுவர் கையாண்டுள்ளார். ஆங்கு, எப்பொருளில் கையாண்டுள்ளார் எனக் காண்க.

**வேட்ப** என்னுஞ் சொல் ‘வேள்’ என்னுஞ் சொல்லை அடியாகக் கொண்டது. வேள் = ஆசை; சிறந்த ஆண்மகன்; உதவி; குமரன்; மன்; மன்மதன்; சளுக்கு வேந்தன் எனக் கழகத் தமிழகராதி பொருள் கூறுகிறது; வேட்பு = என்பதற்கு விருப்பம்; பிரியம் எனப் பொருள்கூறுகிறது. ஆகவே, இக்குறளில் கேளாரும் விரும்பும்படி சொல்வதே சொல் எனப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறே இக்குறளில் இடம்பெற்றுள்ள **மொழி** என்னுஞ் சொற்குரிய பொருள்களைக் கண்டறிக.மாணவ ஆசிரியர்கள், செய்யுளில் வருஞ்சொற்களுக்குத் தாமறிந்த சொற்பொருளை ஏற்றிக் கூறாமல், பாடுபொருளில் வரும் சொற்பொருளறிந்து கருத்தை விளக்கவேண்டும்.

இவ்வாறு அருஞ்சொற்களின் பொருளறிந்த பின்னர், பாடலுக்கான பொருளை அறிந்து உரைக்கவேண்டும்.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்** - தம் பேச்சினைக் கேட்டவரைத் தன்வயப்படுத்தும் வல்லமைமிக்க சொல்லாற்றல் உடையவராய்,

**கேளாரும்** - இதுவரை தன் பேச்சினைக் கேளாதவரும் அல்லது தன் கருத்துக்கு மாறுபாடு உடையவரும்,

**வேட்ப மொழிவதாம்** - விரும்புமாறு கூறுவதே

**சொல்** - இவ்வாறு கூறுஞ் சொற்களையே சொற்கள் எனக் கூறவேண்டும். பிறரைக் கவராத சொற்கள் வெறுஞ்சொற்கள் எனக் கொள்ளவேண்டும் என வள்ளுவர் சொல்வன்மை யினைக் கூறுகிறார்.

**அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ**
**வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇ - புள்ளினம்தம்**
**கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ**
**நச்சிலைவேல் கோக்கோதை நாடு.**

இச்செய்யுள் முத்தொள்ளாயிரத்தில் சேர நாட்டு வளத்தை எடுத்தியம்புகிறது.

**அள்ளல் பழனத்து** - சேற்று வயலில் உள்ள

**அரக்கு ஆம்பல்** - அரக்கு நிறமொத்த ஆம்பல் (செந்தாமரை)

**வாயவிழ** - மலர்ந்திருக்க

**புள்ளினம் வெள்ளம் தீப்பட்டது என வெரீஇ** - அதனைக் கண்ட நீர்வாழ் பறவைக் கூட்டம் தீப்பற்றிக் கொண்டதோவென அஞ்சி,

**தம் கைச்சிறகால் பார்ப்பொடுக்கும்** - தத்தம் குஞ்சுகளைச் சிறகுக்குள் அடக்கிக் கொள்ளும்

**கவ்வை உடைத்தரோ** - பேரொலி எழுப்புகிறதோ

**நச்சிலைவேல் கோக்கோதை நாடு** - நஞ்சினை வேலில் பூசிய சேர மன்னன் வாழும் நாடு.

புலவர்கள் இயற்கை நிகழ்வினைக் கண்டு, அதன்மீது தங்கள் கருத்தை ஏற்றிக் கூறுவது செய்யுள் மரபு. அதேபோல், இச்செய்யுளிலும் சேரநாட்டு வளத்தை நகைச்சுவையுடன் நீர்நிலை களில் வாழும் பறவைகளின்மீது ஏற்றிக் கூறிச் சேர மன்னனின் வீரத்தை எடுத்தியம்புகிறார். நாடெனில், அங்குக் கள்வர் பயமும், பகைவர் அச்சமும் இருக்கும். ஆனால், சேர நாட்டில் அத்தகைய அச்சமில்லை யென்பதை அழகுற எடுத்தியம்புகிறார் புலவர். வயல்களில் பூத்திருக்கும் செவ்வாம்பலைக் கண்டு தீப் பற்றிக்கொண்டதோ வென மயக்கமுற்றுப் பறவைகள் பேரொலியை எழுப்பித் தத்தம் குஞ்சுகளைச் சிறகுக்குள் அடைத்துக் கொள்கின்றன. அவ்வொலிகளைத் தவிர, மக்கள் அச்சப்பட்டு எழுப்பும் ஒலிகள் சேர நாட்டில் இல்லை எனப் புலவர் கூறுகிறார். சேர நாட்டின் இயற்கை வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் இப்பாடல் தெற்றென விளக்குகிறது.

## இ) உரைநடைப்படுத்துதல்

ஒரு செய்யுளின் பொருளையெல்லாம் தொகுத்து உரைநடையாக எழுதுவது உரைநடைப்படுத்துதல் ஆகும். தாய்மொழிப் பயிற்சியில் ஊக்கம் பெறுவதற்கு இவ்வுரைநடைப் படுத்துதல் பயிற்சி பயன் தரும். அனைத்து வகுப்புகளுக்கும் இப்பயிற்சியினை ஆசிரியர்கள் மேற்கொள்ளலாம். உரைநடைப்படுத்துவதனால் மாணவர்கள் நன்மைகள் பல பெறுவர். இதனால், மாணவர்க்குச் செய்யுளைக் கருத்துணர்ந்து படிக்கும் பழக்கம் ஏற்படும். மேலும், செய்யுளில் புதைந்துள்ள அரிய கருத்துகளையும் பொருள்களையும் நுட்பமாய் அறியும் ஆற்றல்

பெறுவர். அறிந்த கருத்துகளைச் சிறந்தமுறையில் வெளிப்படுத்தும் ஆற்றலையும், செய்யுளின் பொருளைத் திறம்பட விளக்கியுரைக்கும் திறனையும் பெறுவர்.

உரைநடைப்படுத்துவதற்குமுன் செய்யுளைப் பன்முறைப் படித்து, அதன் கருப் பொருளைத் தெரிந்துகொள்ளவேண்டும். பின்னர், அச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அடைமொழிகள், அருஞ்சொற்கள் முதலியவற்றிற்குரிய நுண்பொருளை அகராதியின் துணை கொண்டு அறிதல் வேண்டும். செய்யுள் முழுமைக்கும் பொருளறிந்தபின், தமக்கே உரிய நடையில் எளிய சொற்களால் ஆற்றொழுக்கான நடையில் தனி வாக்கியங்களில் எழுதுவது சிறப்பு. செய்யுளின் முழுப்பொருளையும் உரைநடையில் எழுதவேண்டும். செய்யுளில்லாத வேறு பொருளை எழுதிவிடக் கூடாது. செய்யுளில் நேர்க்கூற்றுகள் இடம்பெற்றிருப்பின் அவற்றை அப்படியே உரைநடைப்படுத்துவது உயிரோட்டமுடையதாக இருக்கும்.

**நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்**
**அல்லார் செயுங்கேண்மை ஆகாதே - நல்லாய்கேள்!**
**காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்**
**போய்முற்றின் என்னாகிப் போம்? (நன்னெறி)**

**அருஞ்சொற்பொருளறிதல்: கேண்மை** - நட்பு; **நாடோறும்** - நாள்தோறும்; **அல்லார்** - அறிவிலாப் பேதையர்; **நல்லாய்-** நற்பண்புடைய பெண்ணே! **தின்-**தின்ன; **தீங்கனி** - சுவைமிகு கனி; **இளந்தளிர்** - கொழுந்து; **என்னாகிப் போம்?** - என்னவாகிப் போகும்?

**உரை:** நற்பண்புமிக்க பெண்ணே! சொல்வதைக் கேட்பாயாக; காயானது முற்றினால் கனியாகித் தின்பதற்குச் சுவை நல்கும்; கொழுந்து முற்றினால் என்ன பயனைத் தரும்? (சருகாகிப் பயனற்றுப் போகும்) அதுபோல, நல்லவர்களோடு கொள்ளும் நட்பு நாள்தோறும் நன்றாய் வளர்ந்து (வளர்பிறையாய் வளர்ந்து) நல்ல பயனை நல்கும்; அறிவிலாப் பேதையரான தீயவர்களோடு கொள்ளும் நட்பு அதற்கு மாறாகத் தேய்ந்து (தேய்பிறையாய் தேய்ந்து) நாளும் பயனற்றுப் போவதோடு கேட்டினையே விளைவிக்கும்.

ஆகவே, தீநட்பையும் கூடா நட்பையும் விட்டொழித்து ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்; அந்நட்பே நாளும் வளர்பிறையாய் வளர்ந்து வாழுங்காலம் முழுமைக்கும் வழித் துணையாய் வரும் என்பதைக் கருத்தாகக் கொள்ளவேண்டும்.

### ஈ) நயம் பாராட்டுதல்

செய்யுள், பாடல், கவிதைகளைச் சுவைத்து இன்புறுவதற்கு ஆழ்ந்தகன்ற புலமையோடு மொழியார்வமும் இருத்தல்வேண்டும். செய்யுளுக்குக் கருத்து, உணர்ச்சி, கற்பனை, அழகிய வடிவம் ஆகிய நான்கும் இன்றியமையாதன. ஆனால், இந்நான்கும் ஒரு செய்யுளில் ஒருங்கே அமைவது அரிது. சில செய்யுள்கள் பொருட்சுவையும் வேறுசில ஓசைநயமும் மற்றுஞ்சில கற்பனை வளமும் இன்னுஞ்சில அணிநயமும் பெற்றுச் சிறப்புறுவதைக் காண்கிறோம். அந்நயங்களையும் சுவைகளையும் இப்பகுதியில் உய்த்துணரலாம். செய்யுள் தேனைப் போன்றது; தேனையுண்டாலன்றி அதன் சுவையைக் கூறவியலாது. அதுபோலச் செய்யுளைச் சுவைத்தா லன்றி அதன் முருகுணர்ச்சியைப் பெறவியலாது.

பாவின் நயமெல்லாம் - யானும்
  பகர வல்லேனோ?
ஆவின் பாற்சுவையை - நாழி
  அளந்து காட்டிடுமோ? (கவிமணி: பாரதியும் பட்டிக்காட்டானும்)

#### சொல் நயம்

சொற்கள் என்பவை கருத்துகளை உணர்த்துவதற்குரிய குறியீடுகளாகும். இச்சொற் களைக் கொண்டே புலவர், தம் கற்பனைத் திறத்தினால் கவிதைகளைப் படைக்கின்றனர். உரைநடையில் கையாளுஞ் சொற்களுக்கும் செய்யுளில் கையாளுஞ் சொற்களுக்கும் வேற்றுமை

இல்லை. எனினும், அச்சொற்களைக் கையாளும் முறையில்தான் வேறுபாடு உள்ளது. சொற்கள் தமக்கே உரிய ஒலிநயத்தையும் வல்லின மெல்லின எழுத்துகளுக்கேற்ப உணர்ச்சியுடன் சேர்ந்து ஒலிக்கும் தன்மையும்பெற்றுள்ளன. செய்யுளில் சொற்கள் அமையும்பொழுது இடத்திற்கு ஏற்றவாறும் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் உணர்ச்சிக்கு ஏற்றவாறும் சுவைக்கு ஏற்றவாறும் அமைந்து செய்யுளைச் சிறக்கச் செய்கின்றன. புலவர் பலரின் செய்யுள்களைப் படித்துச் சுவைப்போர்க்கே இச்சொல்வளமும் நயமும் அறியவியலும். சொற்கள் ஒன்றோடொன்று இணைந்து உண்டாக்குஞ் செஞ்சொல் இன்பத்தை நுகரக் கற்போர் மகிழ்வெய்தித் திளைப்பர்.

(எ.டு.) அவனுந்தான்,

மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலனென் பான்மன்னோ! (சிலம்பு. புகார்க் காண்டம்)

**ஒலி நயம்**

'பா 'வென்பது ஓதுங்கால் உணர்தற்கு ஏதுவாகிப் பரந்து பட்ட ஓசை. பாடலை உரக்கப் படிக்கும் போது, பாட்டி லுள்ள ஒலிகள் இயங்குகின்றன. அந்த இயக்கத்தில் ஏற்படும் ஒழுங்கே ஒலிநயம் எனப்படுவது. இதனை, ' இழுமென் மொழியால் விழுமியது நுவலல்' என்பார் தொல்காப்பியர். ஓசைமிக்க பாடலே கேட்கும் ஆசையைத் தூண்டும். இவ்வழகிய ஒலிக்குறிப்பு கவிதைக்கு இன்றியமையாது வேண்டப்பெறும் ஓர் உறுப்பாகும். ஒலிகளுக்கு மூன்று தன்மைகள் உண்டு. ஒன்று, ஒலியின் கால அளவு; அதனால் அமையும் நீட்டல் குறுக்கல் வேறுபாடு. இரண்டு, ஒலியின் தன்மை; வன்மையாகவும் மென்மையாகவும் ஒலிக்கும் வேறுபாடு. மூன்று, ஒலிக்கும் முறை; எடுத்தும் படுத்தும் நலிந்தும் ஒலிக்கும்பொழுது உண்டாகும் ஒலியழுத்த வேறுபாடு. இந்த மூன்று கூறுகளும் பல்வேறு அளவிலும் வகையிலும் சேர்ந்து உண்டாகும் ஒலி வேறுபாடுகளை நாம் ஒலிநயம் என வழங்குகிறோம். இசைக்கலையில் இது அடிப்படையாக உள்ளது; பாட்டுக் கலையில் இது தேவையான அளவிற்கு நுட்ப மாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, ஒலிநயத்தைச் சொற்களால் விளக்கமுடியாது என்பதும், அதனைப் புலன்களால் மட்டுமே உணர முடியும் என்பதும் தெளிவு. ஒலிநயத்தி லிருந்துதான் செய்யுளின் யாப்புமுறை அமைகிறது. 'கொல்லிமலை' என்னும் குற்றாலக் குறவஞ்சிப் பாடலைப் படித்தும் பாடியும் பாருங்கள், ஓசைநயச் சுவையினைச் செவியுணரும்.

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
    கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
    இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
    தோழிமலை நாஞ்சினாட்டு வேள்விமலை அம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்
    திரிகூட மலையெங்கள் செல்வமலை அம்மே.

- திரிகூட இராசப்பக் கவிராயர்

**பொருள் நயம்**

பொருளில்லாப் பாட்டு வெறும் பதர் எனலாம். கருத்து வளஞ் செறிந்த கவிதைகளே காலமெல்லாம் நிலைத்து வாழும். கருத்து வளமும் உண்மையும்தான் கவிதைக்கு ஓர் உயர்ந்த தரத்தை நல்குகிறது. கவிஞன் கூறும் உண்மை நாம் உலகில் காணும் உண்மையைப் போன்ற தன்று; அவன் கூறும் உண்மை எப்படியிருக்க வேண்டும் என்பதை உரைப்பது.

(எ.டு) வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. (குறுந்தொகை)

**உணர்ச்சி**

உணர்ச்சி என்பது முற்றிலும் உள்ளத்தில் உண்டாகும் நிகழ்ச்சியாகும். இன்பமும் துன்பமும் மிக முக்கியமான உணர்ச்சிகள். ஒரு பொருள் நம்முடைய தேவையை நிறைவேற்றுவதன் வாயிலாக நமக்கு ஏற்றதாக இருப்பின், அப்பொழுது இன்ப உணர்ச்சி ஏற்படுகிறது. அவ்வாறே ஒரு பொருள் நம்முடைய தேவைகளுக்கு ஏற்றதாக இல்லாமலிருப் பதுடன் தீங்கையும் விளைவிப்பதாயின், அப்பொழுது துன்ப உணர்ச்சி உண்டாகிறது. உணர்ச்சி யென்பது, கதை மாந்தர் உணர்ந்தவாறே கவிஞன் படைப்பதோடு படிப்போரையும் உணரச் செய்வது.

(எ.டு) துருபதன் மகளைத் - திட்டத்
துய்நன் உடன்பிறப்பை
இருபகடை என்றாய் - ஐயோ!
இவர்க்கு அடிமை என்றாய்.

இதுபொறுப்ப தில்லை - தம்பி!
எரிதழல் கொண்டுவா,
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம். (பாஞ்சாலி சபதம்)

இப்பாடல்களில் வீமனின் வாயிலாகப் பாரதியின் உணர்ச்சித் துடிப்பைக் காண்கின்றோம்.

**கற்பனை**

கற்பனை யென்பது புலன்கள் நேராக ஒரு பொருளை அனுபவிக்காத காலத்திலும் அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டுவந்து அப்பொருளினிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்றும் ஒருவகை ஆற்றல். ஆனால், கற்பனையின் தத்துவமானது அறிவுக்கு எட்டாது; சொற்களால் உணர்த்த முடியாதது. இருப்பினும், கவிஞன் தான் அனுபவித்தவற்றை நம்மையும் அனுபவிக்கச் செய்கின்றான். இதற்குத் துணையாவதே கற்பனை. இக்கற்பனை ஆற்றல் இலக்கியத்திற்குக் கருவூலமாகவும் இன்றியமையாததாகவும் உள்ளது. கற்பனைப் பண்பானது படைப்பாற்றலில் ஈடுபடும் ஒவ்வொரு கலைஞனுக்கும் இன்றியமையாதது. இக்கற்பனையைப் படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனையென மூவகைப்படுத்துவர் திறனாய்வாளர்.

படைப்புக் கற்பனையாவது, கவிஞன் ஒருவன் தன் பட்டறிவில் கண்ட பல பண்புக் கூறுகளை எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தானாகத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தொடுத்துப் புதியதொரு வடிவினைப் படைப்பது.

ஒரு பொருள், கருத்து அல்லது உணர்ச்சி தொடர்புடைய உணர்வால் ஒற்றுமையுள்ள காட்சிகளை இணைத்து நிற்பது இயைபுக் கற்பனை. அதாவது, புற உலகில் காணும் நிகழ்ச்சி அகத்தில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சியைத் தூண்டுகின்றது என்றாலும், பெரும்பாலும் உள்ளனுபவமே அத்தகைய உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்கின்றது. இவ்வாறு கற்பனை யாற்றலைத் தூண்டுவதற்கு உள்ளத்தில் உறைந்து கிடக்கும் உள்ளனுபவமே தூண்டு கோலாக அமைகின்றது.

கருத்து விளக்கக் கற்பனையானது, இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ற கவிஞன், தான் கண்டவற்றை அப்படியே கூறாது, அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை மட்டிலும் சித்திரிப்பதாகும்.

பொதுவாகக் கற்பனை மனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது என்பது உளவியலாரின் கருத்து. 'மனத்தின் உரம் அதன் கற்பனை யாற்றலில் உள்ளது என்றும், அத்தகைய நல்லுணர்வைத் தருவது கவிதை' என்பது ஆபர்குரோம்பியின் கருத்து. சிறு வயதில் குழந்தை கற்பனை செய்வதைப் போலவே கவிஞன் கற்பனை செய்கிறான்; பாக்களைப் படைக்கின்றான். கற்பனையூற்று நம்மிடம் என்றும் சுரந்து கொண்டிருந்தால்தான், கவிதை களை நன்கு சுவைக்கலாம்; அனுபவிக்கலாம்.

(எ.டு) கானப் பறவை கலகலெனு மோசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டு மிசையினிலும்
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும் நெல்லிடிக்கும்
கொற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் இசையினிலும்
சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணை முதலாமனிதர்
வாயினிலும் கையினிலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.... (குயில் பாட்டு)

இனி, ஒரு பாடலை எடுத்துக்கொண்டு அதில் இடம்பெற்றுள்ள நயங்களைக் காண்போம்.

ஆற்று வெள்ளம் நாளை வரத்தேற்று தேகுறி - மலை
யாளமின்னல் ஈழ மின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்து ஏற்றடைக்குதே - மழை
தேடி ஒருகோடி வானம்பாடி ஆடுதே
போற்று திருமால் அழகர்க்கு ஏற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே! (முக்கூடற் பள்ளு)

**சொல் நயம்**

இப்பாடலில் வழக்குச் சொற்கள் இடம்பெற்றிருப்பினும் சொற்கள் பொருட் பொருத்த முடன் இயற்றப்பட்டுள்ளன. மழை வருவதன் அறிகுறியை அழகுற எடுத்தியும்பியுள்ளதும் இயற்கையை எவ்வளவிற்கு நுட்பமாய் அறிந்திருந்தால், இத்தகைய பாடல் உருவாகியிருக்கும் என்பதற்கும் இப்பாடல் சான்றாக அமைகிறது. மழைக்கான குறியீடுகள் அழகுற அடுக்கப் பட்டுள்ளன. மலையாள நாட்டுமூலையிலும் ஈழ நாட்டுமூலையிலும் ஒரேநேரத்தில் மின்னு வதால் உறுதியாக நாளை மழை வரும் என்னும் நம்பிக்கை தருகிறது. இதனடிப் படையிலேயே 'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை' என்னும் சொல்லாட்சி மக்களிடையே வழங்கிற்றுபோலும். நல்ல மழை பெய்தால், பண்ணையில் விளையும் முதல் விளைச்சலை அழகர்க்குக் காணிக்கை யாக்கலாமெனத் துள்ளி மகிழ்வதை இப்பாடல் அழகுற எடுத்தியம்புகிறது. மழைக் குறிச் சொற்

களாக மின்னல், காற்று, தவளைச் சத்தம், நண்டு தன் வளையை அடைத்தல், வானம்பாடிகள் ஆடுதல் ஆகியவற்றைக் கூறிச் சொல் நயத்தை வெளிப்படுத்துகிறார். ஆற்றுவெள்ளம், நாளை வர, மலையாள மின்னல் ஈழமின்னல், நேற்றும் இன்றும், கொம்பு சுற்றி, காற்றடிக்குதே, சேற்று நண்டு, ஆடிப் பாடி ஆகிய சொற்கள் செறிவாய் அமைந்துள்ளன. மேலும், கேணி, சொரித்தவளை, கூப்பிடுகுதே, பண்ணை, சேரி முதலிய வழக்குச் சொற்களும் இடம்பெற்றுள்ளதால், இது மக்களே பாடுவது போல் அவர்கள் மொழியிலே பாடுவதாக உள்ளது.

**பொருள் நயம்**

மழை வருவதற்கான அறிகுறிகள் அடுக்கப்பட்டு, மழை வந்தால் என்னென்ன பயன்கள் ஏற்படும் என்பதனைச் சொல்லோவியமாக்கி, மழையினால் ஏற்படும் மகிழ்ச்சி வெளிப்படுத்தப் படுகிறது.

**ஒலி நயம்**

பள்ளுப் பாட்டு சந்த நயமிக்கது என்பதைச் சொற்பொருத்தமும் ஒலிநயப் பொருத்தமும் காட்டுகின்றன. வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம் ஆகிய நாற்கண எழுத்துகளின் ஒலிகளும் ஒன்றனுக்கொன்று போட்டியிட்டு ஒலிப்பது பாடலுக்கு ஒலிநயத்தைக் கூட்டுகிறது.

**1) மோனை நயம்**

ஆற்று - யாள; நேற்று-நீர்; சேற்று-சேற்றை; போற்று-பண்ணை-புள்ளி- பள்ளர் ஆகிய சொற்களில் மோனை வந்துள்ளதால் பாடலை நினைவிற் கொள்வது எளிதாக உள்ளது.

**2) எதுகை நயம்**

ஆற்று - நேற்றும் - சேற்று - போற்று ஆகிய சொற்கள் அடிதோறும் முதலெழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவருவதால் எதுகை நயமிக்க பாடலாக இது விளங்குகிறது.

**3) இயைபு நயம்**

மின்னுதே - அடிக்குதே- கூப்பிடுகுதே - ஆடுதே - கொள்வோமே என அடிதோறும் ஏகார ஒலிபெற்று வருவதால், இயைபு நயமிக்க பாடலாக இது உள்ளது.

**அணி நயம் - இயல்பு நவிற்சி**

உள்ளதை உள்ளவாறே மழையறிகுறிகளுடன் பாடப்பட்டுள்ளதால், இயல்பு நவிற்சி அணியாக இப்பாடல் அமைகிறது.

இப்பாடலில் வல்லெழுத்துகள் மெல்லெழுத்துகள் இடையெழுத்துகள் அனைத்தும் கலந்து, எதுகை, மோனை, இயைபு ஆகிய தொடை நயங்கள் சிறந்தமைந்து சொல் நயமும் ஓசை நயமும் அமைந்து படிப்போர்க்கும் பாடுவோர்க்கும் கேட்போர்க்கும் பேரின்பம் நல்குவதைச் சுவைத்து மகிழும்போது மண்வாசனை மணங்கமழுகிறது.

## 2. உரைநடை

தொடக்க நிலையில் முதல்வகுப்பில் எழுத்துகளைக் குறிக்கும் வரிவடிவங்கள் அறிமுக மாகின்றன. அதனைத் தொடர்ந்து சொற்களுஞ் சிறுசிறு தொடர்களும் அறிமுகமாகின்றன. இவ் வகுப்பில் பயன்படுத்துஞ் சொற்களுந் தொடர்களும் பெரும்பாலும் மாணவர்தம் வாழ்க்கையில் அறிந்து பயன்படுத்துந் தொடர்களாகவே இருக்கும்.

ஆறு, ஏழாம் வகுப்புகளுக்கு ஆசிரியர் குழு எழுதும் உரைநடையே பாடங்களாக அமையும். அதனால், சொற்களுந் தொடர்களும் படிப்படியாக உயர்ந்து செல்லும்நிலையில் அமைந்திருக்கும். எட்டாம் வகுப்புமுதல் உரைநடையாசிரியர் பலர் எழுதிய கட்டுரைப் பகுதிகள் உரைநடைப் பகுதியில் அமைந்திருக்கும். அவை அவரவர் மொழித்திறனுக்கேற்ற நடைச் சிறப்பைப் பெற்றிருக்கும். அவற்றிற் காணப்படுஞ் சொல்மரபும் தொடர்மரபும் பத்தியமைப்பு மரபும் மொழித்தூய்மையும் நடைச்சிறப்பை உணரத் துணைசெய்யும்.

அத்தகைய உரைநடைப் பாடத்தின் வழி, ஆசிரியப் பயிற்சி மாணாக்கர் கீழ்க்குறிப்பிட்ட மொழிக் குறிக்கோள்களை அடைதல்வேண்டும்.

- பாடப் பகுதியைக் கேட்டு அதன் மையக் கருத்தை அறிதல்.
- அரிய சொற்றொடர்களை அறிதல்.
- புதிய சொற்களின் பொருளை அறிதல்.
- மரபுத் தொடர்களை அறிதல்.
- மேற்கோள்களை அறிதல்.
- வாக்கிய வகைகளை அறிதல்.

பயிற்சி மாணாக்கர் உரைநடைவழி மொழித்திறனைப் பெற, இருபதாம் நூற்றாண்டில் உரைநடையில் கட்டுரைகள் எழுதிச் சிறப்புப் பெற்ற பலருள் மறைமலையடிகள், டாக்டர் மு. வரதராசனார் ஆகிய இருவரைப் பற்றியும், அவர்தம் உரைநடைச் சிறப்பையும் எடுத்துக் காட்டாக ஈண்டுக் காணலாம்.

## அ) மறைமலையடிகள்

மறைமலையடிகள் நாகப்பட்டினத்தையடுத்த காடம்பாடி என்னும் ஊரில் 1876ஆம் ஆண்டு (18.07.1876) பிறந்தார். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் வேதாசலம்.

தமிழ்ப் புலமை மிகுந்த நாராயணசாமிப் பிள்ளையிடம் தமிழ் கற்றார். சைவசித்தாந்த சண்ட மாருதம் எனப் புகழ்பெற்ற சோமசுந்தர நாயகரிடம் சைவசித்தாந்தம் கற்றார்.

சென்னையில் 'சித்தாந்த தீபிகை' எனுஞ் சைவசித்தாந்த இதழின் துணையாசிரியராகப் பணியாற்றினார். அதன்பின்னர்ச் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாருடன் (பரிதிமாற் கலைஞர்) தமிழாசிரியராகப் பணியாற்றினார். 'பொதுநிலைக் கழகம்' ஒன்று ஏற்படுத்திச் சாதிவேறுபாடில்லாமற் பொதுமக்களுக்குக் கடவுட்பற்று உண்டாக்கும் சொற்பொழிவுகள் ஆற்றினார். 'ஞானசாகரம்' என்னுந் திங்களிதழ் ஒன்றைத் தொடங்கி நடத்தினார்.

1916ஆம் ஆண்டுமுதல் இவருக்குத் தனித்தமிழ்ப் பற்று உண்டாயிற்று. தம் மகள் நீலாம்பிகையம்மையாருடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, தமிழில் வடமொழிச் சொற்களும் பிற அயன்மொழிச் சொற்களுங் கலப்பதால் தமிழின் இனிமை குறைவதுடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்துபோய்விடும் எனக் கூறித் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதுமுதல் ஞான சாகரம் 'அறிவுக்கடல்' ஆயிற்று. சுவாமி வேதாசலம் 'மறைமலையடிகள்' ஆனார்.

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த இப்பெரியார், தமது எழுபத்தைந்தாம் வயதில் 1950ஆம் ஆண்டு (15.9.1950) இயற்கையெய்தினார்.

கிறித்துவக் கல்லூரியில் பணியாற்றும்பொழுதே பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப் பாட்டாராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டார். கட்டுரை எழுதுந்திறன், அறிவுரைக் கொத்து, சிந்தனைக் கட்டுரைகள் ஆகிய அவருடைய பிற நூல்கள் படிப்போரை ஈர்ப்பன. சாகுந்தல நாடக மொழிபெயர்ப்பும் சாகுந்தல நாடக ஆராய்ச்சியும் இவரது வடமொழிப் புலமைக்குத் தக்க சான்றுகளாம்.

பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், தமிழர் மதம் போன்றவை இவர்தம் ஆராய்ச்சி நூல்களாகும். கோகிலாம்பாள் கடிதங்கள், மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை, பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், தொலைவில் உணர்தல், யோக நித்திரை போன்றவை இவரது பிற படைப்புகளாகும்.

மறைமலையடிகளாரைப்பற்றித் திரு.வி.க., 'மறைமலை ஒரு பெரும் அறிவுச்சுடர், தமிழ் முரசு, சைவவான், அவர்தம் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடே அடிகளால் விழிப்புற்றது. 'அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மறைமலையடிகள் உரைநடை நூல்களிலிருந்து சில பகுதிகள்:

**பகுதி-1**

'கல்வியே அழியாச் செல்வம்' என்பதுபற்றி அறிவுரைக் கொத்து என்னும் நூலில், 'அழியாச் செல்வத்தையே அடையவேண்டுமென்னும் அவா நம்மெல்லாரிடத்தும் இயற்கையாக இருந்தாலும், முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும் பாசிமூடிய பவளத்தின் நிறமும், பாசியில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்போல் நம்மை மூடிக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி நாம் அறிவை இழந்து அழியாச் செல்வத்தை அடைய முயலாமல், நிலையின்றி அழிந்துபோகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைந்து, அவற்றைப் பெறுவதிலும் அவற்றை நுகர்வதிலுமே நமது காலத்தைக் கழித்து வருகின்றோம்.

1. இப்பத்தியின் மையக் கருத்து 'கல்வியே அழியாச் செல்வம்'.
2. முத்தின் ஒளி, பவளத்தின் நிறம், மதியின் துலக்கம், விளக்கின் ஒளி - போன்ற உவமைகள் இடம்பெற்றுள்ளன.
3. அவா, மாசி, துலக்கம், கூடைகவிழ்ந்த, நுகர்தல் - என அருஞ்சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.
4. கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளிபோல் என்னும் அழகிய உவமை பயன்படுத்தப் பட்டுள்ளது.
5. அழியாச் செல்வம், அறியாமை என்னும் இருள் - என்னும் அழகிய தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பகுதி -2**

'காடு' பற்றிய வருணனை 'சிறுவர்க்கான செந்தமிழ்' என்னும் நூலிலிருந்து,

"கானகத்தின் கவினைக் கானகத்திலன்றி வேறெங்கும் காணல் இயலாது. எத்தனை வடிவான இலைகள்! எத்தனை நிறமான மலர்கள்! எத்தனை சுவையான காய்கள்! எத்தனை இனிப்பான பழங்கள்! எத்தனை வகையான மரங்கள் செடிகள் கொடிகள்! அம்மம்ம! இறைவன் படைப்பின் பல்வேறு வகையான வியத்தகு அமைப்பும் அழகும் ஒருங்கு பொதுளிய அடவிகளின் விழுமிய தன்மை எங்ஙனம் கூறுவேம்! எவ்வாறு காட்டுவேம்! கானகங்களின் அடர்ந்துயர்ந்த தோற்றத்தைக் காண்கையில் உள்ளமும் உணர்வும் மேலுயர்ந்து செல்கின்றன! வியப்பும் புதுமையும் கருத்தைக் கவர்ந்திழுக்கின்றன!"

1. இப்பத்தியின் மையக் கருத்து: கானகத்துக் கவின் (அ) காடு பற்றிய வருணனை.
2. கானகம், கவின், பொதுளிய, அடவி, விழுமிய ஆகிய அருஞ்சொற்கள் இடம் பெற்றுள்ளன.
3. காட்டிலுள்ள மரங்கள், இலைகள், காய்கள், பழங்கள், செடிகள், கொடிகள் ஆகியவை வருணிக்கப்பட்டுள்ளன.
4. காட்டின் அழகிய தன்மை கூறப்பட்டுள்ளது.
5. கானகத்துக் கவின் காணுந்தோறும் காணுந்தோறும் வியப்பை உண்டுபண்ணுவது விவரிக்கப்பட்டுள்ளது.
6. முதலில் ஒரு தொடரும் இரண்டாவது ஒரு நீண்ட தொடருமாக அமைந்து வியப்புச் சொற்கள் அதிகம் அமைத்து, வியப்புடனே முடித்திருப்பது மறைமலையடிகளுக்கே உரிய சிறப்பான நடையாகும்.

**பகுதி - 3**

‘வெள்ளத்தால் அழிந்துபோவதும் வெந்நெருப்பால் வெந்துபோவதும் அரசர்களாற் கைப்பற்றப்படுவதுங் கொடுக்கக் கொடுக்கக் குறைந்துபோவதுங் கள்வர்க்காக நம்மை அஞ்சுவிப்பதும் பாதுகாப்பதற்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதுமான இச்செல்வம் நம்மால் எந்நேரமும் விரும்பத்தக்கதன்றென்பது இதனால் இனிது விளங்குகின்றதன்றோ? இவ்வாறு சொல்லுதலைக்கொண்டு நாம் செல்வத்தை வேண்டாமல் வறுமைப்பட்டு இந்த மண்ணுலகில் வருந்தியே காலங்கழிக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்தல் கூடாது. நமது மண்ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற்கும், பிற உயிரிகளின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்வதற்கும் இன்றியமையாது வேண்டப்படும் பொருளைச் சேர்த்து, ஆரவாரம் இல்லாமலும், எல்லாந் தனக்கே என்று எண்ணாமலுந் தனக்கும் பிறர்க்கும் பல்வகையால் நல்ல பயன்கள் விளையும்படி அதனைப் பயன்படுத்துதல் வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.’

1. இப்பகுதியின் மையக்கருத்து யாது?
2. எது விரும்பத்தக்கதன்று?
3. பொருளை எவ்வாறு பயன்படுத்தல்வேண்டும்?
4. இப்பத்தியில் அமைந்துள்ள அருஞ்சொற்கள் யாவை?

ஓரறிவுடைய புற்பூண்டுகள்முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறான பலகோடி உயிர்களுள் மக்கட் பிறவியே சிறந்தது என்பது எல்லார்க்குந் தெரிந்த உண்மையன்றோ! ஏனெனில் ஆறாவதானபகுத்தறிவு மக்கட் பிறவியெடுத்த உயிர்கட்குப் பேரளவினதாய் அமைந்தாற்போல ஏனைச் சிற்றுயிர்கட்கு அமையவில்லை.

- மறைமலையடிகள்

## ஆ) மு. வரதராசனார்

மு. வரதராசனார் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் 1912ஆம் ஆண்டு முனியசாமி அவர்களுக்கும் அம்மாக்கண்ணு அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.

திருப்பத்தூரில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார். பதினாறாம் வயதில் வட்டாட்சியர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியேற்றார். ‘ஈளை’நோயின் காரணமாக அப்பணியிலிருந்து விலகினார்.

திருப்பத்தூரில் முருகைய முதலியாரிடம் தமிழ் பயின்று 1935 இல் வித்வான் தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். திருப்பத்தூரில் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். சர். ஆ. இலக்குமணசாமி முதலியார் இவரைப் பச்சையப்பன் கல்லூரியில் பயிற்றாசிரியராகப் பணியேற்கச் செய்தார். 1947 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக முனைவர் பட்டம் பெற்றார். தமிழ்த்துறையில் முதன்முதலாகப் பிஎச்.டி. பட்டம் பெற்றவர் இவரே யாவார்.

1961ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பொறுப்பேற்றார். பின்னர் மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானார். தமிழக வரலாற்றுக் குழு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட். பட்டம்பெற்ற தமிழறிஞர் டாக்டர் மு.வ. ஒருவரே யாவார். மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கும்பொழுது நெஞ்சடைப்பு நோயால் தாக்கப்பட்டு 10.10.1974 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மு.வ., முதன்முதலில் குழந்தைப் பாட்டுக்கள் என்னும் நூல் எழுதினார். அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்குரிய சிறுகதைகள் எழுதினார். பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றும்பொழுது மொழிவரலாறு, மொழிநூல், இலக்கிய மரபு, இலக்கியத் திறன் போன்ற நூல்களை வெளியிட்டார். 1945இல் வெளிவந்த 'திருக்குறள் தெளிவுரை' தமிழ்நாட்டில் மிக அதிகமாக விற்பனையான நூல்களுள் ஒன்றாகும்.

இவரெழுதிய புதினங்களில் கள்ளோ காவியமோ, பெற்ற மனம், அல்லி, மலர்விழி, செந்தாமரை, நெஞ்சில் ஒரு முள், கரித்துண்டு போன்றன குறிப்பிடத்தக்கனவாம். காந்தி அண்ணல், அறிஞர் பெர்னாட்ஷா, கவிஞர் தாகூர் போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். இவரது ஓவச்செய்தி, கொங்குதேர் வாழ்க்கை, நற்றிணைச் செல்வம் போன்ற நூல்கள் செம்மாந்த நடையில் அமைந்துள்ளவை.

## மு.வ.வின் நூல்களிலிருந்து சில பகுதிகள்:

**பகுதி-1**

'மொழி ஓர் அரிய கலை' என்பதுபற்றி மொழி வரலாறு என்னும் நூலில்,

'மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும்உள்ளது. பெற்ற தாயின் முதல்வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு ஒத்து வளர்வது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பதுபெரும்பாலும் மொழியால் அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

1. இப்பத்தியின் மையக் கருத்து 'மொழி ஒரு கலை' என்பதாகும்.
2. அரிய, வேட்கை - போன்ற அருஞ்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3. மனவளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்ற கருத்து விளக்கப்படுகிறது.
4. மக்களால் மொழியும் மொழியால் மக்களும் வளர்கின்றனர் என்ற கருத்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**பகுதி -2**

'தம்பிக்கு' என்னும் நூலில்,

'தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதியில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உர மாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீய வழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்று கிறவனும் இடைநடுவே அல்லல்படுகிறான். அவனுடைய உள்ளத்தின் அமைதியைக் கெடுத்து அல்லல்படுகிறது. உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம்; ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது. வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது.

1. இப்பத்தியின் மையக்கருத்து 'உடலையும் உள்ளத்தையும் பேணுதல்'.
2. உரம், அல்லல், வானளாவ - போன்ற அருஞ்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே பேணவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது.

4. மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம்; ஆனால், தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது; வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழ முடியாது - என்ற நயமிக்க சொற்றொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது.

5. உடல் உரத்திற்கு மரத்தின் வேரும், மன வளர்ச்சிக்கு மரக்கிளைகள் வளரும் தன்மையும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**பகுதி - 3**

தங்கைக்கு எழுதிய கடிதத்திலிருந்து,

'புதிதாகப் பழகும்போது பெரும்பாலோர் நன்றாகப் பழக முடியும். அதில் ஒன்றும் சிறப்பு இல்லை; திறமை இல்லை. புதிய மாணவர் ஒழுங்காக நடந்துகொள்வர். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக்கொடுப்பர். புதிய வியாபாரி நல்ல சரக்கு விற்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். அதில் ஒரு சிறப்பும் இல்லை. இந்தப் புதுமையை எள்ளி நகையாடுவதுபோல் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உனக்கு நன்கு தெரியும். 'புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும்' என்னும் அந்தப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும் கருத்து உடையதுதான். அதற்கு மாறாக, எவ்வளவு பழமை ஆன போதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை. மற்றையது பொன்முலாம் பூசிய பொருள்போல் தொடக்கத்தில் மட்டுமே நல்ல ஒளி வீசுகிறது. உண்மையான பொன்னால் செய்யப்பட்ட பொருள் ஒரு நாளும் அப்படி ஆகாது அல்லவா? பழகப் பழக, தேயத்தேய அது குன்றாது ஒளிவீசும் அல்லவா? அதுபோல் வாழும் வாழ்க்கையே நல்லவர் களின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

1. இப்பத்தியின் கருத்து யாது?
2. இப்பத்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள பழமொழி உணர்த்துங் கருத்தை விளக்குக.
3. நல்ல வாழ்க்கையின் தன்மைகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?
4. நல்லவர்களின் குறிக்கோளாகக் கூறப்படுவது யாது?
5. பொன்முலாம் பூசிய பொருள் என்று கூறப்படுவது யாது?
6. இப்பத்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள அடுக்குச்சொற்கள் யாவை?
7. இப்பத்தியில் வந்துள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுக.

குடும்பத்தில் உறுப்பினராய் உள்ள ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அதுதான் நல்ல குடும்பம். சிலர் உழைக்க, சிலர் உழைக்காமலே அவர்களின் உழைப்பின் பயனை உண்டு, சோம்பலாக இருப்பதனால் போற்றத்தக்க குடும்பம் ஆகாது. உலகம் பெரிய குடும்பம். அதிலும் எல்லோரும் உழைக்கவேண்டும். உழைக்காமல் உயிர்வாழ எவருக்கும் உரிமை இருக்கக் கூடாது. திருடன் உழைக்காமல் பிறருடைய உழைப்பின் பயனைப் பெற்று வாழ்கிறான். அதனால்தான் அவன் சமுதாயத்தால் வெறுக்கப்படுகிறான். எதிர்காலத்தில் உழைக்காமல் உயிர் வாழ்வோர் எவரும் வெறுக்கப்படுவர்.

- டாக்டர் மு. வரதராசன்

## 3. இலக்கணம்

கற்பிக்கவிருக்கும் வகுப்புகளுக்கான இலக்கணப் பகுதிகள் பற்றி மாணவ ஆசிரியர் தெளிவான அறிவு பெற்றிருத்தல் இன்றியமையாதது. முதலாம் ஆண்டுப் பாடப்பகுதியில் இனவெழுத்துகள், பெயர்ச்சொல், பெயரின் பண்புகள், ஆகுபெயர், அன்மொழித்தொகை, வேற்றுமை உருபும் பொருளும், உருபு மயக்கம், இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர், வழுவமைதி, வல்லெழுத்து மிகுமிடங்கள், மிகாவிடங்கள் முதலியன இடம்பெற்றன. இரண்டாம் ஆண்டுப் பாடப்பகுதியில் பாடங்களைக் கற்பிக்கும்பொழுது பின்வரும் இலக்கண அறிவையும் உரிய முறையில் பயன்படுத்துந் திறன் மாணவ ஆசிரியர் பெறுதல்வேண்டும்.

### அ) வினைமுற்று, வினையெச்சம்

வள்ளி பந்து விளையாடினாள் - இச்சொற்றொடரில் 'விளையாடினாள்' என்னுஞ் சொல் வள்ளி செய்த செயலைக் குறிக்கின்றது. இவ்வாறு செயலைக் குறிக்குஞ் சொல் 'வினைச்சொல்' எனப்படும். வினைச்சொல்லில் வினை முற்றுப்பெற்று வருவதை வினைமுற்று எனவும், முற்றுப் பெறாத வினையை எச்சவினை அல்லது வினையெச்சம் எனவும் வழங்கப்படும்.

**வினைமுற்று**

'விளையாடினாள்', 'பறந்தது' - இச்சொற்களில் வினைகள் பொருள்முடிவு பெற்று வந்துள்ளன. இங்ஙனம் பொருள்முடிவு பெற்று வரும் வினைச்சொல் 'வினைமுற்று' எனப்படும்.

**வினைமுற்று வகைகள்**

வினைமுற்றுச் சொற்கள் தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இரண்டு வகைப்படும்.

**தெரிநிலை வினைமுற்று**

'மணிமேகலை பாடம் படித்தாள்' - இதில் 'படித்தாள்' என்பது தெரிநிலை வினை முற்றாகும். செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் வெளிப்படையாக உணர்த்துவது தெரிநிலை வினைமுற்றாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செய்பவள் | - | மணிமேகலை | கருவி | - | நூல் |
| நிலம் | - | பள்ளி | செயல் | - | படித்தல் |
| காலம் | - | இறந்தகாலம் | செய்பொருள் | - | பாடம் |

தெரிநிலை வினையானது பகுதியினால் செயலையும், இடைநிலையால் காலத்தையும், விகுதியினால் செய்பவனையும் வெளிப்படையாகக் காட்டும்.

> 'படித்தாள்' இதற்குப் 'பாடம்' என்ற செயப்படுபொருள் தெளிவாகத் தெரிவதால் செயப்படுபொருள் குன்றா வினைமுற்றாகும். 'சிரித்தாள்' - இது செயப்படுபொருள் குன்றிய வினை, விளக்கந் தருக, ஒப்பிட்டுக் காட்டுக.

**குறிப்பு வினைமுற்று**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயரின் அடியாகக் குறிப்பு வினை தோன்றும். செய்பவனை வெளிப்படையாகக் காட்டிச் செயலையும் காலத்தையும் குறிப்பாகத் தெரிவித்து நிற்கும் வினைச்சொல், குறிப்பு வினைமுற்றாகும்.

| | | |
|---|---|---|
| இவன் பொன்னன் | - | பொருள் |
| இவன் மதுரையான் | - | இடம் |

| | | |
|---|---|---|
| இவன் சித்திரையான் | - | காலம் |
| இவன் குறுங்காலன் | - | சினை |
| இவன் செம்பட்டையான் | - | பண்பு |
| இவன் கடுநடையன் | - | தொழில் |

இவன் பொன்னன் என்பது பொன்னை உடையவனாக இருந்தான், பொன்னை உடையவனாக இருக்கிறான், பொன்னை உடையவனாக இருப்பான் எனப் பொருள் உணர்த்தித் தொழிலையும் காலத்தையும் குறிப்பாகக் காட்டி, 'இவன்' என்ற எழுவாய்க்குப் பயனிலையாக இருப்பதைக் காண்க.

குறிப்பு வினைமுற்றைப்பற்றிக் கலந்துரையாடுக. வேறு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

**எச்சவினை**

படித்த சிறுவன், படித்துப் பார்த்தான், பறந்த பறவை, பறந்து சென்றது - இச்சொற்றொடர்களிலுள்ள படித்த, படித்து, பறந்த, பறந்து என்னுஞ் சொற்கள் பொருள் முடிவு பெறாமல் வந்துள்ளன. இவ்வாறு பொருள் முடிவுபெறாத வினைச்சொல் பெயரையோ வினையையோ கொண்டு முடியுமானால் அது 'எச்சவினை' எனப்படும்.

**பெயரெச்சம்**

படித்த, பறந்த என்ற எச்சவினைகள் சிறுவன், பறவை என்னும் பெயர்களைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு எச்சவினைகள் பெயரைக்கொண்டு முடிந்தால், அது 'பெயரெச்சம்' எனப்படும்.

(எ-டு) படித்த சிறுவன், பறந்த பறவை

**வினையெச்சம்**

'படித்துப் பார்த்தான்', 'பறந்து சென்றது' - இவற்றுள் படித்து, பறந்து என்ற செய்வினைகள் பார்த்தான், சென்றது என்னும் வினைச்சொற்களைக்கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு எச்சவினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிந்தால் அது 'வினையெச்சம்' எனப்படும்.

## ஆ) தன்வினை, பிறவினை

எழுவாய், தானே ஒரு செயலைச் செய்தல் 'தன்வினை' எனப்பெறும்.

(எ-டு) செல்வி உணவு உண்டாள்.

எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்வித்தல் 'பிறவினை' எனப் பெறும்.

(எ-டு) செல்வியால் உணவு உண்பிக்கப்பட்டது.

தன்வினை பிறவினையாகும்போது வி, பி, கு., சு, டு, து, பு, று ஆகியன விகுதிகளாய் அமையும்.

(எ-டு) எழுது - எழுதுவி, உண் - உண்பி, செய் - செய்வி, படி - படிப்பி.

மென்றொடர்க் குற்றுகரம் வன்றொடராய் மாறுவதைக் காண்க.

(எ-டு) எழும்பு - எழுப்பு, அடங்கு - அடக்கு.

தன்வினைகளில் உள்ள மெல்லொற்று வல்லொற்றாய்த் திரிந்து வரும்.

(எ-டு) உயர்ந்தான் - உயர்த்தினான்

சில தன்வினைகள் வல்லொற்று இரட்டித்துப் பிறவினைகளாவதைக் காண்க.

(எ-டு) ஆடு - ஆட்டு, மாறு - மாற்று, ஆறு - ஆற்று.

சில தன்வினைகள் பகுதியில் எந்த மாறுதலுமின்றிப் பகுதியும் இடைநிலையும் இணையும்போது வல்லினம் மிகுந்து பிறவினைகளாவதைக் காண்க.

(எ-டு) தேய்கிறேன் - தேய்க்கிறேன்

செய், வை, பண்ணு என்னுஞ் சொற்கள் தன்வினைச் சொற்களோடு சேர்ந்து வரும்போது பிறவினைச் சொற்களாவதைக் காண்க.

(எ-டு) தடுப்பேன் - தடுக்கச் செய்வேன்

தடுக்க வைப்பேன், தடுக்கப் பண்ணுவேன்.

## இ) செய்வினை, செயப்பாட்டு வினை

ஒரு வாக்கியமானது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்னும் இவ்வரிசையில் அமைந்து, செயப்படுபொருளோடு 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து வருமாயின், அது 'செய்வினை வாக்கியம்' எனப்படும் ( 'ஐ' உருபு வெளிப்படையாகவும் வரும்; மறைந்தும் வரும்). திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் - செய்வினை. செய்பவனுக்குச் சிறப்புத் தரும் வினை 'செய்வினை' எனப்படும்.

ஒரு வாக்கியமானது செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்னும் இவ்வரிசையில் அமைந்தும், எழுவாயோ 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுசேர்ந்தும், பயனிலையோடு 'படு', 'பட்டது' அல்லது 'பெறு', 'பெற்றது' என்னும் துணைவினைகள் சேர்ந்தும் வருவது செயப்பாட்டு வினைவாக்கியம் எனப்படும். திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது - செயப்பாட்டுவினை. செயப்படுபொருளுக்குச் சிறப்புத் தரும் வினை 'செயப்பாட்டுவினை' எனப்படும்.

செயப்படுபொருளையே எழுவாய்போலக்கொண்டு, அதற்கு வினைப்பயனிலை தந்து முடித்தலும் பழக்கத்தில் உள்ளது.

(எ-டு) முள் குத்திற்று.

"செயப்படு பொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே" -( நன்னூல் 400)

'படு' என்பதைப்போலப் பெறு, உண், முதலான சொற்கள் இணைந்தும் செயப்பாட்டு வினை அமைவதைக் காண்க.

(எ-டு) சிற்பம் சிற்பியால் செதுக்கப்பெற்றது.

கோவலன் கொலையுண்டான்.

ஆயிற்று, போயிற்று முதலான வினைகள் செய்வினை எச்சங்களுடன் இணைந்து செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்துவதைக் காண்க.

(எ-டு) கதிரவன் உதித்தாயிற்று.

பால் உறைந்துபோயிற்று.

## ஈ) இனங்குறித்தல்

ஒரு சொல்லானது அதன் பொருளை உணர்த்துவது மட்டுமன்றி, அப்பொருளோடு தொடர்புடைய இனமான பொருளையும் குறிப்பாக உணர்த்துவது இனங்குறித்தல் எனப்படும்.

(எ-டு) 'சோறு உண்டான்' - என்ற சொற்றொடரில் சோறு என்பது குழம்பு, கறி

முதலியவற்றையும் ‘உண்டான்’ என்பது தின்னுதல், குடித்தல் முதலியவற்றை இனங் குறிக்கின்றன.

‘வெற்றிலை போட்டான்’ - என்பது பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றையும் சேர்த்து வாயில் போட்டான் என்பதை விளக்குகின்றது.

‘அறிவுடையவனே ஆற்றலுடையவன்’ என்றால், அறிவுடையவள் ஆற்றலுடையவள் என்பதையும் உணர்த்துகிறது.

சோற்றுக்கு இனம் - கறி, குழம்பு; வெற்றிலைக்கு இனம் பாக்கு, சுண்ணாம்பு; ஆண் பாலுக்கு இனம் பெண்பால். ஆதலால் இவை இனங்குறித்தலாகும்.

மாணவர்களைத் தங்கள் பகுதியில் வழங்கும் இனங்குறித்தல் குறித்த எடுத்துக் காட்டுகளைக் கூறச் செய்து தொகுக்கச் செய்க;

## உ) வழக்கு

நமது முன்னோர்கள் சொற்களை எவ்வாறு வழங்கினார்களோ அவ்வாறே வழங்குவது வழக்கு எனப்படும். வழக்கு இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

**இயல்பு வழக்கு**

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என இயல்பு வழக்கு மூன்று வகையில் அமைவதைக் காண்க.

**இலக்கணமுடையது**

இலக்கணமுடைய சொற்களாகவும் சொற்றொடர்களாகவும் பொருளுணர்த்தப்பட்டும் வருவன இலக்கணமுடையதாகும்.

(எ-டு) மலர் மென்மையானது.
நீர் குளிர்ந்தது.
தமிழ்மொழி தொன்மையுடைத்து.

**இலக்கணப்போலி**

இலக்கண நெறிப்படி இல்லாவிடினும் இலக்கணமுடையவை போலக் கருதப்படுபவை இலக்கணப்போலி யாகும்.

(எ-டு) கால்வாய் என்பதை வாய்க்கால் எனவும்,
இல்வாய் என்பதை வாயில் எனவும்,
நகர்ப்புறம் என்பதைப் புறநகர் எனவும்,
கோவில் என்பதைக் கோயில் எனவும்,
தசை என்பதைச் சதை எனவும் வழங்குதல்.

**மரூஉ**

இலக்கணமுறைப்படி அமைந்த சொற்கள் மருவி இலக்கணம் அல்லாதவழி வழங்குவது மரூஉ ஆகும். (மருவி வந்தாலும் சான்றோர் ஏற்றுக்கொள்வதே மரூஉ ஆகும்.)

(எ-டு) சோழநாடு -சோணாடு
தஞ்சாவூர் - தஞ்சை
திருநெல்வேலி - நெல்லை
புதுச்சேரி - புதுவை
யானை - ஆனை

**தகுதி வழக்கு**

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனத் தகுதி வழக்கு மூன்று வகையில் வரும்.

**இடக்கரடக்கல்**

சான்றோர் இருக்கும் அவையில் சொல்லத் தகாத சொல்லை, அவ்வாறே நேரடியாகக் கூறாமல், மறைத்துப் பிற சொற்களால் அப்பொருளை உணர்த்துவது இடக்கரடக்கல் எனப்படும்.

(எ-டு) மலங்கழுவி வருவேன் என்பதைக் கால் கழுவி வருவேன் என்றும்,
செத்தார் என்பதைத் துஞ்சினார் என்றும் வழங்குவர்.

**மங்கலம்**

மங்கலமில்லாததை நீக்கி மங்கலமான சொற்களால் சொல்வது மங்கலம் எனப்படும்.

(எ-டு) செத்தாரை - துஞ்சினார், இறைவனடி சேர்ந்தார், இயற்கை எய்தினார் எனவும்,

குத்துவிளக்கை அணைத்தலை - 'குத்து விளக்கைக் குளிர வை' எனவும்/
சுடுகாடு - நன்காடு எனவும்,

காராடு - வெள்ளாடு எனவும் வழங்குவர்.

**குழூஉக்குறி**

ஒவ்வொரு கூட்டத்தாரும் ஏதாவதொரு காரணங் குறித்து ஒரு பொருளின் சொற்குறியை நீக்கி, வேறொரு சொற்குறியைக்கொண்டு கூறுவது குழூஉக்குறி எனப்படும்.

(எ-டு) பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றும்,
வேடர் உரையாடும்போது கள்ளைச் 'சொல்விளம்பி' என்றும் வழங்குவர்.

மாணவர்களைத் தங்கள் பகுதிகளில் வழங்கும் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறித் தொடர்களைத் தொகுக்கச் செய்க.

## ஊ) தொகைநிலைத் தொடர்

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் வேற்றுமை, உவமை, பண்பு முதலிய உருபுகள் மறைந்துநின்று சொற்கள் இணைந்து ஒருமொழிபோல் வருவது தொகைநிலைத் தொடராகும்.

இவ்வாறு வருந் தொகைநிலைத் தொடர்கள் அறுவகைப்படும். அவை: 1. வேற்றுமைத் தொகை, 2. வினைத்தொகை, 3. பண்புத்தொகை, 4. உவமைத்தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித்தொகை என்பன.

**வேற்றுமைத்தொகை**

இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரையுள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்து வருவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

(எ.டு.) மோர் பருகினான் - மோரைப் பருகினான்.

**வினைத்தொகை**

காலங்காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்கும் வினைச்சொல் பெயரைக்கொண்டு முடியுமானால் அது வினைத்தொகை எனப்படும்.

(எ-டு) சுடுசோறு - சுட்டசோறு, சுடுகின்ற சோறு, சுடுஞ்சோறு என மூன்று காலமுந் தோன்ற வரும். ஊறுகாய், வளர்மதி, சுடுசொல்,

**பண்புத்தொகை**

பண்புப்பெயர் நிலைமொழியாக நின்று, வருமொழியாகப் பெயர்ச்சொல் வந்து நடுவில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து நிற்பது பண்புத்தொகை யாகும்.

(எ-டு) வெண்பொங்கல் - வெண்மை + பொங்கல் - வெண்மை யாகிய பொங்கல் என விரியும்.

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

சிறப்புப் பெயர் நிலைமொழியாகவும் பொதுப்பெயர் வருமொழியாகவும் வந்து இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாகும்.

(எ-டு) தென்னை மரம் - தென்னை ஆகிய மரம்

தென்னை - சிறப்புப் பெயர், மரம் - பொதுப்பெயர்; இரண்டிற்கும் நடுவில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வந்துள்ளது.

**உவமைத்தொகை**

உவமையாக வரும் பெயர் முதலிலும் உவமிக்கப்படும் பொருள் அடுத்தும் வந்து இடையில் போன்ற, போல, ஒப்ப, ஏய்ப்ப முதலான உவமை உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை யாகும்.

(எ-டு) தாமரை முகம் - தாமரை போன்ற முகம்

'தாமரை' என்ற உவமையாக வரும்பெயர் முதலிலும் 'முகம்' என்ற உவமிக்கப்படும் பெயர் அடுத்தும் வந்து 'போன்ற' என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளது.

உவமைத்தொகைகளைத் தொகுத்து அவை எவ்வாறு உவமைத்தொகை யாகின்றன என்பதை விளக்கி எழுதுக.

**உம்மைத்தொகை**

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் வந்து பெயர்தோறும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகை யாகும்.

(எ-டு) நலங்கிள்ளி நெடுங்கிள்ளி போரிட்டனர் - நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போரிட்டனர். இங்குப் பெயர்தோறும் 'உம்' என்ற இடைச்சொல் மறைந்து வந்துள்ளது.

**அன்மொழித்தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைகளின்மேல் அவற்றின் உருபுகளோடுகூட அல்லாத வேறுமொழி மறைந்து வருவது அன்மொழித்தொகை எனப்படும்.

ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி - (நன்னூல் 369)

(எ-டு) 'கயல்விழி ஆடினாள்' - கயல் போன்ற விழியை உடைய (உடையவள்)பெண் ஆடினாள் என விரியும். இங்குக் 'கயல் போன்ற விழி' என்ற உவமைத்தொகையுடன் 'உடையவள்' என்ற அல்லாதமொழி மறைந்து வந்துள்ளதால், இது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த 'அன்மொழித்தொகை' ஆகும்.

'பொற்றொடி பாடினாள்' - பொன்னால் ஆகிய வளையல் அணிந்தவள் பாடினாள் என விரியும். இங்குப் 'பொன்னால் ஆகிய' என்ற மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகையுடன் 'அணிந்தவள்' என்ற அல்லாத சொல்லும் மறைந்து வந்துள்ளதால், இது

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகைப் புறத்துப் பிறந்த 'அன்மொழித்தொகை' ஆகும்.

மலரடி, செந்நெல், விரிசுடர், பாற்குடம், அண்ணன் தம்பி விளையாடினர். மதிமுகம் வந்தாள் போன்ற சொற்றொடர்களைத் தொகுத்து உடன் பயில்வாரோடு கலந்தாய்ந்து வகைப்படுத்துக.

## எ) தொகாநிலைத் தொடர்

நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது இடையில் ஒன்றும் மறையாது வருவது தொகாநிலைத்தொடர் ஆகும்.

அவ்வாறு வருந் தொகாநிலைத்தொடர்கள் வினைமுற்றுத்தொடர்முதல் அடுக்குத் தொடர் வரை ஒன்பது வகைப்படும்.

(எ-டு) 1. வினைமுற்றுத் தொடர்

பார்த்தான் கண்ணன் - தெரிநிலை வினைமுற்றுத்தொடர்.
பெரியன் கண்ணன் - குறிப்பு வினைமுற்றுத்தொடர்.

2. பெயரெச்சத்தொடர் - படித்த சிறுவன்.
3. வினையெச்சத்தொடர் - பார்த்து மகிழ்ந்தான்.
4. எழுவாய்த்தொடர் - கண்ணன் பார்த்தான்.
5. விளித்தொடர் - கண்ணா வா!
6. இடைச்சொற்றொடர் - மற்றொன்று.
7. உரிச்சொற்றொடர் - சாலப் பேசினான்.
8. வேற்றுமைத்தொடர் - புலவருக்குக் கொடுத்தான். (இது நான்காம் வேற்றுமைத்தொடர்.)
9. அடுக்குத்தொடர் - வாழ்க! வாழ்க!

வேற்றுமைத்தொடரில் நான்காம் வேற்றுமைத்தொடர்போல இரண்டாம் வேற்றுமைத்தொடர்முதல் ஏழாம் வேற்றுமைத்தொடர் வரையுள்ள தொடர்களுக்கு எடுத்துக்காட்டுகளைத் தொகுக்க.

## ஏ) மெய்யீற்றுப் புணர்ச்சி

'உண்' இச்சொல்லின் முதலில் நிற்கும் எழுத்து 'உ', இறுதியில் நிற்கும் எழுத்து 'ண்'. ஆதலால், இச்சொல்லை உயிர்முதல் மெய்ஈறு என அறிக.

'கண்' இச்சொல் முதலில் நிற்கும் எழுத்து 'க்' , (க்+அ) இறுதியில் நிற்கும் எழுத்து 'ண்'. ஆதலால் இச்சொல் மெய்முதல் மெய்ஈறு என அறிக. இவ்வாறு நிலைமொழி இறுதியில் மெய்ஈறு வந்து மொழியில் ஏதேனும் ஓர் எழுத்தோடு இணைவது மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகும்.

**ணகர, னகர ஈறு**

வேற்றுமைப் புணர்ச்சியில் 'ண'கர, 'ன'கர மெய்யீறுகள் வந்து/ வருமொழி முதலில் வல்லினம் வர 'ண'கர மெய் 'ட'கரமாகவும், 'ன'கர மெய் 'ற'கரமாகவும் மாறும்.

(எ-டு) மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம்

வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழி இறுதியில் 'ண'கர, 'ன'கர மெய்யீறுகளில் ஒன்று வந்து, வருமொழிமுதலில் மெல்லின எழுத்து, இடையின எழுத்து ஒன்று வரும்போது 'ண'கரமும் 'ன'கரமும் இயல்பாகவே நிற்கும்.

(எ-டு) மண் + மென்மை = மண் மென்மை
பொன் + வன்மை = பொன் வன்மை

அல்வழிப் புணர்ச்சியில் நிலைமொழியில் 'ண'கர, 'ன'கர, ஈறுகள் வந்து வருமொழி முதலில் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவினமும் வர 'ண'கரமும், 'ன'கரமும் விகாரமின்றி இயல்பாகவே நிற்கும்.

(எ-டு) மண் + நிறைந்தது = மண் நிறைந்தது.
பொன் + சிறந்தது = பொன் சிறந்தது.

தனிக்குறிலைச் சாராத நிலைமொழியின் இறுதியில் வரும் 'ண'கரமும், 'ன'கரமும் வருமொழி முதலில் வரும் 'ந'கரம், திரிந்தவிடத்துக் கெடும்.

வேற்றுமைப் புணர்ச்சியில்,

(எ-டு) தூண் + நன்மை = தூணன்மை
தேன் + நன்மை = தேனன்மை

அல்வழிப் புணர்ச்சியில்,

(எ-டு) செம்மண் + நன்று = செம்மணன்று
தேன் + நன்று = தேனன்று

குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே. - (நன்னூல் 210)

'தேன்' என்னுஞ் சொல்லின்முன், வருமொழி முதலாக வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவின மெய்களும் வரும்பொழுது வேற்றுமை, அல்வழி ஆகிய இருவிடங்களிலும் இயல்பாக நிற்குமென அறிக.

அல்வழிப் புணர்ச்சியில்,

(எ-டு) தேன் + கடிது = தேன் கடிது
தேன் + மாண்டது = தேன் மாண்டது
தேன் + யாது = தேன் யாது

வேற்றுமைப் புணர்ச்சியில்,

தேன் + சுவை = தேன் சுவை
தேன் + மணம் = தேன் மணம்
தேன் + யாப்பு = தேன் யாப்பு

தேன் என்ற சொல்லின்முன் மெல்லினம் வந்தால் வேற்றுமை, அல்வழி ஆகிய இரு புணர்ச்சிகளிலும் இயல்பாகவும் நிலைமொழி இறுதி 'ன'கர ஒற்று அழிந்தும் வரும்.

வேற்றுமைப் புணர்ச்சியில்,

(எ-டு) தேன் + மலர் = தேன் மலர்
தேன் + மலர் = தேமலர்

அல்வழிப் புணர்ச்சியில்,

(எ-டு தேன் + மொழி = தேன்மொழி
தேன் + மொழி = தேமொழி

'தேன்' என்ற சொல்லுக்கு முன்னர் வல்லினம் வந்தால், வேற்றுமை, அல்வழி ஆகிய இரு புணர்ச்சிகளிலும் 'ண'கர மெய் இயல்பாகவும், 'ன'கர மெய் கெட்டு, வல்லினம் மிகுந்து அதற்கு இனமான மெல்லினம் மிகுதலும் உண்டு.

வேற்றுமைப் புணர்ச்சியில்,

| | | | | |
|---|---|---|---|---|
| (எ-டு) தேன் + குடம் | = | தேன்குடம் | - | இயல்பாக |
| தேன் + குடம் | = | தேக்குடம் | - | வல்லினம் மிகுந்து. |
| தேன் + குடம் | = | தேங்குடம் | - | இனமெல்லினம் மிகுந்து. |

அல்வழிப் புணர்ச்சியில்,

| | | | |
|---|---|---|---|
| (எ-டு) தேன் + குழம்பு | = | தேன் குழம்பு | - இயல்பாகப் புணர்ந்தது. |
| தேன் + குழம்பு | = | தேக்குழம்பு | - வல்லினம் மிகுந்தது. |
| தேன் + குழம்பு | = | தேங்குழம்பு | - இனமெல்லினம் மிகுந்தது. |

**மகர ஈறு**

| | | | |
|---|---|---|---|
| மரம் + அடி | = | மரவடி | வருமொழிமுதல் உயிர் வந்தது. |
| மனம் + உறுதி | = | மனவுறுதி | |
| பழம் + கடை | = | பழக்கடை | வருமொழிமுதல் வல்லினம் வந்தது. |
| பழம் + தோட்டம் | = | பழத்தோட்டம் | |
| மரம் + நார் | = | மரநார் | வருமொழிமுதல் மெல்லினம் வந்தது. |
| குணம் + நலம் | = | குணநலம் | |
| தங்கம் + யானை | = | தங்கயானை | வருமொழிமுதல் இடையினம் வந்தது. |
| தங்கம் + வாள் | = | தங்கவாள் | |

மகர ஈற்றுச் சொல்லின் பின்னால் வருமொழி முதலாக உயிர் எழுத்தோ வல்லினமோ மெல்லினமோ இடையினமோ வந்துசேரும்போது வேற்றுமைப் புணர்ச்சியில், இறுதியிலுள்ள மகர இறுதி அழிந்து பொதுவிதியாக உயிர் இறுதிச் சொற்களைப் போல இணையும்.

**லகர, ளகர ஈறு**

| | | | |
|---|---|---|---|
| அ) | பல் + பசை | = | பற்பசை |
| | அருள் + பா | = | அருட்பா |

நிலைமொழி இறுதியாக லகர, ளகரங்கள் வந்து வருமொழி முதலாக வல்லினம்வர வேற்றுமைப் புணர்ச்சியில் லகரம் 'ற'கரமாகவும், ளகரம் 'ட'கரமாகவும் மாறுபடுவதைக் காண்க.

| | | | |
|---|---|---|---|
| ஆ) | நூல் + பெரிது | = | நூற்பெரிது, நூல் பெரிது. |
| | கள் + கொடிது | = | கட்கொடிது, கள்கொடிது |

அல்வழிப்புணர்ச்சியில் வல்லினம்வர மாறுபட்டும், வேறுபாடின்றி இயல்பாகவும் நிற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| இ) | நெல் + மலை | = | நென்மலை | வேற்றுமைப் புணர்ச்சி |
| | பொருள் + மாண்பு | = | பொருண்மாண்பு | |
| | புல் + மாய்ந்தது | = | புன்மாய்ந்தது | அல்வழிப் புணர்ச்சி |
| | வாள்+முரிந்தது | = | வாண்முரிந்தது | |

வேற்றுமையிலும் அல்வழியிலும் வருமொழி முதலாக மெல்லினம்வர லகரம் 'ன'கர மாகவும், ளகரம் 'ண'கரமாகவும் மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஈ) | கல் + யானை | = | கல்யானை | வேற்றுமைப் புணர்ச்சி |
| | மஞ்சள் + வலிமை | = | மஞ்சள் வலிமை | |

| | | | |
|---|---|---|---|
| நெல் + வளர்ந்தது | = | நெல் வளர்ந்தது | அல்வழிப் புணர்ச்சி |
| வாள் + வலிது | = | வாள் வலிது | |

வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் வருமொழி முதலாக இடையினம் வர 'ல'கர மெய்களும் 'ள'கர மெய்களும் இயல்பாக வரும்.

| | | | |
|---|---|---|---|
| உ) | கல் + தீயது | = | கஃறீயது |
| | முள் + தீயது | = | முஃடீயது |

அல்வழிப்புணர்ச்சியில் தனிக்குறிலை அடுத்து லகர, ளகர ஈறுகள் வந்து, வருமொழி முதலாக வரும் 'த'கரம் ஆய்தத்துடன் முறையே 'ற'கரம் 'ட'கரங்களாகவும் மாறும்.

ஊ) வருமொழி 'த'கர, 'ற'கரத் திரிபு:

| | | |
|---|---|---|
| சொல் + தொடர் | = | சொற்றொடர் |
| பொன் + தாமரை | = | பொற்றாமரை |

நிலைமொழி இறுதியில் 'ல'கர ஒற்று அல்லது 'ன'கர ஒற்று வந்து வருமொழிமுதலில் 'த'கரம் வேற்றுமைப்புணர்ச்சியில் வரும்போது நிலைமொழி இறுதியும், வருமொழி முதலும் 'ற'கரமாகத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| தூண் + நன்மை | = | தூணன்மை | வேற்றுமைப் புணர்ச்சி |
| தேன் + நன்மை | = | தேனன்மை | |
| | | | |
| தேன் + நன்று | = | தேனன்று | அல்வழிப் புணர்ச்சி |
| செம்மண் + நன்று | = | செம்மணன்று | |

தனிக்குறிலைச் சாராது மொழியீற்றில் நிற்கும் 'ண'கரமும், 'ன'கரமும் வருமொழி முதலில் உள்ள 'ந'கரமும் திரியும்.

## ஐ) அணி

புலவர்கள் அவர்களது கற்பனை யாற்றலாலும் புலமையாலும் அவர்கள் இயற்றும் பாடல்களில் சொல்லிலும் பொருளிலும் அழகைச் சேர்க்கிறார்கள். சொல்லழகும் பொருளழகும் இணைந்த செய்யுளில் காணப்படும் அழகை விவரித்துக் கூறுவது அணியாகும்.

**உவமை அணி**

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.** (குறள்: 151)

தன்னைத் தோண்டுபவரையும் பொறுத்துக்கொள்ளும் நிலம்போலத் தம்மை அவமதிப்பாரையும் பொறுத்துக்கொள்ளுதல் உயர்ந்த பண்பாகும் என்பது குறட்பாவின் கருத்தாகும்.

இதில் 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என்பது உவமை. 'தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை' என்பது உவமையை ஏற்கும் பொருள் (உவமேயம்).

போல என்பது உவமை உருபு.
பொறுத்துக்கொள்ளுதல் - பொதுத்தன்மை (தொழில்)

இங்கு ஒரு பொருளோடு மற்றொரு பொருள் இணைய வைத்து ஒப்புமைப்படுத்திக் கூறப்பட்டுள்ளமையால், இக்குறட்பாவில் உவமை அணி அமைந்துள்ளது. இதில் உவமை உருபு 'போல' வெளிப்படையாக வந்திருக்கிறது.

உவமை அணி பண்பு, தொழில், பயன் ஆகியவை பற்றி வரும்.

| | |
|---|---|
| (எ-டு) 'மலர் போன்ற கை' | - பண்பு |
| 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல ...' | - தொழில் |
| 'மாரியன்ன வண்கை ...' | - பயன் |

பண்பு, தொழில், பயன் குறித்து வரும் வேறு எடுத்துக்காட்டுகள் கூறுக. பொருந்தும் முறைபற்றிக் கலந்துரையாடுக.

**எடுத்துக்காட்டுவமை அணி**

**நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு.** (குறள்: 452)

தான்சேர்ந்த நிலத்தின் இயல்புக்கு ஏற்பத் தண்ணீரின் தன்மை வேறுபடும். அதுபோல, மக்களுடைய அறிவும் அவரவர் சேர்ந்த இனத்தின் இயல்புக்கேற்ப அமையும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

| | |
|---|---|
| நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் | - உவமை (உவமானம்) |
| மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் அறிவு | - பொருள் (உவமேயம்) |
| சேர்ந்ததன் இயல்பாதல் | - பொதுத்தன்மை |

இக்குறட்பாவில் உவமையும் பொருளும் (உவமேயமும்) தனித்தனியாக நிற்க, இடையில் 'போல' என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளது. உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் (பொருள்) மற்றொரு தொடராகவும் அமைய இடையில் உவம உருபு வெளிப்படையாக இல்லாமல் மறைந்து வருவது எடுத்துக்காட்டுவமை அணியாகும்.

உவமை அணிக்கும் எடுத்துக்காட்டுவமை அணிக்குமுள்ள வேறுபாட்டினை அறிந்து, பள்ளிப் பாட நூல்களில் இடம்பெற்றுள்ள பாடல்களைத் தொகுக்க.

**பிறிதுமொழிதல் அணி**

**"ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்."** (குறள்: 763)

வீரமே இல்லாத பகைவர் பலர் சேர்ந்துவந்து பெரும் ஆரவாரஞ் செய்தாலும் அதைக் கண்டு வீரன் ஒருவன் அஞ்சான். அவ்வீரன் வெகுண்டு எழுந்தவுடன்அப்பகைவர் அழிவர் என்பது புலவர் கூற விரும்பிய கருத்தாகும். ஆனால் புலவர் அதனை நேரடியாகக் கூறாமல் எலிகள் சேர்ந்து வந்து கடல்போல் இரைந்தாலும் பாம்புக்கு அதனால் துன்பம் இல்லை. பாம்பு சீறிய அளவிலே அவ்வெலிகள் அழியும் என உவமையாக வேறொன்றைக் கூறியுள்ளார்.

புலவர் தாம் கூறக் கருதும் பொருளை நேரடியாகக் கூறாமல், அதோடு தொடர்புடைய வேறொன்றைக் கூறித் தாம் கூறக் கருதியதைக் குறிப்பால் உணர வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

எனவே, இக்குறட்பாவில் அமைந்துள்ளது பிறிதுமொழிதல் அணி.

**தற்குறிப்பேற்ற அணி**

**"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**வார லென்பபோல் மறித்துக் கைகாட்ட"**

- (சிலப்பதிகாரம்)

அரண்மனைக் கோட்டையின்கண் கட்டப்பட்ட கொடி இயல்பாக அசைகிறது. அது கோவலனையும் கண்ணகியையும் பார்த்து நகரினுள் வராதீர்கள் என்று கூறுவதாகப் புலவர் தன் கருத்தை ஏற்றியுள்ளார்.

இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியின்மேல் புலவர் தமது குறிப்பை ஏற்றி (தன் + குறிப்பு + ஏற்றம்) அழகுபடக் கூறுவது தற்குறிப்பேற்றவணி ஆகும்.

முதல் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரையிலான தமிழ்ப்பாடச் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உவமையணி, எடுத்துக்காட்டுவமையணி, பிறிதுமொழிதல் அணி, உருவக அணிகளைத் தொகுத்திடுக.

## 4. படைப்பாற்றல்

ஆசிரியர் என்பவர் பாடநூலில் உள்ளவற்றைத் திரும்பச் சொல்லும் கிளிப்பிள்ளை போன்றவர் அல்லர். அவர் பன்முகத் திறன் கொண்டவராக இருக்கவேண்டும். படம் வரையும் ஓவியராக, பாடக் கூடியவராக, பாடல் இயற்றக் கூடியவராக, குழந்தைகளோடு சேர்ந்து ஆடுபவ ராக, சிறந்த கதை சொல்பவராக எனப் பல திறன்களையும் பெற்றவராக இருந்தால்தான் நல்ல ஆசிரியராகத் திகழ முடியும். சுருங்கச் சொன்னால் ஆசிரியர் படைப்பாற்றல் உள்ளவராக இருக்க வேண்டும். அதிலும் மொழியாசிரியருக்குப் படைப்பாற்றல் இன்றியமையாதது. மொழியை அழகுறப் பேசுதற்கும் எழுதுவதற்கும் படைப்பாற்றல் தவிர்க்க முடியாதது. எனவே, மாணவ ஆசிரியர்கள் படைப்பாற்றல் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எப்படி மொழியைச் சிறப்புறக் கற்பிக்க ஆசிரியருக்கு அது நன்கு கைவரப் பெற்றிருக்க வேண்டுமோ அப்படியே மாணவர்களிடம் படைப்பாற்றல் உருவாக்க ஆசிரியர்களும் படைப்பாற்றல் பெற்றிருக்க வேண்டும். முதலாம் ஆண்டில் உரையாடலைச் செய்தியாக்குதல், கட்டுரையை உரையாடலாக்குதல், கட்டுரை எழுதுதல் என மூன்று திறன்களில் மாணவ ஆசிரியர் பயிற்சி பெற்றனர். பயிற்சிகளைக் கைவரப் பெற்றிருப்பீர்கள். இந்த ஆண்டில் பின்வரும் மூன்று திறன்களில் வல்லமை பெறவேண்டும்.

1. பேச்சாற்றல்
2. கவிதை எழுதுதல்
3. சிறுகதை எழுதுதல்

### அ) பேச்சாற்றல்

பேசுதல் வேறு; பேச்சாற்றல் என்பது வேறு; பேசுதல் என்பது அடிப்படைத் திறன்கள் நான்கனுள் ஒன்று. அதன் வளர்ச்சியே பேச்சாற்றல். பேசுதல் என்பது மனித உயிரின் இயல்பான செயல்பாடு. ஆனால், பேச்சுத் திறன் என்பது மனிதனின் தனிப்பெரும் ஈடுபாட்டால் வளர்வது; தன்னைத்தானே வளர்த்துக் கொள்வது. பேச்சுத்திறன் ஓர் உயர்நிலைத் திறன். போர்க்களத்தில் வீரத்துடன் இறங்கிப் போரிட்டு இறப்பவர் பலர். ஆனால், கற்றோர் அவையில் அஞ்சாமல் பேச வல்லவர் சிலரே என,

**பகையகத்துச் சாவார் எளியர் அரியர்**
**அவையகத்து அஞ்சா தவர்.** (குறள்: 723)

என்னும் குறட்பாவழியாகத் திருவள்ளுவர் உணர்த்துகிறார். இதனால், பேச்சாற்றல் போர் ஆற்றலினும் போற்றத்தக்கது என்பதை உணரமுடிகிறது.

**பேச்சாற்றல் வளர்க்கும் வழிமுறைகள்**

மாணவ ஆசிரியர்கள் தாம் மேற்கொள்ளும் ஆசிரியப் பயிற்சிக் களத்தைப் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்வதற்குச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பொருள்சார்ந்த தலைப்புகளில் வகுப்பறையில் பேச்சுப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

சான்றாகக் கல்வியின் தேவை, தமிழின் சிறப்பு, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம், இந்திய நாட்டின் வளர்ச்சி, அறிவியல் மனப்பான்மை முதலிய பல்வேறு தலைப்புகளில் வகுப்பறைச் சூழலிலோ பொது அரங்கிலோ பேசிப் பழகுதற்கு வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளலாம்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் ஒருமுறையேனும் இத்தகைய பயிற்சிக்கு மாணவ ஆசிரியர்களை உட்படுத்தச் செய்யலாம்.

மாணவ ஆசிரியர்கள் தம் பேச்சாற்றலைத் திறம்பட வளர்த்துக்கொள்ள பாடநூல்கள் அல்லாமல் பிற நூல்களையும் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, நூலகத்தைச் முறையாகப் பயன்படுத்தினால் பல்துறை அறிவு பெருகும். அதனால், அவர்தம் பேச்சு சுவைமிக்கதாகவும் கேட்போரை ஈர்ப்பதாகவும் கேளாதாரைக் கேட்க விருப்பம் ஏற்படுத்த வல்லதாகவும் அமையும். மாணவ ஆசிரியர்கள் சிறந்த பேச்சாளர்களின் மேடைப் பேச்சுகளை நேரிலோ, வானொலி, தொலைக்காட்சிகளிலோ கேட்டுத் தம் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளலாம்.

> மனவலியாலும் தன்னம்பிக்கையாலும் முயற்சியாலும் பயிற்சியாலும் பழக்கத்தாலும் ஒருவர் சிறந்த பேச்சாளராகக் கூடும். முயற்சியுடையார் இகழ்ச்சியடைவரோ? அடையார். முதல்முதல் பேசத் தொடங்குவோர்க்குச் சபையைக் கண்டதும் அச்சம் தோன்றும்; கைகள் நடுங்கும், தொடைகள் வீணை வாசிக்கும்; நாக் குழறும்; சொற்கள் வாயிலிருந்து வெளிவராமலிருக்கும். அதற்காகப் பேசவே வராது என்று ஒருவரும் அஞ்ச வேண்டியதில்லை. அவையில் பேசப் பேச அச்சம் அகன்றோடும்.
>
> -அ.கி. பரந்தாமனார்.

**மனத்திற் கொள்ள வேண்டியவை:**

- பேசுவதற்கு முன்பு என்ன பேசப்போகிறோம் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இடையில் தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.
- கேட்போர் குறை காண்பர் என அச்சங்கொள்ளக் கூடாது.
- எல்லாருக்கும் புரியும்படி பேசவேண்டும்.
- நகைச்சுவை கலந்து பேசுவது நல்லது.
- பழமொழிகள், பொன்மொழிகள், குட்டிக் கதைகள் பேச்சில் இடம்பெற வேண்டும்.
- தெளிவான உச்சரிப்போடும் ஏற்ற இறக்கத்தோடும் கேட்போரைக் கவரும்படி பேசவேண்டும்.
- உணர்ச்சி வெளிப்பாடு தெளிவாகத் தெரியும்படி பேசவேண்டும்.
- சூழ்நிலைக்கு ஏற்பப் பேசவேண்டும்.
- பேச்சுத் தடுமாற்றம் உச்சரிப்புக் குறைபாடுகள், பேச முடியாது இடையில் நிற்றல், கருத்துகளை மறந்துவிடுதல் ஆகியன பயிற்சியில்தான் நீங்கும்.

- தொடக்கத்தில் குறைந்த நேரம் பேசினால் போதும். பிறகு, எப்பொழுது முடிப்பார் எனக் கேட்போர் நினைப்பதற்கு முன்பு முடித்துவிட வேண்டும்.
- பேசுவதற்கு முன்பாக முதலில் உரக்கப் படித்துப் பழகலாம். நாளிதழ்களிலோ நூல்களிலோ நல்ல பகுதிகளைத் தேர்வு செய்து தனியாக வாசித்துப் பார்க்கவேண்டும். பிறகு மற்றவர்கள் முன்பாக வாசித்துக் காட்டவேண்டும்.
- தொடக்கத்தில் குறிப்பு வைத்துக்கொண்டு பேசலாம்.

**பயிற்சிகள்**

- ஒரு தலைப்பைக் கொடுத்து மறுநாள் தயாரிப்போடு வந்து பேசச் செய்யலாம். ஒருவர் பேசியவுடன் அதை ஆசிரியரும் மாணவ ஆசிரியர்களும் விமர்சிக்கலாம்.
- ஒரு தலைப்பைக் கொடுத்து ஐந்து நிமிடம் அது குறித்துச் சிந்திக்கச் செய்து பேசச் செய்யலாம்.
- துண்டுத் தாள்களில் பல்வேறு தலைப்புகளை எழுதிப்போட்டு ஒவ்வொருவரும் ஒன்றை எடுத்துப் பார்த்துப் பேசச் செய்யலாம். இவ்வாறு உடனே பேசும்போது 2,3 நிமிடம் பேசினால் போதும்.
- ஒரு தலைப்பைக் கொடுத்து அதை ஒட்டியும் வெட்டியும் மாணவ ஆசிரியர்களை மாறி மாறிப் பேசச் செய்யலாம்.

## மாதிரிப் பேச்சு

## வீட்டிற்கோர் புத்தகச் சாலை

நமது முன் சந்ததியாருக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில், ஆற்றோரத்தில், பர்ணசாலைக்குப் பக்கத்தில், ஆலமரத்தடியில், சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித் தரும் முறை இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம்; இப்பொழுதுள்ளது, உலகை நமது வீட்டுக்கு அழைத்து வந்து காட்டக்கூடிய காலம் - பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்த மார்க்கம், முன்பிருந்ததைவிட அதிகம் உள்ள காலம். இதோ நான் பேசுகிறேன் - நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள்- நானோ நீங்களோ தவசிகள் அல்லர்; அருளாளர் அல்லர். அங்குக் கேட்பது - அறிவின் துணைகொண்டு; விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதச் சாதனங்கள் இல்லாது இருந்த நாள்கள், நமது முன்னோர்கள் காலம்.

இவ்வளவு வசதிகள் நமக்கிருந்தும், ஏன் மன வளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மன வளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ நாம் முயற்சி செய்வதில்லை- வழிவகை தேடிக் கொள்வதில்லை.

பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம்-பாதுகாப்பான அறை - படுக்கையறை- சமையலறை- பூஜை அறை- இவையெல்லாம் இருக்கும் - புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஓர் அறை - தேடிப் பாருங்கள்; மிக மிகக் கஷ்டம். பல வீடுகளிலே, தூண்களின் மீது சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால், புத்தகச் சாலை உண்டா? என்று கேளுங்கள்-பதில் கூற மாட்டார்கள்; ஒரு புன்னகை தோன்றும். 'பைத்தியக்காரா!' என்று பொருள் அந்தப் புன்னகைக்கு.

வீடுகளில் மேசை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும். பீரோக்கள் இருக்கும்; அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும்; பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும்; உடைகள் சிறு கடையளவுக்கு இருக்கும். மருந்துவகைகள் சிறு வைத்திய சாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயும் கூடப் புத்தகச்

சாலை இராது; இருக்கவேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை! அவசியமும் தோன்றுவதில்லை.

வீட்டில் அலங்காரத்தையும், விஷேச கால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல, வீட்டிற்கோர் புத்தகச் சாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்தவேண்டும்; அக்கறை காட்டவேண்டும். அறிவு ஆயுதம் ஆகிவிட்ட நாள்களிலே வாழும் நாம், இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது, நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகச் சாலை நிச்சயம் வேண்டும் - வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு, அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும், போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறிப் புத்தகச் சாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை; அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், முதலிடம் புத்தகச் சாலைக்குத் தரப்படவேண்டும்.

எவ்வளவு செலவு? ஏது அவ்வளவு பணம்? என்று கேட்பர். பலருக்குத் தேவையான அளவு புத்தகம் வாங்கத்தான் முடியாது. இந்தக் குறையைப் போக்கப் பொதுப் புத்தகச் சாலைகள் நடத்தி, சர்க்கார், நகர சபைகள், பொதுநலக் கழகங்கள் பணிபுரிய வேண்டும். ஆனால், சில அடிப்படை அறிவுக்குத் தேவையான புத்தகங்களையாவது வீடுகளில் சேகரித்துப் பயன்படுத்தும் முறை இருக்கவேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விஷேசங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது, புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக் கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தகச் சாலையை அமைத்துவிடலாம்.

புத்தகச் சாலை அமைக்கும்போது, ஏற்கெனவே நமது மக்களின் மனத்திலே ஊறிப் போயுள்ள, அர்த்தமற்ற, அவசியமற்ற கேடே கூடச் செய்யக்கூடிய எண்ணங்களை நிலைநிறுத்தக் கூடிய ஏடுகளைச் சேர்க்கக் கூடாது. சேர்த்தால், மனவளம் ஏற்படாது. மனம், சதுப்பு நிலமாகும்; பழமைப் புழுக்கள் நெளியும் இடமாகும்.

ஒவ்வோர் வீட்டிலும் வசதி கிடைத்ததும், வசதி ஏற்படுத்திக் கொண்டதும் அமைக்க வேண்டிய புத்தகச் சாலையில், நாட்டு வரலாறு, உலக நாடுகளின் நிலையைக் குறிக்கும் நூல்கள் இவை முதலிடம் பெறவேண்டும். பொதுவாகவே, மக்களின் அறிவுக்குத் தெளிவும், ஆண்மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும் தரத் தக்க நூல்கள் இருக்கவேண்டுமேயொழிய, வாழுமிடத்தை வகையற்றது என்று கூறி, விண்ணுலகுக்கு வழிகாட்டும் நூல்களும், மாயா வாதத்தையும், மன மருட்சியையும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்திப் பெண்களை இழித்தும் பழித்தும் பேசிடும் நூல்களும் இருத்தல் ஆகா.

பஞ்சாங்கம் அல்ல, புத்தகச் சாலையில் இருக்கவேண்டியது. அட்லாஸ்-உலகப் படம் இருக்க வேண்டும்.

பூகோள, சரித்திர ஏடுகள் இருக்கவேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும், வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத் தகும் சங்க இலக்கியச் சாரத்தைச் சாமான்யரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்கவேண்டும். குறைந்தபட்சம் மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவல்களைத் தெரிவிக்கும் நூல் இருக்கவேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மன மாசு துடைத்தவர்கள், தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில், ‘வீட்டிற்கோர் புத்தகச் சாலை’ அமைத்துக்கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகச் சாலை தேவை. ஆனால், கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்கவேண்டும் வீட்டிலே அமைக்கும் புத்தகச் சாலை.

(1949ஆம் ஆண்டில் திருச்சி வானொலியில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் பகுதி)

## ஆ) கவிதை எழுதுதல்

‘ஒரு கவிதை எழுதுவதைவிடக் கவிதை எழுதுவது எப்படி என்று கூறுவதுதான் சற்றுக் கடினம்’ என்று அத்துறை வல்லுநர் கூறுவர். அது உண்மைதான். ஏனென்றால், கவிஞர்கள் உருவாக்கப்படுவதில்லை; பிறக்கிறார்கள். ஆயினும், முறையான பயிற்சியினாலும் அயராத முயற்சியினாலும் கவிஞர் ஆனோர் உண்டு.

மாணவ ஆசிரியர்கள், கவிதை எழுதும் திறன் கைவரப்பெறச் சில குறிப்புகளை ஈண்டு நோக்குவோம்.

கவிதை என்றால் என்ன? சான்றோர்கள் என்ன கூறுகிறார்கள்? சிறிது காண்போமா?

“உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெ டுப்பது கவிதை;

தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை”

எனக் கவிமணி தேசிகவிநாயகனார் எளியமுறையில் கவிதைக்கு விளக்கம் தருகிறார்.

“கவிதை என்பது, ஆழ்ந்த அறிவின் அலங்காரம். அது, மொழிக்கு முகமாகவும் வசனத்திற்கு விழியாகவும் விளங்குவது. கனிச்சுவையைக் காட்டிலும் தனிச்சுவை தரவல்லது. ஆகவே, கவிதையை “மொழிப்பழம்” என்று அழைக்கலாம்” என்பார் கவிஞர் சுரதா.

“கருத்துகளை இசையுடன் கூற முற்படுவோமாயின், அது கவிதையாகிவிடும்” என்கிறார் கார்லைல்.”

“சிறந்த சொற்களைச் சிறந்தமுறையில் வைப்பதே கவிதை” என்பது, கோல்ரிட்ஜ் என்பார் கூற்று.

“ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை” என்கிறார் இயற்கைக் கவிஞர் எனப் போற்றப்படும் “வோர்டஸ்வொர்த்”.

“கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை” என்று கூறுகிறார் பிரிவுத்துயர் பாடும் பெருங்கவிஞன் ‘கீட்ஸ்’.

இவ்வாறு, கவிதை பற்றிய விளக்கத்தைச் சான்றோர் பலர் காட்டும் பாங்கினைக் காணும் போது, கவிதையின் திட்பத்தையும் நுட்பத்தையும் நாம் ஒருவாறு உணரமுடிகிறது.

இனி,செய்யுளுக்குரிய/கவிதைக்குரிய இலக்கணத்தைக் காண்போம். தமிழ் இலக்கணத்தில் செய்யுள் இலக்கணத்தை யாப்பு என்கிறோம். ‘யாத்தல்’ என்ற சொல்லுக்குக் கட்டுதல் என்று பொருள். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய உறுப்புகளால் யாக்கப்படுவது, அதாவது கட்டப்பெறுவது செய்யுள்/கவிதை என்று அழைக்கப் பெறுகிறது.

யாப்பு, செய்யுள், கவிதை, பா, பாட்டு என்பன யாவும் ஒரே பொருள் தருவன.

இத்தகைய யாப்பறிவின்றிப் ‘பா’ புனைதல் இயலாது என்பர். யாப்பறிவு மட்டும் கவிதை எழுதப் போதுமானதா? வளமான கற்பனையாற்றல் வேண்டும். கற்பனைக் குதிரையைக் கண்டபடி ஓடவிட்டால் கவிதை ஆகுமா? ஒரு குறிக்கோளோடு அந்தக் கற்பனைக் குதிரை ஓட

வேண்டும். அந்தக் குறிக்கோள், கவிதை படிப்போரிடம் உணர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும்.

எனவே, ஒரு சிறந்த **கருத்தை** (குறிக்கோள்) **உணர்ச்சி** பொங்கக் **கற்பனை**யோடு **இலக்கணம்** வழுவாத ஒரு **வடிவத்**தில் கொடுப்பதே கவிதையின் இலக்கணம் என்று கொள்ளலாம்.

கவிதை எழுதுந்திறன் விழைவோர் கருத்திற் கொள்ளவேண்டியவை:

எதனைப்பற்றிக் கவிதை எழுதவேண்டும் என்று **பாடுபொருள்**பற்றிய தெளிவுவேண்டும்.

- கவிதை படைப்பதற்கு மிகுந்த சொல்வளம்/சொற்களஞ்சியம் தேவை. ஆதலால், மிகச் சிறந்த கவிதை நூல்களைப் படித்து, முடிந்த அளவுக்குப் பாடல்களை **மனனம்** செய்து கொள்ள வேண்டும்.
- சிறந்த கவிஞர்களின் சொல்நயம், பொருள் நயம், உவமைநயம், கற்பனை வளம், சொல்லாட்சித் திறன் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளவேண்டும்.
- ஒலிநயமிக்க சந்தப் பாடல்களை வாய்விட்டுப் படித்துச் சந்தத்தையும் தாளக் கட்டையும் மனத்தில் பதித்தால் அவற்றைக்கொண்டே கவிதை புனையலாம்.
- நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை ஆகிய ஒன்பான் மெய்ப்பாட்டுச் சுவையறிவில் தெளிவுபெற வேண்டும்.
- சொல் அகராதி, தொடையகராதி முதலியவற்றில் பன்முறைப் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- ஆத்திசூடிபோல் ஒருவரிக் கவிதைகள் எழுதிப் பழகுவதைத் தொடக்கநிலைப் பயிற்சியாக மேற்கொள்ளலாம்.
- ஒப்பீடு செய்தல், உருவகப்படுத்துதல் முதலானவையும் கவிதை எழுதத் துணை செய்யுமாகலின், அவற்றில் பயிற்சி செய்யலாம்.
- அழகுணர்ச்சி, சமுதாயப் பார்வை, உற்றுநோக்குதல், சொற்பொருள் பயிற்சி, சிந்தனைத் தெளிவு ஆகிய அடிப்படைப் பண்புகளில் கவிதைத்திறன் வளர்ப்போர் பெரிதும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும்.
- தொடக்கநிலைக் கவிஞர்கள் முதலில் மரபுக் கவிதைகளில் எழுதிப் பழகுதலே நலம் பயக்கும். மரபில் வேரூன்றிப் புதுமையில் கிளை பரப்பலாம்.
- மரபுக் கவிதைகள், உரைநடைக் கவிதைகள் (புதுக்கவிதைகள்), ஹைக்கூக் கவிதைகள், குறும் பாக்கள், நறுக்குக் கவிதைகள் எனப் பலவாக வெளிவந்துள்ள கவிஞர் பலரின் படைப்புகளைப் படிப்பதால் கவிதை எழுதவேண்டும் என்னும் ஆர்வம் பெருகும். அந்த ஆர்வமே, கவிதை எழுத விழைவோர்க்குக் கருவாக அமையும். அக்கரு, பின்னர்க் கவிதையாக உருவாகும்.

**பயிற்சி**

- ஆளுக்கு ஓர் அடியாகச் சொல்லி ஒரு கவிதையைக் குழுவாகச் சேர்ந்து எழுதச் செய்யலாம்.
- பாடலின் பாதியைக் (முன் பாதி அல்லது பின் பாதி) கொடுத்து மீதியை எழுதச் செய்யலாம்.
- குறிப்பிட்ட பொருள்/விலங்கு/பறவை/ நிகழ்ச்சி/தலைவர் குறித்துக் கவிதை எழுதச் செய்யலாம்.

- ஒரு காட்சியைக் (படம்/நேரடிக் காட்சி/ எழுதியது) கொடுத்து அதைக் கவிதை யாக்கச் செய்யலாம்.
- ஆசிரியர் அடியெடுத்துக் கொடுத்து மேற்கண்ட பயிற்சிகளைச் செய்யச் செய்யலாம்.

## இ) சிறுகதை எழுதுதல்

உரைநடை வடிவில் அமைந்ததும் அன்றாட வாழ்வில், சமுதாயத்தில் காண்கின்ற, படிக்கின்ற, கேட்கின்ற நிகழ்வின் கருக்கொண்டு விறுவிறுப்புணர்வுடன் கூடிய வாசகர் எதிர்பாராத முடிவைக் காட்டுகின்ற அமைப்பையே சிறுகதை எனக் கூறலாம்.

சிறுகதையில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் இல்லாமல் இருப்பது நல்லது; ஆனால், இரு நிகழ்வுகள் இருப்பின், அவற்றின் தொடர்பு நன்கு அமைக்கப்படல் வேண்டும்.

சிறுகதையும் கவிதையும் ஏறத்தாழ ஒத்த பண்புடையவை என்றுகூடக் கூறலாம். காரணம், ஆழமான உணர்ச்சியை வெளிப்படுத்துவதிலும், அதைச் சுருக்கமாகச் சொல்லி, படிப்பவர் மனத்தில் பதிய வைப்பதிலும் சிறுகதையானது கவிதையை அடுத்து நிற்கிறது எனலாம்.

சிறுகதை உயிர்பெறுவது நிகழ்ச்சிகளால் அல்ல; அவற்றைக் கூறும் ஆசிரியர் பயன்படுத்தும் கற்பனைத் திறமும் கூறும் திறமுமே கதைக்கு உயிர் தருகின்றன.

'எட்கார் ஆலன்போ' எனும் சிறந்த சிறுகதை ஆசிரியர் கூறியதைச் சிறுகதை எழுதும் மாணவ ஆசிரியர்கள் மனத்திற் கொள்ளவேண்டும். சிறுகதையின் முதல் வாக்கியம் படிப்பவர் கவனத்தை இழுத்துப் பிடிக்கவில்லையாயின் அக்கதை பயனற்றது. பயனற்ற ஒரு சொல்லுங்கூடக் கதையில் இடம்பெறுதல் கூடாது என்பதே அவர்தம் கூற்றாகும்.

ஆறுமுதல் பத்தாம் வகுப்புவரையுள்ள துணைப்பாட நூல்களில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளைப் படிக்க. ஏதாவது ஒரு வகுப்பிற்குரிய கதையைத் தேர்வு செய்து, அக்கதையின் கரு, கதைப்போக்கு, கதை மாந்தர், கதை உணர்த்தும் செய்திகளை எழுதுக. அக்கதை உன்னை எவ்வாறு கவர்ந்து என்பதற்கான காரணத்தையும் எழுதுக.

**சிறுகதை எழுதும் திறன் வளர்த்தல்**

சிறுகதைகள் படிக்கும் ஆர்வமே சிறுகதை எழுதுவதற்கான மூல வித்தாக அமையும். மாணவ ஆசிரியர்கள், தாம் ஆசிரியப் பயிற்சி பெறும் கற்றல் சூழலிலோ மாதிரி வகுப்புகள் கற்பிக்கும் சூழலிலோ காணும் நிகழ்ச்சிகளைச் சிறுகதை ஆக்கலாம்.

தாம் சமுதாயத்தில் கண்டும் கேட்டும் அறிந்தவற்றைத் தன்னைப் பாதித்த நிகழ்ச்சியைக் குறித்துச் சிறுகதை உருவாக்கி அளிக்கும் பழக்கத்தைத் தமக்குத் தாமே உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

சிறுகதை எழுத முனையும் மாணவ ஆசிரியர்கள் உரைநடை பற்றிய, உரையாடல் பற்றிய மொழியறிவைப் பெற்றவர்களாக இருத்தல்வேண்டும்.

மாணவ ஆசிரியர்கள் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், கு.ப.இராஜகோபாலன், கல்கி, அழகிரிசாமி, கி.வா. ஜகந்நாதன், அகிலன், முதலிய முன்னிலை எழுத்தாளர்களின் சிறு கதைகளைத் தேடிப் படிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

அவ்வாறு செய்வாராகில் அக்கதையாசிரியர்கள் கதைக் கருவைத் தேர்ந்தெடுக்கும் முறை, அக்கதையைப் படைத்துக்காட்ட உருவாக்கும் கதை மாந்தர்கள், அம்மாந்தரைக் கொண்டு கதையை நடத்திச் செல்லும் அணுகுமுறை, அக்கதைகட்கேற்பக் கையாளும் மொழிநடை, கதைப் பொருளுக்கேற்ப அமைத்துக்கொள்ளும் கதையின் வடிவ அளவு, அக்கதைவழி அவர்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகள் முதலியவற்றை அறிந்து, அவற்றைத் தம் சிறுகதைப் படைப்புகளில் பயன்படுத்த பெரும் வாய்ப்பாக அமையும்.

**பயிற்சி**

- ஒரு நிகழ்ச்சியைக் கொடுத்து அதைக் கதையாக எழுதச் செய்யலாம்.
- ஏற்கெனவே எழுதப்பட்ட ஒரு சிறுகதையைக் கொடுத்து அதைப் படித்துவிட்டு மாணவர்களைத் தங்கள் சொந்த நடையில் எழுதச் செய்யலாம்.
- முன்பாதிக் கதையைக் கொடுத்து அதைத் தொடர்ந்து எழுதிமுடிக்கச் செய்யலாம்.
- பின்பாதிக் கதையைக் கொடுத்துவிட்டு முன் பாதியை எழுதி இணைத்துக் கதையை முழுமையாக்கச் செய்யலாம்.
- ஒரு தலைப்புக் கொடுத்துச் சிறுகதைப்போட்டி நடத்தலாம்.
- சிறுவர் இதழ்களில் இடம்பெறும் கதைகளை ஆசிரியர் படித்துக்காட்டி, அக்கதையின் சுருக்கத்தை மாணவர்களைக் கூறச் செய்யலாம்.

**மாதிரிச் சிறுகதை**

## சிலந்தி சிரித்தது

கட்டுரை எழுதுவதற்காகக் கற்பனைப் பறவையின் இறக்கைகளை அவிழ்த்துப் பறக்க விட்டவாறு உச்சிமோட்டைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே சிதைந்த தன் வலையைச் சீர்படுத்திக் கொண்டிருந்தது ஒரு சிலந்தி. அதன் செய்கை உலகம் ஒப்பும் ஓர் உண்மையை நினைவுறுத்தியது.

அந்த உண்மை - " உலகில் உள்ள ஒவ்வோர் உயிரும் வாழ விரும்புகிறது; எப்படியாவது எந்த வழியிலாவது தான் வாழவேண்டும் என்று நினைக்கிறது". இல்லாவிட்டால் இந்தச் சிலந்தி பட்டிழையைவிட மெல்லிய மின்னும் இழைகளைக் கொண்டு அழகாக மாயவலை பின்னி அதிலே பல சிறு உயிர்களைச் சிக்க வைத்து அவற்றின் உயிர்களைப் போக்கி உண்டு மகிழுமா?

இந்த உலகப் படைப்பே எனக்கு விசித்திரமாக விடுவிக்க முடியாத புதிராகத் தோன்றியது; பதுங்கும் புலிக்குப் பாய்ந்தோடும் புள்ளிமான் இரையாகிறது. வாழ நிற்கும் கொக்கிற்கு நீரில் ஓடி விளையாடும் மீன் இரையாகிறது. ஒருவன் உழைத்துச் சாக, மற்றொருவன் உண்டு மகிழ்ந்து உப்பரிகையிலே உலாவுகிறான். இப்படித்தானே உலகம் நடைபோடுகிறது. இயற்கையின் போக்கே அப்படித்தானோ? இயற்கையின்போக்கு இப்படி இருந்தால் விட்டுவிடலாமா?... ஒன்றின் உயிரும் உழைப்பும் மற்றொன்றின் உணவிற்கும் உல்லாசத்திற்கும் உறைவிடமாக அமையத்தான் வேண்டுமா?...

இவ்விதமாக வினாக்களை எழுப்பி அதற்கு விடைகண்டு கொண்டிருக்கையில், "அண்ணா! அண்ணா! ... நரி! நரி!" என்று படத்தை எடுத்துக்கொண்டு என்னிடம் ஓடி வந்தான் ஏழாண்டுகள் நிரம்பிய என் தம்பி. படத்தைப் பார்த்தேன்; மிக அழகாக இருந்தது. அதை ஓர் ஆற்றல்மிகுந்த ஓவியன்தான் தீட்டியிருக்கவேண்டும். வண்ணச் சேர்க்கையைச் சரியாகக் கூட்டிக் குழம்பாக்கி ஒளிவிடும் ஓவியமாக அவன் அந்த எழிலுருவைச் சமைத்ததற்காக மட்டும் நான் அவனைச் சிறந்த ஓவியக் கலைஞனாகக் கருதவில்லை. அவன் அந்த ஓவியத்தை அதன்

நிலைக்கேற்ப உணர்வுகளை வெளியிடுமாறு வரைந்திருந்தான். அந்த ஓவியத்தில் நரியோடு நண்டும் இடம்பெற்றிருந்தது. ஆனால் எங்கே? ...

நரியின் வாயில் சிக்கிக்கொண்டு தன் உயிர்ப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. ஆனால், நரியோ தன் கண்களின் விஷமச் சிரிப்பைச் சிந்திவிட்டு, அது படுந்துன்பத்தைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தது! என்று இருக்கிறது ஓவியத்தின் முழு உருவம்!...

ஓவியத்தின் கீழே உள்ள வரிகளைப் படித்தேன். 'நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்' என்றிருந்தது. அந்த இரண்டு வரிகளில் அழகும் அர்த்தமும் பொதிந்து கிடப்பதைக் கண்டு வியந்தேன். வியப்பிற்குப் பிறகு என் இதழ் இணைகள் விரிந்து ஏளனச் சிரிப்பைச் சிந்தின. ஏன்?

"ஸார்! பேப்பர்" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். பையன் செய்தித்தாளைப் போட்டுவிட்டுப் போய்க் கொண்டிருந்தான். எடுத்துப் பார்த்தேன். பசுமையான இலைகளின் நடுவே வண்ண மலர்கள் எளிதில் தெரிவதைப் போல் அதிலிருந்த பெரிய எழுத்துகள் முதலில் தெரிந்தன. வாய்விட்டுத் தலைப்பை வாசித்தேன். 'கோரக் கொலை! சிறு நிலத்தின் காரணமாக வாய்ச்சண்டை வளர்ந்து வாழ்வை முடித்துக்கொண்ட அதிசயம்' என்றிருந்தது.

அறியாமை காரணமாக அழித்தொழித்துக்கொண்ட மக்களுக்காக அனுதாபப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது சிரிப்பொலி கேட்டது. சுற்றிலும் பார்த்தேன்; யாரையும் காண வில்லை. ஆனால் அந்தக் குரல் மட்டும் ஒலித்துக்கொண்டிருந்தது. எப்படி? ...

'மழையின்மையின் காரணமாக வயல்கள் எல்லாம் வறண்டு வெடித்துப் பாழ்நிலமாகக் கிடக்கின்றன. அதனால் சிறிதும் பயனில்லை. அந்த நிலையிலே கூட இந்த மக்களுக்கு நிலத்தாசை விடவில்லை. வரப்பைப் பெயர்த்து ஓர் அடி தள்ளி அடுத்தவன் நிலத்தில் வரப்பிடு கிறான். ஏன்? ... பின்னால் எப்பொழுதோ ஒரு காலத்தில் மழைபெய்து விளையும் போது அதிக விளைவைப் பெற்றுச் சுகமடைவதற்கு! வரப்பைத் தள்ளிப்போடத் தெரிந்தவனுக்குச் சினத்தைத் தள்ளிப்போடத் தெரியவில்லை. சுகமாக வாழ வரப்பைப் பெயர்த்தான். ஆனால் வாழ்ந்தானா?...

ஆறறிவு படைத்த மனிதனே அதிசயப் பிராணியாக இருக்கிறானே! அவனுக்கே தெரியாத பொழுது ஐயறிவு படைத்த விலங்குகளும் பூச்சிகளும் உயிர்வாழ அவசியமான உணவிற்காகக் கொன்று கொள்வதைப் பற்றி வருந்துகிறாயே உனக்கு வெட்கமாக இல்லையா? என்று அந்தக் குரல் பலமாக நகைத்தது.

உச்சிமேட்டில் ஒலிவந்த திசையை நோக்கினேன். யாரையும் காணவில்லை. அந்தச் சிலந்தி தன் வலையின் நடுவே இருந்தவாறு மேலும் கீழுமாக ஆடிக் கொண்டிருந்தது. ஆம்! அந்தச் சிலந்திதான் சிரித்துப் பேசி இருக்கவேண்டும். அதைத் தவிர வேறு ஒருவரும்தான் இல்லையே.

நான் வெட்கிப்போனேன். 'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை' என்ற குறள் மருந்தை நாடிக் குணமடையாமல் மக்கள் குத்திக்கொண்டு சாகிறார்களே என்றுதான்.

- நா. பார்த்தசாரதி

இன்றைய சமுதாய நிகழ்வுகளைச் சித்திரிக்கும் பின்வரும் கருக்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைகள் படைக்க.

குழந்தைத் தொழிலாளர்,
வரதட்சணை,
மூடநம்பிக்கைகள்,
மனிதநேயம்
பெண்களின் நிலை
உழைப்பின் மேன்மை
காலந்தவறாமை

## தொகுப்புரை

இவ்வியலில் மாணவ ஆசிரியர்கள் தமிழ் மொழியில் திறன்பெறும் நோக்கில் செய்யுளில் உள்ள சொற்களைப் பிரித்தும் உரைநடைப்படுத்தியும் பொருள் காணவும் நயம் பாராட்டவும், உரைநடையில் சொல்வளம் பெறவும், உரைநடைச் சிறப்பை எடுத்துக் கூறவும் வழிவகை கூறப் பட்டுள்ளது. பாடத்திட்டம் கூறும் இலக்கணப் பகுதிகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப் பட்டுள்ளன. படைப்பாற்றலில் பேச்சாற்றல் வளர்க்கவும், கவிதை, சிறுகதை எழுதவும் வழிகள் கூறப்பட்டுள்ளன. இவற்றைக்கொண்டு மாணவ ஆசிரியர்கள் தமிழ் மொழித்திறன் பெறப் பயிற்சிகள் மேற்கொள்ளுமாறு ஆசிரியர்கள் செய்யவேண்டும்.

**செய்யுள் நயம் பாராட்டுவோம்.**

செங்கதிரோன் மலையிடையில் செம்மை தேக்கும்
செடிகொடிகள் பொன்பூக்கும்; திரும்பும் புட்கள்
மங்கிவரும் ஒளிக்கெதிரே மேற்கு வானில்
மையிருட்டுக் கைந்நீட்டும்; வானம் பூத்துத்
தொங்ககின்ற பீர்க்கம்பூப் போலக் கண்முன்
தொடுவானில் கீழ்த்திசையில் ஒளியில் மங்கி
அங்கொன்றும் இங்கொன்றும் முன்னர்த் தோன்றி
அடுத்தநொடி வான்நிறையும் விண்மீன் கூட்டம்!

தைத்திங்கள் குளம்பூத்த பூவோ விண்மீன்!
தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக் காசோ!
மைத்தடங்கண் மடமாதர் உதிர்த்துப் பின்னர்
மாலைக்குத் தேர்ந்தெடுக்கும் முல்லைப் பூவோ!
தைத்திட்ட பட்டாடை முத்தோ! தீட்டித்
தரப்பட்ட ஒளிக்கல்லோ! சரிகைச் சேலை
உய்த்திட்ட பொடிப்பூவோ! தொலைவில் தோன்றும்
ஊரிட்ட மின்விளக்கோ விண்மீன் கூட்டம்?

# பகுதி - ஆ

## 1. பாட ஏற்பாடு

### அறிமுகம்

ஒரு நாட்டின் கல்வி அமைப்பிற்கான குறிக்கோள் 1) அந்நாடு பின்பற்றும் தத்துவக் கோட்பாடு, 2) சமூக அமைப்பு, 3) சமூகத் தேவை, 4) மாணவர்களின் உளவியல் தேவைகள் எனும் நான்கின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் பாட ஏற்பாடு, பாடத் திட்டம், பாட நூல் உருவாக்கப்பட்டுக் கற்றல்-கற்பித்தல் நடைபெறுகிறது. ஒரு நிலையில் மாணவர் பெறவேண்டிய அறிவு, திறன், மனப்பான்மைகளைப் பாட ஏற்பாடு பொது வாகக் கூறும். பாடத்திட்டம், எந்தெந்த வகுப்புநிலையில் எவையெவை நிறைவேற்றப் பட வேண்டுமெனக் கூறும். பாட நூல், பாடத்திட்டம் கூறுவனவற்றைப் பாடங்களாக வகுத்தளிக்கும். இம்மூன்றையும் பற்றிய அறிவு ஆசிரியர்களுக்கான அடிப்படைத் தேவை. இத் தேவையை இந்த இயல் நிறைவு செய்யும்.

### படிநிலைகள்

1. பாட ஏற்பாடு/கலைத்திட்டம்
2. பாடத்திட்டம்
3. பாடநூல்
4. பாட ஏற்பாடு, பாடத்திட்டம், பாடநூல் ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பு
5. பாடநூலும் ஆசிரியர்களும்
6. பாடநூல் ஆய்வு.

### 1. பாட ஏற்பாடு/ கலைத்திட்டம் (Curriculum)

கல்வியின் நோக்கம் மாணவர்கள் உடல்நலத்துடனும், உளநலத்துடனும் வாழ அவர்களுக்கு உதவுவதாகும். மாணவர்களது பல்வேறு திறன்களும் ஆற்றல்களும் முழு வளர்ச்சி பெற்று இசைந்து செயல்படக் கல்விச் செயல்முறை உதவுகிறது. மாணவர்கள் தங்களது வாழ்க்கை மதிப்புகளை உயர்த்திக் கொள்ளவும் இலட்சியங்களை நிறைவேற்றவும் பெரிதும் உதவியாய் இருப்பது பாட ஏற்பாடு.

‘கல்வித் திட்டம்’, ‘பாட ஏற்பாடு’, ‘கலைத்திட்டம்’ ஆகிய மூன்றும் ஒரே பொருளில் வழங்கப்பட்டு வரும் தொடர்கள். கலைத்திட்டம் என்பது ஆங்கிலத்தில் Curriculum என வழங்கப்படுகிறது. இது இலத்தீன் மொழியினின்றும் வந்தது. இதன்பொருள் ‘வழி’ என்பதாகும்.

#### பாட ஏற்பாட்டின் இயல்புகள்

பாட ஏற்பாட்டின் முதன்மையாகத் திகழ்வது ‘கல்வி நோக்கம்’ ஆகும். கல்வியின் நோக்கங்களை அடைவதற்காகத் திட்டமிடப்படும் கல்விச் செயலே ‘பாட ஏற்பாடு’ ஆகும். எவற்றைக் கற்பிப்பது என்ற வினாவுக்கு விடையாக அமைவது பாட ஏற்பாடாகும்.

பாட ஏற்பாடு சமுதாய நிலைமை, சமூகத் தேவைகள் இவற்றை நிறைவேற்றுவதாய் இருத்தல்வேண்டும். ஆக்கத்திறனாகிய மாணவர்களின் தனித்தன்மைகள், சமூகப் பண்புகள் வளர்ச்சி பெற உதவும் பாடக்கூறுகள் கல்வி ஏற்பாட்டில் இடம்பெறவேண்டும்.

பாட ஏற்பாடு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை உடையதாகவும், தனியாள் வேற்றுமைகளை மனத்திற்கொண்டும், குழந்தைகளை அவர்களது எதிர்காலத்திற்கு ஆயத்தம் செய்வதாகவும் இருக்க வேண்டும். பாட ஏற்பாடு, செயல்கள் நிறைந்ததாகவும் அனுபவத்தின் அடிப்படையிலும், அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையதாகவும் இருத்தல்வேண்டும். நமது நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அளிப்பதற் கான வசதிகள் இருத்தல் வேண்டும். பாட ஏற்பாடு மக்களாட்சிப் பண்பில் பற்றுறுதியும் நாட்டின் ஒருமைப்பாட்டில் முழுமை யான ஈடுபாடும் உடைய குடிமக்களை உருவாக்குவதாய் இருத்தல்வேண்டும்.

இன்று நமது நாட்டின் முக்கியப் பிரச்சினைகளான மக்கள்தொகைப் பெருக்கம், சமுதாய ஏற்றத்தாழ்வு போன்றவற்றைக் கட்டுப்படுத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்கான வழிமுறைகள் 'பாட ஏற்பாட்டில்' இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

இக் கணினியுகத்தில் பல்வேறு சவால்களையும் அறைகூவல்களையும் எதிர்கொள்ளும் குடிமக்களை உருவாக்குவதாய்ப் பாட ஏற்பாடு இருத்தல்வேண்டும்.

**பாடப்பொருள்**

ஒவ்வொரு காலக் கட்டத்திலும் கல்விக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவை இன்னின்ன கால அளவுகளில் இன்னின்ன பாடப்பொருள் கற்பிக்கப்படவேண்டும் எனக் கல்வி ஏற்பாட்டை வரையறுத்துக் கொடுத்துள்ளன. தற்போது இடைநிலைக்கல்வி 5 + 5 + 2 எனும் கால அளவைக் கொண்டுள்ளது.

வட்டார மொழி, ஆங்கிலம், கணிதம், சூழ்நிலையியல், அறிவியல், சமூக அறிவியல், உடற்கல்வி, கலைக்கல்வி, நன்னெறிக் கல்வி போன்ற பாடங்கள் 5 + 5 கால அளவில் மாணவர் முதிர்ச்சி நிலைக்கேற்பக் கற்பிக்கப்படுகின்றன. மேனிலை வகுப்புகளில் இரண்டாண்டுகளில் பல்வேறு பணிக்கல்விக்கான தொடக்கநிலைத் தயாரிப்புக்குரிய பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன.

**கற்பிப்பு முறை**

பாட ஏற்பாட்டின் பிறிதொரு கூறு கற்பிப்புமுறையாகும். எந்தெந்த நிலைகளில் எவ்வெவ் முறைகளைக் கையாளுவது என்பதையும் பாட ஏற்பாடு வரையறுக்கிறது.

**மதிப்பீடு**

கல்வித் தேர்ச்சியை அளந்து முடிவெடுப்பது மதிப்பீடாகும். ஒவ்வொரு மாணவரும் எந்த அளவிற்குப் பாடப்பொருளறிவு பெற்று இருக்கிறார்கள் என்பதையும், பிற கல்வி இலக்குகளில் எந்த அளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர் என்பதையும் அறிய மதிப்பீடு உதவுகிறது.

இன்றைய பாட ஏற்பாடு மாணவர்களின் அடைவை அளந்தறிய வாரத்தேர்வு, மாதத் தேர்வு, காலாண்டு, அரையாண்டு, ஆண்டுத்தேர்வு, செய்முறைத் தேர்வு, அகமதிப்பீட்டுத் தேர்வு, தொடர் மதிப்பீடு போன்ற மதிப்பீட்டு முறைகளை வலியுறுத்துகிறது.

## 2. பாடத்திட்டம் (Syllabus)

கற்றல்-கற்பித்தல், மதிப்பிடுதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மாணவர், ஆசிரியர், தேர்வாளர், புத்தகம் எழுதுவோர் ஆகியோருக்கு வழிகாட்டும் அடிப்படை ஆவணம் பாடத்திட்டம். இதுவே எதைக் கற்பிக்கப் போகிறோம்? ஏன் கற்பிக்கப் போகிறோம்? எவ்வாறு கற்பிக்கப் போகிறோம்? என்பனவற்றை ஆசிரியர்களுக்கு உணர்த்துகிறது.

பாடத்திட்டம் அதைப் படிப்பவர் எவராயினும் அவர்கள் அனைவருக்கும் மாறாத கருத்துகளை உணர்த்துவதாக இருத்தல்வேண்டும். அங்ஙனமின்றிப் படிப்பவர்க்கு வெவ்வேறு கருத்துகளை உணர்த்தும்வகையில் இருப்பின் பாடநூல், வகுப்பறை (ஆசிரியர், மாணவர்), தேர்வு இவற்றிற்கிடையே இடைவெளி மிகுந்து கல்வித்தரம் குறைந்துவிடும். எனவே, பாடத்திட்டம் விரிவாகவும் தெளிவாகவும் அமையவேண்டும்.

ஒரு நல்ல பாடத்திட்டம் பின்வரும் கூறுகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

1. நோக்கங்கள்,
2. பாடப்பகுதிகள்,
3. ஆசிரியர்களுக்கான குறிப்புகள்,
4. மதிப்பீட்டுமுறை.

முதலில் பாடப் பகுதியைக் கற்பிப்பதன் நோக்கங்கள் கூறப்படவேண்டும். இந் நோக்கங்கள் மொழிப்பாடத்தைப் பொருத்தவரை திறன்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதாவது, மாணவர்கள் குறிப்பிட்ட வகுப்பை முடித்ததும் என்னென்ன திறன்கள் பெற்றிருக்க வேண்டும் எனச் சொல்லப்படவேண்டும்.

கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய நோக்கங்களுடன் கூடுதலாக விரும்பத்தக்க நோக்கங்களும் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும். கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய வற்றைத்தான் நாம் குறைந்தபட்சக் கற்றல் இலக்குகள் (Minimum Levels of Learning) என்கிறோம்.

நோக்கங்களின் அடிப்படையில் பாட அளவும் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகளும் இருக்கவேண்டும். இன்று நடைமுறையில் வழிமுறைகளுக்குப் பதிலாகப் பாடப் பகுதிகளே கொடுக்கப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, இரண்டு நீதி இலக்கியங் களிலிருந்து இவ்வளவு அடிகள் தரலாம் என இருப்பதற்குப் பதிலாகக் கொன்றைவேந்தன் இத்தனை பாடல்கள், மூதுரை இத்தனை பாடல்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இதனால் பாடநூல் குழுவின் வேலையைப் பாடத்திட்டக் குழு எளிதாக்கிவிடுகிறது என்று சொல்லலாம்.

ஆசிரியர் வகுப்பறையில் பின்பற்றவேண்டிய செயல்முறைகள், மாணவர்களுக்கு அளிக்க வேண்டிய பயிற்சிகள் போன்ற ஆசிரியர்களுக்கான குறிப்புகளும் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும். குறிப்பிட்ட பாடத்திற்குரிய பிரிவேளைகளுள் திறன் அடிப்படையிலோ பாடஅலகு அடிப்படையிலோ பிரிக்க வேண்டுமானால் எவ்வாறு அது அமையவேண்டும், ஆசிரியர் எந்த வழக்கைப் பயன்படுத்தவேண்டும், பாட நூல் தவிர, வேறு எதெல்லாம் அவருக்கு உதவும் என்பன போன்ற செய்திகள் சுருக்கமாக இடம்பெற வேண்டும்.

இன்று கற்றலும் கற்பித்தலும் தேர்வையே மையமாகக் கொண்டிருப்பதால் தேர்வு செம்மையாக அமையாவிடில் நோக்கங்களும் பிறவும் சிறப்பாக அமைந்தும் பயனில்லை. எனவே, நோக்கங்களாகக் கொள்ளப்பட்ட திறன்களைச் சோதனை செய்வதாக அமையவேண்டும். தேர்வுக்கான தகுந்த வரையறைகளும் வழிமுறைகளும் பாடத்திட்டத்தில் தெளிவாக்கப் பட்டிருந்தால்தான் இது சாத்தியம். பாடத்திட்டத்தில் தக்க தேர்வு வினாத்தாள் வடிவமைப்பு இடம் பெறும். பாடப் பொருளுக்கான மதிப்பெண் ஒதுக்கீடு, மொழித்திறன்களுக்கான மதிப்பெண் ஒதுக்கீடு, வினா வகைகள், தேர்வுக்குரிய கால அளவு ஆகியவை குறிக்கப்படும்.

1986 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில், பேராசிரியர் ஆர்.ஹெச். தவே அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட ஐந்தாம் வகுப்பு மொழிப் பாடத்தின் பாடத்திட்டம் வருமாறு:

| திறன் பகுதி | திறன்கள் |
|---|---|
| 1. கேட்டல் | 1. ஒப்புவித்தல், நாடகம், சொற்போர் இவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ள இயலுதல். ( பள்ளி விழாக்களிலும் போட்டிகளிலும்)<br>2. முன்னறிமுகமில்லாத சூழலில் உரையாடல்கள், வசனங்கள் முதலியவற்றைப் புரிந்துகொள்ள இயலுதல்.<br>3. குழுச் செயல்பாடு ஒன்றுக்கான அறிவுரைகள் ஏற்றுச் செய்ய அறிதல். |

| | |
|---|---|
| 2. பேசுதல் | 1. இயல்பாகவும் சரளமாகவும் பேசுதல்.<br>2. தெரிந்த எளிய தலைப்புகளில் பேசுதல்.<br>3. சூழ்நிலைகளையும் நிகழ்ச்சிகளையும் விவரித்தல்.<br>4. நாடகங்களில் சொற்போர்களில் பங்கேற்றல் மற்றும் நிகழ்ச்சி அறிவிப்புகளைக் கூறுதல். |
| 3. படித்தல் | 1. எளிய எண் விவர விளக்கக் காட்சிகள் வரைபடங்கள் முதலியவற்றைப் படித்தறிதல்.<br>2. அச்சு எழுத்துகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் சுலபமாக வாசித்தல்.<br>3. செய்தித்தாள்களையும் மற்ற அச்சிட்ட செய்திகளையும் வாசித்தல். |
| 4. எழுதுதல் | 1. சரியான வடிவமைப்புடன் இடைவெளியிட்டு எழுதுதல்.<br>2. எல்லா ஒலி நிறுத்தக் குறியீடுகளையும் சொல்லக் கேட்டு எழுதுதல்.<br>3. எளிமையான கட்டுரைகளையும் கடிதங்களையும் உரையாடல்களையும் எழுதுதல். |
| 5. கேட்டல் மற்றும் படித்தல் வாயிலாகக் கருத்துகளை விளங்கிக் கொள்ளுதல் | 1. வாய்மொழி எழுத்துரைத் தகவலில் அனுமானங்களை யூகித்தறிதல்.<br>2. வாய்மொழி உரைநடையைப் படித்த பின்பு ‘அப்படியானால் - பிறகு’ ‘அப்படியல்லவெனில் - பிறகு’ என்னும் வினாக்களுக்குப் புரிந்து விடை பகருதல். |
| 6. செய்முறை இலக்கணம் | 1. சொல் இலக்கணத்தின் எளிய செய்முறை விதிகளைப் புரிந்துகொள்ளுதல். |
| 7. தானே கற்றல் | 1. பாலர் கலைக்களஞ்சியத்தைப் பயன்படுத்துதல். |
| 8. மொழி பயன்படுத்துதல்/ ஆளுதல் | 1. சூழலுக்குத் தக்கவாறு முறைசார்ந்த பேச்சு அல்லது பேச்சுவழக்கு மொழியைப் பயன்படுத்துதல். |
| 9. சொல்லாட்சித் திறன் | 1. ஏறக்குறைய ஐயாயிரம் சொற்களைப் படித்தறிந்து, புரிந்து பயன்படுத்தும் சொல்லாட்சித் திறன் பெறுதல். |

## 3. பாடநூல்

மொழிக்கல்வி சிறப்பாக அமைய நல்ல பாடநூல்கள் தேவை. கற்பித்தலின் மூன்று அடிப் படைகளான ஆசிரியர், மாணவர், பாடநூல் ஆகியவற்றுள் பாடநூல் சரியில்லையானால் ஏற்படும் பாதிப்பு மிக அதிகம். மாணவர் ஒருவர் சரியில்லை என்றால் அவர் மட்டுமே பாதிக்கப் படுவார். ஓர் ஆசிரியர் சரியில்லை யென்றால் அவரிடம் பயிலும் மாணாக்கர் மட்டுமே பாதிக்கப் படுவர். ஆனால், பாடநூல் சரியில்லை யென்றால் அந்தப் பாடநூலைப் பயன்படுத்திக் கற்கும் எண்ணிறந்த மாணவர்கள் பாதிக்கப்படுவர்.

ஆசிரியரின் கற்பித்தல் சிறப்பாக இருக்கவேண்டுமானால், அவர் தாம் கற்பிக்கப்போகும் பாட நூலையும் தம்மிடம் கற்கும் மாணவர்களையும் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். ஆசிரியர் பாடநூலைப் புரிந்துகொள்வதற்கு ஒரு நல்ல பாடநூலின் இலக்கணத்தை அறிந்திருக்க வேண்டும். இது அவருக்குப் பாடநூல் எழுதும் வாய்ப்புக் கிடைத்தாலும் பயன்படும். பொதுவாகப் பாடநூல் படைத்தலில் நான்கு நிலைகள் உள்ளன. அவை தெரிவுசெய்தல், வரிசைப்படுத்துதல், வழங்குதல், மதிப்பிடுதல் (Selection, Gradation, Presentation and Evaluation) என்பன. பாடல், கதை, கட்டுரை போன்றவற்றைத் தெரிவுசெய்தல் ஆகியன தெரிவு செய்தலில் அடங்கும். தெரிவு செய்த பாடங்களை அல்லது எழுதிய பாடங்களை எளிமையிலிருந்து கடினம், தெரிந்ததிலிருந்து தெரியாதது எனும் அடிப்படையில் அடுக்குவது வரிசைப்படுத்துதல்.

ஒவ்வொரு பாடத்தையும் எப்படி அமைக்கிறோம், அவற்றிற்கு எப்பயிற்சிகள் அமைக் கிறோம், பயிற்சிகளை எவ்வாறு பிரிக்கிறோம், பாடங்களை உரைநடை தனியாக, செய்யுள் தனி யாகத் தரப்போகிறோமா கலந்து கொடுக்கப் போகிறோமா போன்றவை வழங்குதலில் அடங்கும். பாடநூலை எழுதி முடித்த பிறகு மதிப்பீடு செய்யவேண்டும். பிற வல்லுநர் களிடமும் அனுபவ மிக்க ஆசிரியர்களிடமும் கொடுத்து மதிப்பீடு செய்யலாம். சுய மதிப்பீடும் வேண்டும். இம் மதிப்பீட்டின் அடிப்படையில் பாடநூலைத் திருத்தியமைக்க வேண்டும். பாட நூலை ஓராண்டுக் கற்பித்துப் பார்த்து அதன் அடிப்படையில் திருத்தி அமைப்பது சாலச் சிறந்தது.

### மொழிப்பாட நூலின் இலக்கணம்

1. பாட நூல் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதாக அமையவேண்டும்.
2. மொழியில் ஆர்வத்தை ஏற்படுத்தி அதன் வாயிலாகப் பள்ளியைவிட்டு விலகாமல் தொடர்ந்து கற்கும்வண்ணம் பாடநூல் அமையவேண்டும்.
3. பிற காரணங்களால் தொடக்கநிலைக்குப் பிறகு பள்ளியைவிட்டு விலகுபவர்களுக்கு வாழ்வில் பயன்படும்வண்ணம் திறன்பெற்றுச் செல்லும் வகையில் இருக்க வேண்டும்.
4. பள்ளி வேலை நாள்களுக்குள் நடத்தவியலும் வகையில் பாடங்களின் எண்ணிக்கை இருக்கவேண்டும்.
5. ஒவ்வொரு பாடநூலும் அதற்கு முந்தைய வகுப்புப் பாடநூலைவிடச் சற்றுக் கடினமாக அமைந்து படிநிலை சீராக இருக்கவேண்டும்.
6. பாடநூலில் இடம்பெறும் பாடங்கள் மாணவர்களை அந்நியப்படுத்துவதாக அமையாமல் அவர்களுடைய வாழ்க்கைச் சூழலை ஒட்டியதாக அமையவேண்டும்.

### பாடநூல் அமைப்பு

பாடநூல் என்பது உண்மையில் பாட ஏடு (Reader), பயிற்சி ஏடு, ஆசிரியர் கையேடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.. பாட ஏட்டில் பாடங்களும் சில பயிற்சி களும் (பெரும்பாலும் வாய்மொழியாக நிறைவேற்றத் தக்கவை) இடம்பெறும். பயிற்சி ஏட்டில் கூடுதல் பயிற்சிகளும் அவற்றை நிறைவேற்ற அதிலேயே இடமும் இருக்கும். ஆசிரியர் கையேட்டில் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான தகவல்கள் இடம்பெறும். நடை

முறையில் மூன்றும் தனித்தனியாகவோ இரண்டாகவோ ஒரே நூலிலோ இடம்பெறவும் கூடும். ஒரே பாடநூலாக இருந்தால் ஒவ்வொரு பாடமும் தலைப்பு, பாடப்பகுதி, படங்கள், பயிற்சி, ஆசிரியர்களுக்கான குறிப்பு ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கவேண்டும். பாடநூலின் தொடக்கத்தில் முன்னுரை கட்டாயம் இடம்பெற வேண்டும். இதில் நூலின் சிறப்புக் கூறுகள், நூலைக் கற்பிப்பதற்கான பொதுக்குறிப்புகள் போன்றவை இடம்பெறவேண்டும். பாடத்தின் நோக்கம், தொடர்புடைய செய்திகள், கூடுதல் பயிற்சிகள், செயல்முறைகள் ஒவ்வொரு பாடத்திற்கும் தரலாம். ஆனால், ஒரே நூலாக இருந்தால் மிகச் சுருக்கமாகவே இது அமையும். வெவ்வேறு நூலாக இருந்தால் பெரும்பாலான பயிற்சிகளும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய ஆசிரியர்களுக்கான குறிப்புகளும் அந்தந்த நூலுக்குப் போய்விடும்.

**பாடநூல், தமிழ் மொழித்திறன்களை வளர்ப்பதற்கு உதவும் ஒரு கருவியே தவிர, ஆசிரியரை வழிநடத்திச் செல்லும் சாதனமன்று.**

பாடநூலின் அளவு இளஞ்சிறுவர் கையாளுவதற்கு ஏற்ப இருக்கவேண்டும். எழுத்தின் வடிவம் பெரிதாய் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தவியலும் வகையில் இருக்க வேண்டும். பாடநூலின் கட்டுமானம் வலுவானதாக இருக்கவேண்டும். மேலட்டை மாணவர் களை ஈர்ப்பதாக அமையவேண்டும். உள்ளேயும் படங்கள் அதிகம் இருக்கவேண்டும். வண்ணப் படங்கள் இருப்பதுடன் அவை தக்கவகையில் அச்சாகியிருக்கவேண்டும்.

### பாடப்பொருள்

முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரையிலான தொடக்கநிலைக் கல்வியில் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படும் பகுதிகளில் அடங்கியுள்ள செய்திகளே பாடப்பொருள் ஆகும். பாடப்பொருள் செய்யுள், உரைநடை ஆகிய இரு வடிவங்களில் அமைந்து மொழித்திறனை வளர்க்கும் வளமூலங்களாகத் திகழ்கின்றன. மொழித்திறனை வளர்க்க அவை துணையாவதோடு கல்வி விழுமங்களையும் தாங்கி நிற்கின்றன.

தொடக்கநிலையில் கல்வியின் நோக்கம் சமூகவயமாக்குதல் ஆகும். மாணவர்களை அவர்கள் வளரும் சமுதாயத்தில் பொருத்தமுடையவர்களாக ஆக்குதல், சமூக வயமாக்குதல் எனப்படும். மாணவரைச் சமூகவயமாக்குவதற்குத் தனிமாந்தர் ஒழுக்கமும் சமுதாய நெறியைப் பின்பற்றும் மனப்போக்கும் வேண்டும். இவற்றை மாணவர்கள் பெறும்வகையில் அறவுரைகள், கதைகள் முதலியன பாடப்பொருளாகக் கற்பிக்கப்படுகின்றன.

### தொடக்கநிலையில் மொழித்திறன்

ஒவ்வொரு பாடத்தின் வாயிலாகவும் மொழியின் பல்வேறு கூறுகளான எழுத்து, சொல், தொடர், பொருள் ஆகியவற்றில் பெறப்படுகின்ற தேர்ச்சியால் மொழித்திறன் வளர்கிறது. மொழியைக் கையாளும் வல்லமை ஏற்படுகிறது.

பேராசிரியர் தவே அவர்களின் (குறைந்தபட்சக் கற்றல் அடைவுகள்) என்னும் கொள்கை அடிப்படையின்கீழ்த் தொடக்க வகுப்புகளின் பாடப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை மாணவர்கள் பெறவேண்டிய மொழித்திறன்கள் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.அவை: 1) கேட்டல், 2) பேசுதல், 3) படித்தல், 4) எழுதுதல், 5) கேட்டல் மற்றும் படித்தல் வாயிலாகக் கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல், 6) செய்முறை இலக்கணம், 7) தானே கற்றல், 8) சொல்லாட்சித்திறன், 9) சொற்களஞ்சியப் பெருக்கம் என்பன.

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்திடுக. ஐந்தாம் வகுப்பிற்குரிய திறன்கள் ஒவ்வொன்றையும் வளர்க்கும்வகையில் பாடங்கள் எழுதப்பட்டுள்ளனவா என்பதைக் கலந்துரையாடுக; அறிக்கை தயாரித்திடுக.

## 4. பாட ஏற்பாடு, பாடத்திட்டம், பாடநூல்

பாட ஏற்பாட்டின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பாடத்திட்டம் பட்டியலிட்ட திறன்களைப் பல பாடங்களாக ஒவ்வொரு வகுப்புக்கும் எழுதப்பட்ட நூலே பாடநூல். பாடநூல் மட்டுமன்றித் தேர்வும் வகுப்பறைச் செயல்பாடுகளும்கூடப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே அமையவேண்டுவனவாகும்.

பாடத்திட்டத்தை அடிப்டையாகக்கொண்டு அமையும் தேர்வுக்குப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்த பாடநூலைப் பயன்படுத்தி மாணவர்களை ஆயத்தப்படுத்தும்வண்ணம் வகுப்பறைச் செயல்பாடுகள் அமையவேண்டும். அதாவது, பாடத்திட்டம் குறிப்பிடும் திறன்களை மாணவர்கள் அடைந்துள்ளார்களா எனச் சோதிக்கும் தேர்வுக்குப் பாடநூலைப் பயன்படுத்தித் திறன்களை வளர்ப்பதே ஆசிரியர் வகுப்பறையில் மேற்கொள்ளவேண்டிய செயல். ஒரு வேளை தேர்வும் பாடநூலும் பாடத்திட்ட இலக்குகளை எட்டும் முயற்சியில் குறையுடையனவாக இருந்தாலும் பாடத்திட்ட இலக்குகளை ஆசிரியர் மறக்கக்கூடாது.




## 5. பாடநூலும் ஆசிரியர்களும்

பாடநூல் என்பது ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்க உதவும் கருவிகளுள் ஒன்றுதான். இந்தியச் சூழலில் அதுவே எல்லாமுமாகப் பலநேரங்களில் அமைந்துவிடுகிறது. ஆசிரியர்கள் பலரும் பாடத் திட்டத்தையே வாசிப்பதில்லை. பாடநூலையே வேதமாகக்கொண்டு கற்பிக் கின்றனர். ஆனால், உண்மையில் பாடத்திட்டத்தையே அடிப்படையாகக்கொண்டு கற்பிக்க வேண்டியது. பாடத்திட்டத்தில் சொல்லப்பட்ட நோக்கங்கள் நிறைவேறுமாறு, மொழிப் பாடத்தைப் பொருத்தவரை பாடத் திட்டத்தில் சொல்லப்பட்ட மொழித்திறன்களை மாணவர்கள் அடையுமாறு ஆசிரியர் தமது கற்பித்தலை அமைத்துக் கொள்ளவேண்டும். அதற்குப் பாடநூல் உட்பட எவையெல்லாம் பயன்படுமோ அவற்றை யெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போது உயர்கல்வியில் இவ்வாறுதான் கற்பிக்கப்படுகிறது. போதுமான பார்வை நூல்கள் கிடைக்காமை, போதுமான துணைக்கருவிகள் உருவாக்கப்படாமை போன்ற காரணங்களால் பள்ளிக் கல்வியில் பாடநூலையே முதன்மையாகக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால், தற்போது நமது சூழ்நிலை வெகுவாக முன்னேறியிருக்கிறது. எனவே, ஆசிரியர் பாடத் திட்டத்தை வாசிக்கவேண்டும். அதில் நோக்கங்களாகத் தரப்பட்டுள்ள திறன்கள் எவையென மனத்தில் இருத்திக்கொண்டு அவற்றை மாணவர்கள் அடையச் செய்யப் பாடநூலை எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் எனத் திட்டமிடவேண்டும். அத்துடன் பார்வை நூல்கள், துணைக் கருவிகள், பயிற்சி நூல்கள் போன்றவற்றையும் பயன்படுத்தவேண்டும்.

பாடநூலில் இடநெருக்கடி கருதி ஒவ்வொரு பாடத்திற்கும் சில பயிற்சிகளே தரப் பட்டிருக்கும். ஆனால், ஆசிரியர் அவற்றுடன் மேலும் இயன்ற அளவு பயிற்சிகளை உருவாக்கிக் கொள்ளவேண்டும். நான்காம் ஐந்தாம் வகுப்புகளில் மாணவர்களையே பாடத்திற்குக் கூடுதல் பயிற்சிகளை உருவாக்கச் செய்யலாம். மாணவர்கள் குழுவாக இதைச் செய்யலாம். இதனால் மாணவர்கள் பாடத்தை மிக நன்றாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். மேலும், மாணவர்கள்

வாசிப்பதற்கும் பார்த்து எழுதுவதற்கும் கேட்டெழுதுவதற்கும் பொருளுணர் பயிற்சிக்கும் சுருக்கி எழுதுவதற்கும் எனப் பல்வேறு வகையில் பாடநூலில் உள்ள பாடங்களைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் தாம் வாசித்தோ ஓரிரு மாணவர்களை வாசிக்கச் செய்தோ இல்லாவிட்டால் வாசிக்காமலோ பாடத்திற்கு விளக்கஞ் சொல்லிக்கொண்டு போகக்கூடாது. எல்லா மாணவர் களையும் எல்லாப் பாடங்களையும் வாய்விட்டு வாசிக்கச் செய்யவேண்டும். பல குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குள் வாசிக்கச் செய்யலாம். இவ்வாறாகப் பாடத்திட்டம் குறிப்பிடும் ஒவ்வொரு திறனையும் மாணவர்கள் அடையப் பாட நூலை இயன்றவாறெல்லாம் பயன்படுத்தவேண்டும். மேலும், பாடநூலில் குறைகள் இருப்பின், அவற்றைத் தவிர்த்தோ ஈடுசெய்யும் விதமாகவோ பாட நூலைக் கற்பிக்கவேண்டும்.

பள்ளிக்கல்வி ஒரு தொடர் நிகழ்வு. இரண்டாம் வகுப்புமுதல் பாடநூல்கள் முந்தைய வகுப்புப் பாடநூல்களின் தொடர்ச்சியே. எனவே, ஒரு வகுப்பில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் அதற்கு முந்தைய வகுப்புத் தமிழ்ப் பாடநூலைக் கட்டாயம் படித்திருக்கவேண்டும். பிற முன்வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களை யும் படித்திருப்பது நல்லது. இதேபோல், பாடநூலுக்கு எழுதப்பட்டுள்ள முன்னுரையையும் ஆசிரியர் வாசித்திருக்கவேண்டும். ஆசிரியர் பாடநூலைப் புரிந்துகொள்ள அது உதவும்.

## 6. பாடநூல் ஆய்வு

பாடநூல் வகுப்புக்குப் பொருத்தமான, தரமுள்ள பாடநூல்தானா என்பதை ஆய்வு செய்தல்வேண்டும். அவ்வாறு ஆய்வுசெய்து மதிப்பிடுவதற்குக் கீழுள்ள ஐந்து பண்புக் கூறுகளைக் கொள்ளலாம்.

1. புற அமைப்பு.
2. மொழித்திறன்களை வளர்க்குங் கூறுகள்.
3. பாடப்பொருள்.
4. பாடப்பொருள் வெளிப்பாடு.
5. பயிற்சிகள்.

### 1) புற அமைப்பு

புற அமைப்பின்கீழ், பாடநூலின் வடிவம், பருமன், அச்சிடப்பெற்ற தாள், அச்சு, கட்டு (Binding) பொதுத் தோற்றம் ஆகியவற்றின் தரத்தை மதிப்பிடல்வேண்டும்.

### 2) மொழித்திறன்களை வளர்க்குங் கூறுகள்

மொழித்திறன்களை வளர்ப்பதே பாடப்பொருளின் தலையாய நோக்கம். அத்திறன்கள் தொடக்கநிலை வகுப்புகளுக்குரிய திறன் பகுதிகள் என வரையறுக்கப்பட்டுள்ளன. அவை: 1. கேட்டல், 2. பேசுதல், 3. படித்தல், 4. எழுதுதல், 5. கேட்டல், படித்தல் வாயிலாகக் கருத்துகளை விளங்கிக் கொள்ளுதல், 6. செய்முறை இலக்கணம்/நடைமுறை இலக்கணம், 7. தானே கற்றல், 8. மொழியைப் பயன்படுத்துதல், 9. சொல்லாட்சித்திறன் என்பனவாம். இவ்வொன்பது திறன்களிலும் உட்கூறுகள் உள்ளன. ஒவ்வொரு பாடமும் ஏதேனும் ஒரு திறனை அல்லது பல திறன்களை வளர்க்கும்வண்ணம் அமைந்துள்ளதா என மதிப்பிடல்வேண்டும்.

### 3) பாடப்பொருள்

திறன்களை வளர்ப்பதற்காக அமைந்த பாடப்பொருள் எளிமையான நடையில் உள்ளதா? வகுப்புநிலைக்கேற்ற அளவில் உள்ளதா? கூறப்படும் கருத்து மாணவர் அவ்வகுப்பு நிலையில் விளங்கிக்கொள்ளும் நிலையில் அமைந்ததா? நற்பண்புகளை வளர்க்குந் தகவல்கள் உள்ளனவா? என்பனவற்றை ஆய்தல்வேண்டும்.

**4) பாடப்பொருள் வெளிப்பாடு**

பாடப்பொருளைத் தெளிவுபடுத்தக் கூறப்படும் தகவல்கள் விளக்கமாக உள்ளனவா? அவற்றை விளக்கக் கையாளும் எடுத்துக்காட்டுகள் எளிமையாகவும் பொருத்தமாகவும் உள்ளனவா? என ஆய்தல்வேண்டும்.

**5) பயிற்சிகள்**

கற்ற திறன்களில் நன்கு பயிற்சிபெறவும், அவற்றில் வல்லமைபெறவும் உதவும்வண்ணம் பயிற்சிகள் அமைந்துள்ளனவா? வெவ்வேறு வகையான பயிற்சிகள் போதுமான அளவு உள்ளனவா? என ஆய்தல்வேண்டும்.

இவ்வாறு ஆய்வுசெய்யும்பொழுது,

பாடநூல் வகுப்புக்கேற்ற பக்க அளவில் உள்ளது. ஆம் / இல்லை
பாடநூலில் பயிற்சிகள் போதுமான அளவு உள்ளன. ஆம் / இல்லை

என்று ஆம்/இல்லை என விடையளிக்கும் இருநிலைப்புள்ளி அளவைக் கையாளலாம்.

அல்லது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாடப்பொருள்-** | மிகமிகப் பொருத்தம் | மிகப் பொருத்தம் | பொருத்தம் | ஓரளவு பொருத்தம் | பொருத்தம் இல்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாடநூலில் உள்ள பயிற்சிகள்** | மிகமிக நன்று<br>4 | மிக நன்று<br>3 | நிறைவு<br>2 | குறைபாடு<br>1 | பிறழ்வு<br>0 |

இவ்வாறு ஐந்துநிலைப் புள்ளிகளில் விடையளிக்கும்வண்ணம் அமைக்கலாம்.

இவ்வாறு இருநிலைப்புள்ளி அளவையிலோ ஐந்நிலைப்புள்ளி அளவையிலோ பாட நூலை மதிப்பிடவேண்டும்.

பாடநூலை ஐந்நிலைப்புள்ளி அளவில் மதிப்பிட நான்குதொடர்கள் (தலைப்புகள்) எழுதுக.

## தொகுப்புரை

பாட ஏற்பாடு பொதுவானது. இது தத்துவ, சமூக, நிருவாகக் கூறுகளை உள்ளடக்கிய கல்விச் செயல்பாட்டுக்குரிய திட்டம். அதாவது, குறிப்பிட்ட நிறுவனத்தில் அல்லது அமைப்பில் குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்படும் கல்வி குறித்த பொதுத்திட்டம். இது பாடத்திட்டத்தால் செயல்பாட்டுக்கு வருகிறது. பாட ஏற்பாடு பாடப்பொருளைப் பொது நிலையில் தரப் பாடத்திட்டம் துல்லியமாகத் தருகிறது. அதாவது, எந்தெந்த வகுப்பில் எந்த அளவு பாட அறிவு வழங்கவேண்டும், எந்தெந்தத் திறன்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இவ்வாறு பயிற்றுவிக்க ஆசிரியர்களுக்கு உதவும் கருவி பாடநூல். பாடத்திட்டத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்பப் பாடநூலைப் பயன்படுத்திக் கற்பிப்பது ஆசிரியரின் கடமை. பாடநூலில் குறைகள் இருப்பினும் அவற்றை ஈடுசெய்து பாடத்திட்ட இலக்குகளை மாணவர்கள் அடையச் செய்யவேண்டும். இதற்குப் பாடநூலைப் பற்றிய அறிவும் திறனாய்வு நோக்கும் ஆசிரியர்களுக்கு வேண்டும் என்பனவற்றை இவ்வியலில் கண்டோம்.

# 2. சொற்களஞ்சியம் பெருக்குதல்

## அறிமுகம்

நாம் நம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், பிறரிடம் நம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், உணர்ச்சிகளை வெளியிடவும் மொழியைக் கையாளும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். மொழியில் திறன்பெறக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களில் வல்லமை பெற்றிருத்தல் இன்றியமையாதது. பிறர் பேசுவதைக் கேட்டறிந்து கொள்ள அவர் பயன்படுத்தும் சொற்களை அறிதல்வேண்டும். அதேபோன்று, நூல்களைப் படித்து அறிந்து கொள்ள அவற்றிலுள்ள சொற்களை அறிதல் நன்று. நம் கருத்துகளைப் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தப் பொருத்தமான சொற்கள் தேவை. எனவே கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களுக்கும் அடிப்படைத் தேவை சொற்களஞ்சியமே. இவ்வியலில் அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்தும் சொற்களஞ்சியம் யாவை என்பதையும் சொற்களஞ் சியம் பெருக்கும் முறைகள் குறித்தும், சொற்பயிற்சி, சொல் விளையாட்டுகள் பற்றியும் அறிந்து கொள்வோம்.

## படிநிலைகள்

1. சொல்லமைப்பு, பொருள், பயன்பாடு
2. சொல் கற்பிக்கும் முறைகள்
3. அறிந்த சொற்களஞ்சியம் பயன்படுத்தும் சொற்களஞ்சியம்
4. மொழித்திறன்களும் சொற்களஞ்சியமும்
5. பாடல்களும் சொற்களஞ்சியமும்
6. சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகள்
7. சொற் பயிற்சிகள்
8. சொல் விளையாட்டுகள்

## 1. சொல்லமைப்பு, பொருள், பயன்பாடு

ஓர் எழுத்து தனித்து நின்றேனும், இரண்டு மூன்று முதலிய எழுத்துகள் தொடர்ந்து நின்றேனும் பொருள் உணர்த்துவது சொல் எனப்படும். பொருளுணர்த்தாமல் எழுத்துகள் தொடர்ந்து நின்றால் அது சொல்லாகாது. (எ.கா.) பூ, கா, வா, போ - இவை ஓரெழுத்துத் தனித்து நின்று பொருளை உணர்த்தும் சொற்கள்.

கிளி, கடல், மல்லிகை, பம்பரம் - இவை இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருளை உணர்த்தும் சொற்கள்.

தமிழ் மொழியிலுள்ள சொற்களைப் பயன்படும் வகையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காகக் கொள்வர்.

பொருள்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள் எனப்படும். ஒரு பொருளின் வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.பெயர்ச்சொற்களும் ஆகாது, வினைச்சொற்களும் ஆகாது இடைப்பட்டனவாய் நிற்பின் அவை இடைச்சொல்லாம். தனித்து இயங்கும் ஆற்றலின்றிப் பெயர் வினைகளை இடமாகக் கொண்டு அவற்றின் இடையே முன்னும் பின்னும் வரும் வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், உவம உருபுகள், அசைச்சொற்கள் ஆகியனவும் இவைபோல்வன பிறவும் இடைச்சொற்களாம்.

இடைச்சொற்கள், உரிச்சொற்களை 6,7,8ஆம் வகுப்புத் தமிழ் நூல்களிலிருந்து தொகுக்க.

உறுபுகழ், சாலப் பேசினான் எனப் பெயர் வினைகளின் குணத்தை உணர்த்துவதற்கு உரிமை பூண்டு வருஞ் சொற்கள் உரிச்சொல் எனப்படும்.

இந் நால்வகைச் சொற்களைப் பயன்படுத்தியே நாம் மொழியைக் கையாளுகின்றோம்.

## 2. சொல் கற்பிக்கும் முறைகள்

சொற்களைக் கற்பிக்கும்பொழுது நேரடி அனுபவத்தை உண்டாக்குதல் மிக இன்றியமையாதது. பெயர்ச்சொற்களாயின் அப்பொருளை நேரில் காட்டி, அல்லது படங்களைக் காட்டிச் சொற்களைக் கற்பிக்க வேண்டும். வினைச்சொற்களாயின் அச் செயல்களைச் செய்வதன்மூலம் கற்பிக்கவேண்டும்.

ஏலம்போடுதல், வலம் வருதல் போன்ற வினைகளைக் கற்பிக்கும்பொழுது வகுப்பில் பொருள்களை ஏலம்போடுவதுபோல் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தல்வேண்டும். மாணவர் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் பொழுது அச்சொல்லின் பொருளை நன்கு அறிவர். அதேபோன்று வலம் வருதல் என்பதனைக் கற்பிக்க மக்கள் கோவிலை வலம் வருதல்பற்றிக் கூறலாம். மேசைஅல்லது கரும்பலகை போன்றவற்றை வகுப்பு நடுவில் வைத்து அதனை வலம் வரச் செய்யலாம். பொருளுக்கு எதிரே நிற்பவர் இடப்பக்கம் திரும்பி, அதனைச் சுற்றி வருதலே வலம் வருதல் என்பதனை நன்கு அறிவர்.

## 3. அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்தும் சொற்களஞ்சியம்

பிறர் பேசக் கேட்கும்பொழுதும், நூல்களைப் படிக்கும்பொழுதும் பல புதிய சொற்களை நாம் அறிகிறோம். ஆனால், அவ்வாறு அறிந்த சொற்கள் அனைத்தையும் நம்முடைய பேச்சிலோ எழுத்திலோ பயன்படுத்துவதில்லை. அவற்றுள் ஒரு சில சொற்களையே பயன்படுத்துகிறோம். கேட்டு அறியவும் படித்து அறியவும் பயன்படும் சொற்களை அறிந்த சொற்கள் என்றும், நாம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தும் சொற்கள் என்றும் கூறுவர்.

எடுத்துக்காட்டாகக் **கவின்** என்னும் சொல்லை ஒருவர் கேட்டாலோ படித்தாலோ அதன் பொருளைப் புரிந்துகொள்வார். ஆனால், அவர் பேசும்பொழுதோ எழுதும்பொழுதோ அதனைப் பயன்படுத்தமாட்டார். இவ்வாறிருந்தால், கவின் என்னும் சொல் அவருடைய அறிந்த சொற்களஞ்சியத்தில் இருக்கிறது என்றும், பயன்படுத்தும் சொற்களஞ்சியத்தில் இல்லையென்றும் பொருள். ஒருவருடைய அறிந்த சொற்களஞ்சியம் அதிகமாக இருந்து, அதற்கும் அவருடைய பயன்படுத்தும் சொற்களஞ்சியத்திற்கும் இடைவெளி குறைவாக இருந்தால், அவர் அந்த மொழியில் வல்லுநராகத் திகழ்வார்.

ஆசிரியர், தம் மாணவர்களின் அறிந்த சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதோடு அவர்களுடைய அறிந்த சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்துஞ் சொற்களஞ்சியமாக மாற்றவும் வேண்டும். இதற்குச் சொற்பயிற்சிகள், சொல் விளையாட்டுகள் மிகவும் உதவும்.

## 4. மொழித்திறன்களும் சொற்களஞ்சியமும்

மொழித்திறன்கள் நான்கனுள் கேட்டலும் படித்தலும் உட்கொள்ளுந் திறன்கள் எனக் கண்டோம். ஒருவர் பேசுவதைக் கேட்கும்பொழுது நாம் அறியாத சொற்களைத் தம் பேச்சினிடையே பயன்படுத்தலாம். ஒருபொருளை, ஒரு செயலை அல்லது ஒரு காட்சியை

விளக்கும்பொழுது புதிய சொற்களைப் பயன்படுத்தலாம். அவ்வாறு புதிய சொற்களைக் கேட்கும்பொழுது, அவற்றை நாம் இடம்நோக்கிப் பொருள் அறிந்துகொள்கிறோம். இதேபோன்று நூல்களைக் படிக்கும்பொழுதும் புதிய சொற்களின் பொருளை அறிந்துகொள்வோம். ஒருவர் பேசுவதைக் கேட்கும்பொழுது அல்லது பேச்சுவேகத்தில் நாம் கேட்டுணர்ந்து பொருள் அறியவேண்டும். எனவே, இடம்நோக்கிப் பொருளறிவோம். ஆனால், படிக்கும்பொழுது புதிய சொற்கள்வரின் இடம்நோக்கிப் பொருள் அறிவதுடன், படிப்பதைச் சற்று நிறுத்தி அகராதி பார்த்துப் பொருள் அறிந்து மேலும் படிக்கலாம். இவ்வாறு செய்வதால் படித்தல், கேட்டல் திறன்கள் வழியே அறிந்த சொற்களஞ்சியம் பெருக வாய்ப்புள்ளது.

அடுத்து, பேசுதல் எழுதுதல் ஆகிய திறன்களை வெளியிடுந்திறன்கள் என்போம். அவ்வாறு கருத்துகளை வெளியிடும்பொழுது நாம் அறிந்த சொற்கள் அனைத்தையும் பயன்படுத்துவதில்லை. எடுத்துக்காட்டாகக், கவின் என்றால் 'அழகு' என நமக்குத் தெரியும். அது அறிந்த சொல். ஆனால், 'பூங்கா' பற்றி ஒருவர் வருணித்துப் பேசும்போது, வருணனைக் கட்டுரை எழுதும்பொழுது 'கவின்' என்னும் சொல் நம் பேச்சில்/கட்டுரையில் இடம்பெறுவ தில்லை. அழகு, வனப்பு என்னும் சொற்கள் இடம்பெறலாம். எனவே, 'கவின்' என்பது அறிந்த சொற்களஞ்சியத்தில் உள்ளது; பயன்படுத்தும் சொற்களஞ்சியத்தில் இல்லை. பேசும்பொழுது அல்லது எழுதும்பொழுது அச்சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினால் அது பயன்படுத்தும் சொற்களஞ்சியத்தில் சேரும். சாதாரணமாகப் பேசுவதில் பயன்படுத்தும் சொற்களஞ்சியத்தை விட எழுதும்பொழுது அதிகச் சொற்களைப் பயன்படுத்துவோம். எடுத்துக் காட்டாக, ஒரு மன்னனைப் பற்றிய கதையைக் கூறுங்கால் அரசன், மன்னன் என்னும் சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவோம். ஆனால், எழுதும்பொழுது கொற்றவன், காவலன், புரவலன் என்னும் சொற்களையும் பயன்படுத்தத் தொடங்குவோம். எனவே, பேசுவதாலும் எழுதுவதாலும் பயன்படுத்தும் சொற்களஞ்சியம் பெருகும்.

பேசுதல் என்னுஞ் சொற்குரிய அறிந்த சொற்கள், பயன்படுத்துஞ் சொற்களைப் பட்டியலிடுக.

## 5. பாடங்களும் சொற்களஞ்சியமும்

மாணவர்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களில் வல்லவராக வேண்டுமெனில், அவர்களது சொற்களஞ்சியம் மிகுதியாக இருத்தல்வேண்டும். இதற்காகப் பள்ளியில் பாடநூல்கள் அமைக்கப்படுகின்றன. அவை உரைநடை, செய்யுள், துணைப்பாடங்களாக உள்ளன.

உரைநடைப் பாடங்களைப் படிக்கும்பொழுது, அவற்றில் கையாளப்பட்டுள்ள புதிய சொற்களுக்கான பொருளை இடம்நோக்கிப் பொருள் அறிகின்றனர். சொல்லுக்குப் பொருள் கூறுதல், எதிர்ச்சொல் கூறுதல் போன்ற செயல்களின்மூலம் மாணவரது அறிந்த சொற்களஞ்சியம் பெருகும். இதேபோன்று செய்யுட் பாடத்தின்மூலமும் துணைப்பாடத்தின்மூலமும் மாணவரது அறிந்த சொற்களஞ்சியம் பெருகும்.

உரைநடைப்பாடம் நடத்தும்பொழுது சொற்களை, தொடர்களை, மரபுத்தொடர்களை, பழமொழிகளை வாக்கியங்களில் அமைத்து எழுதச் செய்வதால், அவை பயன்படுத்தும் சொற்களஞ்சியமாக மாறும்.

சொற்கள், தொடர்கள், மரபுத்தொடர்கள், பழமொழிகள் பட்டியலைத் தயாரித்துப் பயன்படுத்துஞ் சொற்களஞ்சியமாக்குக.

செய்யுட் பாடத்தில் செய்யுளின் திரண்ட கருத்தை எழுதும்பொழுது செய்யுளில் உள்ள புதிய சொற்களைப் பயன்படுத்தி எழுதுவர். அறிந்த சொற்களஞ்சியம் பயன்படுத்தும் சொற்களஞ்சியமாகும்.

துணைப்பாடத்தில் வரும் சொற்களைப் பயன்படுத்தித் துணைப்பாடக் கட்டுரை எழுதுவதால் அறிந்த சொற்களஞ்சியம் பயன்படுத்தும் சொற்களஞ்சியமாக மாறும்.

இவ்வாறு பாடநூல்களிலுள்ள பாடங்களைக் கற்பிப்பதால் மாணவரது அறிந்த சொற்களஞ்சியம் மிகுதியாவதுடன், வினாக்களுக்கு விடையெழுதுவதாலும் தக்க பயிற்சிகள் கொடுப்பதாலும் பயன்படுத்தும் சொற்களஞ்சியம் மிகுதியாகும்.

இனிச் சொற்களஞ்சியம் பெருக்குவதற்கான செயல்பாடுகளை அறிவோம்.

## 6. சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகள்

### படங்கள் அல்லது பொருள்களைக் காட்டி அவற்றின் பெயர்களைக் கூறச் செய்தல்

விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடிகள், பூக்கள், பழங்கள், அன்றாடம் வீட்டில் பயன்படுத்தும் பொருள்கள் முதலானவற்றையோ அவற்றின் படங்களையோ மாணாக்கரிடம் காட்டி, அவற்றின் பெயர்களைக் கூறுமாறு செய்யலாம். பின்னர் எழுதவும் வைக்கலாம். இப்பயிற்சிக்கு, மாணாக்கர் நன்கு அறிந்த அல்லது கேள்விப்பட்டனவற்றை முதலில் காட்டி, தொடர்ந்து பிறவற்றைக் காட்டிடலாம்.

### அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறச் செய்தல்

செய்யுள், உரைநடைப் பாடப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறச் செய்வதால் மாணாக்கரின் சொற்களஞ்சியம் பெருகும். எடுத்துக்காட்டாக, எழில் - அழகு; கவின் - அழகு; மந்தி - பெண் குரங்கு; பிடி - பெண் யானை; வெய்யோன் - சூரியன்; கானகம் - காடு; செய் - வயல். இவ்வாறு அருஞ்சொற்களையும் அவற்றிற்குரிய பொருள்களையும் கூறலாம்.

வலி, வளி, வழி - இம்மூன்று சொற்களையும் ஒரே வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

### எதிர்ச்சொல் கூறச் செய்தல்

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள, நட்பு X பகை; போற்று X தூற்று; வெற்றி X தோல்வி; அறம் X மறம்; புகழ் X இகழ். இவ்வாறு அறிந்த சொற்களையும் அவற்றிற்குப் பொருத்தமான எதிர்ச்சொற்களையும் கூறவும் எழுதவும் செய்யலாம்.

### முழுமையான ஒன்றின் உறுப்புகளைக் கூறச் செய்தல்

'மனிதன்' என்பவனின் உறுப்புகள் தலை, கண், காது, மூக்கு, வாய், நாக்கு, பல், மார்பு, கை, கால், விரல், நகம், எனவும், 'மரம்' என்பதின் உறுப்புகளாகத் தண்டு, கிளை, வேர், இலை, பூ, காய், கனி என்பனவுமாக உள்ளவற்றைக் கூறவும் எழுதவும் செய்யலாம்.

### மயங்கொலிச் சொற்களின் பொருள் வேறுபாட்டை அறியச் செய்தல்

**ல-ள-ழ, ண- ந- ன, ர - ற:**

ஒலிப்பு மற்றும் எழுத்து மாறினால் பொருள் மாற்றம் ஏற்படும் என்பதை எடுத்துக் காட்டுவதாலும் சொற்களஞ்சியம் பெருக்கலாம். பின்வருஞ் சான்றுகளைக் காண்போம்.

ஆற்றில் வருவது **வெள்ளம்**; ஆசையாய்த் தின்பது **வெல்லம்.**

கா**லை**யில் கா**ளை** வந்தது.

விளக்கில் வருவது ஒ**ளி;** வீணையில் வருவது **ஒலி**.

குறிஞ்சித் தி**ணை** மக்கள் தி**னை** மாவு உண்பர்.

மல்லிகை ம**ண**ம் ம**ன**ங்கவரும்.

ப**ற**வைகள் ப**ர**வை கடந்து வருகின்றன.

தி**ற**மையான மாணவர் த**ர**ம் பிரிக்கப்பட்டனர்.

இவ்வாறு கூறவும் எழுதவும் செய்யலாம்.

அ) ல - ள - ழகரச் சொற்களின் வேறுபாடு:

| | | |
|---|---|---|
| தால் - நாக்கு | தாழ் - தாழ்ப்பாள் | தாள் - திருவடி |
| வால் - விலங்கின் உறுப்பு | வாழ் - உயிரோடு வாழ் | வாள் - கருவி |
| ஆல் - ஆலமரம் | ஆழ் - மூழ்கு | ஆள் - தனிமனிதன் |
| இலை - முற்றிய தளிர் | இழை - நூல் | இளை - மெலிக |
| உலவு - திரிதல் செய் | உழவு - பயிர்த்தொழில் | உளவு - வேவு |
| புல் - தாவரம் | புள் - பறவை | |
| எல் - சூரியன் | எள் - எண்ணெய்வித்து | |
| புலி - விலங்கு | புளி - புளிப்புச் சுவை | |
| வலி - வலிமை | வழி - பாதை, வளி - காற்று | |

ஆ) ண - னகரச் சொற்கள் வேறுபாடு:

| | |
|---|---|
| ஊண் - சோறு | ஊன் - புலால் |
| மண் - நிலப்பரப்பு | மன் - நிலைபேறு |
| பணி - தொழில் | பனி - குளிர் |
| கணி - கணக்கிடு | கனி - பழம் |
| மணம் - வாசனை | மனம் - உள்ளம் |
| வண்மை - ஈகை | வன்மை - உறுதி |
| வண்ணம் - நிறம் | வன்னம் - அழகு |
| அண்ணம் - மேல்வாய் | அன்னம் - சோறு, அன்னப் பறவை |

இ) ர - றகரச் சொற்கள் வேறுபாடு:

| | |
|---|---|
| அரம் - ஒரு கருவி | அறம் - தருமம் |
| அரி - வெட்டு | அறி - அறிந்துகொள் |
| எரி - நெருப்பு | எறி - வீசு |
| உரி - தயிர்ப்பானை வைக்கும் உரி | உறி - (தோலை ) நீக்கு |
| கரி - அடுப்புக் கரி | கறி - உண்பொருள் |
| பரி - குதிரை | பறி - காயைப் பறி |
| ஆர - நிறைய | ஆற - தணிய |
| ஊர - நகர | ஊற - சுரக்க |
| இரை - தீனி | இறை - கடவுள் |
| உரை - சொல் | உறை - மூடி |
| கரை - ஆற்றின்கரை | கறை - ஆடையில் படியும் கறை |
| உரவு - வலிமை | உறவு - சுற்றம் |

இவைபோன்று பொருள்வேறுபாடு உணர்த்தியும் வேறுபாடு உணரும்முறையில் சொற்றொடர் அமைத்துக் காட்டிச் சொற்களஞ்சியம் பெருக்கலாம்.

**ஒரே பொருள்தரும் பல சொற்களைக் கூறச் செய்தல்**

**'வயல்'** - என்ற ஒரே பொருள்தரும் சொற்கள் கழனி, பழனம், செய் எனவும், அன்பு - பாசம், நேசம், காதல் எனவும், நிலா என்பதைக் குறிக்க திங்கள், சந்திரன், மதி எனவும் பல எடுத்துக்காட்டுகள் தரலாம்.

ஒரு பொருள் தரும் பல சொற்களை எடுத்துக்காட்டுவதன்வழி, சொற்களஞ்சியம் பெருக்கலாம். அவை கீழ்வருமாறு:

| சொற்கள் | | பொருள் |
|---|---|---|
| சூரியன், ஆதவன், ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன், தினகரன் | - | சூரியன் |
| பழனம், கழனி, செய் | - | வயல் |
| களிறு, கரி, வேழம் | - | யானை |
| திங்கள், மதி, அம்புலி, சந்திரன் | - | நிலவு |
| மாசு, குற்றம், பிழை | - | தவறு |
| பதம், கிளவி, மொழி, வார்த்தை | - | சொல் |
| குழந்தை, மகவு, குழவி, சேய் | - | குழந்தை |
| யாப்பு, கவிதை, பா | - | செய்யுள் |
| தத்தை, சுகம், கிள்ளை | - | கிளி |
| கமலம், பங்கயம், அம்போருகம், அரவிந்தம், பதுமம், கஞ்சம், முண்டகம் | - | தாமரை |
| அனல், நெருப்பு, கனல் | - | தீ |
| நங்கை, வனிதை, மங்கை | - | பெண் |
| முந்நீர், ஆழி, பரவை | - | கடல் |
| தடாகம், பொய்கை, சுவை, ஏரி, குளம், கேணி, கிணறு, ஊருணி | - | நீர்நிலை |
| வையம், பார், பூமி, புவி, ஞாலம், நானிலம் | - | உலகம் |
| பூ, அலர், வீ | - | மலர் |

இவைபோல் பிறவும் காட்டுக.

பலபொருள்தரும் இருசொற்களை எழுதி, அவற்றின்பொருள் விளங்கத் தனித்தனி வாக்கியங்கள் அமைக்க.

**பலபொருள் தரும் ஒருசொற் கூறுதல்**

மா - என்ற சொல்லுக்கு மாமரம், மாம்பழம், குதிரை, பெருமை (பெரிய) மாவு எனப் பலபொருள் இருப்பதைக் கூறலாம்.

பலபொருள் தரும் ஒருசொற் பட்டியல்:

| | | |
|---|---|---|
| திரு | - | தெய்வம், இலக்குமி, செல்வம், மரியாதை அடை. |
| கா | - | காப்பாற்று, சோலை, காகம் |
| ஐ | - | வியப்பு, தலைவன், மகிழ்ச்சிக்குறி |
| திங்கள் | - | கிழமையின் பெயர், மாதம், சந்திரன் |
| மா | - | குதிரை, மாமரம், மாம்பழம், பெருமை, மாவு |
| ஒளி | - | விளக்கு, புகழ், பெருமை, அழகு, சூரியன், சந்திரன், விண்மீன் |

| | | |
|---|---|---|
| இசை | - | ஒலி, புகழ், சொல், சங்கீதம், இராகம் |
| எல் | - | சூரியன், ஒளி, வெயில், பகல், இரவு, பெருமை |
| ஆர் | - | அழகு, கூர்மை, நிறைந்த, பூமி |
| அணி | - | அழகு, நகை, வரிசை, அணியிலக்கணம், வேடம் |
| கோ | - | அரசன், தலைவன், தந்தை, பூமி, மலை, நீர் |

இன்ன பிறவும் கொள்க.

**தொகைநிலைத் தொடர்களைப் பிரித்துக் கூறச் செய்தல்**

செந்தமிழ், வெண்டாமரை, சுடுசோறு முதலான தொகைநிலைத் தொடர்களை முறையே செம்மை+தமிழ்; வெண்மை + தாமரை; சுட்டசோறு, சுடுகின்ற சோறு, சுடுஞ்சோறு எனப் பிரித்துக் கூறவும் எழுதவும் செய்யலாம்.

**தொகைச்சொற்களை விரித்துக் காணுதல்**

'முத்தமிழ்' என்ற தொகைச் சொல்லை விரித்துக் காணும்பொழுது இயல், இசை, நாடகம் எனவும், 'முக்கனி' என்பதை மா, பலா, வாழை எனவும், 'நானிலம்' என்பதைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனவும் விரித்துக் கூறவும் எழுதவும் செய்யலாம்.

எடுத்துக்காட்டாக,

| **தொகை** | | **விரி** |
|---|---|---|
| இருவினை | - | நல்வினை, தீவினை |
| இரட்டைக் காப்பியம் | - | சிலப்பதிகாரம், மணிமேகலை |
| இருதிணை | - | உயர்திணை,அஃறிணை/அகத்திணை, புறத்திணை |
| ஈரெச்சம் | - | பெயரெச்சம், வினையெச்சம் |
| முக்கனி | - | மா, பலா, வாழை |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| மூவேந்தர் | - | சேரர், சோழர், பாண்டியர் |
| நான்மறை | - | ரிக், யஜுர், சாமம், அதர்வணம் |
| நானிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| நாற்குணம் | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| நாற்படை | - | தேர், யானை, குதிரை, காலாட் படைகள் |
| நாற்றிசை | - | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| நாற்பால் | - | அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் |
| ஐந்திலக்கணம் | - | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| ஐம்பால் | - | ஆண், பெண், பலர், ஒன்றன், பலவின்பால் |
| ஐம்புலன்கள் | - | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ஐம்பொறி | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| அறுசுவை | - | இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு |
| அறுசமயம் | - | காணாபத்யம், கௌமாரம், சைவம், வைணவம், சௌரம், சாக்தம் |
| ஏழிசை | - | குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் |
| எட்டுத்தொகை | - | நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு |
| எண்குணங்கள் | - | தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே |

| | | |
|---|---|---|
| | | பாசங்கள் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாஆற்றல் உடைமை, வரம்பிலின்பமுடைமை |
| நவதானியங்கள் | - | நெல், எள்ளு, கொள்ளு, பயறு, அவரை, துவரை, கடலை, மொச்சை, உழுந்து |
| நவரத்தினங்கள் | - | கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் |
| பத்துப்பாட்டு | - | திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் |
| பதினாறுபேறு | - | புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பொறுமை, இளமை, துணிவு, நோயின்மை, நீளாயுள் |

இவைபோல்வரும் பிற தொகைச் சொற்களை விரித்துரைத்துச் சொற்களஞ்சியம் பெருகச் செய்க.

### குறிலுக்கு நெடில் கூறுதல்

படம் - பாடம்; தடி - தாடி; கொடு - கோடு; பல் - பால்; குடி - கூடி; விடு - வீடு; கல் - கால் இவ்வாறு கூறச் செய்யலாம்.

### ஒரு சொல்லிலுள்ள ஓரெழுத்தை நீக்கி மற்றொரு எழுத்தைச் சேர்த்துப் புதுச்சொல் உருவாக்குதல்

கடல் - இச்சொல்லிலுள்ள, ‘க’ என்பதை நீக்கி உடல், குடல் எனவும், ஆடல், பாடல் எனவும், ஆடு - என்னும் சொல்லில், ‘டு’ என்பதை நீக்கி ஆறு, ஆண், ஆலை, ஆடை, ஆசை எனவும் கூறச் செய்யலாம்.

### ஒரு சொல்லில் உள்ள எழுத்துகளைக்கொண்டு புதிய சொற்களை உருவாக்கச் செய்தல்

ஒரு சொல்லிலுள்ள எழுத்துகளைக்கொண்டு புதிய சொற்கள் படைக்கச் செய்வதன் வாயிலாகச் சொற்களஞ்சியம் பெருக்கலாம். சான்றாக:

‘குதிரை’ - என்ற சொல்லிலிருந்து, குதி, குரை, திரை எனப் பல சொற்களையும், ‘புதையல்’ என்ற சொல்லிலிருந்து, புதை, புயல், புல், தையல் எனப் பல சொற்களையும் உருவாக்கிச் சொற்களஞ்சியம் பெருக்கலாம்.

| | | |
|---|---|---|
| மதுரை | - | மது, துரை, மரை |
| பணிமனை | - | பணி, மனை, பனை, மணி |
| குதிரைமலை | - | குதி, குரை, திரை, மலை, குலை |
| செங்கல்பட்டு | - | செங்கல், பட்டு, செல், கல், பல் |
| குருவிகுளம் | - | குரு, குருவி, குளம், விளம் |
| புதுவயல் | - | புது, துவயல், வயல், புயல், புல் |
| கழுகுமலை | - | கழுகு, மலை, கலை, குலை, கமலை |
| பூங்காவனம் | - | பூ, கா, வனம், கானம், பூங்கா |
| திருநெல்வேலி | - | திரு, நெல், வேலி, தில்லி |

இவைபோல் பிறவும் கொள்க.

திருவிளையாடல், விளையாட்டு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இன்னபிற சொற்களில் புதைந்துள்ள சொற்களை வெளிக்கொணர்க. சொல்லுக்குள்ளே சொல்லிருப்பதை வெளிப்படுத்துவதன்வாயிலாக அறிந்த சொற்களஞ்சியம் வெளிப்படும்.

**மோனைச் சொற்களைக் கூறச் செய்தல்**

"**கு**றும்புக்குப்பன் **கு**ரங்கைக் **கு**ச்சியால் **கு**த்தினான்"
"**உ**ள்ளதை **உ**ள்ளவாறு **உ**ரைப்பவன் **உ**லகோரால்
**உ**யர்த்தி **உ**ரைக்கப்படு வான்"

இவ்வாறு மோனைத் தொடர்களை அமைத்துக் கூறச் செய்வதால் சொற்களஞ்சியம் பெருகும்.

**எதுகைச் சொற்கள் அமைத்துக் கூறச் செய்தல்**

"எங்கள் தங்கை மங்கம்மாள் தங்கக் குணம் உள்ளவள்"

"குள்ளன் கள்ளனைப் பள்ளத்தில் தள்ளினான்"

இவ்வாறு எதுகைச் சொற்களை அமைத்துக் கூறலாம்.

**பறவைகளின், விலங்குகளின் ஒலி மரபுச் சொற்களைக் கூறச் செய்தல்**

**கீழுள்ளவாறு மரபுகளை எடுத்துக்காட்டுவதன் வாயிலாகச் சொற்களஞ்சியம் பெருக்கலாம்**

| **பறவைகள்** | **விலங்குகள்** |
|---|---|
| ஆந்தை அலறும் | எருது எக்காளமிடும் |
| காகம் கரையும் | கழுதை கத்தும் |
| கிளி பேசும்/கொஞ்சும் | குதிரை கனைக்கும் |
| குயில் கூவும்/பாடும் | சிங்கம் முழங்கும் |
| கூகை குழறும் | நரி ஊளையிடும் |
| கோழி கொக்கரிக்கும் | நாய் குரைக்கும். |
| மயில் அகவும் | பாம்பு சீறும் |
| வண்டு முரலும் | புலி உறுமும் |
| | யானை பிளிறும் |

இவ்வாறு ஒலிமரபுகளைக் கூறச் செய்யலாம்.

**செயல்/வினை மரபுச் சொற்களைக் கூறச் செய்தல்**

| | | |
|---|---|---|
| உணவு **உண்டான்.** | முறுக்குத் **தின்றான்.** | தண்ணீர் **குடித்தான்.** |
| பால் **பருகினான்.** | தேநீர் **அருந்தினான்.** | ஓவியம் **வரைந்தான்.** |
| வண்ணம் **தீட்டினான்.** | செய்யுள் **இயற்றினார்.** | பாடல் **பாடினாள்.** |
| குடம் **வனைந்தான்.** | கூடை **முடைந்தார்.** | கூரை **வேய்ந்தார்.** |
| பாய் **பின்னினார்.** | சுவர் **எழுப்பினார்.** | ஆடை **நெய்தார்.** |
| வயல் **உழுதார்.** | குளம் **தொட்டார்.** | கிணறு **வெட்டினார்.** |
| போர்வை **போர்த்தினேன்.** | மாத்திரை **விழுங்கினேன்.** | ஆடை **அணிந்தேன்.** |
| வேட்டி **கட்டினேன்.** | | |

## பொது மரபு

| | | |
|---|---|---|
| மேகம் **திரண்டது.** | இடி **இடித்தது.** | மின்னல் **மின்னியது.** |
| காற்று **வீசியது.** | மழை **பெய்தது.** | பனி **கொட்டியது.** |

இவ்வாறு மரபுகளை (சொற்கள், தொடர்கள்) அறிமுகஞ் செய்து சொற்களஞ்சியம் பெருக்குக.

**மரபுத் தொடர்களைக் கூறச் செய்தல்**

சொற்பொருள் காணும்போது ஒரு பொருளாகவும் தொடர்ப்பொருளாகக் காணும்பொழுது மற்றொரு பொருளும் தருவதை மரபுத்தொடர் என்கிறோம். 'கரி பூசுதல்' - இத்தொடரில் உள்ள 'கரி' 'பூசுதல்' இரு சொற்களையும் தனித்தனியாகப் பொருள் காணும்பொழுது, 'அடுப்புக் கரி', 'பூசுதல்' என்ற பொருள்களையும் கரி பூசுதல் என்று தொடர்ப்பொருளாகக் காணும்பொழுது 'அவமானப்படுத்துதல்' என்ற பொருளையும் தருகிறது. ஆதலின், இது மரபுத்தொடர் என்று வழங்கப்படுகிறது. இதைப்போன்றே,

| | | |
|---|---|---|
| மூக்கரிந்தான், | வயிற்றிலடிக்காதே, | வாய் நீளம், |
| கை நீளம், | நாக்கு நீளம், | கண்ணேறுபடுதல், |
| முதுகில் குத்தினான். | தலைசிறந்த வள்ளல் | ஆபத்தில் கைகொடு. |

இன்னபிற மரபுத் தொடர்களைக் கூறச் செய்யலாம்.

**ஒரு வேர்ச்சொல்லிலிருந்து பல சொற்கள் உருவாவதைக் கூறுதல்**

கால் என்ற வேர்ச்சொல்லிலிருந்து, காற்று, காற்றாடி, காற்றாலை உருவாகின்றன.

சூரியன், சூரன், சூறாவளி, சுறாமீன் முதலான பல சொற்கள் 'சூர்' - என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறக்கின்றன. இவ்வாறு பிற சொற்களைக் கூறலாம்.

**வினையடியிலிருந்து உருவாகும் அதன் மற்றைய வினை வடிவங்களை அறியச் செய்தல்**

| | | | | |
|---|---|---|---|---|
| கல் - | கற்றான் - | கற்றபெண் - | கற்றுமகிழ் - | கற்றல் |
| (வினையடி) | (வினைமுற்று) | (பெயரெச்சம்) | (வினையெச்சம்) | (தொழிற் பெயர்) |

இவ்வாறு கூறவும் எழுதவும் செய்யலாம்.

**இணைச்சொற்களை அறிந்து கூறுதல்**

நம்மொழியிலுள்ள நேரிணை, எதிரிணை, செறியிணைச் சொற்களை அறிந்து கூறச் செய்யலாம். பின்வருமாறு இணைமொழிகளை எடுத்துக்காட்டிச் சொற்களஞ்சியம் பெருக்கலாம்.

| **செறியிணைமொழிகள்** | **நேரிணை மொழிகள்** | **எதிரிணை மொழிகள்** |
|---|---|---|
| பச்சைப்பசேல் | கண்ணுங் கருத்தும் | வெற்றிதோல்வி |
| வெள்ளைவெளேர் | ஈடும் எடுப்பும் | இரவுபகல் |
| கன்னங்கரேல் | இட்டும்தொட்டும் | அங்குமிங்கும் |
| மஞ்சமசேல் | எட்டியும் சுட்டியும் | நாளுங்கோளும் |
| சின்னஞ்சிறிய | ஈடும் எடுப்பும் | அறமும் மறமும் |
| பென்னம்பெரிய | அடித்துப்பிடித்து | அன்றும் இன்றும் |
| பெத்தப் பெரிய | அடுப்பும் துடுப்பும் | இசையும் வசையும் |
| அடுக்கடுக்காக | ஒப்பாரும் மிக்காரும் | இன்பமும் துன்பமும் |
| பத்திபத்தியாக | ஆலும்வேலும் | இணக்கமும் பிணக்கமும் |
| செக்கச் செவேல் | ஆடியும் ஓடியும் | காய்தலும் உவத்தலும் |
| வழிவழியாக | வாடிவதங்கி | ஒட்டியும் வெட்டியும் |

விண்ணும் மண்ணும்
உயர்வும் தாழ்வும்
ஏற்றத்தாழ்வு
கீரியும் பாம்பும்

இவைபோல்வன பிறவும் கொள்க.

**பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை அறியச் செய்தல்**

நம் மொழியின் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பிறமொழிச் சொற்கள் பல கலந்து வருகின்றன. அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அறியச் செய்வதும் சொற்களஞ்சியம் பெருக்கும் சிறந்த முறையாகும். சான்றாக,

| **பிறமொழிச் சொற்கள்** | | **தமிழ்ச் சொற்கள்** |
|---|---|---|
| அபிஷேகம் | ... | திருமுழுக்கு |
| ஆஸ்தி | ... | சொத்து |
| உத்தியோகம் | ... | அலுவல் |
| உத்தியோகஸ்தர் | ... | அலுவலர் |
| ஆசீர்வாதம் | ... | வாழ்த்து |
| கோஷ்டி | ... | கூட்டம் |
| குமாஸ்தா | ... | எழுத்தர் |
| பஜார் | ... | கடைத்தெரு |
| ஜனங்கள் | ... | மக்கள் |
| ஜில்லா | ... | மாவட்டம் |
| கஜானா | ... | கருவூலம் |
| சர்க்கார் | ... | அரசு |
| அமுல் | ... | நடைமுறை |
| பைசல் செய்தல் | ... | தீர்த்துவைத்தல் |
| பந்துமித்திரர் | ... | சுற்றமும் நட்பும் |
| மாமூல் | ... | வழக்கம் |
| நாஷ்டா | ... | காலை உணவு |
| ரத்து | ... | நீக்கம் |
| நமஸ்காரம் | ... | வணக்கம் |
| சம்பிரதாயம் | ... | மரபு |
| சங்கீத உபந்நியாசம் | ... | இசைப்பேருரை |
| பஜனை | ... | கூட்டுவழிபாடு |
| கும்பாபிஷேகம் | ... | குடமுழுக்கு |
| சந்தோஷம் | ... | மகிழ்ச்சி |
| சரித்திரம் | ... | வரலாறு |
| நிம்மதி | ... | நிறைவு |
| சுத்தம் | ... | தூய்மை |
| கஷ்டம் | ... | துன்பம் |
| பேப்பர் | ... | தாள் |
| இஷ்டம் | ... | விருப்பம் |
| நஷ்டம் | ... | இழப்பு |
| கர்ப்பஸ்திரீ | ... | கருவுற்றபெண் |
| சம்பாசனை | ... | உரையாடல் |

| | | |
|---|---|---|
| ஜன்னல் | ... | சாளரம் |
| கர்ப்பக்கிரகம் | ... | கருவறை |
| தாலுகா ஆபீஸ் | ... | வட்டாட்சியர் அலுவலகம் |
| டிபன் | ... | சிற்றுண்டி |
| ஸ்நாக்ஸ் | ... | நொறுக்குத்தீனி |
| விவசாயம் | ... | வேளாண்மை |
| ஆஸ்பத்திரி | ... | மருத்துவமனை |
| டாக்டர் | ... | மருத்துவர் |
| விபூதி | ... | திருநீறு |
| விஷயம் | ... | செய்தி |
| டெலிபோன் | ... | தொலைபேசி |
| செல்போன் | ... | செல்பேசி (சென்றுகொண்டேபேசுவது)/ கைப்பேசி |
| அசல் | ... | முதல் |
| சேவை | ... | தொண்டு |
| ஜாக்கிரதை | ... | விழிப்புணர்வு |
| பேட்டி | ... | நேர்காணல் |
| அனுபவம் | ... | பட்டறிவு |
| நிபுணர் | ... | வல்லுநர் |
| அட்மிஷன் | ... | சேர்க்கை |

இன்னவாறு, பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களைக் கூறுவதன் வாயிலாகச் சொற்களஞ்சியம் பெருக்கலாம்.

### துறைதோறும் வழங்கும் கலைச்சொற்களை அறியச் செய்தல்

அறிவியல், வேதியியல், இயற்பியல், தாவரவியல், உயிரித் தாவரவியல், தகவல் தொழில் நுட்பவியல், கணிப்பொறி அறிவியல், வணிகவியல் இவ்வாறு பல்துறைக் கலைச்சொற்களை மாணாக்கர் அறியச் செய்வதன்மூலம் சொற்களஞ்சியத்தைப் பெருக்கலாம்.

### கொச்சைச் சொற்களைத் திருத்துதல்

கொச்சையான சொற்களின் திருந்திய வடிவத்தைக் கூறுவதன்வாயிலாகச் சொற்களஞ்சியம் பெருக்கலாம்; சான்றாகச் சில:

| **கொச்சைச் சொற்கள்** | | **திருந்திய வடிவம்** |
|---|---|---|
| அவுக | ... | அவர்கள் |
| அண்ணாக்கவுறு | ... | அரைஞாண் கயிறு |
| அம்புட்டும் | .,. | அவ்வளவும் |
| அடமழை | ... | அடைமழை |
| தாவாரம் | ... | தாழ்வாரம் |
| முழுங்கு | ... | விழுங்கு |
| அவைகள் | ... | அவை |
| அதுகள் | ... | அவை |
| எடஞ்சல் | ... | இடைஞ்சல் |
| தலகாணி | ... | தலையணை |
| நஞ்சை | ... | நன்செய் |
| புஞ்சை | ... | புன்செய் |

| | | |
|---|---|---|
| தடுமாட்டம் | ... | தடுமாற்றம் |
| காத்தால | ... | காலையில் |
| உசிரு | ... | உயிர் |
| சீவக்கா | ... | சிகைக்காய் |
| குடக்கூலி | ... | குடிக்கூலி |
| வவுறு | ... | வயிறு |
| சுவத்தில் | ... | சுவரில் |
| பாவக்கா | ... | பாகற்காய் |
| அப்பசி | ... | ஐப்பசி |
| மருவாதை | ... | மரியாதை |
| ஒருவள் | ... | ஒருத்தி |

இன்னவாறு பிறவற்றையும் எடுத்துக்காட்டுக.

## 7. சொற்பயிற்சிகள்

பள்ளி மாணவர்களின் அறிந்த சொற்களஞ்சியம் பயன்படுத்தும் சொற்களஞ்சியத்தை விட அதிகமாக இருக்கும். எல்லாருக்கும் இப்படித்தான் இருக்கும் என்றாலும் யாருக்கு இந்த இரு சொற்களஞ்சியங்களுக்கும் இடையே உள்ள இடைவெளி/வேறுபாடு குறைவாக உள்ளதோ அவர்கள் மொழியாளுமை பெற்றவர்களாக இருப்பார்கள். எனவே, மாணவர்கள் அறிந்த சொற்களஞ்சியத்தைக் கூட்டுவதோடு அதைப் பயன்படுத்தும் சொற்களஞ்சியமாக மாற்றவேண்டும். இதற்குச் சொற்பயிற்சிகள் மிகவும் தேவை.

சொல் என்பது எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது. எனவே, சொல்லைக் கற்பிக்க அதன் அமைப்பையும் பொருளையும் கற்பிக்கவேண்டும். அத்துடன் சொல்லைப் பயன்படுத்தவும் கற்றுத் தரவேண்டும். மொழியைப் பயன்படுத்தவும் கற்றுத் தரவேண்டும். மொழியைப் பயன்படுத்தும்போது நினைத்தவுடன் சொற்கள் மனக்கண்முன் வந்து நிற்கவேண்டும். இதற்குச் சொற்பயிற்சிகள் பெருந்துணை புரியும். சொற்பயிற்சிகளை எட்டு வகையாகப் பிரிக்கலாம்.

### 1)கோடிட்ட இடத்தை நிரப்பிச் சொல் உருவாக்குதல்.

இந்தப் பயிற்சியைப் பல விதங்களில் அமைக்கலாம். ஒருசில வருமாறு:

அ) ஒரு சொல்லில் ஓரிரு எழுத்துகளை நீக்கிவிட்டு நிரப்பச் சொல்லலாம்.

சா - ப - (விடை: சாம்பல்)

ஆ) இதே பயிற்சியைக் குறிப்புடன் கொடுக்கலாம்.

- ள் - ல் (கொடையாளி) (விடை: வள்ளல்)

இ) ஓர் எழுத்தால் நிரப்பச் செய்யலாம்.

- ல - ம் (விடை: கலகம்)

ஈ) ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகளில் வரும் சொற்களை மூன்று எழுதச் செய்யலாம்.

| | |
|---|---|
| ப - - | பதவி, பகல், பட்டு, பதுமை |
| - க - | தகடு --- --- --- |
| - - தி | விடுதி --- --- --- |

**2) சொல்லிருந்து சொல் உருவாக்குதல்**

கொடுக்கப்பட்ட சொல்லில் ஓர் எழுத்தைச் சேர்த்தோ நீக்கியோ இரண்டும் சேர்த்தோ புதிய சொல் உருவாக்கலாம்.

அ) சேர்த்தல்

| | | |
|---|---|---|
| மகள் | - | மக்கள் |
| படம் | - | பட்டம் |

ஆ) நீக்கல்

| | | |
|---|---|---|
| வளையல் | - | வயல் |
| உணர்வு | - | உணவு |

இ) நீக்கிச் சேர்த்தல்

| | | |
|---|---|---|
| செலவு | - | செவுள் |
| தண்டு | - | உதடு |

**3) சொற்களிலிருந்து சொல் உருவாக்குதல்**

சில சொற்களைக் கொடுத்து ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் எழுத்தை எடுத்துச் சொல்லுருவாக்கச் செய்தல்.

குடும்பம்
திருமணம் விடை: பணம், குணம், அருகு
அம்பு

**4) சொற்களைப் பிரித்தல்**

ஒரு சொல்லின் கடைசி ஓரிரு எழுத்துகள் மற்றொரு சொல்லின் தொடக்க எழுத்துகளாக வருமாறு பிரிக்கச் செய்யலாம்.

தங்கம்பளிங்குடும்பம்பரம்பம்

விடை:

தங்கம்
கம்பளி
பளிங்கு
குடும்பம்
பம்பரம்

**5) வேறுபட்ட சொல்லைக் கண்டுபிடித்தல்**

நான்கு சொற்களைக் கொடுத்து அவற்றுள் பொருள், இலக்கணம், எழுத்துகள் என ஏதோ ஒரு வகையில் வேறுபட்ட ஒரே சொல்லைக் கண்டுபிடிக்கச் செய்யலாம்.

தவளை - மீன் - ஆமை - முதலை (விடை: மீன். இது நீரில் மட்டுமே வாழும்)

**6) சொல்லுக்குள் சொல்**

ஒரு சொல்லுக்குள் இயல்பாய் அமைந்திருக்கின்ற மற்றொரு சொல்லைக் கண்டுபிடிப்பது இப்பயிற்சி.

அ) இடையூறு (உறுப்பு) (விடை: இடை)

ஆ) வெங்காயம் (விடை: காயம், புண்)

**7) சொற்கள் அமைத்தல்**

கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகள், சொற்கள்கொண்டு பல வகைகளில் புதிய சொற்கள் அமைத்தல்.

அ) எழுத்துகளைக் கொண்டு சொற்கள் உருவாக்குதல்

தை    வி    கடு

(விடை: தை, கதை, விதை, விடு, கவி, கவிதை, விடுகதை)

ஆ) ஓர் எழுத்தையும் சொல்லையும்கொண்டு சொற்கள் உருவாக்குதல்

1) விடு    விடை    தவிடு
- வறு    தவறு
வலை    தவலை
2) வில்    விடை : தவில், விரல், வில்லை

**8) சொல்லைக் கண்டுபிடித்தல்**

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு சொல்லைக் கண்டுபிடித்தல்.

அ) பூக்கள் சேர்ந்த ஆரம்    விடை: மாலை

பொழுது சாயும் நேரம்

ஆ) உலகில் உயிர்க்காற்றுக் குறையாமல் இருக்க நாம் பெற்ற வரம். விடை: தாவரம்

## 8. சொல் விளையாட்டுகள்

மொழிப் பயிற்சிக்கும் மொழி விளையாட்டுக்கும் பெரிதும் வேறுபாடு இல்லை. மொழி விளையாட்டும் மொழிப் பயிற்சியே. மொழிப்பயிற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்போது அலுப்பை ஏற்படுத்தக்கூடும். ஆனால், மொழி விளையாட்டு ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு தொடர்ந்து மேற்கொள்ள உற்சாகம் தரும். இதனால் மாணவர்கள் மொழித்திறன்பெற மொழி விளையாட்டுகள் மிகவும் பயன்படும். பெரும்பாலான மொழிப் பயிற்சிகளை மொழி விளையாட்டுகளாக மாற்ற முடியும். மாணவர்களுக்கிடையே போட்டி மனப்பான்மை ஏற்படுத்தும்வண்ணம் வகுப்பு மாணவர்களைத் தனித்தனியாகவோ குழுக்களாகவோ கொண்டு விளையாட்டை மேற்கொள்ளச் செய்யலாம். எடுத்துக்காட்டாக எழுத்துகளைக்கொண்டு சொற்கள் அமைக்கும் சொற்பயிற்சியை எவ்வாறு சொல் விளையாட்டாக மாற்றலாம் எனக் காண்போம்.

சில எழுத்துகளைக் கரும்பலகையில் எழுதி யார் முதலில் இந்த எழுத்துகளால் அமையும் எல்லாச்சொற்களையும் கண்டுபிடிக்கிறார்கள் எனப் பார்க்கலாம். மாணவர் ஒவ்வொருவரும் அவர்கள் ஏட்டில் சொற்களை எழுதுவர். யார் முதலில் சரியான எண்ணிக்கையைச் சொல்கிறார் களோ அந்த மாணவரைச் சொற்களை வாசிக்கச் சொல்லவேண்டும். அம்மாணவர் அமைத்த சொற்கள் சரியாக இருந்தால் அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கலாம். இல்லாவிட்டால், அடுத்த மாணவரை வாசிக்கச் செய்யலாம். யார் சரியான சொற்களை அதிகமாக அமைத்தார்களோ அவர் வெற்றிபெற்றவர். இதையே நான்கைந்து பேர்கொண்ட குழுக்களாகப் பிரித்துக்கொண்டும் விளையாடலாம். எழுத்துகளைக் கரும்பலகையில் எழுதுவதற்குப் பதிலாகத் துண்டுத் தாள்களில் எழுதி ஒவ்வொரு குழுவுக்கும் கொடுக்கலாம். ஏதாவது ஒரு குழு முதலில் முடித்ததும் மற்றக் குழுக்களையும் சொல் அமைப்பதை நிறுத்தச் செய்து, எக்குழு அதிகமான சொற்களை உருவாக்கியுள்ளது எனப் பார்த்து அக்குழுவை வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| ப | த | வி |
| த | க | டு |
| வி | டு | தி |

இதுபோன்று சொற்கட்டங்கள் இரண்டை உருவாக்குக.

மேலும் சில மொழி விளையாட்டுகள் இங்கே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இவைபோன்று ஆசிரியர் விளையாட்டுகளை உருவாக்கியும் நூல்களில் படித்தும் பயன்படுத்த வேண்டும்.

1. மாணவர்களை வட்டமாக நிறுத்திக்கொண்டு ஆசிரியர் அவர்களைக் குறிப்பிட்ட வகைச் சொற்களை ஒவ்வொருவராக விரைவாகச் சொல்லச் செய்யவேண்டும். தவறாகச் சொல்பவர், மெதுவாகச் சொல்பவர், சொன்னதையே சொல்பவர் ஆகியோரை உட்காரச் சொல்லிவிடலாம். இறுதிவரை நிற்பவர் வெற்றி பெற்றவர். ஆசிரியர் வகைமையைச் சிறிதுநேர இடைவெளியில் மாற்றிக்கொண்டே இருக்கவேண்டும். பொருள் அடிப்படையில் மரம், செடி, கொடி, காய், கனி, பறவை, விலங்கு, மாதம் எனச்சொல் அடிப்படைத் தொடங்கும் எழுத்தைக்கொண்டோ ஆசிரியர் சொல் வகையை மாற்றலாம்.

2. வகுப்பை இரு குழுவாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். ஆசிரியர் ஒரு சொல்லை எழுதி (படம்) அதிலுள்ள ஏதாவது ஓர் எழுத்தை மாற்றிப் புதிய சொல்லை முதற் குழுவிலிருந்து ஒருவர் வந்து எழுதவேண்டும் (மடம்). அடுத்து இரண்டாங் குழுவிலிருந்து ஒருவர் வந்து அதிலிருந்து வேறொரு சொல் உருவாக்கவேண்டும் (மணம்). இவ்வாறு தொடர்ந்து செய்யும்பொழுது இயலாத குழுவுக்கும் தவறாக எழுதிய குழுவுக்கும் முன்பு வந்த சொல்லையே எழுதிய குழுவுக்கும் எதிர் மதிப்பெண் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட நேரம் முடிந்ததும் குறைவான மதிப்பெண் பெற்ற குழு வெற்றிபெற்றதாகக் கூறவேண்டும்.

3. வகுப்பு மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான எழுத்துகளையோ சொற்களையோ கொடுத்து எக்குழு சரியாக முதலில் ஆசிரியர் சொன்னபடி செய்து முடிக்கிறது என்று பார்த்துப் பாராட்டவேண்டும்.

அ) சொற்களைப் பொருளடிப்படையில் இணை சேர்த்தல்.

ஆ) சொற்களைப் பொருளடிப்படையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வகை பிரித்தல்.

இ) சொற்களை கம்பம் - பம்பரம் - பரம்பரை என்பது போன்று வரிசைப்படுத்துதல்.

ஈ) எழுத்துகளைக்கொண்டு குறிப்பிட்ட எண்ணிக்கையில் மீதி இல்லாமல் சொற்கள் அமைத்தல்.

உ) எழுத்துகளைக்கொண்டு ஒரு வாக்கியம் அமைத்தல்.

## புதிர்கள்

### 1) சொற்புதிர்கள்

1. முதலெழுத்தை நீக்க மறைக்கும்.
2. இடையெழுத்தை நீக்கக் குரைக்கும். குதிரை
3. கடையெழுத்தை நீக்கக் குதிக்கும்.

**2) கட்டப் புதிர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | க | ண் | |
| | | ல் | | |
| | | | | |

ஏதாவது ஓர் எழுத்தைக் கட்டத்தில் எழுதி, அவ்வெழுத்திற்கு வலப்பக்கமோ இடப் பக்கமோகீழோ மேலோஏதாவது ஓர் எழுத்தைச் சேர்த்துச் சொல் உருவாக்கஞ் செய்க. சொல்லைப் படிக்கும்போது, இடப்பக்கமிருந்து வலப்பக்கம், மேலிருந்து கீழாகப் படிக்குமாறு செய்க.

ஆசிரிய மாணாக்கர் இவைபோன்ற பல பயிற்சிகளை உருவாக்கித் தொடக்கநிலை மாணாக்கரின் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்வேண்டும்.

## தொகுப்புரை

'சொற்களஞ்சியம் பெருக்குதல்' என்னும் இவ்வியலைக் கற்றுக்கொண்டதால், சொல்லமைப்பு, பொருள், பயன்பாடு ஆகியவைபற்றி அறிந்தோம். சொற்களஞ்சியம் என்பதன் விளக்கத்தையும் அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்துஞ் சொற்களஞ்சியம் என்ற அதன் பாகுபாட்டையும் உணர்ந்துகொண்டோம். அடிப்படைத் திறன்கள்வழி சொற்களஞ்சியம் பெருக்கவும் பாடங்களைக் கற்பித்தல் வழி சொற்களஞ்சியம் பெருக்கவுமான முறைகளைத் தெளிந்தோம். மேலும், சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகள், பெருக்குவதற்குரிய பயிற்சிகள் பற்றியும் சொல்விளையாட்டுகள்வழி சொற்களஞ்சியம் பெருக்குதல் பற்றியதுமான அறிவினை வளர்த்துக் கொண்டோம்.

**அறிந்துகொள்க:**

மும்மலம் (ஆணவம், கன்மம், மாயை),

மூவோசை (எடுத்தல், படுத்தல், நலிதல்),

முச்சுடர் (ஞாயிறு, திங்கள், நெருப்பு),

ஐங்குரவர் (அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன்),

ஐம்பெருங்குற்றங்கள் (பொய், கொலை, களவு, கள், காமம்),

பஞ்சபுராணம் (தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்),

இவைபோன்ற தொகைச்சொற்களை அறிவோம்; சொற்களஞ்சியம் பெருக்குவோம்; அன்றாட வழக்கில் பயன்படுத்துவோம்.

# 3. உயர்நிலைத் திறன்கள்

## அறிமுகம்

மொழி மனிதனைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பிறந்த குழந்தை வளரும்போதே பெற்றோர்வழி மொழியைப் பழகுகிறது; அப்பொழுது கேட்டல், பேசுதல் செயல்பாடுகளில் ஈடுபடுகிறது. கல்வி கற்கத் தொடங்குவதுமுதல் எழுதுதல், படித்தல், செயல்பாடுகளில் ஈடுபடுகிறது. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களில் மாணவர்கள் வல்லமை பெற்றிருப்பின் மொழியை ஆற்றலுடன் பயன்படுத்தலாம்.

அடிப்படைத் திறன்கள் வாழ்க்கைச் சூழலில் முழுமையாகப் பயன்படுவனவாகும். இத்திறன்கள் பல்வேறு நிலைகளில் கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பெரிதும் உதவுகின்றன. ஒரு மொழியோடு மிகுந்த ஈடுபாட்டுடன் இணைந்து வாழ்வதற்கும் ஒருவர் தாம்பெற்ற மொழியின் பயனைப் பிறர் பெற வைப்பதற்கும் உதவும். மொழியாற்றலே உயர்நிலைத் திறன்கள் ஆகும். இவை அடிப்படை மொழித் திறன்களில் பெற்ற வல்லமையால் அவற்றை அடித்தளமாகக் கொண்டு எழுவனவாகும்.

மொழியில் உயர்நிலைத் திறன்களாகப் பலவற்றைப் பட்டியலிடலாம். இன்றைய இடைநிலைக் கல்விப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஐந்து உயர்நிலைத் திறன்களும், அவற்றை மாணவர்களிடையே வளர்க்கும் வழிமுறைகளும் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

## படிநிலைகள்

1. கடிதம் எழுதுதல்
2. கட்டுரை எழுதுதல்
3. பேச்சாற்றல்
4. படைப்பாற்றல்
 அ) கவிதை எழுதுதல்
 ஆ) சிறுகதை எழுதுதல்
5. கலந்துரையாடலை நெறிப்படுத்துதல்

## 1. கடிதம் எழுதுதல்

‘கடிதம்’ எழுதுதல் ஒரு சிறந்த கலை. நாம், நம் எண்ணங்களைப் பிறர்க்குத் தெரிவிக்க வேண்டிய சூழல் உண்டாகும்போது, அவர் நம்முன் இருப்பின் பேச்சுவழியாகத் தெரிவிப்போம். மாறாக, அவர் நம்முன் இல்லாமல் பிறிதோரிடத்தில் இருப்பின், அவருக்கு எழுத்து வழியாகத் தெரிவிப்போம். உறவினர், நண்பர் ஆகியோர் நலன் அறிதல், ஒருவரைப் பிறர்க்கு அறிமுகப் படுத்துதல், ஒருவர்க்கு உதவி செய்யப் பரிந்துரைத்தல், பிறர்தம் நன்மை கருதி வாழ்த்துரைத்தல், பணி வேண்டுதல், முறையீடு செய்தல் முதலிய பல்வேறு சூழ்நிலைகளில் நாம் கடிதங்களை எழுதுகின்றோம்.

ஆங்கிலம் முதலிய அயல்மொழிகளில் கடிதம் எழுதுதல் ஒரு தனிக்கலையாகவே வளர்ந்துள்ளது; சிறந்த இலக்கியத் தகுதியும் பெற்றுள்ளது. நேரு, தன்மகள் இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்களும், பேரறிஞர் அண்ணாதுரை எழுதிய கடிதங்களும், தமிழறிஞர் மு. வரதராசனார் எழுதிய கடிதமுறை நூல்களும், 'ஆலிவர் கோல்ட்ஸ்மித்' என்பார் சீனத் தத்துவ அறிஞர் நிலையிலிருந்து எழுதிய கடிதங்களும் இலக்கிய நிலையில் உயர்தகுதி உடையவை. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தம்மைப் புரந்த புரவலர்களுக்கு எழுதி அனுப்பிய 'சீட்டுக் கவிகள்' யாவும் பாடல் வடிவில் அமைந்த கடிதங்களே.

**கடிதம் எழுதும் நோக்கங்கள்**

1. தொலைவில் உள்ளவரிடம் தொடர்புகொள்ளல்.
2. வாய்மொழியால் சொல்ல இயலாதவற்றை அறிவித்தல்.
3. பயணச் செலவையும், காலம் வீணாவதையும் தவிர்த்தல்.
4. உறவை மேம்படுத்துதல்.
5. தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.
6. பாராட்டுகள் வழங்குதல்.
7. நன்றி தெரிவித்தல்.
8. உள்ளத்துணர்வை எழுத்துருவமாக்கல்.
9. கற்பனையாற்றல் வளர்த்தல்.
10. கோவையாக எழுதுந்திறன் வளர்த்தல்.

போன்ற பற்பல நோக்கங்கள் 'கடிதம்' எழுதுவதால் நிறைவேற்றப்படும்.

**கடித வகைகள்**

**கடிதங்களை இருவகைப்படுத்தலாம்:**

1. உறவுமுறைக் கடிதம்
2. அலுவலகக் கடிதம்

இவ்விருவகைக் கடிதங்களையும் வடிவநிலையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை: 1. முன் பகுதி, 2. உடற் பகுதி, 3. இறுதிப் பகுதி என்பன.

**உறவுமுறைக் கடிதம் எழுதும் படிநிலைகள்**

**1. அனுப்புநர் முகவரி**

இது கடிதத் தலைப்பகுதியின் வலப்பக்க மேல்முனையில் அமைவது. அனுப்புநர் பெயரைத் தவிர்த்து, முகவரியை மட்டும் எழுதவேண்டும்.

**2. விளி (அழைப்பு)**

இது கடிதத்தின் இடப்பக்கம் அமைவது. இதைக் கடிதம் எழுதுவோர்க்கும் பெறு வோர்க்கும் உள்ள உறவுக்கேற்ற சொற்களாக அமைக்கலாம்.

**3. கடிதச் செய்தி/கடிதப் பொருட் பகுதி**

இது விளித்தொடருக்குக்கீழ் அமைவது. இதன் அளவும் பொருளும் கடிதம் எழுதுவோரின் எண்ணத்தைப் பொருத்தமையும். இனிய, எளிய தெளிவான தொடர்களாக அமைப்பது நலமாக இருக்கும். கடிதத்தைப் பெறுவோரின் அறிவுத் தகுதிக்கேற்ற மொழிநடையைப் பின்பற்ற வேண்டும். நம் மொழிப்புலமையைக் காட்டும் களமாகக் கடிதம் அமைதல் கூடாது.

**4. வணங்கற் பகுதி**

இது கடிதச் செய்தியின்கீழ் வலப்பகுதியில் அமைவது. இதில் கடிதம் எழுதுவோர்க்கும் பெறுவோர்க்கும் உள்ள உறவுக்கேற்ற தொடர்கள் அமையும்.

**5. ஒப்பப் பகுதி**

இது வணங்கற் பகுதிக்குக்கீழ் அனுப்புநர் கையொப்பம் இடுவது ஆகும். தமிழைத் தாய்மொழியாக உடைய நாம் எவ்விடத்தும் நம் கையொப்பத்தைத் தமிழில் இடுவதே நமக்கேற்ற தகுதியாகும். இதைக் கவனத்திற்கொண்டு இளம்பருவமுதல் தமிழில் கையெழுத்திடுவதையே வழக்கமாகக் கொள்ளவேண்டும்.

**6. பெறுநர் முகவரி**

கடிதம் ஒற்றைத் தாளாக இருப்பின், கையொப்பப் பகுதியின் நேர் இடப்பக்கம் கீழ்ப் பகுதியில் இது அமைவது. பெறுநரின் பெயர் உள்ளிட்ட தெளிவான முகவரியை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முடியுமாறு எழுதவேண்டும்.

அஞ்சலட்டை, அஞ்சலுறைக் கடிதமாக இருப்பின் பின்புறத்தில் கடிதம் பெறுவோர் முகவரிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அவர் முகவரியை எழுதவேண்டும்.

## உறவுமுறைக் கடிதம்
**(மாதிரி)**

எண்: 55, வள்ளலார் தெரு,
வடலூர்,
கடலூர் மாவட்டம் - 607 303.
16.01.2009.

அன்புத் தோழி!

நலம், நலமறிய ஆவல். நாம் ஆசிரியக் கல்வி பயின்ற அந்த நாள் நினைவுகள் நம் நெஞ்சைவிட்டு என்றும் நீங்காதனவாய் நிலைத்துவிட்டன. 'ஆசிரியப் பணி அறப்பணி' என வகுப்பில் நம் ஆசிரியப் பெருமக்கள் கூறியபோது அத்தொடரின் பொருளாழம் அப்போது புலப்படவில்லை. இப்போது நாம் ஆசிரியராகப் பணியாற்றும்போதுதான் அத் தொடரின் ஆழ்ந்தகன்ற அரும்பொருள் விளக்கமாகின்றது. எங்கள் கிராமத்திலுள்ள உழவர்குடி, தொழிலாளர்குடி ஏழை எளிய குழந்தைகட்குக் கல்வி கற்பிக்கும்போது, அந்தக் குழந்தைகள் அடையும் மகிழ்ச்சியும் எழுச்சியும் நன்றி உணர்ச்சியும் என்னைப் பெரிதும் நெகிழ வைக்கின்றன.

தலைநகர் சென்னையில் ஆசிரியப் பணியாற்றும் உன் இனிய பட்டறிவை யான் அறிந்து மகிழப் பெரு விருப்புடன் உள்ளேன்; மடல் எழுதுக. உன் பணி சிறக்க என் உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துகள்.

அன்புடன்,
அ. கவின்மலர்.

பெறுநர்

திருமதி பா. தமிழ்க்கோதை,
10, பார்த்தசாரதி கோயில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

**அலுவலகக் கடிதம் எழுதும் படிநிலைகள்**

அலுவலகக் கடிதம் தனியாள் கடிதமாகவும், கூட்டுக் கடிதமாகவும் எழுதும் முறை உள்ளது. இதில் தனி ஒருவருக்கு வேலைவேண்டும் விண்ணப்பம், புகார் விண்ணப்பம், பொது நன்மை கருதி அரசின் உதவிவேண்டும் விண்ணப்பம், துறைசார்ந்த கடிதங்கள் ஆகிய யாவும் அடங்கும்.

**1. அனுப்புநர் முகவரி**

கடிதத்தின் தலைப்பில் இடப்பக்கம் அமைவது. அனுப்புநரின் பெயர் உள்ளிட்ட முழு முகவரியைத் தெளிவாக எழுதவேண்டும்.

**2. பெறுநர் முகவரி**

இது அனுப்புநர் முகவரியின்கீழ் அமைவது. இவ்வகைக் கடிதத்தில் பெறுநரின் இயற்பெயரை எழுதக் கூடாது. அவர் ஏற்றுள்ள பணித் தகுதிப் பெயரையே எழுதவேண்டும் என்பது கவனிக்கத்தக்கது.

**3. விளி (அழைப்பு)**

இது கடிதத்தின் இடப்பக்கம் அமைவது. உறவுமுறைக் கடிதம்போல் அல்லாமல் பெறுபவரின் பணித்தகுதி மதிப்பைக் குறிக்கும் வகையில் இவ்விளித்தொடரை அமைக்க வேண்டும்.

**4. பொருள்**

இது விளித்தொடருக்குக்கீழ் அமைவது. கடிதத்தின் தேவையை இப் பகுதியில் ஓரிரு வரிகளில் சுருங்க உரைக்கவேண்டும்.

**5. கடிதச் செய்தி/உடற் பகுதி**

இது பொருள் பகுதிக்குக் கீழ் அமைவது. கடிதத்தின் பொருளில் குறிப்பிட்ட சுருக்கத்தின் விளக்கமாக இருக்கவேண்டும். இப்பகுதியில் சிலர் தம்மைப்பற்றிக் குறைத்தும் மிகைப்படுத்தியும் பெறுநரை வானளாவப் புகழ்ந்தும் எழுதுவர். இம்முறையை நீக்கி, நம் தேவையைக் காரண காரியத்தோடு உரைப்பது போதுமானது. இப்பகுதி தேவை கருதி ஓரளவு விளக்கம் பெறலாம்.

**6. வணங்கற் பகுதி**

இது கடிதச் செய்திப் பகுதியின்கீழ் வலப்பகுதியில் அமைவது. அனுப்புநர்க்கும் பெறுநர்க்கும் உள்ள உண்மைத் தன்மையையும், பணிவையும் காட்டுவதாக இருக்கவேண்டும். உறவுமுறைக் கடிதம்போல அன்பைப் புலப்படுத்தக் கூடாது.

**7. ஒப்பப் பகுதி**

இது வணங்கற் பகுதியின்கீழ் அமைவது. அனுப்புநரின் கையொப்பம் இடம்பெற வேண்டும். அலுவலகக் கடிதங்களில் சில நேரங்களில் குறிப்பிட்ட அலுவலர்க்குப் பதிலாக அவருக்குக்கீழ் பணிபுரியும் அலுவலர் ஒப்பம் இடுவதும் உண்டு.

**8. நாள் - இடம்**

கடிதச் செய்திக்குக் கீழும், அனுப்புநர் ஒப்பத்திற்கு நேர் இடப்பக்கமும் இது அமைய வேண்டும். இடம் முன்னும் நாள் பின்னுமாகக் குறிக்கப்படல் வேண்டும்.

# அலுவலகக் கடிதம்

**(மாதிரி)**

அனுப்புநர்

அ. தொல்காப்பியன்,
27, பனம்பாரனார் தெரு,
காப்பியக்குடி,
கன்னியாகுமரி மாவட்டம்.

பெறுநர்

மேலாளர்,
ஏழிசைப் பதிப்பகம்,
76, விபுலானந்தர் தெரு,
திருவையாறு,
தஞ்சாவூர் மாவட்டம் - 613 204.

ஐயா,

பொருள்: நூல்கள் அனுப்பி வைக்க வேண்டுதல் - தொடர்பாக.

--*--

தங்கள் பதிப்பகம் தொன்மைத் தமிழ்ப் பெருநூல்கள், கல்வியியல் நூல்கள், ஆய்வு நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் போன்றவற்றைச் செம்பதிப்பாக வெளியிட்டுத் தமிழ்ப்பணி ஆற்றி வருவது பாராட்டுக்குரியதாகும்.

அண்மையில் தாங்கள் வெளியிட்ட நூல்களின் செய்தி விளம்பரத்தை நாளேட்டில் கண்டு மகிழ்ந்தேன். அவற்றைப் பெற்றுப் படிக்க விரும்புகிறேன். எனவே, கீழ்க்காணும் நூல்களை அஞ்சல் வழியில் எனக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

1. திருக்குறள் தமிழ் மரபுரை
2. இலக்கிய வாழ்வியல்
3. அடிச்சுவடு
4. செம்மொழிக் கல்வி
5. சித்தர்களின் சித்தாந்தம்

இந்நூல்களுக்குரிய தொகையைத் தங்களுக்குப் பணவிடையாக அனுப்பியுள்ளேன்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
அ. தொல்காப்பியன்.

இடம்: காப்பியக்குடி,
நாள் : 28.11.2008

மாணவ ஆசிரியர்கள், மேற்கண்ட இருமுறைகளிலும் தமக்கு வரும் கடிதங்களில் முறையான, சுவையான, அழகுதமிழ் நடையுடைய உயர்பயன் தரும் கடிதங்களைப் பாதுகாத்திடுக. வகைக்கு ஒன்றாய் இரு கடிதங்கள் எழுதுக. உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிறந்த நாள், திருமணநாள் போன்றவற்றிற்கு வாழ்த்து மடல் எழுதுக.

## 2. கட்டுரை எழுதுதல்

கட்டுரை எழுதுதல் பற்றியும் அதன் வகைகள் பற்றியும் முதலாமாண்டில் 'தமிழ்மொழித் திறன் வளர்த்தல்' என்னும் பகுதியில் படித்திருப்பீர்கள். இங்கு இக்கட்டுரை எழுதுதல் என்பது உயர்நிலைத்திறன் நோக்கில் கருதப்படுகின்றது.

கோவையாகக் காரண காரியத் தொடர்பில் அழகான மொழிநடையில் அமைப்பது கட்டுரை யாகும். இயற்கையில் மனத்தில் தோன்றி எழும் எண்ணங்கள் மொழியைப் பொருத்தவரையில் இருவகையில் வெளிப்படும். ஒன்று, வாய்மொழி; இரண்டு, எழுத்து மொழி. பேச்சில் வெளிப் படும் எண்ணங்கள் எழுத்து வடிவம் பெறாமல் நிலைக்க இயலாது. இவை சிறந்தனவாய், கேட்க வாய்பில்லாத பிறரும் படிக்கத் தக்கனவாய் எக்காலத்தும் நிலைப்புப் பெறத் தகுதியுடையனவாய் இருக்க வேண்டுமெனில் இவை எழுத்து வடிவம் பெறவேண்டும். எழுதி வைக்கும் பழக்கம் இல்லையேல், மனித நாகரிகம் இன்றிருப்பது போலச் சிறந்து வளர்ந்தோங்கி இருக்காது. எழுத்து மொழியால்தான் ஒரு தலைமுறையின் அறிவுச் செல்வம் அடுத்த தலைமுறைக்குப் பயன்பட வாய்ப்புண்டாகிறது. இவ்வகையில் கட்டுரை வரைதல் உயர்நிலைத் திறனாக மதிக்கப்படுகிறது.

**கட்டுரை எழுதும் நோக்கங்கள்**

1. மொழித்திறன்களுள் வெளியிடு திறன்களான பேசுதல், எழுதுதல் ஆகியவற்றுள் எழுதுதல் திறனை வளர்த்தல்.
2. செய்திகளைத் தொகுத்து அறியச் செய்தல்.
3. செய்திகளை வகைப்படுத்துதல்.
4. செய்திகளை விரித்துரைத்தல்.
5. சொல்லாட்சித் திறன் வளர்த்தல்.
6. பத்திகளை முறையாகப் பிரித்தெழுதும் திறன் வளர்த்தல்.
7. நயம்படவும் திறம்படவும் உரைத்தல்.
8. தனக்கெனத் தனிநடை அமைத்துக் கொள்ளல்.
9. காலவரையறைக்குள் எழுதும் பயிற்சி.
10. கட்டுக்கோப்புத் திறன் பெறுதல்.
11. கற்பனைத் திறன் வளர்த்தல்.
12. ஆய்வு மனப்பான்மை வளர்த்தல்.
13. கோவையாகக் கூறுந்திறன் வளர்த்தல்.
14. குறிப்புத் தயாரித்தல் பயிற்சி.
15. வருணிக்குந் திறன் வளர்த்தல்.

**கட்டுரை எழுதும் வழிமுறைகள்**

- கட்டுரை எழுதுவதற்குப் பொருத்தமாகக் குறிப்புச் சட்டகம் தயாரித்துக்கொள்ள வேண்டும்
- கட்டுரை எழுதுவதற்குப் பொருத்தமான செய்திகளைத் தொகுத்துக்கொள்ள வேண்டும்.
- தொகுத்த செய்திகளை முன்னுரை, பொருளுரை, முடிவுரை எனப் பிரிவுகளாக்கி விரித்தெழுத வேண்டும்.
- கருத்துச் சிதையாதவாறு பத்தி பிரித்து எழுதவேண்டும்.

- பொருத்தமான மேற்கோள், உவமைத்தொடர், பழமொழி முதலியவற்றை இடத்திற்கேற்பப் பயன்படுத்தவேண்டும்.
- சொற்களுக்கிடையே இடைவெளிவிட்டு எழுதவேண்டும்.
- மேற்கோளாக எடுத்தாளும் பாடல் வரிகளைத் தக்க இடத்தில் சரியாக எழுதவேண்டும்.
- நிறுத்தக் குறிகளை முறையாகக் கையாளவேண்டும்.
- குறித்த அளவிற்குள் கட்டுரை அமையவேண்டும்.

கட்டுரை எழுதுவதற்குமுன் தலைப்புத்தொடர்பான செய்திகளை வாய்மொழியாக ஆசிரியர் கூறவேண்டும்; மாணவர்களையும் கூறச் செய்யவேண்டும்.

கட்டுரையை மாணவர்களே எழுதவேண்டும்; ஆசிரியர் கரும்பலகையில் எழுதி, அதை மாணவர்கள் பார்த்து எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

**மாதிரிக் குறிப்புச் சட்டகம்**

எடுத்துக்காட்டாகச் **சட்டமேதை அண்ணல் அம்பேத்கர்** என்னும் தலைப்பில் கட்டுரை எழுதப் பின்வருமாறு குறிப்புச் சட்டகம் அமையலாம்.

முன்னுரை
பிறப்பு
பள்ளி வாழ்க்கை
கல்லூரி வாழ்க்கை
சமுதாயப் பணி
அரசியல் பணி
பெற்ற பட்டங்கள்
இறுதிநாள்
முடிவுரை

## 3. பேச்சாற்றல்

பேசுதல் திறனின் உயர்நிலை பேச்சாற்றல். பேச்சாற்றல் வளர அடிப்படைத் தேவை கேட்டலும் படித்தலும். 'சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்ற பழமொழியை நாம் அறிவோம். வெளியிடும் திறன் சிறப்புற வேண்டுமானால், உட்கொள்ளும் திறன் வளர்ந்திருக்க வேண்டும். பேசுதல்திறன் வளர நல்ல பேச்சாளர்களின் பேச்சை அதிகம் கேட்க வேண்டும். இதேபோன்று பலவகைப்பட்ட நூல்களையும் படிக்கவேண்டும்.

**முன் தயாரிப்பு**

பேச்சாற்றல் பெறக் கருத்து மிகவும் தேவையானது. சில நேரங்களில் கருத்தில்லாமலேயே நல்ல மொழியில் பேசிக் கேட்போரைக் கவர முடியும். ஆனால், அப்படிப்பட்டவர் தொடர்ந்து நல்ல பேச்சாளராக நீடிக்க இயலாது. எனவே, பேசவேண்டிய தலைப்பை ஒட்டி நல்ல பல கருத்துகளைத் திரட்டியோ சிந்தித்தோ திட்டுமிட்டுக் கொள்வது நல்லது. அதாவது, நல்ல பேச்சாளராக அமையத் தயாரிப்பு மிகவும் இன்றியமையாதது. குறைந்த நேரம் பேசுவதற்குக்கூடத் தயாரிப்பு வேண்டும். இன்னும் சொல்லப்போனால் குறைந்த நேரம் பேசுதவதற்குத்தான் அதிகத் தயாரிப்பு வேண்டும். அதிக நேரம் பேசும்போது பேசவேண்டிய கருத்தைப் பலவாறு எடுத்துச்சொல்லி வலியுறுத்தலாம்.

ஆனால், குறைந்த நேரம்தான் பேசக் கிடைக்கும் என்றால், அதற்குள் எவ்வாறு எடுத்துச் சொல்வது என நன்கு சிந்தித்து முடிவு செய்ய வேண்டியதிருக்கும். மேலும், தொடக்க காலப் பேச்சாளர் களுக்குத் தயாரிப்பு என்பது தவிர்க்க முடியாதது. மற்றவர்களும் குறைந்தபட்சம் மனத்துக்குள் எண்ணிப் பார்த்தாவது ஆயத்தம் செய்து கொள்ளவேண்டும்.

குறிப்பிட்ட தலைப்பில் பேசப் போதுமான கருத்துகளைத் திரட்டிக்கொண்டு போகா விட்டால், ஒரு சிக்கல் ஏற்படக்கூடும். அதே தலைப்பில் முன்னால் பேசக் கூடியவர்கள் நாம் நினைத்திருந்த கருத்துகளைப் பேசிவிட்டால் நாமும் அவற்றையே திரும்பப் பேசவேண்டிய நிலைக்கு ஆளாவோம். அதிகத் தயாரிப்போடு போயிருந்தால், மற்றவர்கள் பேசியவற்றைத் தவிர்த்துப் பிறவற்றைப் பேசிவிடலாம்.

**பேசும் முறை**

பேசும்போது கருவிகள் இன்றிப் பேசினாலும் கருவிகள் உதவியோடு பேசினாலும் கூட்டத்தில் உள்ளோர் அனைவருக்கும் நம் பேச்சு கேட்கிறதா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். கூட்டத்தினரைப் பார்த்தோ தேவையானால் கேட்டோ அனுபவத்தின் அடிப்படை யிலோ இதைப் புரிந்துகொள்ளலாம். பேசும்போது கேட்பவர்களைத் துலங்கச் செய்யும்படி ஒரே மாதிரி ஒரே குரல் அளவில் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. ஏற்ற இறக்கங்களோடு பேச்சு அமைய வேண்டும். பேச்சிலேயே உணர்ச்சி வெளிப்படவேண்டும். யாராவது கண்ணை மூடிக்கொண்டு கேட்டாலும் பேசுபவரின் கோபம், மகிழ்ச்சி போன்றவை அவருக்குப் புரியவேண்டும். நடிப்பது போன்று மிகையாக இல்லாமல் மெய்ப்பாடு தோன்றப் பேசவேண்டும். அதாவது தலை, கை. உடல் அசைவுகள் அளவோடு அமையவேண்டும். இவை பேச்சுக்கு வலுவூட்டும்.

பேச்சை எப்படித் தொடங்குவது, எப்படித் தொடர்வது, எப்படி முடிப்பது எனத் தெரிந் திருக்க வேண்டும். பேச்சைத் தொடங்கி ஓரிரு நிமிடங்களிலேயே பேசவேண்டிய கருத்திற்கு வந்துவிடவேண்டும். அவ்வாறில்லாமல் நீண்ட முன்னுரை வழங்குவது சுற்றி வளைத்து தலைப்பிற்கு வருவது என்பவை தவிர்க்கப்படவேண்டும். முடிப்பது என்பது சூழ்நிலைக்கு ஏற்ப அமையலாம். அதுவரை பேசியவற்றைச் சுருக்கமாகச் சொல்லியோ பார்வையாளர் களிடம் ஒரு வினாவை எழுப்பியோ முடிக்கலாம். எப்பொழுது முடிப்பார் எனக் கேட்போர் நினைப்பதற்கு முன்பு முடித்துவிடவேண்டும். அதாவது இன்னுங் கொஞ்சம் பேசியிருக்கலாம் என அவர்கள் எண்ணும் படியாக முடித்துவிட வேண்டும். சிலர் முடிக்கப்போவதுபோல் பேசி மீண்டும் வெகுநேரம் பேசுவார்கள். அதாவது, கடைசியாக எனச் சொல்லி ஒரு கருத்தைப் பற்றிப் பேசி அத்துடன் முடிக்காமல் வேறொரு கருத்துக்குத் தாவிவிடுவார்கள். சிலர் கடைசியாக எனச் சொல்லா விட்டாலும்கூடத் தொகுத்துச் சொல்வது போன்ற பேசும் தன்மையால் முடிக்கப் போவதைப் போல் கொண்டுபோய்த் தொடர்வார்கள். இவ்வாறு செய்வது கேட்போருக்கு எரிச்சலை ஏற்படுத்தும். கூட்டத் தலைவரிடம் அல்லது ஏற்பாட்டாளர்களிடம் முன்பே எவ்வளவு நேரம் பேச வேண்டும் எனக் கேட்டு அதற்கு ஏற்பப் பேசுவது நல்லது. இவ்வளவு நேரம் என்று குறிப்பிடாது பேசும்போது, பேசியது போதும் எனத் தலைவர் குறிப்பாகவோ நேரடியாகவோ உணர்த்தினால் விரைவில் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் மொழித்திறன் பகுதியில் படைப்பாற்றல் எனும் தலைப்பில் வரும் பேச்சாற்றல் பகுதியில் இடம்பெற்றுள்ள குறிப்புகளையும் ஈண்டு நினைவுகூர்க.

மொழியைப் பொருத்தவரை தெளிவாகவும், எல்லாருக்கும் புரியும்படியும் பேசவேண்டும். ஒருவேளை அவையில் உள்ளோர் எல்லாம் நன்கு கற்றவர்களாக இருந்தால் உயர்ந்த நடையில் பேசலாம். எப்படியாயினும் தொடக்கநிலைப் பேச்சாளர்கள் எளிய நடையில் பிழையில்லாமல் பேசுவதே நல்லது. பேச்சு இயற்கையாக இருப்பது நல்லது. குரலை மாற்றிக்கொண்டோ வேறு படுத்தியோ பேசுவது தேவையற்றது.

பவணந்தியார் நூலுக்குக் கூறும் பத்தழகுகள் பேச்சுக்கும் பொருந்தும். அவையாவன:

1. சுருங்கச் சொல்லல்,
2. விளங்க வைத்தல்,
3. நவின்றோர்க்கு இனிமை,
4. நன்மொழிப் புணர்த்தல்,
5. ஓசையுடைமை,
6. ஆழமுடைத்தாதல்,
7. முறையின் வைப்பு,
8. உலக மலையாமை,
9. விழுமியது பயத்தல்,
10. விளங்கு உதாரணத்தாதல்.

பேச்சுத்திறன் குறித்துத் திருக்குறள் கூறுஞ்செய்திகளைத் தொகுக்க.
குறள் கூறுங் கருத்துகளைப் பின்பற்றிப் பேச்சாற்றலை வளர்க்க.

**பேச்சாற்றல் வளர்க்கும் முறைகள்**

'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்னும் ஆன்றோர் வாக்குப் பேச்சாற்றலுக்குப் பெரிதும் பொருந்தும். திறன் வளரப் பயிற்சி இன்றியமையாதது என்பது மாணவ ஆசிரியர்களுக்குத் தெரிந்ததுதான். நாப்பழக்கம் என்பது பயிற்சியே. தொடர்ந்த பயிற்சியே அவர்களைப் பெரும் பேச்சாளர்களாக மாற்றியது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காந்தியடிகளைக் கூறலாம். மும்பையில் முதன்முதலில் வழக்கு மன்றத்தில் பேச எழுந்து பேச முடியாமல் அமர்ந்தவர்தான் அவர். ஆனால், பின்னாளில் அவருடைய பேச்சைக் கேட்கக் காத்திருந்தவர்கள் எண்ணிக்கை அளவிட முடியாது.

சிலர் தாங்களாகவோ பிறரைக் கொண்டோ எழுதி மனப்பாடஞ் செய்து பேச முயல்வர். இது சில நேரங்களில் வெற்றியைத் தரக்கூடும். இருப்பினும், நீண்ட கால நேரத்தில் பயன் தராது. ஆனால், இதைத் தொடக்கப் பயிற்சியாகக் கொள்ளலாம். செய்தித்தாளிலிருந்தோ புத்தகத் திலிருந்தோ சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து உரக்க வாசிப்பது, பிறர் எழுதிக் கொடுத்த உரையை வாசிப்பது, தாமே எழுதி வாசிப்பது என வாசித்தலில் தொடங்கிப் பிறகு எழுதியதை மனப்பாடஞ் செய்து, பேசி, அதன்பிறகு குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசிப் பழகலாம்.

பள்ளியில் குறிப்பிட்ட தலைப்பில் பேசும் பயிற்சியைக் கதைசொல்லுதல், குறிப்பை விரித்துச் சொல்லுதல் போன்ற பேசுதல் திறன் பயிற்சிகளின் தொடர்ச்சியாக அளிக்கவேண்டும். முதலில் மாணவர்களுக்கு அறிமுகமான தலைப்புகளைத் தந்து பேசச் செய்யவேண்டும். தொடத்தில் தொடக்கப் பள்ளி மாணவன் மூன்று நிமிடங்களும் நடுநிலைப் பள்ளி மாணவன் ஐந்து நிமிடங்களும் உரையாற்றுமாறு பயிற்சியளிக்கலாம். முதலில் தயங்காமல் குறிப்பிட்ட நேரம் முழுவதும் பேசச் செய்யவேண்டும். பிறகு கருத்து பொருத்தமாகவும் தொடர்பு அறிந்துபோகாமலும் பேசச் செய்யவேண்டும். தொடர்ந்து ஏற்ற இறக்கங்களோடும் தக்க உடலசைவுகளோடும் பேசுதற்குப் பழக்கவேண்டும். முதலில் சில தலைப்புகளைக் கொடுத்து மறுநாள் வந்து பேசுமாறு சொல்லவேண்டும். மறுநாள், கொடுத்த தலைப்புகளுள் ஒவ்வொன் றையும் பற்றிச் சிலரைப் பேசச் செய்யவேண்டும். நாளடைவில் வகுப்பிலேயே தலைப்புக் கொடுத்து ஐந்துநிமிட நேரமும் கொடுத்துப் பிறகு பேசச் சொல்லலாம். அதாவது, முதலில் அதிக நேரம் தயாரித்துச் சாதாரணமாகக் குறைந்த நேரம் பேசுவதில் தொடங்கி மெல்ல மெல்ல மாணவர்களைக் குறைந்த நேரத் தயாரிப்பிலேயே சிறந்தமுறையில் அதிக நேரம் பேசுந்திறன் பெறும்படி கொண்டு செல்லவேண்டும்.

தமிழ் இரட்டை வழக்குமொழி. இதன்படி பேச்சு வழக்கைக் குறிப்பிட்ட இடங்களிலும் எழுத்து வழக்கைக் குறிப்பிட்ட இடங்களிலும் பயன்படுத்தவேண்டும். மேடைப்பேச்சில் பயன்படுத்த வேண்டியது எழுத்துத் தமிழே. தற்போது மேடையில் பேச்சுத் தமிழில் பேசுவது பெருகி வருகிறது என்றாலும், நாம் எதிர்பார்ப்பது மாணவர்கள் எழுத்துத் தமிழில் பேசும் ஆற்றல் பெறவேண்டும் என்பதே. தொடக்கத்தில் பேசிப் பயிற்சி பெறும்போது பேச்சுத் தமிழ் கலந்து பேசினால் அதைத் தடை செய்யாமல் சரளமாகப் பேசும் பழக்கம் வந்தபிறகு பேச்சுத் தமிழைத் தவிர்க்கும்படி பயிற்சி அளிக்கவேண்டும்.

குறிப்பிட்ட தலைப்பில் பேசும்போது அத்தலைப்பிற்குப் பொருத்தமான பழமொழிகள், மேற்கோள்கள், குட்டிக் கதைகள், வாழ்க்கை நிகழ்வுகள், கவிதைகள் போன்றவற்றை இடை யிடையே எடுத்தாண்டு பேசுவது மேடைப் பேச்சைச் சிறக்கச் செய்யும். எனவே, இவ்வாறான வற்றைக் கேட்கவோ படிக்கவோ நேரும்போது குறித்து வைத்துக்கொள்வது நல்லது. அல்லது இதற்காகவே நூல்களைப் படித்துத் தொகுத்து வைத்துக்கொள்ளலாம். பள்ளியில் சில தலைப்புகளைக் கொடுத்து, அத்தலைப்புகளில் பேச உதவக் கூடிய பழமொழிகள், கதைகள் போன்றவற்றைத் தொடுக்குமாறு மாணவர்களை ஏவலாம். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைப்பைக் கொடுத்து அதற்குரியவற்றைத் தொகுக்கச் செய்யலாம். அல்லது ஒரே தலைப்பைக் கொடுத்து ஒரு குழுவைப் பழமொழிகள், ஒரு குழுவை மேற்கோள்கள், ஒரு குழுவைக் கதைகள் எனத் தொகுக்கச் செய்யலாம். தொகுத்தவற்றைப் பகிர்ந்துகொண்டு ஒவ்வொருவரும் ஒரு பழமொழி, ஒரு கதை, ஒரு நிகழ்ச்சி, ஒரு பாடல் எனப் பயன்படுத்தி உரையாற்றச் செய்யலாம்.

மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைப்புக் கொடுத்துப் பத்து நிமிடம் வருமாறு ஒரு நல்ல மாதிரிப் பேச்சை ஒலிநாடாவிலோ குறுவட்டிலோ தயாரிக்கச் செய்க.

## 4. படைப்பாற்றல்

உலக உயிர்களுள் மனிதன் தன்சிந்தனை ஆற்றலால் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனை என்பது, மொழியால் வெளிப்படும் செயல். மொழிவழியாகவே மனிதச் சிந்தனை வெளிப்படுத்தப்படுகிறது. சிந்தனை வெளிப்பாட்டில் காலத்தைக் கடந்து நிற்கும் தன்மை எழுத்துப் பதிவுகளுக்கே உண்டு. பெற்ற மொழித்திறனால் மனத்தில் பதிந்த கருத்துகளைத் தக்க இலக்கிய வடிவில் தருவதே படைப்பு எனப்படும். அவை ஒழுங்குபட்ட வடிவத்தில் அழகுணர்ச்சி யோடு ஆழ்ந்த சிந்தனை வீச்சாக வெளிப்பட்டிருப்பின் பலரும் விரும்பிக் கற்பர். அதனால், அது விரிந்து மனித குலத்திற்குப் பயன்படும்.

எனவே, படைப்பாற்றல் என்பது சிந்தனையின் உயிரோட்டம், உயர்திறன், காலங் கடந்து நிற்பது, மிகுபயன் அளிப்பது ஆகும்.

### காலங்கடந்து நிற்கும் படைப்புகள்

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னும் பின்னும் தோன்றிய தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஐம்பெருங் காப்பியங்கள், ஆழ்வார் அருளிச் செயல்கள், நாயன்மார் பாடல்கள், கம்பராமாயணம் போன்றவை இன்றளவும் மக்களால் விரும்பிப் படிக்கப்பெற்றுப் பயனளிப்பதற்கு அவை படைப்பாற்றல் மிக்கவையாக விளங்கியமையே காரணம் ஆகும்.

### படைப்பாற்றல் வெளிப்பாட்டு வடிவங்கள்

படைப்பாற்றல் என்பது பிறப்பிலேயே அமைவது; இயற்கையானது; ஒருவரிடம் கற்பதால் உருவாக்கப்படுவதன்று எனக் கூறப்பட்டது. அதனால்தான், 'கவிஞன் உருவாவதில்லை;

பிறக்கிறான்' எனவும், 'கருவிலே திருவுடையார்' எனவும், தமிழிலும் பிற மொழிகளிலும் சொல்லி வந்துள்ளனர்.

இன்றைய ஆய்வுகள் இதனை மறுக்கின்றன. அனைவரிடமும் படைப்பாற்றல் உள்ளது. அது வெவ்வேறு வழியில் வெவ்வேறு வடிவத்தில் வெளிப்படுகிறது.

மொழியில் பல்வேறு படைப்பிலக்கிய வடிவங்கள் உள்ளன. அவை அனைத்தையும் உரைநடை, செய்யுள் என்னும் இரண்டனுள் அடக்கலாம். 'உரைநடை' வடிவம் மொழியைக் கற்கும் தொடக்கக் காலத்திலேயே வெளியீட்டுத் திறன்களான 'பேசுதல்', 'எழுதுதல்' ஆகியவற்றில் கையாளப்படுகிறது. சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கடிதம் ஆகியவை உரைநடை வடிவத்திலான படைப்பிலக்கியங்கள். செய்யுள் வடிவம் தொடக்க வகுப்புகளில் மழலையர் பாடல்களாகவும், பிறகு பாடல் வடிவில் அமையும் இலக்கியங்களாகவும் மாணவர் களுக்குப் புலப்படுத்தப்படுகின்றன. தனிப்பாடல், தொடர்நிலைச் செய்யுள், சிறுகாப்பியம், பெருங்காப்பியம் ஆகியவை செய்யுள் வடிவத்திலான படைப்பிலக்கியங்கள்.

**மாணவரிடம் படைப்பாற்றலைப் பெருக்கும் உத்திகள்**

மாணவர்களின் படைப்பாற்றலை உரைநடை, செய்யுள் ஆகிய இரு வடிவங்களில் வெளிப்படக் கற்றல்-கற்பித்தல் மூலமாகவும், நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தருவதன் மூலமாகவும் வழிகாட்டுதல் மூலமாகவும் ஆசிரியர் உதவமுடியும்; உதவ வேண்டும்.

**படைப்பாற்றல் உருவாக்கும் உந்துதல்**

எத்தகைய திறனும் கற்பிப்பாலும் பழகுதலாலும் பெறவியலும். கற்பிப்புக் காலத்தில் மாணவர்கள் பெறுகின்ற இலக்கிய ஆர்வம், எக்கருத்தையும் எழிலுணர்ச்சியுடன் நுணுகி நோக்கல், படிப்புப் பழக்கம், படித்ததைப்போல ஒன்றைத் தானும் உருவாக்கவேண்டும் எனும் பெருமித உணர்வு ஆகிய உந்தல்களை ஆசிரியர் மாணவர்க்கு உண்டாக்க வேண்டும்.

தம் இலக்கிய ஆர்வத்தைப் பொருத்தே அவரிடம் கற்கும் மாணவர்க்கு இலக்கிய ஆர்வம் அமையும். ஆசிரியர் தம் இலக்கிய நோக்கில் மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

இலக்கியங்களை அவற்றில் பின்புலத் தகவல், அது வழங்கும் செய்தி, உணர்த்து பொருள், வகைப்பாடு, மொழித்திறன் வளர்க்கும் கூறுகள் ஆகிய நோக்குடன் படிக்க வேண்டும் என்பதை மாணவர்க்கு உணர்த்தவேண்டும். இவ்வாறு இலக்கியத்தை மாணவர் நுணுகி நோக்கிக் கற்கும்போது உணர்வு மேலோங்கிப் பாராட்டும் மனப்பாங்கு உண்டாகும். பாடுபொருள், மொழிநடை ஆகியவை அவரிடம் தாக்கத்தை விளைவிக்கும். அத்தாக்கம் இலக்கியங்களைப் படிக்கும் எண்ணத்தைத் தூண்டும். இலக்கியப் படிப்பின்போது காணும் பொருளும் மொழிநடை யும் மாணவர்தம் உள்ளத்தில் பதிந்து கொண்டதற்கேற்பப் புதிய படைப்பு வடிவமாக வெளிப் படும். இது 'போலச் செய்தல்' என்னும் பழக்கத்தால் உண்டாவதாகும்.

**மனப்பாட அறிவு**

இலக்கியங்களைப் படித்த மொழிநடை, கருத்து வைப்புமுறை ஆகியவற்றால் பெற்ற மனப்பாட அறிவு, படைப்பாற்றலுக்குப் பெரிதும் துணைநிற்கும். தொடக்கநிலையில் மொழி வடிவ மனப்பாட அறிவு, படைத்தல் செயலுக்கான உந்துதல் ஆகும். வளர்ச்சி நிலையில் கருத்தளவிலான மனப்பாட அறிவு மொழிவடிவ மனப்பாட அறிவோடு இணைந்து தன்னாக்கப் படைப்புகளை வெளிக்கொணரும்.

**படைப்புப் பெருமிதம்**

தாம் பலவற்றைக் கற்றுள்ளோம், அதைப் பிறருக்குக் கூறவேண்டும் எனும் பெருமித உணர்வு படைப்பாற்றலுக்கு மிகச் சிறந்த உந்துதல் ஆகும். பெருமித உணர்வின் கூறுகளுள் ஒன்றாகக் 'கொடை' என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இக்கூறு படைப்பாற்றல்

முனைப்போடு ஒப்பிட்டு எண்ணத்தக்கதாகும். எனவே, மாணவர்க்குப் படைப்புப் பெருமித உணர்வு எழும்வகையில் அவர்தம் படைப்புகளைப் பள்ளிப் பொதுவிடங்களில் காட்சிப்படுத்தலாம். மேலும் மன்றங்களில் அரங்கேற்றிப் பாராட்டுரை வழங்கலாம்.

**பயிற்சிச் செயல்பாடுகள்**

மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்க்கப் பல்வேறு பயிற்சிகளைத் தரலாம்.

**தலைப்புத் தருதல்**

ஏதேனும் ஒரு தலைப்பை மாணவர்களுக்குக் கொடுத்து, அவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் சிந்திக்கச் செய்யலாம். ஒவ்வொரு குழுவும், அது முடிவு செய்யும் வடிவத்தில், அத் தலைப்புத் தொடர்பாக,ஒரு படைப்பைக் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட பக்கங்களுக்குள் அளிக்கவேண்டும் என அறிவுறுத்தலாம். அவற்றை வேறு ஒரு சமயத்தில் வகுப்பில் படித்துக் காட்டி மற்றவர் கருத்தறியச் செய்யலாம்.

**குறிப்புகள் தருதல்**

குறிப்பிட்ட ஒரு சிக்கலைக் குறிப்புகளாக மாற்றி மாணவர்க்குத் தரலாம். அவற்றை வெவ்வேறு குழுவினர் படைப்பாக மாற்றி வகுப்பில் வெளியிட வேண்டும். முன்போலப் பிறர் கருத்தறிந்தபின் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

**முடிவுகூறச் செய்தல்**

கதைகளின் முடிவை வெளியிடாமல் பொருத்தமான முடிவுகளைக் குழுவாகச் சிந்தித்து வெளியிடக் கூறலாம்; சிறந்த முடிவுகளைப் பாராட்டலாம்.

**முடிவை மாற்றச் செய்தல்**

கதையின் முடிவை விவாதிக்கச் செய்தல். இருக்கும் பழைய முடிவை மாற்றிவிட்டுப் புதிதாக ஒவ்வொரு குழுவும் ஒரு முடிவை வெளியிடச் செய்யலாம். புதிய முடிவுகளுள் சிறந்த ஒன்றை மாணவர்களே தேர்ந்தெடுக்கச் செய்யலாம். சிறந்த முடிவாக அமைந்ததற்கான காரணங்களை விளக்கச் செய்யலாம். சிறந்த முடிவைத் தேந்தெடுத்த குழுவினரையும், விளக்கம் அளித்த மாணவர்களையும் பாராட்டலாம்.

**வடிவம் மாற்றுதல்**

கதை வடிவில் உள்ளவற்றை நாடகம், கவிதையில் செய்யுள் வழக்கு, புதுக்கவிதை, உரையாடல் போன்றவையாக மாற்றச் செய்யலாம். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு வடிவத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**வகை மாற்றுதல்**

ஒரே வடிவத்தில் அதன் வகைகளுக்குள் மாற்றம் செய்யச் சொல்லலாம். எடுத்துக் காட்டாக, யானை என்னும் தலைப்பில் ஒரு குழு விளக்கக் கட்டுரை எழுதலாம்; மற்றொரு குழு தன் வரலாறு கூறுதலாக எழுதலாம்; வேறொரு குழு உரையாடலாக எழுதலாம். இப்படி ஒரு வடிவத்திற்குள்ளேயே அதன் வகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதச் செய்யலாம்.

**ஈற்றடி தருதல்**

இது செய்யுள் வடிவத்திற்கு ஏற்ற செயல்பாடு. ஒரு பாடலின் ஈற்றடியைக் கொடுத்து விட்டு, அதற்கேற்றவாறு பிற அடிகளை எழுதப் பழக்கலாம்.

## அ) கவிதை எழுதுதல்

### குழந்தைப் பாடல் தோற்றமும் வளர்ச்சியும்

குழந்தைகளின் உள்ளத்தைப் பெரிதும் கவரக் கூடியவை பாடல்களே. வாய்மொழியாக வழங்கி வந்த பல பாடல்களைக் குழந்தைகள் உடலசைவுகளுடன் மிக மகிழ்ச்சியுடன் பாடுவதைக் கண்டும் கேட்டும் களிப்புறுகின்றோம். அவர்களின் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தும் வகையில் அழ. வள்ளியப்பாவும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும், மகாகவி பாரதியாரும் குழந்தைப் பாடல்களைப் பாடத் தொடங்கினர். அவர்களைப் பின்பற்றியே கவிஞர் பலர் பாடி வருகின்றனர். அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கா. நமச்சிவாய முதலியார், மயிலை சிவமுத்து போன்ற சிலர் பள்ளிப் பாட நூல்களில் சேர்ப்பதற்காகப் பல பாடல்களை எழுதினார்கள். அப்பாடல்கள் குழந்தைகள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தன.

தமிழில் குழந்தைப் பாடல்கள் எழுதிய கவிஞர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ நூறு இருக்கும். இக்கவிஞர்கள் தெய்வம், தேசம், இயற்கை, மொழி, பெரியோர், அறிவியல் அறிஞர்கள், அறிவியல் விந்தை போன்றவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு பாடியுள்ளனர்.

### கதைப் பாடல்கள்

குழந்தைகள் கதையும் பாட்டும் சேர்ந்த கதைப் பாடல்களைப் பெரிதும் விரும்புகின்றனர் என்பதை அறிந்து கவிஞர் பலர் கதைப் பாடல்களையும் இயற்றி வருகின்றனர். முற்றிலும் கதைப் பாடல்கள் கொண்ட நூலைச் சித்திரக் கதைப்பாட்டு என்ற பெயரில் பெ.நா. அப்புசாமி 1948இல் வெளியிட்டார். சென்னைத் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்1977இல் சிறுவர் கதைப் பாடல்கள் என்ற நூலை வெளியிட்டது.

### குழந்தைப் பாடல் வகைகள்

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உரியது 'மழலைப் பாடல்கள்' (Nursery Rhymes). நகைச்சுவைப் பாடல்கள், வினாவிடைப் பாடல்கள், சேர்ந்திசைப் பாடல்கள்(Group Songs) சடுகுடு, கண்ணாமூச்சி போன்ற பழைய விளையாட்டுப் பாடல்கள் ஆகியவை குழந்தைப் பாடல்களாக உள்ளன.

### மாணவர்க்குக் குழந்தைப் பாடல்கள்

குழந்தைப் பாடல்களை ஆசிரிய மாணவர்க்கு இசைநயத்துடன் பாடிக் காட்டிப் பயிற்று வித்தல் வேண்டும். தொடக்கநிலை வகுப்புகளில் சிறுசிறு பாடல்களைக் கற்றுக்கொடுத்து, அவற்றைத் திரும்பத் திரும்பப் பாடச்செய்தலும் அவர்தம் வாய்மொழிப் பயிற்சிக்கு நன்கு உதவும். மேலும், அம்மாணவர்கள் தாமும் எளிய குழந்தைப் பாடல்களைப் படைத்து மகிழ ஆர்வம் கொள்வர். சான்றாக,

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தங் கொடுக்குது வெள்ளைப்பசு - மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி

என்னும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல் போன்றவற்றை மாணவர்க்குப் பாடிக் காட்டிப் பயிற்றுவித்தல் மாணவர்தம் படைப்பாற்றலுக்குப் பெரிதும் உதவும்.

மேற்கண்ட கவிமணியின் பாடலில் சில கொச்சைச் சொற்கள் இருப்பினும், மாணவர்கள் தாம்பேசுவது போன்ற சொற்கள் இருப்பதால் விரும்பிப் பாடுவர்.

கைவீசம்மா கைவீசு
கண்ணே மணியே கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
உடைகள் வாங்கலாம் கைவீசு
பாட்டுப் பாடுவோம் கைவீசு
ஆட்டம் ஆடுவோம் கைவீசு
கோவிலுக்குப் போவோம் கைவீசு
கும்பிட்டு வருவோம் கைவீசு

என்பது போன்ற திருந்திய சொற்கள் அமைந்த பாடல்களையும் கற்பிக்கலாம்.

**எது கவிதை?**

நுண்கலைகளாகிய இசை, ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகிய பலவற்றுள்ளும் கவிதை சிறந்தது. கவிதை என்ற சொல்லுக்கும் செய்யுள், பா, பாட்டு என்பவற்றிற்கும் வேறுபாடு உண்டு. இவை ஒருபொருட் பன்மொழியாக வழங்கப்படினும் வேறுபாடு சிறிதளவு உள்ள பல சொற்களே. செய்யுள் என்பது செய்யப்பட்டதென்ற பொருளுடையது; செய்யப்பட்டதெல்லாம் கவிதை ஆகாது.

கவிதை என்பதற்கு இலக்கணம் கூறும் கவிமணி,

உள்ளத்து உள்ளது கவிதை - இன்ப
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை

எனப் பாடியுள்ளார்.

கவிதை என்பது சொல், பொருள், கற்பனை, உவமை, உருவகம், ஓசை, விழுமம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த அழகுப் பெட்டகம் எனலாம். மனிதனிடம் காணப்பெறும் அறிவு, உணர்ச்சி என்ற இரண்டனுள்ளும் உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு பிறப்பதே கவிதை, உணர்ச்சி அறிவைப்போல ஆராய்ச்சிக்கு உட்படுவதில்லை. அதனை அனுபவித்துக் காணலாமே தவிர வேறொன்றும் செய்ய வியலாது.

**கவிதை புனையும் ஆற்றல்**

1. ஆசிரியர் கவிதை புனையும் ஆற்றல் உள்ளவராக இருத்தல்; அல்லது அனுபவிக்கும் ஆற்றல் உடையவராக இருத்தல்.
2. கவிதை அனுபவத்தை மாணவர்க்குக் கூறி, அக்கவிதை இன்பத்தை அனுபவிக்கச் செய்தல்.
3. பண்டைக் காலந்தொட்டுச் சமூக நோக்கிலும், அரசியல் நோக்கிலும் ஏனைய மருத்துவம், ஜோதிடம் போன்ற அவ்வத்துறை சார்ந்த நோக்கிலும் 'கவிதை' பெற்றிருந்த சிறப்பிடத்தை மாணவர்க்கு உணர்த்தல்
4. கவிதைக்கு அழகு சேர்ப்பது அக்கவிதையின் வடிவம். எனவே எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கவிக்கூறுகளாகிய யாப்பிலக்கண அறிவை மாணவர்க்கு உண்டாக்குதல்.
5. ஒத்த ஈரசை அன்றி மூவசைச் சீர் அமையுமாறு எளிய சொற்களைக்கொண்டு தாமறிந்த பொருள்பற்றிக் கவிதை புனையச் செய்தல்.

6. அகர வரிசைக் கவிதை எழுதச் செய்தல்.

7. சங்க இலக்கியப் புலவர்கள்முதல் பிற்காலக் கவிஞர்கள்வரை பாடிய பாடல்களைப் படிக்கும் ஆர்வத்தை உண்டாக்குதல்.

8. கற்றல்-கற்பித்தல் சூழலில் பாடநூல்களில் உள்ள கவிதைகளை ஈடுபாட்டுடன் கற்கச் செய்து போலச் செய்தல் முறையில் மாணவர்களைக் கவிதை புனையச் செய்தல்.

9. எந்தப் பொருளையும் நுணுகிப் பார்த்துச் சிந்திக்கச் செய்து அவற்றுக்குக் கவிதை வடிவம் தரச் செய்தல்.

10. பள்ளி இலக்கிய மன்றங்களில் கவியரங்கம், கவிதைப் போட்டி ஆகிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி மாணவரைப் பங்குபெறச் செய்தல்.

**கவிதை எழுதும் திறனை வளர்க்கும் உத்திகள்**

மாணவர்கள் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்த வகுப்பறையில் வாய்ப்பு உருவாக்கிக் கொடுத்தல்வேண்டும். பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் எழுதும் எளிய கவிதைகளைப் பாராட்டி ஊக்கமூட்டவேண்டும். பாராட்டும்போது தயக்கமின்றிக் கவிதை எழுதுவர்.

மாணவ ஆசிரியர்கள் கவிதை எழுதப் பல்வேறு உத்திகளைப் பின்பற்றச் செய்யலாம். கூத்துக்கு மெய்ப்பாடு இன்றியமையாததுபோலக் கவிதைக்கு உத்தி இன்றியமையாதது. தொடக்கத்தில் குழந்தைகளுக்கான கவிதைகள் எழுதச் செய்யலாம். ஏனெனில், குழந்தை களுக்கான கவிதைகளில் பொருளைவிட ஓசைநயமே முக்கிய இடம்பெறுகிறது. வந்த ஓசையே திரும்பத் திரும்ப வரும்போது குழந்தை மனம் ஆர்வத்துடன் அதில் ஈடுபடுகிறது. எனவே, கவிதை எழுதப் பழகும் மாணவ ஆசிரியர்கள் சொற்களில் எளிமையும் இனிமையும் ஓசை யின்பமும் அமையுமாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

**வேண்டல் உத்தி**

குழந்தைகள் ஒன்றைச் செய்யுமாறு வேண்டி எழுதும் கவிதைகள் இத்தகையதாகும். எடுத்துக்காட்டாக,

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா" என்றும்,

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தங்கச் சிலம்பே சாய்ந்தாடு" என்றும்

எழுதுவது வேண்டல் உத்தியைச் சாரும். இவ்வுத்தியைப் பின்பற்றிக் கவிதை எழுதலாம்.

**ஒலிக்குறிப்பு உத்தி**

குழந்தைகளுக்குக் கதை சொல்லும்போது இடையிடையே ஒலிக்குறிப்புடன் சொன்னால் பெரிதும் மகிழ்வர். மியாவ் மியாவ் பூனைக்குட்டி, தோ தோ நாய்க்குட்டி, குள்ளக் குள்ள வாத்து குவாக் குவா வாத்து என்னும்போது குழந்தைகள் மனம் முழுமையாக அதில் ஈடுபட்டுத் துள்ளிக் குதிக்கும். கவிதையில் கூறும் நிகழ்ச்சிக்கும் சூழலுக்கும் ஏற்ற ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துதல், குழந்தைகளை அந்தச் சூழலோடு ஒன்றுபடச் செய்கிறது.

"சங்குச் சக்கர சாமிவந்து
சிங்குச் சிங்குனு ஆடுச்சாம்"

என்று பாடும்போது குழந்தையும் சிங்கு சிங்கென ஆடுவதைக் காண முடிகிறது. எனவே, ஒலிக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கவிதை எழுதலாம்.

**சங்கிலித் தொடரமைப்பு உத்தி**

ஒன்றைப் பற்றி ஒன்று பின்னிச் செல்லும் சங்கிலித் தொடர்போல, ஒரு பொருளைப் பற்றிப் பிறிதொரு பொருளைச் சொல்லிச் செல்லும் உத்தியில் கவிதை படைப்பது எளிய உத்தி யாகும்.

"பூ பூ என்ன பூ?
மல்லிகைப் பூ.
என்ன மல்லி
குண்டு மல்லி
என்ன குண்டு
வத்தலக் குண்டு"

**தோழமை உத்தி**

குழந்தைகள் உயிரற்ற அஃறிணைப் பொருள்களையும் தனக்குரிய உற்ற தோழனாகக் கருதி, அவற்றோடு பேசுவதைப் பார்க்கிறோம். குழந்தைகள் பொம்மையைக் குளிப்பாட்டி, சோறூட்டி, தாலாட்டி மகிழ்வதைக் கண்டுள்ளோம். குழந்தைகள் பறவை, விலங்குகளோடு பேசுவதுபோல் அமைத்து எழுதும் கவிதைகள் குழந்தைகளைப் பெரிதும் கவரக் கூடியதாகும். எடுத்துக்காட்டாக,

"பூனையக்கா பூனையக்கா
எங்கே போனீங்க?
லண்டனுக்கு ராணியை நான்
பார்க்கப் போனேங்க!
அங்கேபோய் பூனையக்கா
என்ன செஞ்சீங்க?
குட்டி எலி ஒன்றைப் பார்த்து
ஓடி வந்துட்டேங்க!"

என்றும்,

"சிட்டே சிட்டே பறந்து வா
சிறகைச் சிறகை விரித்து வா
கொட்டிக் கிடக்கும் மணிகளைக்
கொத்திக் கொத்தித் தின்னவா? என்றும்

எழுதியுள்ள கவிதைகளைக் காணலாம்.

**அகரவரிசைப் பாடல்**

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போலப் பாடலிலுள்ள முதலெழுத்து அகரவரிசையில் அமையுமாறு கவிதை எழுதத் தூண்டலாம்.

"அம்மா இங்கே வா! வா!
ஆசை முத்தம் தா! தா!
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு!

உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாவர் உள்ளார்?
... ... ... ”

என அகரவரிசையில் பாடல்கள் அமைந்துள்ளமையை எடுத்துக்காட்டிப் பாடலை எழுதச் செய்யலாம்.

**எண்கள் அமைத்துப் பாடுதல்**

எண்களை அமைத்து எழுதும் பாடல்களைப் பின்பற்றிப் பாடல் எழுதச் சொல்வது எளிய முறையாகும்.

“ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஓடாதே நீ மருண்டு
இரண்டும் இரண்டும் நான்கு
இரவில் நன்றாய்த் தூங்கு
மூன்றும் மூன்றும் ஆறு
முகத்தில் சிரிப்பைச் சேரு
நான்கும் நான்கும் எட்டு
நகத்தை நன்றாய் வெட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அறிவே நமக்குச் சொத்து”

இங்ஙனம் எண்களை அமைத்து எழுதும்போது இடையிடையே பின்பற்ற வேண்டிய நீதிக் கருத்துகளையும் சேர்த்து எழுதுவது சிறப்புடையது.

**பண்பை வெளிப்படுத்தும் பாடல்**

பறவை, விலங்குகளைக் காட்டி அவற்றின் நல்ல குணங்களைக் கற்றுக்கொள்ளுமாறு கூறும் பாடல்களையும் காணலாம்.

“சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெ றும்பே
உன்னைப் போல நானுமே
உழைத்திட வேண்டுமே!
ஒன்றன் பின்னே ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய்!
நன்றாய் உம்மைக் கண்டு
நடந்தால் நன்மை யுண்டு!”

என்ற முறையில் பண்பை வெளிப்படுத்துமாறு கவிதை எழுதத் தூண்டலாம்.

**கதைப்பாடல் உத்தி**

குழந்தைகளுக்கான கதைகளைப் பாடல்களாக எழுதச் செய்தல். எடுத்துக்காட்டாக,

“ஆ! இது ஓர் அதிசயம்
கேட்பதற்குச் சந்தோசம்!
ஆமையும் முயலும்
பந்தயம் வைத்துப் போனார்கள்
இரண்டு பேரும் ஓடினர்
முயலோ தூங்கி விட்டது!
ஆமையோ விடாமல்
நகர்ந்து சென்று வென்றது!”

என்பன போன்று அமையும் ஆமையும் முயலும் கதைப் பாடல் நயமிக்கதாகும். தொடக்க நிலையில் கவிதை எழுதுவதற்கு மேற்கூறிய உத்திகளுடன் விடுகதை அமைத்தல், அறிவுரை கூறுதல் போன்ற உத்திகளைக் கையாண்டும் கவிதை எழுதச் செய்யலாம். பின்பு, குறிப்பிட்ட தலைப்பைக் கொடுத்துக் கவிதை எழுதும்படி ஊக்குவிக்கலாம்.

கவிதை எழுதுவதற்கு வேறு எவ்வெம் முறைகளைப் பின்பற்றலாம் என்பதை வகுப்பறையில் விவாதிக்க. ஒரு படிப்பாளிதான் படைப்பாளியாக முடியும். எனவே, கவிதை எழுதுவதற்கு நிறைய கவிதை நூல்களைப் படித்தல், எந்தவொரு நிகழ்வை யும் உற்று நோக்குதல், ஒரு நிகழ்வோடு மற்ற நிகழ்வுகளை ஒப்பிட்டுப் பார்த்தல் போன்ற தன்மைகளை இயல்பாகவே உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

**செய்யுள் உறுப்புகள்**

மரபுக் கவிதைகள் எழுத செய்யுள் உறுப்புகள் பற்றி அறிந்திருப்பது இன்றியமையாதது. எனவே இப்பகுதி, மாணவ ஆசிரியர்கள் தாங்கள் மரபுக் கவிதை படைக்கவும், மரபுக் கவிதை கற்பிக்கவும் உதவும்.

தொல்காப்பியர் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தூக்கு, தொடை,, நோக்கு, பா, அளவியல் முதலிய முப்பத்து நான்கைத் தொகுத்துச் செய்யுள் உறுப்புகளாகக் கூறுகின்றார். இங்குச் சில மட்டுமே விளக்கப்படுகின்றன; மற்றவை மேல் வகுப்புகளில் கற்கலாம்; அல்லது தேவைப்படுவோர் தொல்காப்பியச் செய்யுளியலில் கண்டறிந்துகொள்க.

நாற்கண எழுத்துகளையும், சார்பெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், அளபெடைகள், மாத்திரை, அசை, சீர், தளை, அடி, தொடை, பா முதலியவற்றையும் பள்ளி நிலையிலேயே கற்றிருக்கிறோம். அவற்றை மீள நினைவுகூர்வது செய்யுளியற்றுவதற்கும் செய்யுள் நயம் பாராட்டுதலுக்கும் பா அமைப்புகளைக் கண்டறிவதற்கும் பயனளிக்கும்.

**எழுத்து**

**‘எழுதப்படுவதால் எழுத்து’** எனப்பட்டது. செய்யுள் இயற்றுவதற்கு அடிப்படை எழுத்துகள்.

(எ-டு) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள்: 392)

இக்குறளில் உயிர்க்குறில், உயிர்நெடில், மெய், உயிர்மெய், குற்றியலுகரம் ஆகிய எழுத்துகள் உள்ளதைக் கண்டறிக.ஒவ்வோர் **எழுத்து**க்கும் ஒலியளவு உண்டு. மெய்க்கு அரை மாத்திரை, குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, தன்மாத்திரை யளவிலிருந்து குறைந்து ஒலித்தல் குற்றியலுகரம் எனவும் எழுத்தொலிகளைக் கற்றிருக்கிறோம்.

**அசை**

**எழுத்து அசைத்து இசை கோடலின் அசையே** (யாப்பருங்கலம் விருத்தி-சூ.2)

எழுத்துத் தனித்தோ பல சேர்ந்தோ ஓசையுண்டாகுமாறு பிரிந்து நிற்பது அசை எனப்படும். இது சீருக்கு உறுப்பாகும். பல அசைகள் சேர்ந்தே சொல்லும் சீருமாகின்றன. ‘எண்ணென்ப’ - இச்சீரில் மூன்று அசைகள் உள்ளன. அவை: எண்-ணென்-ப . அதாவது, மூன்று அளவு ஒலிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஓர் அசையாகும். இவ்வசை இரண்டு வகைப்படும். அவை: 1. நேரசை, 2. நிரையசை.

| | | | |
|---|---|---|---|
| நேரசை: | 1. குறில் தனித்து வரல் | - | க |
| | 2. குறில் ஒற்றடுத்து வரல் | - | கல் |

3. நெடில் தனித்து வரல் - கா
4. நெடில் ஒற்றடுத்து வரல் - கால்

நிரையசை:
1. குறில் இணைந்து வரல் - படு
2. குறில் இணைந்து ஒற்றடுத்து வரல் - படும்
3. குறில் நெடில் இணைந்து வரல் - கடா
4. குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரல்- கடாம்

நேரசை ஐந்தெழுத்துக்கு மிகாமலும் நிரையசை ஆறெழுத்துக்கு மிகாமலும் இருக்கும். எழுத்துகளை கணக்கிடும்பொழுது மெய்யெழுத்துகளை நீக்கியே கணக்கிடவேண்டும்.

***சீர்***

சீர் என்னும் சொல்லுக்கு இனிய ஒலி என்று பொருள். "**அசையியைந்து சீர்கொள நிற்றலின் சீரே"** (யாப்பருங்கலம்) அசை ஒன்றோ பலவோ கூடிப் பகுதி பகுதியாகச் சீரான முறையில் அடிக்கு உறுப்பாக அமைவது. ஓரசைச்சீர், ஈரசைச்சீர், (மாச்சீர், விளச்சீர்), மூவசைச்சீர் (காய்ச்சீர், கனிச்சீர்), நாலசைச்சீர் (பொதுச்சீர்) எனச் சீர்கள் அசையளவு பொருத்துப் பெயர் பெறும்.

***ஓரசைச் சீர்***

நேரசையோ நிரையசையோ தனியாக நின்று, ஒரு சீராக வருவது ஓரசைச்சீர் எனப்படும். இது வெண்பாவின் ஈற்றடியில் இறுதிச் சீராக வரும். பாடலில் வேறெங்கும் வராது; வரவும் கூடாது.

| ***சீர்*** | **வாய்பாடு** |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | மலர் |

***ஈரசைச் சீர்***

ஈரசைகள் சேர்ந்து ஒரு சீராக அமைவது ஈரசைச்சீர் எனப்படும். நேரசையும் நிரை யசையும் தம்முள் இணைந்தும் மாறியும் ஈரசைகளாக வரும். நேர் அசையில் முடிவது இரண்டும் நிரை அசையில் முடிவது இரண்டுமாக ஈரசைச் சீர்கள் நான்காம். நேர் அசையில் முடிவதனை மாச்சீர் என்றும், நிரையில் முடிவதனை விளச்சீர் எனவும் கூறுவர். ஈரசைச் சீரினை இயற்சீர் அல்லது ஆசிரிய உரிச்சீர் எனவும் அழைப்பர்.

| ***சீர்*** | **வாய்பாடு** | | |
|---|---|---|---|
| நேர் நேர் | தே மா | | |
| நிரை நேர் | புளி மா | மாச்சீர் | இயற்சீர் |
| நிரை நிரை | கரு விளம் | | அல்லது |
| நேர் நிரை | கூ விளம் | விளச்சீர் | ஆசிரிய உரிச்சீர் |

***மூவசைச் சீர்***

ஈரசைச்சீர் நான்கின் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனியாகக் கூடி வருதலாகிய எட்டும் மூவசைச் சீர்களாம்.

| ***சீர்*** | | **வாய்பாடு** | |
|---|---|---|---|
| நேர் நேர் நேர் | - | தே மாங் காய் | |
| நிரை நேர் நேர் | - | புளி மாங் காய் | |
| நிரை நிரை நேர் | - | கரு விளங் காய் | |
| நேர் நிரை நேர் | - | கூ விளங் காய் | காய்ச் சீர்கள் |

| | | | |
|---|---|---|---|
| நேர் நேர் நிரை | - | தே மாங் கனி | |
| நிரை நேர் நிரை | - | புளி மாங் கனி | |
| நிரை நிரை நிரை | - | கரு விளங் கனி | |
| நேர் நிரை நிரை | - | கூ விளங் கனி | கனிச் சீர்கள் |

இவையெட்டும் உரிச்சீர் எனவும் பெறும். இவற்றுள் காய்ச்சீர்கள் வெண்சீர் எனவும், கனிச்சீர்கள் வஞ்சிச்சீர் எனவும் கூறப்பெறும்.

**நாலசைச் சீர்**

மூவசைச் சீர் எட்டின் இறுதியிலும் நேர், நிரை அசை சேர, வரும் பதினாறும் நாலசைச் சீர் எனக் கூறப்படும்.

| **சீர்** | | **வாய்பாடு** |
|---|---|---|
| நேர் நேர் நேர் நேர் | - | தே மாந் தண் பூ |
| நிரை நேர் நேர் நேர் | - | புளி மாந் தண் பூ |
| நிரை நிரை நேர் நேர் | - | கரு விளந் தண் பூ |
| நேர் நிரை நேர் நேர் | - | கூ விளந் தண் பூ |
| | | |
| நேர் நேர் நிரை நேர் | - | தே மா நறும் பூ |
| நிரை நேர் நிரை நேர் | - | புளி மா நறும் பூ |
| நிரை நிரை நிரை நேர் | - | கரு விள நறும் பூ |
| நேர் நிரை நிரை நேர் | - | கூ விள நறும் பூ |
| | | |
| நேர் நேர் நேர் நிரை | - | தே மாந் தண் நிழல் |
| நிரை நேர் நேர் நிரை | - | புளி மாந் தண் நிழல் |
| நிரை நிரை நேர் நிரை | - | கரு விளந் தண் நிழல் |
| நேர் நிரை நேர் நிரை | - | கூ விளந் தண் நிழல் |
| | | |
| நேர் நேர் நிரை நிரை | - | தே மா நறு நிழல் |
| நிரை நேர் நிரை நிரை | - | புளி மா நறு நிழல் |
| நிரை நிரை நிரை நிரை | - | கரு விள நறு நிழல் |
| நேர் நிரை நிரை நிரை | - | கூ விள நறு நிழல் |

குறிப்பு: ஓரசை, ஈரசை, மூவசை, நாலசைச் சீர்களுக்கான அசைகளும், வாய்பாட்டுக்கான அசைகளும் பொருந்தி வருவதைக் காண்க.

**தளை**

**"சீர் இரண்டு தட்டு நிற்றலின் தளையே"** (யாப்பருங்கல விருத்தி: சூ.2)

**தளை** யாவது கட்டுதல், சேர்த்தல் என்னும் பொருளுடைத்து. தளை என்பதற்குத் தாளப் பொருத்தமாகும். இசைக்கு மிக நெருங்கிய தொடர்புடைய தாளத்தை மிக நுட்பமானமுறையில், செவிக்குப் புலனாகும் முறையில், சொற்களை அமைப்பதே தளையாகும். பாவுக்கேற்ற ஓசை வருமாறு சீர்களைச் சேர்த்தல். ஓரடியில் நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியாயினும் ஒன்றாமலாயினும் ஓசை அமையச் சேர்ந்திருப்பது தளையாகும். ஒன்றுதலாவது நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருவது. இத்தளை நேரொன்று ஆசிரியத்தளை, நிரையொன்று ஆசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என ஏழுவகைப்படும். இவற்றின் விளக்கத் தையும் விரிவையும் தெளிவுற வேண்டுவோர், செய்யுளியலிலும் பார்வை நூல்களிலும் கண்டு தெளிக.

**அடி**

**"அத்தளை அடுத்து நடத்தலின் அடியே"** (யாப்பருங்கல விருத்தி: சூ. 2)

தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது **அடி** யெனப்படும். அவ்வடிகள் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகைப்படும். **குறளடி** - இருசீரான் வருவது; நாலெழுத்து முதல் ஆறெழுத்துவரை அமையும். **சிந்தடி** - முச்சீரான் வருவது; ஏழெத்துமுதல் ஒன்பது எழுத்துவரை அமையும். **அளவடி** - நாற்சீரான் வருவது; பத்தெழுத்து முதல் பதினான்கு எழுத்துவரை அமையும். அளவடியை நேரடி என்றும் கூறுவர். **நெடிலடி** - ஐந்து சீராய் வரும்; பதினைந்துமுதல் பதினேழு எழுத்துவரையிலும் அமையும். **கழிநெடிலடி** - ஐந்து சீருக்கு மேற்பட்டு வரும்; பதினெட்டு எழுத்துமுதல் இருபது எழுத்தளவுவரை அமையும்.

**தொடை**

**"அடியிரண்டும் தொடுத்தல் முதலாயின தொடையே"** (யாப்பருங்கல விருத்தி: சூ. 2)

பல அடிகளி லாயினும் பல சீர்களிலாயினும் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பதைத் **தொடை** என வழங்குவர். அது எதுகை, மோனை, இயைபு முரண், அளபெடை என ஐவகைப்படும். இவை ஒவ்வொன்றும் அவை வருமிடங்களை யொட்டி எட்டு எட்டு வகையாகப் பாகுபாடு செய்யப் பெறும்.

**மோனைத்தொடை**

பல அடிகளிலாவது, ஓரடியின் பல சீர்களிலாவது முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது. சிறுபான்மை இனவெழுத்துகளும் மோனையாய் வரும். ஓரடியின் சீர்களிலெல்லாம் மோனை வந்தால், அது முற்றுமோனை எனப்படும்.

(எ-டு) **க**ற்க **க**சடறக் **க**ற்பவை **க**ற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள்: 391)

முதற் சீரில் வந்த முதலெழுத்தே அடுத்து வருஞ் சீர்களிலும் முதலெழுத்தாக வந்துள்ளதைக் காண்க. சீர் தோறும் மோனை பெற்று வந்துள்ளதால் இது முற்றுமோனை எனப்படும். செய்யுளின் முதலடியில் முதலெழுத்தாக வந்த எழுத்தே அடுத்து வரும் அடிதோறும் முதலெழுத்தாக வந்தால் அதனை அடிமோனைத் தொடை என்பர்.

(எ-டு) **தீ**யவை தீய பயத்தலால் தீயவை
**தீ**யினும் அஞ்சப்படும். (குறள்: 202)

**எதுகைத்தொடை**

அடிதொறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது; சிறுபான்மை இனவெழுத்துகளும் எதுகையாம். சிலவிடங்களில் எதுகைச் சொல்லின் முதலெழுத்திற்கும் இரண்டாம் எழுத்திற்கும் இடையே பிறிதொரு மெய் பெற்று வருவதும் உண்டு; இதனை 'ஆசிடையிட்ட எதுகை' என வழங்குவர். (எ.டு): ஆவேறு - பா**ல்**வேறு; கா**ய்**மாண்ட - பூமாண்ட.

(எ-டு) ஈ**ன்**றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சா**ன்**றோர் பழிக்கும் வினை. (குறள்: 656)

முதலெழுத்து ஒலியளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவருதலைக் காண்க.

**இயைபுத்தொடை**

செய்யுளின் அடிதோறும் ஈற்றெழுத்தோ சீரோ சொல்லோ தொடரோ ஒன்றிவரின் அது இயைபுத் தொடை எனப்படும்.

(எ-டு) அப்பாநான் வேண்டுதல் கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் **வேண்டும்**
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் **வேண்டும்**
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் **வேண்டும்**
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் **வேண் டுவனே.**

(திருவருட்பா: சுத்த சன்மார்க்க வேண்டுகோள்-1)

ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே
ஆதி என்று அருளிய **அருட்பெருஞ்ஜோதி**
நல்அமுது என்ஒரு நாஉளம் காட்டி என்
அல்லலை நீக்கிய **அருட்பெருஞ்ஜோதி**

(திருவருட்பா: அருட்பெருஞ்சோதி அகவல்- வரி:269-270)

**முரண்தொடை**

சொல்லினாலாவது பொருளினாலாவது மாறுபடத் தொடுப்பது முரண்தொடை எனப்படும். முரண் எனில் மாறுபாடு. செய்யுள் அடிகளில் சொற்கள் முரணாக (ஒன்றுக்கொன்று எதிர்ச்சொல்லாக) அமைந்து வருவது. இம்முரண் இரண்டு வகைப்படும். அவை: 1. சொல் முரண், 2. பொருள் முரண் என்பன.

சொல் முரண்:

(எ-டு) விண்ணும் மண்ணும்; நீரும் நெருப்பும்; இரவு பகல்; கீரியும் பாம்பும்;

போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்.

பொருள் முரண்:

(எ-டு) **“பொன்னின்** அன்ன பொலிவுறு மேனியர்
**இரும்பின்** அன்ன இளகிய நெஞ்சினர்.”

**“காலை**யும் பகலும் கையறு **மாலை**யும்” (குறுந்தொகை: 32)

**அளபெடைத்தொடை**

செய்யுளில் அளபெடை வரத் தொடுப்பது அளபெடைத் தொடையாகும்.

(எ-டு) அறனழீ**இ** அல்லவை செய்தலின் தீதே
புறனழீ**இ** பொய்த்து நகை. (குறள்: 182)

எதுகை, மோனை, முரண், இயைபு, அளபெடை எனத் தொடை ஐந்து வகைப்படும்.

**செந்தொடை**

எதுகை, மோனை, முரண், இயைபு, அளபெடை ஆகிய வகைத் தொடைகளும் அமையா திருப்பது செந்தொடை எனப்படும்.

(எ-டு) பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே

இச்செய்யுளில் எந்தத் தொடையும் இடம்பெறாமையைக் கண்டறிக.

## இரட்டைத்தொடை

செய்யுளில் ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத்தொடை எனப்படும்.

(எ-டு) ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்.

இதனுள் முதலடியில், முன்வந்த சொல்லே அடுத்து முழுவதும் வந்துள்ளதைக் காண்க.

## அந்தாதித்தொடை

முன்னின்ற பாட்டின் இறுதியிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின்வரும் பாட்டின் முதலாக அமையப் பாடுவது அந்தாதித்தொடை எனப்படும். இவ்வாறு இயற்றப்படும் நூலின் இறுதிச் செய்யுளின் அந்தமே, முதற் செய்யுளின் ஆதியாக அமைவது மண்டலித்தல் எனப்படும்.

(எ-டு) **உலகுடன்** விளக்கும் ஒளிதிகழ் அவிர்**மதி**
**மதி**நலன் அழிக்கும் வளங்கெழு **முக்குடை**
**முக்குடை** நிழற் பொற்புடை **யாசனம்**
**ஆசனத்** திருந்த திருந்தொளி **அறிவனை**
**அறிவு**சேர் உள்ளமோ டருந்தவம் புரிந்**து**
**து**ன்னிய மாந்தர தென்**ப**
**ப**ன்னருஞ் சிறப்பின் விண்மிசை **உலகே.**

இச்செய்யுளின் இடம்பெற்று மதி, முக்குடை, ஆசனம், அறிவு, து, ப, உலகு ஆகியவை அந்தாதி களாக வந்துள்ளதாகக் காண்க. (அந்தம்-இறுதி, ஆதி - முதல்)

## பா

அசை, சீர் முதலிய உறுப்புகளைப் பெற்று வருகின்ற பாக்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். கலிப்பா ஓசைநயமிக்கது. இப் பாக்களின் ஓசை முறையே செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் எனப்படும். மேலும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களுள் விருத்தம் ஒலிநயத்தைப் புலப்படுத்துவதில் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. தமிழில் தோன்றிய முதல் விருத்த நூல் சீவக சிந்தாமணி. விருத்தத்தில் கரை கண்டவர் கம்பர். அதனாலேயே விருத்தமெனும்ஒண்பாவிற்கு உயர் கம்பன் எனக் கம்பர் போற்றப்பட்டார்.

## வெண்பா

வெண்பாவின் ஈற்றடி முச்சீராக வரும்; ஏனைய அடி நாற்சீராக வரும். இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பயிலப் பெறும். நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் ஒன்றனைக்கொண்டு முடியும். வெண்பா செப்பலோசை உடையது. வெண்பா ஐந்துவகைப்படும். அவை: குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா ஆகியன.

(எ-டு) மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். (நல்வழி:26)

**ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவை அகவற்பா எனவும் கூறுவர். இது அகவலோசையுடையது. ஆசிரியப்பாவில் ஈரசைச் சீர்கள் மிகுதியாகப் பெற்று வரும்; மற்றைச் சீர்கள் சிறுபான்மையாக வரும்; நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளைப் பயிலப் பெறும். கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இருசீர்கள் மட்டும் வாரா. மூன்றடி சிற்றெல்லையாகவும் பேரெல்லை பாடுவார் மனக்கருத்தைப் பொருத்தும் அமையும். இதன் ஈற்றடி ஏ, ஓ, ஏன், ஈ, ஆ, ஔ என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றால் முடியும். ஆசிரியப்பாவின் வகைகளாவன: நேரிசை யாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பன. அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை நூல்களிலுள்ள பாடல்களை நோக்குக. ஆசிரிய விருத்தப் பா:

(எ-டு) பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (திருவாசகம், பிடித்த பத்து - 9)

**கலிப்பா**

கலிப்பா துள்ளலோசை பெற்று வருவது. தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பனகொண்டு அளவடியான் வரும். வெண் சீர்கள் மிகுதியாகவும் பிறசீர்கள் சிறுபான்மையாகவும் வரும். தேமா, புளிமா, கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் நான்கு சீர்கள் மட்டும் வரப்பெறும். கலித்தளையும் பிற தளைகளும் வரும். கட்டளைக் கலித்துறை என்பது எழுத்தெண்ணிப் பாடப்பெறும். நேரசைத் தொடங்கிப் பதினாறு எழுத்துகளும், நிரையசைத் தொடங்கிப் பதினேழு எழுத்துகளும் பெற்று வரும். (கட்டளை - அளவு). கலி விருத்தம்:

(எ-டு) உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (பெரியபுராணம், பாயிரம்)

**வஞ்சிப்பா**

வஞ்சிப்பா தூங்கலோசை உடையது. இரண்டு சீர்களைக் கொண்ட அடியாலேனும் மூன்றுசீர்களைக் கொண்ட அடியாலேனும் வரும். அளவடி முதலிய மற்றயை அடிகள் வரப் பெறா. பெரும்பான்மையும் தன்தளையும் சிறுபான்மை பிறதளையும் தழுவி வரும். தனிச் சொல் பெற்று அகவற் சுரிதகத்தால் முடிவு பெறும்; வெள்ளைச் சுரிதகம் வரப்பெறாது. வஞ்சி விருத்தம்:

(எ-டு) ஊனு யர்ந்த வுரத்தினான்
மேல்நி மிர்ந்த மிடுக்கினான்
தானு யர்ந்த தவத்தினான்
வானு யர்ந்த வரத்தினான்.

(கம்பராமாயணம், யுத்த காண்டம், கும்பகருணன் வதைப்படலம் - 120)

**மருட்பா**

மருட்பா முன்னிரண்டடி வெண்பாவாக வரும்; பின்னிரண்டடி ஆசிரியப்பாவாக வரும். வெண்பாவும் அகவற்பாவும் கலந்து வருவதால் மருட்பா என வழங்கப் பெறும். புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா என மருட்பா நான்கு வகைப்படும்.

## ஆ) சிறுகதை எழுதுதல்

மாணவர்களிடம் வளர்க்கவேண்டிய உயர்நிலைத் திறன்களுள் சிறுகதை எழுதும் ஆற்றல் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஏனெனில், சிறுகதையை மாணவர்கள் தம் குழந்தைப் பருவம் முதலே தம் பாட்டன் பாட்டியிடமும் தாய் தந்தையிடமும் கேட்டறிந்து மகிழ்ந்த அனுபவம் அவர் உள்ளத்திற்குள் இழையோடிக் கொண்டிருக்கும்.

சிறுகதை நிகழ்வுகள் மாணவர்தம் அன்றாட வாழ்வில், அவர்தம் குடும்பச் சூழலில், அவர் காணும் சமுதாயச் சூழலில் நடக்கும் நிகழ்வுகளோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு ஏதுவாகக் காணப்படும்.

**சிறுகதையின் வடிவம்**

வாழ்வின் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்றை எடுத்து அழகுபடச் சித்திரிப்பதே சிறுகதை யாகும். ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளைக் காண்கிறோம். ஆனால், அனைவருமே அதனை ஆழ்ந்து நோக்கி உணர்வதில்லை. நாம் உணராத ஒன்றை உணர்ந்தாலும் பிறருக்கு உணர்த்தமுடியாத ஒன்றைக் கற்பனை வளமிக்க கலைஞன் உணர்ந்து சிறுகதை ஆக்கிப் பிறரும் உணருமாறு செய்கிறான்.

சிறுகதை படைப்பைப் பற்றிக் கூறும் எழுத்தாளர் அகிலன்,

‘கதை அளவில் மிகச் சிறியதாக இருக்கலாம்; பெரியதாக இருக்கலாம்; கதா பாத்திரங்கள் ஒன்றோ பலவோ இருக்கலாம்; கதை நடக்கும் காலம் கூட ஐந்து நிமிடமோ, ஒரு நாளோ, ஒன்பது ஆண்டுகளோ இருக்கலாம். ஆனால், கதையைப் படித்து முடித்த பின்பு உணர்ச்சி மட்டும் படிப்பவர் நெஞ்சில் நிறையவேண்டும். எழுதி முடித்த கதைக்குப் பின்னேயும் முன்னேயும் உள்ள எழுதாத கதைகள் படிப்போர் உள்ளத்தில் விரியவேண்டும். இதில் வெற்றி பெற்றுவிட்டால் அஃது அருமையான சிறுகதை என்பதில் ஐயமில்லை. முழுமையான வாழ்வையோ வாழ்வின் பல கோணங்களையோ சிறுகதையில் எதிர்பார்ப்பதற்கில்லை. வாழ்க்கையின் ஒரு கோணம் வாழ்க்கை வெள்ளத்தில் ஒரு சுழிப்பு உணர்ச்சிப் பெருக்கில் ஒரு திருப்பம் இவற்றுள் ஒன்று போதும் சிறுகதைக்கு’ என விளக்குவார்.

‘அரை மணியிலிருந்து இரண்டரை மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக் கூடியதாகச் சிறுகதை அமையவேண்டும்’ என்பார் எட்கார் ஆலன்போ எனும் அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர்.

**தமிழில் சிறுகதை**

தமிழில் நல்ல சிறுகதை தோன்றிய காலம் மணிக்கொடி இதழ் வெளிவந்த காலமாகும். அவ்விதழில் கதை எழுதியவர்களான புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ரா., பி.எஸ். இராமையா, க.நா. சுப்பிரமணியன், ந. சிதம்பர சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா ஆகியோர் மணிக்கொடி ஆசிரியர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

வ.வே.சு. ஐயரின் ‘மங்கையர்க்கரசியின் காதல்’, புதுமைப்பித்தனின் ‘காஞ்சனை’, ந. சிதம்பர சுப்பிரமணியத்தின் ‘சூரியகாந்தி’ ஆகிய சிறுகதைத் தொகுப்பு நூல்களும், அகிலனின் ‘நான் கதை எழுதின கதை’, ஜெயகாந்தனின் ‘யாருக்காக அழுதான்’ போன்ற சிறுகதைகளும் என்றும் நினைவில் நிற்பவை.

சங்க இலக்கியச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதி வெற்றி பெற்றவர்கள் டாக்டர் மு.வரதராசனார், கி.வா.ஜகந்நாதன் ஆகியோர். ஆர்.சூடாமணி, அனுத்தமா, இராஜம் கிருஷ்ணன், குகப்பிரியை ஆகியோர் பெண் சிறுகதை எழுத்தாளர்களில் எண்ணத் தக்கவர் ஆவர்.

**சிறுகதை எழுதும் திறன் வளர்த்தல்**

1. தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்துதல்.
2. பள்ளி நூலகத்தில் உள்ள சிறுகதைகளைப் படித்துக் குறிப்பெடுக்கச் செய்தல்.
3. வகுப்பறைச் சூழலில் ஒரு சிறுகதைக்கான தொடக்கத்தை ஆசிரியரோ அன்றி மாணவரோ தொடங்கி, மாணவர் அனைவரையும் அக்கதை வளர்ந்து முடியும் போக்கில் கூறச் செய்தல்.
4. கதைக்கான கருப்பொருள் ஒன்றைக் கூறி எழுதச் செய்தல்.
5. பாதிக் கதையைக் கூறி, மீதிக் கதையை மாணவரைக் கொண்டு முடிக்கச் செய்தல்.
6. சிறுகதைப் போட்டிகள் நடத்தி, மாணவரைப் பங்குபெறச் செய்தல்.
7. சிறுவர் இதழ்களில் மாணவர் தம் சிறுகதைகள் இடம்பெறுவதற்காக ஆற்றுப் படுத்துதல்.
8. வகுப்பறை கையெழுத்து இதழ்கள், பள்ளி கையெழுத்து இதழ்கள் ஆகியவற்றை உருவாக்கிச் சுழற்சிமுறையில் மாணவர் அனைவரையும் அவ்விதழில் சிறுகதை எழுத ஊக்குவித்தல் போன்ற பொருத்தமான செயல்பாடுகளைக்கொண்டு மாணவர்க்குச் சிறுகதை எழுதும் திறனை உருவாக்கலாம்.

சிறுவர் இதழ்களிலும் நாள், வார, பொது இதழ்களிலும் வெளியாகும் சிறுகதை களைத் தனித்தனித் தொகுப்பாக்குக.

## 5. கலந்துரையாடலை நெறிப்படுத்தல்

கலந்துரையாடல் என்பது ஒரு தலைப்பை முன்னிறுத்தி இரண்டுக்கு மேற்பட்டவர்கள் உரையாடுவது. பெரும்பாலான நேரங்களில் தலைப்புக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களாகப் பிரித்து அக்குழுக்கள் தத்தம் கருத்துகளைக் கலந்துரை செய்து அனைத்துக் குழுக்களும் இணைந்த பெருங்குழுவின் கருத்துரைபடி முடிவெடுத்தல் நிகழும். கலந்துரையாடல் பல்வகை உயர் ஆற்றல்களை ஏற்படுத்தித் தரும் வல்லமை உடையது.

**கலந்துரையாடல் நெறிகள்**

நடுநிலை வகுப்புகளுக்கு ஓரளவு பொருந்தும். மேனிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இதனை நன்கு கையாள முடியும். இம்முறையின்மூலம் வழிகாட்டல் திறன், பலதரப்பட்ட கருத்துகளைத் தொகுத்தல், செயலாற்றும் முறைகளை வரையறுத்தல், பிறர் கருத்தை ஊன்றிக் கேட்டல், மாற்றுக் கருத்துகளை எதிர்கொள்ளுதல், தன்னுடைய எண்ணங் களை வெளியிடுதல் போன்ற உயர்நிலைத் திறன்கள் வளர்கின்றன.

### கலந்துரையாடலைக் கையாளும் செயல்பாடுகள்

கலந்துரையாடல் முறையைக் கையாளும்பொழுது தலைப்புத் தேர்ந்தெடுத்தல், குழுப் பிரித்தல், தலைவர், பதிவாளர் பணியமர்த்தல், முடிவுகளைப் பெருங்குழுவில் எடுத்துரைக்கச் செய்தல் ஆகிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

**தலைப்புத் தேர்ந்தெடுத்தல்**

வகுப்பு நிலைக்கும் பங்கேற்கும் மாணவர் அறிவுத் திறத்துக்கும் ஏற்பத் தலைப்புகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நடுநிலைப் பள்ளி நிலையில் தொலைக்காட்சியால் ஏற்படுவது நன்மையா? தீமையா? என ஆராய்தல், அறிவியல் வளர்ச்சி ஆக்கத்திற்கா? அழிவிற்கா? போன்ற தலைப்புகளில் கலந்துரையாடலாம்.

**குழுப் பிரித்தல்**

கலந்துரையாடலில் பங்கேற்போரைக் 'குழுக்களாக'ப் பிரிக்கும்பொழுது, சிலவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும். அவை: 1. ஆறுபேருக்கு மேற்பட்டோர் குழுவில் இடம்பெற லாகாது. 2. ஒத்தக் கருத்துடையவரோ ஒருவருக்கு ஒருவர் இணக்கமானவரோ ஒரு குழுவில் இடம்பெறலாகாது. 3. ஆண்களும் பெண்களும் அடங்கிய வகுப்பில் அவர்களின் எண்ணிக்கைக் கேற்ப விழுக்காட்டு நிலையில் இருபாலரும் அனைத்துக் குழுக்களிலும் இடம்பெறச் செய்ய வேண்டும். 4. குழு அமைத்த பிறகு ஆசிரியர் தம்பட்டறிவாலும் அறிவுத் திறத்தாலும் குழுக்கள் சீர்மையுடன் அமைந்துள்ளனவா என முடிவு செய்து தேவையெனின் உறுப்பினர்களைக் குழு மாற்றம் செய்து சீர்மைப்படுத்தவேண்டும்.

**தலைவர், பதிவாளர் பணியமர்த்தல்**

குழு உறுப்பினரின் கலந்துரையாடலை முறைப்படுத்தத் தலைவரையும் தகவல்களைக் குறிப்பெடுக்கப் பதிவாளரையும் பணியமர்த்த வேண்டும். குழு உறுப்பினர் அனைவருக்கும் தலைவர் உரிய வாய்ப்பு அளித்துக் கலந்துரையாடல் சிறப்பாக நடைபெற வழிவகுக்க வேண்டும்.

**முடிவுகளைப் பெருங்குழுவின் கருத்துக்கு வைத்தல்**

பல குழுக்களாகப் பிரிக்கப் பெற்றுக் கலந்துரையாடல் நிறைவுற்றபின் முடிவுகளை அனைத்துக் குழுவும் இணைந்த பெருங்குழுவின் கருத்துரைக்கு வைத்து முடிவுகளில் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் இணைக்கவேண்டும்.

**ஆசிரியப் பணி**

கலந்துரையாடல் தொடங்கும்பொழுது தலைப்புக்கேற்ப முடிவெடுக்க வேண்டியவை பற்றிக் குழுவினரிடம் தெரிவித்துக் கலந்துரையாடலைத் தொடங்கி வைக்கவேண்டும். கலந்துரையாடல் திசை திரும்பிச் செல்லாமல் நெறிப்படுத்துவதும் ஆசிரியர் கடமை யாகும்.

## தொகுப்புரை

இவ்வியலின்கண் மாணவ ஆசிரியர் சிறப்பாக வளர்த்துக்கொள்ள வேண்டிய ஆறு உயர் நிலைத் திறன்களைக் கற்றறிந்தோம். கடிதம், அதன்வகை, நோக்கம், எழுதும்முறை ஆகியன பற்றிய நுட்பங்களை அறிந்தோம். கட்டுரை எழுதும் நோக்கங்கள், கட்டுரையின் வகை, கட்டுரை எழுதும் முறை ஆகியன பற்றி அறிந்தோம். பேச்சாற்றலின் இன்றியமையாமை, பேச்சாற்றலின் சிறப்பு, அதனை வளர்க்கும்முறை முதலான செய்திகளில் தெளிவு பெற்றோம். கவிதை புனைதல், குழந்தைப் பாடல்கள் இயற்றுதல், சிறுகதை எழுதுதல், சிறுவர்க்கான இதழ்கள் படைத்தல் முதலான படைப்பாற்றல் திறன் வளர்க்கும் பாங்கினை யறிந்தோம். மேலும், கலந்துரையாடலின் பயன், கலந்துரையாடலைக் கையாளும் முறைகள்பற்றியும் ஆசிரியர் கடமை பற்றியும் இவ்வியல் மூலம் அறிந்துகொண்டோம்.

# 4. பிழை ஆய்வும் குறை களைதலும்

## அறிமுகம்

ஒரு மொழியைக் கற்கும்போது கற்போர் பல்வேறு காரணங்களால் பிழைசெய்வது இயற்கை. ஆனால், அப்பிழைகளைக் களைந்து அம்மொழியை முறையாகப் பயன்படுத்தச் செய்வது ஆசிரியரின் கடமை. ஆசிரியர், தம் மாணவர்கள் செய்யும் பிழைகளைச் சுட்டிக் காட்டு வதால் மட்டுமே அவர்களின் பிழைகளைக் களைய முடியாது. அதேபோல், பிழையான மொழி யமைப்பிற்குப் பதிலாக முறையான அமைப்பைத் தருவது மட்டும் போதாது; நோய் நாடுவதோடு நோயின்முதலும் நாடவேண்டும். அப்பொழுதுதான், நோயாளியை முற்றிலும் குணமாக்க வியலும். அவ்வாறே பிழைக்கான காரணங்களை அறிந்து அவற்றை முற்றிலுமாக நீக்கவேண்டும். அவ்வாறு நீக்குவதற்காகப் பிழைகளைத் தொகுத்துக் காரணங்களை ஆராய்ந்து காண்பதே பிழை ஆய்வு.

பிழை ஆய்வு ஆசிரியருக்குப் பலவகைகளில் பயன்படுகிறது. பிழையாய்வின் வழியாக மாணவர்களின் மொழியறிவு, குறிப்பிட்ட நிலையில் எப்படி யிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும் அவர்களின் மொழியறிவைப் பாதிக்கும் காரணங்களைக் கண்டு நீக்கவும் உதவுகிறது. மேலும், மாணவர்கள் மொழி கற்கும் முயற்சியில் எந்த அளவு ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் பிழை ஆய்வு ஆசிரியருக்குத் தெரியும். இது ஆசிரியர்கள் மாணவர்களிடம் ஆர்வத்தைத் தூண்டப் பலவழிகளில் முயற்சிகளை மேற்கொள்ள உதவும். மேலும், பிழை ஆய்வின் வழியாக ஆசிரியர், தம் கற்பித்தல் உத்திகளைச் சோதித்துப் பார்த்துக்கொள்ள முடியும். இதனால் அவர், தம் கற்பித்தல் உத்திகளை மாற்றிக்கொண்டு கற்பித்தலை மேலும் சிறப்பாக்க வியலும். இதேபோன்று பாடத்திட்டம், பாடநூல் ஆகியவற்றில் இருக்குங் குறைகளையும் உணர்ந்துகொள்ளப் பிழை ஆய்வு உதவும். பிழை ஆய்வால் பல பயன்கள் இருந்தாலும் அதன் முதன்மை நோக்கம் மாணவர்களின் பிழைகளைக் களைவதே.

### படிநிலைகள்

1. தவறும் பிழையும்
2. பிழைக்கான காரணங்கள்
3. பிழை வகைகள்
4. பிழை காணல்
5. கற்றலில் பிழையின் இடம்
6. குறை களைதல்

## 1. தவறும் பிழையும்

பிழையென்பது மரபிலிருந்து வழுவது. அதாவது நாம் எதிர்பார்க்கும் வெளிப்பாட்டை விடக் கற்பவரிடமிருந்து கிடைக்கும் வேறுபட்ட வெளிப்பாடு. அப்படியானால், மாணவர்களிடம் காணப்படும் வேறுபட்ட வெளிப்பாடுகள் எல்லாம் பிழைகள் என்றால் இல்லை. அவை பிழைகளாகவும் இருக்கலாம், தவறுகளாகவும் இருக்கலாம். பிழைக்கும் தவற்றுக்கும் உள்ள

வேறுபாடு என்ன? தவறு என்பது சோர்வு, வேகம், கவனக்குறைவு, மன உளைச்சல் முதலிய காரணங்களால் ஏற்படுவது. பிழை யென்பது மாணவன் முறையாகக் கற்றுக்கொள்ளாத காரணத்தால் தோன்றுவது. அதாவது, தவறு என்பது மாணவர்கள் மொழியை வெளிப்படுத்து வதில் எற்படுங் குறை; பிழை யென்பது கற்றுக்கொள்வதில் ஏற்படுங் குறை. தவற்றுக்குக் கல்வியியற் காரணம் எதுவும் இல்லாததால் எப்போதாவது ஏற்படும். கற்றலில் ஏற்பட்ட குறையின் காரணமாகத் தோன்றுவதால் பிழை எல்லா விடங்களிலும் தோன்றும் அல்லது தோன்றுகின்ற இடங்களில் ஏதாவதுஓர் ஒழுங்கு இருக்கும். மேலும் ஒரு மாணவன், தான் செய்த தவறுகளை மீண்டும் ஒருமுறை பார்த்தால் அத்தவறுகளைத் திருத்திக்கொள்ள வியலும். ஆனால், பிழைகளை அவனால் உணர்ந்துகொள்ளவே இயலாது. இனிச் சில எடுத்துக்காட்டு களைப் பார்ப்போம்.

ஒரு மாணவன் ஓரிடத்தில் 'பொறுமை' என்னுஞ் சொல்லைப் 'பெறுமை' யென எழுதி யிருக்கிறானென வைத்துக்கொள்வோம். இது தவறா? பிழையா? என முடிவு செய்ய மற்றப் பல இடங்களையும் பார்க்கவேண்டும். அம்மாணவன் சிலவிடங்கள் தவிர மற்றவிடங்களில் 'பொ' எழுத்தை முறையாக எழுதியிருந்தால், அவன் செய்தது தவறு. அப்படியில்லாமல் எங்கெல்லாம் 'பொ' எழுத்து வருகிறதோ அங்கெல்லாம் 'பெ' என எழுதியிருந்தால் அது பிழை.

இன்னொரு மாணவன் சொற்களில் 'ந்' வரவேண்டிய இடங்கள் பலவற்றிலும் 'ன்' பயன்படுத்துகிறான் என வைத்துக்கொள்வோம். அப்போது, அது பிழையா என எப்படி முடிவு செய்வது? அவன் 'ந்' வரவேண்டிய எல்லாவிடங்களிலும் 'ன்' எழுத்தை எழுதாமல் சில விடங்களில் 'ந்' சிலவிடங்களில் 'ன்' என இரண்டையும் எழுதியுள்ளான். எனவே, 'ந்' எழுதியுள்ள இடங்கள் எவை, 'ன்' எழுதியுள்ள இடங்கள் எவையெனப் பார்க்கவேண்டும். 'ந்' சொல்லின் முதலில் ந, நா, நி... என உயிரெழுத்துடன் சேர்ந்து வரும். சொல்லிடையில் தனியாகவும் (பந்து) உயிரெழுத்துடன் சேர்ந்தும் (ஓநாய்) வரும். இவற்றுள் சொல்லின் முதலில் 'ந்' எழுதியும், சொல்லின் இடையில் 'ன்' எழுதியும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். (எ-டு) பன்து, ஓனாய். அப்போது அது பிழை. ஏனென்றால், 'ந்' எழுத்தை 'ன்' ஆக எந்தெந்த இடங்களில் எழுதுகிறான் என வரையறுத்துக் கூற முடிகிறது. இது பிழையின் பண்பு.

ஒரு மாணவன் 'ல்' வருமிடங்களிலெல்லாம் 'ள்' எழுதியுள்ளான் (எ-டு செல்வம் - செள்வம்). ஆனால், 'ள்' எழுதிய இடங்கள் ஏதாவது ஓர் ஒழுங்கிற்குள் வருகிறதாவென வரையறத்துச் சொல்ல முடியவில்லையென வைத்துக்கொள்வோம். அப்போது அது பிழையன்று, தவறென முடிவு செய்துவிடலாமா? ஒருவேளை அந்த மாணவன் வழுவாக எழுதியுள்ள இன்னுஞ் சிலவிடங்களைப் பார்த்தால் அப்பொழுது வரையறுக்கலாம். நமக்குக் கிடைக்கின்ற குறைந்த அளவு தரவை வைத்துக்கொண்டு ஒரு மாணவன் செய்கின்ற குறிப்பிட்ட ஒரு வழுவைத் தவறென முடிவு செய்வது தவறாகப் போகக் கூடும். எனவே, ஒரு வழு பிழையா இல்லையா என முடிவுசெய்யப் பின்வரும் இரண்டு வழிமுறைகளை அடிப்படையாகக் கொள்ளலாம்.

**எழுத்து வழு**

மாணவர்கள் செய்கின்ற வழுக்களை அவர்களாகவே திருத்திக்கொள்ள முடிகிறதாவென ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கவேண்டும். அவர்களால் திருத்திக்கொள்ள முடிகின்றவற்றைத் தவறுகள் எனவும், திருத்திக்கொள்ள முடியாதவற்றைப் பிழைகள் எனவும் முடிவு செய்யலாம். ஆனால், அவர்களால் திருத்திக்கொள்ள முடிகிறதா என்பதைக் கவனமாகப் பார்க்கவேண்டும். எடுத்துக்காட்டாகப் 'பழம்' என்னுஞ் சொல்லை ஒரு மாணவன் 'பளம்' என எழுதியிருக்க, ஆசிரியர் அதனைச் சுட்டிக்காட்டிச் சரியா எனக் கேட்டால், மாணவன் ஆசிரியர் கேட்டதைக்கொண்டு தவறாக எழுதியிருப்பதால்தான் கேட்கிறார் என நினைத்துப் 'பழம்' என மாற்றிக்கொள்ளலாம். இதனால், பிழையைத் தவறென ஆசிரியர் முடிவு செய்யக்கூடும். எனவே, மாணவர்களால் உண்மையாகவே திருத்திக்கொள்ள இயலுகிறதா எனப் பார்த்து முடிவு செய்யவேண்டும்.

**சொல் வழு**

ஒரு வழு, மாணவனின் மொழியில் நிறைய இடங்களில் காணப்பட்டாலே அதனைப் பிழையாகக் கொள்ளலாம். ஏனென்றால், பிழையைத் தவறென எண்ணித் திருத்தாமல் விட்டுவிடுவதால், ஏற்படும் இழப்பைவிடத் தவற்றைப் பிழையென எண்ணிப் பயிற்சியளிப்பதால், அதிக இழப்பு ஏற்பட்டுவிடாது. ஒரு மாணவன் 'ள்' எழுத்து இடம்பெறவேண்டிய சிலவிடங்களில் மட்டுமே 'ல்' எழுத்தை எழுதியுள்ளான். ஆனால், 'ள்' எழுத்து இடம்பெறும் 'பளிங்கு' என்னுஞ் சொல் எங்கெங் கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் 'பலிங்கு' என எழுதுகிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன முடிவெடுப்பது? 'ள் - ல்' வழுவைச் சிலவிடங்களில் மட்டுமே செய்வதால் அதைத் தவறென முடிவு செய்யவேண்டும். ஆனால், 'பளிங்கு' என்பதை எப்பொழுதும் 'பலிங்கு' என எழுதுவதால் அதைப் பிழையெனக் கொள்ளவேண்டும். அதாவது, பளிங்கு - பலிங்கு என்பதைச் சொற்பிழையாகக் கொள்ளவேண்டும்.

## 2. பிழைக்கான காரணங்கள்

பள்ளி மாணவர்கள் தமிழைக் கற்கும்போது செய்யும் பிழைகளுக்கான காரணங்களாகப் பின்வரும் ஏழனையுங் கூறலாம்.

அ) ஒப்புமையாக்கம்
ஆ) விதிவிலக்கு அறியாமை
இ) தவறான கருத்துருவாக்கம்
ஈ) எளிமையாக்கல்
உ) தூண்டுதல்
ஊ) பேச்சுவழக்கின் தாக்கம்
எ) பயிலாமை

**அ) ஒப்புமையாக்கம்**

கற்கின்ற மொழியில் தாங்கள் அறிந்த சில மொழியமைப்புகளைப் போன்று, அமைப்பு களை உருவாக்குவது ஒப்புமையாக்கம். அதாவது, ஒப்புமையாக்கப் பிழைகளில் மாணவர்கள் தவறாக இரண்டு அமைப்புகளை ஒப்புமைப்படுத்திப் பார்த்து, அவை இரண்டிற்கும் பதிலாய் ஒரே அமைப்பை உருவாக்குகிறார்கள். எடுத்துக்காட்டாக அந்த, இந்த, எந்த என்னும் சுட்டு விரி களுக்குப் பின் ஒற்று மிகுத்து எழுதுவதைப் பெயரெச்சத்தோடு ஒப்பிட்டு அங்கும் ஒற்று மிகுத்து எழுதினால் அது ஒப்புமையாக்கப் பிழை. அதாவது,

| | |
|---|---|
| அந்தப் பசு | |
| இந்தக் கடை | |
| எந்தச் சட்டை | முதலிய சுட்டு விரித்தொடர்களையும், |
| வந்த பையன் | |
| நினைத்த செயல் | |
| திறந்த கதவு | எனும் பெயரெச்சத் தொடர்களையும் |

ஒரே தரத்தவையாக எண்ணி ('த'வில் முடிவதால்) முன்னவற்றில் ஒற்று மிகுத்து 'வந்தப் பையன், நினைத்தச் செயல், திறந்தக் கதவு' என மிகுத்துப் பிழையாக எழுதலாம்.

வேறுசில எடுத்துக்காட்டுகள்:

1) வேற்றுமை உருபுக்குமுன் - அம் ஈற்றுச் சொற்களோடு அத்துச் சாரியை சேர்க்காமை.

பணம் + ஐ - பணத்தை என எழுதாமல் 'பணமை' என்றும்,
கமலம்+ஆல் - கமலத்தால் என எழுதாமல் கமலமால் என்றும் எழுதுதல்.

2) வேற்றுமைப் புணர்ச்சியில் 'ட்' இரட்டிக்காமை

| | | |
|---|---|---|
| வீடு + கு | = | வீட்டுக்கு என எழுதாமல் 'வீடுக்கு' என எழுதுதல் |
| மாடு + ஐ | = | மாட்டை என எழுதாமல் 'மாடை' என எழுதுதல் |
| பண்பாடு + இல் | = | பண்பாட்டில் என எழுதாமல் 'பாண்பாடில்' என எழுதுதல் |

மாணவர்களிடம் எவ்வகையான ஒப்புமையாக்கப் பிழைகள் காணப்படுகின்றன என்பதைக் கண்டறிந்து பட்டியலிடச் செய்க.

### ஆ) விதிவிலக்கு அறியாமை

விதிவிலக்கு அறியாமையும் ஒப்புமையாக்கத்தோடு தொடர்புடையதே. இங்கு நிகழும் ஒப்புமை யாக்கம் ஒரு விதிக்கு உரிய கட்டுப்பாடுகளைப் புரிந்துகொள்ளத் தவறியதால் நிகழ்ந்தது. ஒரு விதிக்கு விலக்குகள் இருக்கும்போது, மாணவர்கள் அவற்றை அறியாமல் விதியை விலக்குகளுக்கும் பயன்படுத்தி வேறுபட்ட அமைப்புகளை உருவாக்குகின்றார்கள். எடுத்துக் காட்டாகப் 'பத்து' என்னும் எண்ணுப்பெயருக்குப்பின் ஒற்று மிகுத்து எழுதாமை.

| | | |
|---|---|---|
| பத்து + பாடல் | = | பத்துப் பாடல் என எழுதாமல் 'பத்து பாடல்' என எழுதுதல். |

இதற்குக் காரணம் எண்ணுப் பெயர்களில் அதாவது எட்டு, பத்து நீங்கலாகப் பிற எண்ணுப் பெயர் களின்பின் ஒற்று மிகாது எனும்விதியை அறியாமை.

பின்வருஞ் சந்திப் பிழைகளையும் விதிவிலக்கு அறியாமையால் செய்யும்பிழைகளாகக் கொள்ளலாம்.

1) உகர ஈற்று வினையெச்சம் வன்றொடர்க் குற்றியலுகரமாக இருக்கும்போது ஒற்று மிகுத்து எழுதாமை.

| | | |
|---|---|---|
| படித்து + பார் | = | படித்து பார் (படித்துப் பார்) |
| வடித்து + கொட்டு | = | வடித்து கொட்டு (வடித்துக் கொட்டு) |
| அடித்து + சொல் | = | அடித்து சொல் (அடித்துச் சொல்) |

எனப் பிழையாக எழுதுதல்.

2) கொசு, பசு, வடு முதலிய சொற்களில் உகரத்தைக் கெடுத்தல்.

| | | |
|---|---|---|
| கொசு + ஐ | = | கொசை (கொசுவை) |
| பசு + க்கு | = | பசுக்கு (பசுவுக்கு) |
| வடு + ஆல் | = | வடால் (வடுவால்) |

எனப் பிழையாக எழுதுதல்.

### இ) தவறான கருத்துருவாக்கம்

கற்றலின்போது மாணவர்கள் தவறான சில கருத்துருவாக்கங்களைத் தங்களுக்குள்ளே செய்துகொண்டு, அதன் காரணமாகப் பிழை செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, நினைவுகூர் என்னுந் தொடரிலுள்ள கூர் என்பதனைக் கூறு என்னுஞ் சொல்லாகக் கருதி நினைவு கூறுகிறேன், நினைவு கூறுவேன் எனப் பயன்படுத்துவது தவறான கருத்துருவாக்கப் பிழை.

வங்காள விரிகுடாக் கடலைக் கலக்கின்றேன்.

இந்த வாக்கியம் 'வங்காள விரிகுடாக் கடலில் கலக்கின்றேன்' என அமைக்கவேண்டும்.

கல, கலக்கு என்னும் இரு வினைகளுள் ‘கல’வைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகக் ‘கலக்கு’ என நினைத்துப் பயன்படுத்தியதே ‘இல்’ உருபுக்குப் பதிலாக ‘ஐ’ உருபு பயன்படுத்தியதற்குக் காரணம்.

**ஈ) எளிமையாக்கல்**

செய்யவேண்டிய எந்த வேலையையும் எளிமையாக்க முயல்வது மனித இயல்பு. இதற்கு மொழிகற்றலும் விதிவிலக்கு அன்று. மொழி கற்கும்போது மாணவர்கள் கற்கின்ற மொழி அமைப்புகளை எளிமைப்படுத்த முயற்சி செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, வெவ்வேறு வினை முடிவுகளுக்குப் பதிலாக ஒரே வினைமுடிவைப் பயன்படுத்துவதைக் கூறலாம்.

நான் வருகிறேன்.
நாம் வருகிறோம்.
அவள் வருகிறாள்.
அவர் வருகிறார். இவ்வாறு வெவ்வேறாக முடிக்காமல்,

நான் வருகிறாள்.
நாம் வருகிறாள்.
அவர் வருகிறாள்.

எனப் பயன்படுத்தினால் அது எளிமையாக்கல் பிழை எனலாம்.

எளிமையாக்கல் காரணமாக நம்முடைய மாணவர்கள் அதிகமாக வரிவடிவப் பிழை களையும் செய்கிறார்கள்.

(எ-டு) ஒ - ஞ

த - ந

ந - ற

டி - பி

ழு - மு

**உ) தூண்டுதல்**

மொழியைக் கற்பிக்கும்போது மொழிக்கூறுகளைப் படிநிலை செய்தமுறை, பாடமாக்கிய முறை, ஆசிரியரின் விளக்கங்கள், வாக்கியங்களில் இடம்பெறுஞ் சில சொற்களில் சூழல் ஆகியவற்றின் தூண்டுதலால் மாணவர்கள் செய்யும் பிழைகள் தூண்டுதல் பிழைகள் எனலாம்.. எடுத்துக் காட்டாக,

‘நீங்கள் எல்லாரும் சுற்றுலா போய் வந்தார்கள் என்று நீ எழுதியிருந்தாய்’ என்னும் வாக்கியத்தில் ‘எல்லாரும்’ எனும் சொல் ‘போய் வந்தீர்கள்’ என்பதற்குப் பதிலாகப் ‘போய் வந்தார்கள்’ என எழுத மாணவர்களைத் தூண்டியுள்ளது.

வேறுசில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

1. பால்பகா அஃறிணையுடன் ‘கள்’ சேர்த்தல்

அம்மா எனக்கு நிறைய பணங்கள் கொடுத்தார். - தவறு
அம்மா எனக்கு நிறைய பணம் கொடுத்தார். - சரி

நான் அதிகம் கோபங்கள் படமாட்டேன். - தவறு
நான் அதிகம் கோபப்படமாட்டேன். - சரி

2. ஒருமை - பன்மை

**நான்** எங்கள் பள்ளியில் என் நண்பர்களோடும் ஆசிரியரோடும் சுற்றுலா சென்றேன்.

**ஊ) பேச்சுவழக்கின் தாக்கம்**

ஒரு மொழியைக் கற்றுக்கொள்ளும்போது, அந்த மொழியின் எழுத்துவழக்கில், மாணவர்கள் ஏற்கெனவே அறிந்த பேச்சுவழக்கின் தாக்கம் இருக்கும். கற்கும்மொழி இருநிலை வழக்கு மொழியாக இருந்தால் தாக்கம் அதிகமாக இருக்கும். ஏனென்றால், இருநிலை வழக்கு மொழிகளில் இரண்டு வழக்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு அதிகமாக இருக்கும்.

ந - ன
ண - ன
ல - ள
ற - ர

முதலிய ஒலியனியல் பிழைகள்

ஓர் - ஒரு

போன்ற சொல்லிலக்கணப் பிழைகள் பேச்சுவழக்கின் தாக்கத்திற்கு எடுத்துக்காட்டுகள்.

பேச்சு வழக்கின் தாக்கத்தால் செய்யப்படும் பிழைகளை உடன்பயிலும் மாணவர்களின் எழுத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் தொகுக்க.

**எ) பயிலாமை**

பயிலாமையைப் பிழைக்குரிய காரணமாகக் கூற முடியுமா என்பது விவாதத்திற்குரியது. எனினும், பிழைகளுக்கு இதுவரை கூறிய எந்தக் காரணத்தையும் காட்ட முடியாவிட்டால், அப்போது அதைப் பயிலாமையின் விளைவாக எடுத்துக்கொள்ளலாம். ஆய்வாளர்கள் புதிதாக அதற்கு ஏதேனுங் காரணஞ் சுட்டினால் அதையும் ஏற்றுக்கொள்ளலாம்.

## 3. பிழை வகைகள்

பிழைகளைப் பலவாறு வகைப்படுத்தலாம். திறனடிப்படையில் பேச்சுப் பிழைகள், வாசிப்புப் பிழைகள், எழுத்துப் பிழைகளென மொழியமைப்பு அடிப்படையில் எழுத்து, சொல், வாக்கியம், சந்தி எனவும் பிரிக்கலாம். ஒரு வகைப்பாட்டில் மற்றொரு வகை உட்பிரிவுகளாக அமையும் என்றாலும் இங்கே எழுத்தில் வெளிப்படும் பிழைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், தமிழ்மொழிக் கல்வியில் எழுதுதல் திறனுக்கே முதலிடந் தரப்பட்டுள்ளது. இருப்பினும், பேசும்போதும் வாசிக்கும்போதும் வெளிப்படும் ஒலிப்புப் பிழைகள் கவனத்திற் கொள்ளவேண்டும். மற்றப் பிழைகள் எழுத்தில் வெளிப்படும் பிழைகளாகவே பெரும்பாலும் இருக்கும்.

ஒலிப்புப் பிழைகளின் தாக்கத்தால் எழுத்துப் பிழைகள் தோன்றலாம் என்றாலும், அது கட்டாயம் இல்லை. பேச்சுத் தமிழின் தாக்கத்தால் 'ல' வை 'ள' வாக ஒலிக்கும் ஒருவர் 'ல' வரு மிடங்களில் 'ள' வென எழுதுவார் எனக் கூறலாம். எழுத்தில் முற்றிலும் இந்தப் பிழை செய்யாமலே இருக்கவுங் கூடும். எனவே, பேசும்போதும் வாசிக்கும்போதும் ஒலிப்புப் பிழைகள் செய்பவர்களை இனங்கண்டு அவர்கள் பிழைபட ஒலிக்கும் ஒலிகளை முறையாக ஒலிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும்.

**எழுத்துப் பிழைகள்**

எழுத்துப் பிழைகள் எனப் பொதுவாகச் சொல்லப்பட்டாலும் அவையெல்லாம் வரிவடிவப் பிழைகளில்லை. எழுத்தில் வெளிப்படுகின்ற ஒலிப்புப் பிழைகளும் அவற்றுள் அடங்கும். தமிழ் இலக்கணம், எழுத்தெனக் குறிப்பிடுவது வரிவடிவத்தை மட்டுமில்லை, ஒலியையுந்தான் என்பது

இங்கு நினைவுகூரத்தக்கது. இந்த இரண்டுவகைப் பிழைகளுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன. ‘ன - ண’ என்னும் ஒலிப்புப் பிழையில் ‘ன’ வுக்குப் பதிலாக ‘ண’ எழுதப் படுகிறது. வரிவடிவப் பிழைகள் வடிவ ஒற்றுமையுள்ள எழுத்துகளிடையே ஏற்படும். ஒலிப்புப் பிழைகள் பெரும்பாலும் ஒலிப்பு ஒற்றுமையுள்ள எழுத்துகளிடையே ஏற்படும். வரிவடிவப் பிழைகள் வாசிப்போருக்குத் தவறான எழுத்தை உணர்த்தும். ஆனால், எழுதியவர்கள் அவற்றைச் சரியாக வாசிக்கக் கூடும். ஒலிப்புப் பிழைகள் வாசிப்போருக்குத் தவறான எழுத்தை உணர்த்துவதோடு எழுதியவர்களாலும் சரியாக உணர முடியாது.

**1) வரிவடிவப் பிழைகள்**

ஒரு மாணவன் குறிப்பிட்ட சில வரிவடிவங்களில் பிழை செய்கிறான் என்பதால், அவன் மற்ற வடிவங்களை மிகச் சரியாக எழுதுகிறான் என்பதில்லை. அதாவது, பெரும்பாலோர் எழுதும் போது அச்சு வடிவத்தைப் போன்று அப்படியே எழுதுவதில்லை; மாற்றங்களுடனேயே எழுது கின்றனர். ஆனால், இந்த மாற்றங்களால் ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் தோன்றும்போது அது பிழையாகிறது. எடுத்துக்காட்டாகச் ‘ ச - க’ என்ற பிழையில் ‘ச, க’ இரண்டும் முழுமையாக எழுதப் படாவிட்டாலும் ‘ச’ அதன் எல்லை வரம்பை மீறி எழுதப் பட்டதால், அது ‘க’வின் எல்லைக்குள் அமைந்து ‘க’வைப்போல் தோற்றமளிக்கிறது. மாறாகக் ‘க’ தனது எல்லையை மீறிச் ‘ச’ வின் எல்லைக்குள் அமைந்துவிடுமானால் அப்போது அது ‘ச’ வைப்போல் தோற்றமளித்துக் ‘க-ச’ என்னும் பிழையாகிவிடும்.

மாணவர்கள் அதிகம் செய்கின்ற வரிவடிவப் பிழைகள் வருமாறு:

1) அ - எ
2) அ - சு
3) ஆ - சூ
4) இ - கு
5) ஐ - ஜ
6) ஒ - ஞ
7) ச - க
8) த - ந
9) ந - த
10) ந - ற
11) ல - வ
12) வ - ல
13) ள - ன
14) ன - ள
15) ன - ை
16) கு - ரு
17) சு - க
18) டி - பி
19) ழு - மு
20) ஜூ - ஜீ

வரிவடிவப் பிழைகள் பெரும்பாலானவற்றிற்குக் காரணம் எளிமையாக்கலே. ஒவ்வொரு வடிவத்தையும் செம்மையாகக் கற்பித்துவிட்டால் எளிமையாக்கல் மனப்பான்மையைத் தவிர்ப்பது கடினமன்று. மேலும், பின்வருஞ் சான்றுகளைப்போல் வரிவடிவில் செய்யுஞ் சிறு மாற்றங்கூடப் பொருள் வேறுபாட்டை ஏற்படுத்தக்கூடும் என்பதை மாணவர்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழுக்கு | - | அமுக்கு | பாவம் | - | பாலம் |
| காயம் | - | சாயம் | ஐயா | - | ஜயா |

வரிவடிவப் பிழைகளைத் தவிர்ப்பதற்கும் வரிவடிவங்களை முறையாகக் கற்றுத் தர வேண்டும். மாணவர்கள் வரிவடிவங்களைக் கற்றுக்கொள்ளும்போது அவர்களுக்கு முறையான முன் மாதிரியைத் தரவேண்டும். இல்லாவிட்டால் தவறான மாதிரி வடிவங்கள் முறையாகக் கற்றுக்கொள்ளாமல் பிழையேற்படக் காரணமாக அமையும். எனவே, ஆசிரியர் தொடக்கப் பள்ளி யில் முதல் வகுப்பு முதலே ஒவ்வொரு எழுத்தையும் உரிய வரிவடித்தில் எழுதிக் கற்பிக்க வேண்டும்.

பிழைகளைக் களைய ஆசிரியர் மூன்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். முதலில் பிழையை இனங்கண்டவுடன் ஆசிரியர் அது பிழையென்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். மாணவர்கள் பிழையை உணர்ந்துகொண்டால், பிறகு அந்தப் பிழை வருமிடங்களில் கவனமாக இருக்கவியலும். அடுத்து, ஆசிரியர் குறிப்பிட்ட எழுத்தை எவ்வாறு எழுதவேண்டும் என முறையாகக் கற்றுத் தரவேண்டும். மூன்றாவதாக முறையாகக் கற்றுக் கொடுத்ததைத் தக்க வைத்துக்கொள்ளத் தேவையான பயிற்சிகளைத் தரவேண்டும்.

**2) ஒலிப்புப் பிழைகள்**

1. ண,ந,ன மயங்கொலிப் பிழைகள்
2. ல, ழ, ள மயங்கொலிப் பிழைகள்
3. ர, ற மயங்கொலிப் பிழைகள்
4. குறில் - நெடில், நெடில் - குறில் பிழைகள்
5. எ, ஏ, ஒ, ஓ (உயிர்மெய்) பிழைகள்
6. ஞ் - ஞ்ச் ( எ-டு) அறிஞர் - அறிஞ்சர்
7. ட், ற் -க்குப்பின் ஒற்று இரட்டித்தல்

(எ-டு) உட்பிரிவு - உட்ப் பிரிவு
முயற்சி - முயற்ச்சி

8. ற் - ர் உடன் ஒற்று இரட்டித்தல் (எ-டு) அதற்கு - அதர்க்கு

(எ-டு) காட்சி - காச்சி
கேட்க - கேக்க

பல பிழைகளுக்குப் பேச்சுத் தமிழின் தாக்கங் காரணமாக உள்ளது. பெரும்பாலான பிழைகளை எழுத்துகளின் வருகைமுறையைக் கற்பிப்பதால் நீக்க வியலும். இவ்வாறு நீக்க வியலாத சூழல்களில் ஏற்படும் பிழைகளையும் பிற பிழைகளையும் மாணவர்கள் தத்தம் மொழிப் பயன் பாட்டுப் பட்டறிவின் வாயிலாகவே நீக்க வியலும். இவ்வாறு கூறுவதால் ஆசிரியர் ஏதும் செய்ய வேண்டியதில்லை என்பதன்று. மாணவர்கள் மொழியைப் பயன்படுத்துவதில் பட்டறிவு பெற ஆசிரியர் உதவவேண்டும். நாள்தோறும் வகுப்பில் ஒவ்வொருவராக வாய்விட்டுப் படிக்குமாறு செய்யவேண்டும். சொற்களின் ஒலிப்பையும் எழுத்துகளையும் நன்கு தெரிந்துகொள்ளக் கேட்டெழுதும் பயிற்சி மிகவும்பயன்படும்.

இந்தப் பிழைகளைத் தவிர்ப்பதற்கு முதல் வகுப்பிலிருந்தே முறையாகப் பயிற்சியளிக்க வேண்டும். முதலில் ஒலிப்புப் பயிற்சி தரவேண்டும். பிழைகளில் இடம்பெறக் கூடிய ஒலிகளுக்கு அதிகம் பயிற்சி தரவேண்டும். ஒலிகளுக்குத் தனியாகவும் சொற்களிலும் சொல் இணைகளிலும் பயிற்சி தரவேண்டும். ஒலிப்புப் பயிற்சியை அடுத்து ஒலியெழுத்துத் தொடர்பை மனத்திற் பதியச் செய்வதற்கு அடையாளங் காணும் பயிற்சியை அளிக்கலாம். ஆசிரியர் இரண்டு மூன்று எழுத்துகளைக் கரும்பலகையில் எழுதி அவற்றுள் ஒன்றை ஒலித்து அதைக் கரும்பலகையில் எழுதி, அந்த எழுத்தையும் மற்றோர் எழுத்தையும் ஒலித்து, அவற்றுள் எது கரும்பலகையில் எழுதப்பட்டுள்ளதெனக் கண்டுபிடிக்கச் சொல்லலாம். ஒலிகளை இனங்காணுதல் அவற்றை வரிவடிவங்களோடு தொடர்புபடுத்துதல், வரிவடிவங்களை முறையாக எழுதுதல் ஆகிய திறன்கள் மேம்படக் கேட்டெழுதும் பயிற்சி தேவை. இவற்றோடு வாசித்தல் பயிற்சியும் தரவேண்டும். ஆசிரியர் பிழைகளை இனங்கண்டவுடன் அவற்றை மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். சுட்டிக்காட்டிய பிறகு பிழைகளை நீக்குவதற்கான விதிகள் இருப்பின், அவற்றைக் கற்பிக்க வேண்டும். அந்த விதிகளை மனத்திலிருத்திக்கொள்ள நிறைய பயிற்சிகளை அளிக்கவேண்டும். விதிகள் எதுவும் இல்லையானால் பிழையை விளக்கிவிட்டுத் தக்க பயிற்சிகளைத் தரவேண்டும். மாணவர்கள் பிழையின்றி எழுதும்வரை ஆசிரியர் தொடர்ந்து பயிற்சி தந்துகொண்டிருக்க வேண்டும்.

**சொல்லிலக்கணப் பிழைகள்**

ஒப்பீட்டு நோக்கில் மற்றப் பிழைகளைவிடச் சொல்லிலக்கணப் பிழைகள் குறைவு.

**ஒரு - ஓர்**

தமிழில் உயிர் எழுத்துகளில் தொடங்குஞ் சொற்களின்முன் 'ஓர்' எண்ணடையும் மெய்யெழுத்துகளில் தொடங்கும் சொற்களின்முன் 'ஒரு' எண்ணடையும் வரும். ஆனால், மாணவர்கள் ஒன்றிற்குப் பதிலாய் மற்றொன்றைப் பயன்படுத்துகிறார்கள்.

(எ.கா.)

ஒரு ஆண்டில் (ஓர் ஆண்டில் என்பதற்குப் பதிலாக ஒரு ஆண்டில்)
ஒரு ஊரில் ( ஓர் ஊரில் என்பதற்குப் பதிலாக ஒரு ஊரில்)
ஓர் பழமொழி (ஒரு பழமொழி என்பதற்குப் பதிலாக ஓர் பழமொழி)
ஓர் தெய்வம் (ஒரு தெய்வம் என்பதற்குப் பதிலாக ஓர் தெய்வம்)

**'கள்' விகுதி**

தமிழில் பன்மை விகுதியாக 'கள், ஆர், அர், இர், மார்' முதலியவற்றால் குறிக்கப்படுகிறது. சில சொற்கள் தனிப்பட்ட விகுதியின்றியே பன்மைப் பொருளை உணர்த்துகின்றன. பால்பகா அஃறிணைப் பெயர்களுக்கு ஒருமை, பன்மை வேறுபாடில்லை. இந்த அமைப்பை அறியாமல் மாணவர்கள் தமிழில் அதிகம் பயன்படும் 'கள்' பன்மை விகுதியைத் தேவையற்ற சொற்களுடனும் இணைத்துப் பயன்படுத்தியுள்ளார்கள்.

பன்மையைக் குறிக்கும் பலவின்பால் மூவிடப் பெயரோடு 'கள்' சேர்க்கின்றனர்.

அவைகள் நமக்கு அறிவு தருகின்றன.
மற்றவைகள் தள்ளி இருந்தன.

**அத்துச் சாரியை**

அம் ஈற்றுப் பெயர்ச்சொற்களோடு வேற்றுமை விகுதி சேரும்போது 'ம்' கெட்டு இடையில் அத்துச் சாரியை தோன்றும்.

முகம் + ஐ = முகத்தை
குளம் + இல் = குளத்தில்

ஆனால் மாணவர்கள் இவ்வாறு எழுதாமல் சாரியையை விட்டுவிட்டு உருபுகளை மட்டும் சேர்த்தெழுதுகிறார்கள்.

முகம் + மை = முகமை
குளம் + இல் = குளமில்

இவ்வாறு மாணவர்கள் செய்யும் பிழைகளைக் காரணங் கூறிக் களையவேண்டும்.

**'ட், ற்' இரட்டித்தல் அறியாமை**

பெயர்ச்சொற்களில் நெடிலுக்குப்பின் இறுதி உகரத்தின்முன் உள்ள ட், ற் இரண்டும் வேற்றுமைப் புணர்ச்சியில் இரட்டிக்கும்.

ஆடு + ஐ = ஆட்டை
சோறு + பானை = சோற்றுப் பானை

ஆனால், மாணவர்கள் இவ்வாறு இரட்டிக்காமல் உருபுகளை உள்ளவாறே இணைத்து எழுதுகின்றனர்.

வீடு + க்கு = வீடுக்கு
வரலாறு + நூல் = வரலாறு நூல்

ஒப்புமையாக்கம், விதிவிலக்கு அறியாமை, சூழல் தூண்டல் ஆகியன மேலே குறிப்பிட்ட சொல்லிலக்கணப் பிழைகளுக்குக் காரணம். விதிகளைக் கற்பிப்பதன் வாயிலாகவும் தொடர்ந்து பயிற்சிகள் அளிப்பதன் வாயிலாகவும் இத்தகைய பிழைகளை நீக்கலாம்.

**சந்திப் பிழைகள்**

இரண்டு சொற்கள் சேரும்போது அவற்றிற்கிடையே எழுத்துகள் தோன்றும், திரியும், கெடும். இயல்பாய் அமைந்துவிடுவது சந்தி எனப்படும். இதில் செய்யும் பிழைகள் சந்திப் பிழைகள். சந்திப் பிழைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை ஒற்றுப்பிழைகள், இரண்டாம் வகை பிற சந்திப் பிழைகள்.

**1) ஒற்றுப் பிழைகள்**

ஒற்று மிகுத்து எழுதுதல் மாணவர்களுக்குக் கடினமான ஒன்றாகவே உள்ளது. அவர்கள் வேண்டிய இடத்தில் விட்டுவிட்டும் வேண்டாத இடத்தில் மிகுத்தும் எழுதுகிறார்கள். மாணவர்கள் பெரும்பாலும் வேண்டிய வேண்டாத இடங்கள் என்று பார்க்காமல் ஆசிரியர் ஒற்று மிகுத்து எழுதுவதை வற்புறுத்துபவராக இருந்தால் பெரும்பாலான இடங்களில் மிகுத்தும் இல்லாவிட்டால் பெரும்பாலான இடங்களில் மிகாமலும் எழுதுகிறார்கள்.

இரண்டு சொற்கள் சேரும்போது வருமொழி க், ச், த், ப் ஆகிய மெய்களில் (அதாவது க, ச, த, ப வரிசை உயிர்மெய்களில்) தொடங்குமானால் அங்கு ஒற்றுமிக வாய்ப்புள்ளது.

| | | |
|---|---|---|
| கல்வி + கடன் | = | கல்விக்கடன் |
| சிவப்பு + சேலை | = | சிவப்புச் சேலை |
| யானை + தந்தம் | = | யானைத் தந்தம் |
| போய் + படி | = | போய்ப் படி |

ஆனால், இவ்வாறு தொடங்கும் எல்லாச் சொற்களுக்கு முன்னும் ஒற்றுமிகுமெனுங் கட்டாய மில்லை. நிலைமொழியைப் பொருத்து மிகுதலும் மிகாமையும் அமையும். எங்கு ஒற்றுமிகும், எங்கு மிகாது என்பதற்கு விதிகளுள்ளன.

**வேண்டா இடத்தில் ஒற்று மிகுத்து எழுதிய பிழைகள்**

| | | | |
|---|---|---|---|
| அவ்வளவுப் பெரிய | (அவ்வளவு பெரிய) | வந்தப் பையன் | (வந்த பையன்) |
| இவ்வாறுச் செய்தால் | (இவ்வாறு செய்தால்) | அதுப்போல் | (அதுபோல்) |
| கதவுத் திறந்தது | (கதவு திறந்தது) | | |

**வேண்டிய இடத்தில் ஒற்றுமிகுத்து எழுதாத பிழைகள்**

| | | | |
|---|---|---|---|
| அந்த பொருள் | (அந்தப் பொருள்) | இங்கு கண்ட | (இங்குக் கண்ட) |
| விளக்கி கூறு | (விளக்கிக் கூறு) | கவனமாக கேள் | (கவனமாகக் கேள்) |
| மாத தேர்வு | (மாதத் தேர்வு) | பத்து குறள் | (பத்துக் குறள்) |
| காதை தொடு | (காதைத் தொடு) | நமக்கு பகை | (நமக்குப் பகை) |
| நாட்டு பற்று | (நாட்டுப் பற்று) | | |

ஒற்றுப்பிழைகளை விதிகளைக் கற்றுத்தந்து நீக்கலாம். ஆனால், விதிகளைக் கற்பிக்க மாணவர்களுக்குப் பல இலக்கணச் சொற்கள் தெரிந்திருக்கவேண்டும். எல்லா இலக்கணச் சொற்களையும் தொடக்கநிலையில் கற்பிக்க வியலாது. எனவே, பயிற்சிகளின் வாயிலாக ஒற்றை வேண்டிய இடத்தில் மிகுத்தும், வேண்டாத இடத்தில் விடுத்தும் எழுத பட்டறிவு பெறும்படி செய்யலாம். மேலும், பாடத்திட்டத்தில் இடம்பெறும் இலக்கணக் கூறுகளைக் கற்பிக்கும்போது, அவற்றின்பின் ஒற்றுமிகுமா மிகாதாவென அங்கேயே கற்பித்துவிடவேண்டும்.

சில இடங்களில் எதிரெதிரான இரண்டு விதிகள் பொருத்தமாக அமையலாம். எடுத்துக் காட்டாகத் தீ பற்றியது என்னும் இடத்தில் பின்வரும் இரண்டு விதிகளைப் பயன்படுத்தலாம்.

1. ஓரெழுத்து ஒருமொழிக்குப் பின் ஒற்றுமிகும்.
2. எழுவாய்க்குப் பின் ஒற்று மிகாது.

இதுபோன்ற சூழலில் மிகாது எனக் கூறும் விதியை விட்டுவிட்டு மிகும் எனக் கூறும் விதியைப் பின்பற்றி மிகுத்து எழுதுமாறு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும்.

### 2) பிற சந்திப் பிழைகள்

ஒற்றுப்பிழைகள் நீங்கலான பிற சந்திப்பிழைகள் பலவகையாக அமையும். அவை இங்கு விரிவாக விளக்கப்படவில்லை. அதிகம் காணப்படும் பிழைகளுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| சந்தனம் மரம் (சந்தன மரம்) | அறிந்துருப்பார்(அறிந்திருப்பார்) |
| முயற்சிவுடையார் (முயற்சியுடையார்) | இடம்மெல்லாம்(இடமெல்லாம்) |
| புகழ்யிடம் (புகழிடம்) | பொருள்வுரை (பொருளுரை) |

ஒப்புமையாக்கம், விதிவிலக்கு அறியாமை, பயிலாமை ஆகியவை சந்திப் பிழைக்கான காரணங்கள். இங்குச் சுட்டிக்காட்டியுள்ள எல்லாச் சந்திப்பிழைகளையும் விதிகளைக் கற்பிப்பதன் வாயிலாக நீக்கவும் தவிர்க்கவும் செய்யலாம். ஆனால், விதிகளை இளவயதில் கற்பிப்பது கடினம். இருப்பினும் பயிற்சிகளின் வழியாக விதிகள் மாணவர்களின் மனத்துள்பதியுமாறு செய்யலாம். மாதிரிகளைக் கொடுத்து அவற்றைப் போன்று செய்வதன் வாயிலாக விதிகளை மறைமுகமாகக் கற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். மாதிரியில் உள்ளது போன்று திரும்பத் திரும்பச் செய்வதன் வாயிலாக விதி மாணவர்களால் உள்வாங்கப்பட்டுவிடும். எடுத்துக்காட்டாகச் சில பயிற்சிகள் வருமாறு:

மாதிரியைப் போல் சேர்த்தெழுதுக:

அ) வீட்டுக்கு + போ = வீட்டுக்குப் போ.
காட்டுக்கு + போ =
கடைக்கு + போ =

ஆ) படி + அரிசி = படியரிசி
பொன்னி + அரிசி =
அவி + அரிசி =

இந்தப் பயிற்சிகளை எளிமையாக முதலில் தந்து மெல்ல மெல்ல உயர்நிலைக்கு இட்டுச் செல்லலாம். எடுத்துக்காட்டாய்ப் பயிற்சி ‘ஆ’ பின்வருமாறு எளிமையிலிருந்து கடினமாகப் படிப்படியாக உயர்த்தப்படலாம்.

இ) கல்வி + அறிவு = கல்வியறிவு
மணி + அடி =
பிடி + அளவு =

இவ்வெடுத்துக்காட்டுகளில் நிலைமொழி இறுதி ‘இ’ ஆக இருக்க வருமொழி எல்லாம் ‘அ’ வில் தொடங்கி வரும்பொழுது ‘அகரம் யகரமாக மாறி வருவதைக் காண்க.

ஈ) பாதி + இடம் = பாதியிடம்
குட்டி + ஆடு =
வண்டி + ஊர் =

நிலைமொழி இறுதி ‘இ’ ஆக இருக்க வருமொழி ஏதாவது உயிரெழுத்தில் தொடங்குவதைக் காண்க.

உ)	மணி + ஓசை = மணியோசை
தீ + உடன் =
களை + எடுப்பு =
மணி + ஓசை =
அதே + ஆண்டு =

நிலைமொழி இறுதி இ, ஈ, ஏ, ஐ என முடிய வருமொழி ஏதாவது உயிரெழுத்தில் தொடங்குவதைக் காண்க.

பயிற்சி ‘அ’ பின்வருமாறு க், ச், த், ப் எல்லாம் வருமாறு உயர்நிலைக்குக் கொண்டு செல்லப்படலாம்.

வேலைக்கு + போனார் =
மகனுக்கு + கொடு =
படத்துக்கு + செல் =
வீட்டுக்கு + திரும்பு =

நேரடியாகவோ மறைமுகமாகவோ விதிகளைக் கற்பித்த பிறகு இதுபோன்ற சேர்த்து எழுதுதல் பயிற்சியோடு பின்வரும் பயிற்சிகளையும் தரலாம். இப்பயிற்சிகளில் ஒற்றுமிகும் இடங்களோடு மிகாவிடங்களும் கலந்து தரப்பட்டுள்ளன.

1. சரியா? தவறா?
2. தக்க இடங்களில் ஒற்று மிகுத்து எழுதுக.
3. பின்வரும் பத்தியைப் பிழைநீக்கிச் சரியாக எழுதுக.
4. பொருத்தமான சொல்லைத் தேர்வுசெய்து நிரப்புக.
   கடைக்காரனிடம் ஒரு படி ----------------- (கடலை/கடலைக்) கேட்டேன்.

**வாக்கியப் பிழைகள்**

மாணவர்கள் பலவகையான வாக்கியப் பிழைகளைச் செய்வார்கள். அதிகம் செய்யப்படும் பிழைகள் வருமாறு:

1) இயைபுப் பிழைகள்
2) வேற்றுமைப் பிழைகள்
3) செய்வினை, செயப்பாட்டுவினைப் பிழைகள்
4) செயப்படுபொருள் குன்றிய - குன்றா வினைப் பிழைகள்

**1) இயைபுப் பிழைகள்**

தமிழில் பால், எண், இடம் ஆகியவற்றிற்கேற்ப எழுவாய், வினையோடு இயைந்து வரவேண்டும். ஆனால், மாணவர்கள் இயைபை மீறிப் பிழையாக எழுதுகிறார்கள்.

**இடம்**

- அடுத்தமுறை நீங்கள் எங்களுடன் வருவோம் என்று நம்புகிறேன்.

  (அடுத்தமுறை நீங்கள் எங்களுடன் வருவீர்கள் என்று நம்புகிறேன்.)

- நீங்கள் எல்லாரும் சுற்றுலா போய் வந்தார்கள் என்று நீ எழுதியிருந்தாய்.

  (நீங்கள் எல்லாரும் சுற்றுலா போய் வந்தீர்கள் என்று நீ எழுதியிருந்தாய்.)

**எண்**

- மகேந்திரன் அஜந்தாவில் தான்கண்டவற்றைத் தமிழகத்தில் படைக்க முயன்றனர்.
  (முயன்றார்)

- எல்லாரும் அவளை மதிப்பார். (மதிப்பர்)

- முன்னேற்றம் அடையாதவர்கள் முயற்சியை விரும்பாதவர்களாக வாழ்ந்திருப்பார். (வாழ்ந்திருப்பர்.)

**பால்**

- அரசு பல சலுகைகள் வழங்குகின்றனர். (வழங்குகிறது.)

- இவ்விபத்துகளால் பல உயிர்கள் பலியாகின்றனர். (பலியாகின்றன.)

**2) வேற்றுமைப் பிழைகள்**

வேற்றுமையைப் பயன்படுத்துவதில் மூன்று வகையான பிழைகள் காணப்படும்.

1. வேண்டாத இடத்தில் வேற்றுமை விகுதியைப் பயன்படுத்துவது.
2. வேண்டிய இடத்தில் வேற்றுமை விகுதியை விட்டுவிடுவது.
3. தவறான வேற்றுமை விகுதியைப் பயன்படுத்துவது.

**வேற்றுமை விகுதியைத் தேவையின்றிப் பயன்படுத்துதல்**

(எ.கா.)

- அவருக்கு பலத்த காயம் அடைந்தார். (அவர் பலத்த காயம் அடைந்தார்.)

- மேலைநாடுகளிலும் இதைப் பயன்படுகிறது. (மேலை நாடுகளிலும் இது பயன்படுகிறது.)

- இரவில் திருடர்களின் தொல்லை கொடுக்கிறார்கள். (இரவில் திருடர்கள் தொல்லை கொடுக்கிறார்கள்)

**வேற்றுமை விகுதியைப் பயன்படுத்தாமல் எழுதுதல்**

- அந்நாட்டை தீ இரையாக்கினர். (அந்நாட்டைத் தீக்கு இரையாக்கினர்.)

- ஆனால் தொலைக்காட்சி உருவத்தையும் காண முடியும்.(தொலைக்காட்சியில் உருவத்தையும் காணமுடியும்.)

- இது நம் தலைவிதி என்று குறை சொல்லிக்கொண்டு வாழ்வது பயன் ஒன்றும் இல்லை. (இது நம் தலைவிதி என்று குறை சொல்லிக்கொண்டு வாழ்வதில் பயன் ஒன்றும் இல்லை.)

**வேறு வேற்றுமை விகுதியைப் பயன்படுத்துதல்**

- ஒரு பேருந்து அவர்களின் நோக்கி வந்தது.

(ஒரு பேருந்து அவர்களை நோக்கி வந்தது.)

- மாணவர்களுக்கு நல்வழிப்படுத்துவேன்.

(மாணவர்களை நல்வழிப்படுத்துவேன்.)

- என்னால் அதைச் செய்ய விருப்பம் இல்லை.

(எனக்கு அதைச் செய்ய விருப்பம் இல்லை.)

- இலங்கை மன்னன் விழாவிற்குக் கலந்துகொண்டான்.
  (இலங்கை மன்னன் விழாவில் கலந்துகொண்டான்.)
- நாம் ஆசிரியர்களை மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.
  (நாம் ஆசிரியர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.)

**3) செய்வினை, செயப்பாட்டுவினைப் பிழைகள்**

செய்வினை வாக்கியங்கள் மாணவர்களால் இரண்டு வகையில் பிழையாக எழுதப்படுகின்றன.

**எழுவாயுடன் 'ஆல்' சேர்த்து**

- சோழனால் கோயில் கட்டினான். (சோழன் கோயில் கட்டினான்.)
- தூய்மையான காற்றைத் தாவரங்களால் வெளியிடுகின்றன.
  (தூய்மையான காற்றைத் தாவரங்கள் வெளியிடுகின்றன.)

**வினையுடன் 'படு' சேர்த்து**

- இனிய பாடல்களையும் நாடகங்களையும் ஒலிபரப்பப்படுகிறது.
  (இனிய பாடல்களையும் நாடகங்களையும் ஒலிபரப்புகிறது.)
- மக்கள் பல விழாக்களைக் கொண்டாடப்படுகின்றனர்.
  (மக்கள் பல விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.)

செயப்பாட்டு வினை வாக்கியங்களும் மாணவர்களால் இரண்டு வகையில் பிழைபட எழுதப்படுகின்றன.

**எழுவாயுடன் 'ஐ' சேர்த்து**

- கதவை முருகனால் திறக்கப்பட்டது.(கதவு முருகனால் திறக்கப்பட்டது.)
- இவ்விழாவைப் பள்ளிக் கூடங்களிலும் கொண்டாடப்படுகிறது.
  (இவ்விழா பள்ளிக்கூடங்களிலும் கொண்டாடப்படுகிறது.)

**வினையுடன் 'படு' சேர்க்காமல்**

- கண்ணகி சேரநாட்டை அடைந்து தெய்வீகமுற்றது சிலப்பதிகாரத்தில் சொல்கிறது.
  (கண்ணகி சேரநாட்டை அடைந்து தெய்வீகமுற்றது சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறது.)
- ஊராட்சி மன்றத்திலும் நகராட்சி மன்றத்திலும் நூல் நிலையங்கள் இலவசமாக ஏற்படுத்தியுள்ளன.
  (ஊராட்சி மன்றத்திலும்நகராட்சி மன்றத்திலும் நூல் நிலையங்கள் இலவசமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.)

**4) செயப்படுபொருள் குன்றிய, குன்றாவினைப் பிழைகள்**

பெரும்பாலும் மாணவர்கள் செயப்படுபொருள் குன்றாவினைகளையும் தொடர்புடைய செயப்படுபொருள் குன்றிய வினைகளையும் தவறாக மாற்றிப் பயன்படுத்துகின்றனர்.

**குன்றாவினை - குன்றியவினை**

- அது நமக்கு அடுப்பு எரியப் பயன்படும். (அது நமக்கு அடுப்பு எரிக்கப் பயன்படும்.)
- அந்தப் பூங்காவில் பலவகைப் பறவைகளை அடைந்து வைத்திருந்தனர்.
  (அந்தப் பூங்காவில் பலவகைப் பறவைகளை அடைத்து வைத்திருந்தனர்.)

**குன்றியவினை - குன்றாவினை**

- அண்ணா சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளக்கினார்.
  (அண்ணா சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார்.)
- தீண்டாமை மனிதனையெல்லாம் மிருகமாக மாற்ற வைக்கும்.
  (தீண்டாமை மனிதனையெல்லாம் மிருகமாக மாற வைக்கும்.)

வாக்கியப் பிழைகளுக்கான காரணமாகப் பேச்சுத்தமிழ், சூழல் தூண்டுதல், பயிலாமை, தவறான கருத்தாக்கம் ஆகியன அமையும். மாணாக்கர் எழுவாய்க்கேற்ப வினையையும்,

வினைக்கேற்ப ஒரு பெயரை வேற்றுமை விகுதியுடனும் இல்லாமலும் பயன்படுத்த பயிற்சி யளிப்பதன் வழியாகப் பிழைகளைக் களையலாம். பின்வரும் பயிற்சிகள் பொதுநிலையில் உதவும்.

1. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்கவாறு மாற்றி நிரப்புதல்.
2. கதையை, அந்தக் கதையில் இடம்பெறும் கதை மாந்தர் சொல்வதுபோன்று மாற்றுதல்.
3. கதையை நாடகமாக மாற்றுதல்.
4. உரையாடலில் ஒருவருடைய பகுதியை நிரப்புதல்.
5. கோடிட்ட வினைக்குப் பதிலாய் அடைப்புக்குள் உள்ளதைப் பயன்படுத்தி வாக்கியத்தை அமைத்தல்.

(எ-டு) அவருக்கு வங்கியில் விரைவாகக் கடன் கிடைத்தது. (பெறு)
அவர் வங்கியில் விரைவாகக் கடன் பெற்றார்.

மேலும், குறிப்பிட்ட பயிற்சிகளை ஒவ்வொரு பிழையின் தனித்தன்மைக்கும் ஏற்பத் தயாரித்து வழங்கலாம்.

## 4. பிழைகாணல்

மொழியாசிரியரின் கடமைகளுள் தலையாயது மாணவர்கள் செய்யும் பிழைகளை இனங் கண்டு காரணமறிந்து அவற்றைக் களைவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல். ஆசிரியர் மாணவர்களின் கட்டுரை ஏடுகள், தேர்வுத்தாள்கள் ஆகியவற்றிலும் வகுப்பில் அவர்களோடு உரையாடும்போது அவர்களுடைய பேச்சிலிருந்தும் பிழைகளைக் கண்டு தொகுக்கவேண்டும். இவ்வாறு தொகுக்கும் பிழைகளைச் சேர்த்துப் பிழைகளைத் தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும்.

‘கவலை’ என்பதைக் ‘கவளை’ என்றும் ‘கடல்’ என்பதைக் ‘கடள்’ என்றும் ‘பலா’ என்பதைப் ‘பளா’ என்றும் எழுதியிருந்தால் அவற்றிலிருந்து ‘ல் - ள்’ என்னும் பிழையைக் கண்டறிய வேண்டும். அதாவது, குறிப்பிட்ட மாணவனோ மாணவர் பலரோ ‘ல்’ ஒலியை ‘ள்’ ஆக உணர்ந்து பிழை செய்துள்ளதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதேபோன்று ஒரு பிழையைக் குறிப்பிட்ட ஒரு மாணவன் மட்டும் செய்கின்றானா? ஒரு சிறுகுழுவினர் மட்டும் செய்கின்றனரா? வகுப்பில் பெரும்பாலானவர்கள் செய்கிறார்களா? என்பதையும் ஆசிரியர் அறியவேண்டும். அப்பொழுதுதான் பிழை நீக்கல் பயிற்சி கொடுக்க வசதியாக இருக்கும்.

## 5. கற்றலில் பிழையின் இடம்

பிழை செய்வது மனித இயல்புதான். எனவே, பிழைகளே செய்யாமல் மாணவர்கள் கற்றுக் கொள்ளவேண்டுமென ஆசிரியர் எதிர்பார்க்கக் கூடாது. சுருங்கச் சொன்னால், மாணவர்கள் ஒவ்வொரு பிழை செய்யும்போதும் கற்றுக் கொள்கிறார்கள். இந்த நேரத்தில் ஆசிரியர்களின் உதவி மாணவர்களுக்குத் தேவைப்படுகிறது. பிழைகள் மாணவர்களின் கற்றலில் நேர்ந்த குறை என்பதால் பிழைக்கான காரணத்தைக் கண்டு களையவேண்டும். அவ்வாறு களையப்படா விட்டால் மனத்தில் ஆழப் பதிந்து திருத்தக் கடினமானவையாக (கல்மேல் எழுத்தாக -Fossil-ized error) மாறிவிடும். மேலும், மொழியைப் பொருத்தவரை எங்கெல்லாம் ஒழுங்கமைப்பு குறையுடையதாக இருக்கிறதோ அங்கெல்லாம் ஒப்புமையாக்கல் பிழைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. (எ-டு: அவன் - அவனுக்கு, அவள் -அவளுக்கு, அவர் - அவருக்கு, என்பதுபோல், நான் - நானுக்கு என எழுதுவது ஒப்புமையாக்கல் பிழை). எனவே, ஒழுங்கமைப்புக்கு விதிவிலக்காக உள்ளவற்றைக் கற்பித்துப் பிழையை நீக்கவேண்டும். இவ்வாறான பிழைகளைப் பெரும்பாலானோர் செய்தால், அப்பிழைகளை எதிர்பார்த்து விதிகளையும் விதிவிலக்குகளையும் முன்கூட்டியே கற்பிக்கவேண்டும்.

## 6. குறை களைதல்

பிழையாய்வில் கண்ட முடிவுகளுக்கேற்பத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மாணவர்களிடமிருந்து பிழைகளைக் களையவேண்டும். விளக்குதல், விதியைக் கற்பித்தல், பயிற்சி தருதல், மீண்டுங் கற்பித்தல் ஆகிய வழிகளில் ஒன்றையோ சிலவற்றையோ கையாண்டு பிழைகளை மாணவர்களின் பயன்பாட்டிலிருந்து நீக்கவேண்டும். பிழைகள் அளவிற்கும், பிழை செய்யும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும் ஏற்பப் பிழைகளைக் களையும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

மாணவர்களின் பிழைகளுக்கு முழுவதும் ஆசிரியரைப் பொறுப்பாக்க முடியாது என்றாலும், ஆசிரியர் பிழைகளைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட முடியாது. அவர் தாமாகவே முயன்று பிழைகளைக் களைவதற்குத் தேவையான செயல்பாடுகளில் இறங்கவேண்டும். தக்க விதிகளை வாய்ப்பு நேருமிடங்களில் கற்பிக்கவேண்டும். பயிற்சிகளை உருவாக்கி மாணவர்களை நிறைவேற்றச் செய்யவேண்டும். பிழைநீக்கல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களுள் பெரும்பான்மையினர் சில பிழைகளைச் செய்கின் றனர் என்றால் வகுப்பு முழுமைக்கும் பிழை நீக்கல் பயிற்சிகளை அளிக்கவேண்டும். சில மாணவர்கள் மட்டுமே செய்திருந்தால், அவர்களுக்கெனத் தனியாக நேரம் ஒதுக்கிப் பயிற்சிகள் தரவேண்டும். வகுப்பு மொத்தத்திற்கானாலும் மாணவர் சிலருக்கானாலும் பிழை நீக்கல் பயிற்சி களைத் தந்த பிறகு அவர்கள் அந்தப் பிழைகளைச் செய்கிறார்களா எனச் சோதிக்க வேண்டும். அப்போதும் பிழைகள் செய்தால் மீண்டும் அவற்றைக் களைய முயலவேண்டும். வகுப்பு முழுமைக்கும் பிழைநீக்கல் பயிற்சி கொடுத்துப் பிறகு சோதித்துப் பார்க்கும்போது, தொடர்ந்து பிழை செய்வோர் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அவர்களுக்கு மீண்டும் பயிற்சிகள் தருவதை வகுப்புக்கு வெளியே செய்யலாம். ஒரு குழுவுக்கு மட்டுமே பிழை நீக்கல் பயிற்சி தந்தால் பிழைகள் இல்லாமல் எழுதுபவர்களைக் குழுவிலிருந்து நீக்கிவிட்டுத் தொடர்ந்து பிழை களுடன் எழுதுபவர்களுக்கு மட்டும் மீண்டும் பயிற்சி தரவேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து முயல்வதே சிறந்த ஆசிரியரின் கடமையாகும். அதாவது, ஒரு மாணவன் தன்னுடன் பயிலும் காலம் முழுவதும் பிழை நீக்க முயற்சி செய்யவேண்டும். அதற்குப் பிறகும் மாணவர்கள் பிழை செய்தால், அப்போது அவற்றை நீக்கும் பொறுப்பு அடுத்த வகுப்பு ஆசிரியருடையதாகி விடும். ஆனால், மீண்டும் மீண்டும் பிழைநீக்கல் பயிற்சிகள் தரும்போது ஆசிரியர், பயிற்சிமுறைகளை மாற்றிப் பார்க்கவேண்டும். சில பிழைகள் முன் வகுப்புகளில் தொடர்ந்து களையப்படாமையால் மனத்தில் ஆழப் பதிந்து புதை வடிவமாகிவிடும். இவை தவிர, மற்றப் பிழைகளை ஓரிருமுறை பயிற்சி தருவதிலேயே நீக்கிவிடலாம். புதைவடிவப் பிழைகளை நீக்குவது சற்றுக் கடினமானது. இருப்பினும், தொடர்ந்த பயிற்சிகள் அவற்றையும் நீக்கும். சில நேரங்களில் சில பிழைகளை மாணவர் சிலருக்கு மொழியிலிருந்து அகற்றுவது இயலாமல் போகக் கூடும். மாணவர்களின் உளவியல், உடலுறுப்புகள் சார்ந்த பிரச்சினைகள் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். அப்போது மாணவர்களின் பெற்றோர் வழியாகத் தக்க வல்லுநர்களிடம் அழைத்துச் சென்று குறைகளைக் களையலாம்.

> மாணவர்கள் செய்யும் பிழைகளைப் பட்டியலிடுக. அவை எவ்வகைப் பிழைகள் என்பதை வகைப்படுத்துக. பிழை நீக்க எத்தகைய வழிமுறைகளை மேற்கொள்வீர்கள்.




**கற்பித்தலில் பிழைகளைக் களைவதற்கான படிநிலைகள்**

## தொகுப்புரை

தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் தமது மாணவர்கள் செய்யும் பிழைகளை இனங்கண்டு அவற்றிற் கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கேற்ப மீண்டும் கற்பித்தோ பயிற்சிகள் கொடுத்தோ பிழைகளைக் களைவதற்குத் தேவையான கருத்துகள் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன. பிழையை முடிவு செய்வதற்குத் தவறும் பிழையும் எனும் பகுதியும் பிழைக்கான காரணங்களாக ஏழு காரணங்களும் மாணவர்கள் தமிழில் பல்வேறு நிலைகளில் செய்யும் பிழைகளும் அவற்றைக் களைவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளும் தெளிவுபடுத்தபபட்டுள்ளன. இவற்றைக் கற்று மாணவ ஆசிரியர்களும் பிழைகளைத் தொகுத்து அவற்றைக் களைவதற்கான பயிற்சிகளை உருவாக்க வேண்டும்.

இளைய சமுதாயம் கற்கும்போதே பிழையில்லாமல் பேசவும் எழுதவும் செய்ய வேண்டியது ஆசிரியர்களாகிய நம் கடமைதானே!

அறிந்துகொள்க: இயக்குநர், அனுப்புநர், பெறுநர், ஓட்டுநர், நடத்துநர்; சுவரில், வெந்நீர், சிவப்பு, பன்னிரண்டு, பதின்மூன்று, நூற்றெட்டு, முந்நூறு, நாலாயிரம் இவைபோன்று முறையானவற்றை அறிந்து பயன்படுத்துவது மொழிமரபைக் காத்தலாகும்.

# 5. தமிழ் கற்பித்தலில் தகவல்தொழில்நுட்பம்

## அறிமுகம்

இவ்வியல் இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கியது; ஒன்று, மொழிப்பயிற்றாய்வுக்கூடம், மற்றொன்று, கணினியும் தமிழும். மொழிப்பயிற்றாய்வுக் கூடம் மொழி ஒலிப்புப் பிழைகளைப் போக்கி மேம்படுத்துவதற்குப் பெரிதும் உதவுவது. தாய்மொழியாளர்க்கு மட்டுமன்றி, அயல்மொழியினரும் எளிதாகவும் விரைவாகவும் ஒரு மொழியைக் கற்க உதவுவது. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் அமைப்பு, கருவிகள் பற்றி இவ்வியலின் முதற்கண் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. மாணவ ஆசிரியர்கள் புதியனவற்றையெல்லாம் வரவேற்று, அவற்றைத் தமிழ் வளப் படுத்தி வருங்காலக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். அவற்றைத் தவறவிட்டால் காலம் நம்மைப் புறந்தள்ளிச் சென்றுவிடும்; மொழி வளம்பெறாமல் குன்றிவிடும். மொழியைப் பயன்படுத்துவதிலும் வளப்படுத்துவதிலும் ஆசிரியர்களுக்குப் பெரும்பங்கு உண்டு. தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தமிழ் கற்பித்தலை மேம்படுத்த மாணவ ஆசிரியர்கள் திறன்பெற வேண்டும். கணினிப் பயன்பாடு அதிகரித்ததன் விளைவாக முன்பு பயன்படுத்திய தொழில் நுட்ப உத்திகள் எல்லாவற்றையும் கணினிவழி பயன்படுத்த முடியும். எனவே, கணினி வழியான தொழில் நுட்பம் இங்கே விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

### படிநிலைகள்

1. மொழிப் பயிற்றாய்வுக் கூடம்
2. கணினியும் தமிழும்
3. தமிழ் மென்பொருள்கள்
4. இணையம்
5. தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
6. பல்லூடகமும் தமிழ் கற்பித்தலும்

## 1. மொழிப்பயிற்றாய்வுக் கூடம்

கல்வித்துறையில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி நல்ல மாற்றங்களை வழங்கியுள்ளது. தாய் மொழியல்லாத பிற மொழியை முறைப்படி கற்றுக்கொள்ள மொழிப்பயிற்றாய்வுக் கூடம் பெரிதும் உதவுகிறது. 1960களில் மேல்நாடுகளில் வளர்ச்சிபெற்ற இந்நிலை தற்போது தமிழ்நாட்டுப் பள்ளிகள் வரை வந்துள்ளது. சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மைசூரில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் போன்றவற்றில் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுவாகப் பிறமொழியினைக் கற்றுக்கொள்ள விரும்புபவருக்கு அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரையே பேசச் செய்து, பதிவு செய்து கேள்வி மற்றும் பேச்சுப் பயிற்சிக்கு இப்பயிற்சிக் கூடம் வாய்ப்பளிக்கின்றது. மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தைத் தாய்மொழி கற்பித்தலுக்கும் திட்டமிட்டுச் செம்மையாகப் பயன்படுத்தலாம்.

ஒருவர் அம்மொழியை தமதாக்கிக் கொள்ளலாம். இப்பயிற்சிக்கு இவ்வாய்வுக் கூடம் பெரிதும் துணைபுரிகிறது. ஒவ்வொரு மொழியிலும் உள்ள ஒலிப்புமுறைகள், பேசும்போது குரலில் தோன்றும் ஏற்றத்தாழ்வு, பேசும் வேகம் இவை இயல்பாக அமைதல் வேண்டும். இத்தகு நோக்கங்களை இவ்வாய்வுக்கூடப் பயிற்சி நிறைவு செய்கிறது.

மொழிப்பயிற்றாய்வுக் கூடம் தனிமாணவர் கற்றலை மையமாகக் கொண்டது. அது, தனி மாணவனின் தேவைகளை நிறைவு செய்கிறது. மொழித்திறனில்,கேட்டல் பயிற்சிக்கும், வாய்மொழிப் பயிற்சிக்குச் சிறப்பிடம் தருகிறது. இதன் அமைப்பைக் காண்போம்.

**அமைப்பு**

மொழிப்பயிற்றாய்வுக் கூடம் ஒலி தடையமைப்பு (Sound Proof) கொண்டதாக இருக்கும். புற ஒலிகள் உள்ளே புகா. அதேபோன்று உள்ளே எழும் ஒலிகளும் அதிகம் பாதிக்காது அமையும். அங்கே,

1. கருவறைக் கருவி (Console)
2. முதன்மைநிலை நாடாக்கள் (Master Tapes)
3. இரட்டைப் பகுதிகள் உள்ள நாடாக்கள் (Twin track tapes)
4. ஒலிப்பதிவு நாடாக் கருவிகள் (Tape Recorders)
5. தலையணித் தொகுதிகள் (Head sets)
6. நுண்ணொலிக் கருவிகள் (Microphones)

ஆகியன இருக்கும்.

**கருவறைக் கருவிகள்**

ஆசிரியர் ஆணையிடும் கருவியாக இதைக் கருதலாம். இதன்மூலம் ஆசிரியர் மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தில் பயிற்சிபெறும் மாணவர்களுடன் தொடர்பு கொள்கிறார். மேலும், மாணவர்களைத் தொடர்புகொள்ள, பயிற்றுவிக்க, கண்காணிக்க, செய்திகள் கூற, ஆணையிட ஏற்றவகையில் இக்கருவி பயிற்சியாளர்களின் ஒலிப்பதிவு நாடாக்கருவியுடனும், தலையணித் தொகுதியுடனும் இணைப்புக்கொண்டது. பொதுவாக இக்கருவியில்,

அ) ஒலிபரப்பு மற்றும் ஒலிப்பதிவு நாடாக்கருவிகளில் ஒலிப்பதிவு செய்து கொள்வதற் கேற்ற வகையில் அமைந்த விசைகள் (Distributing Switches) இருக்கும்.

ஆ) குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயிற்சியாளர் பகுதியில் நடைபெறும் பயிற்சியைக் கண்காணித்துத் திருத்த, மதிப்பிடத்தக்க வகையில் உள்ள செயல் விசைகள் (Monitoring Switches)இருக்கும்.

இ) பயிற்சி பெறும் தனி மாணவருடன் பயிற்சி தொடர்பாக உரையாட ஏற்றமுறையில் அமைந்த விசைகள் (Intercom Switches) இருக்கும்.

ஈ) பயிற்றாய்வுக் கூடத்தில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் குறிப்பிட்ட சில மாணவர்களுடன் பொதுவான குறிப்புகளை ஒரே நேரத்தில் கூறுவதற்கு ஏற்ற விசைகள் (Group Call Switches) அமைந்திருக்கும்.

உ) பயிற்சிபெறும் எல்லா மாணவர்களுக்கும் செய்திகளைத் தரும்வகையில் அமைந்த விசைகள் (All Call Switches) அமைந்திருக்கும்.

**முதன்மை நிலை நாடாக்கள்**

ஆசிரியரால் திட்டமிடப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்ட பயிற்சிகள் அமைந்த நாடாக்களே முதன்மைநிலை நாடாக்களாகும். இவை அந்தந்த பயிற்சிகளுக்கான மிகச்சிறந்த மாதிரிகளாக அமையும். இவற்றின்படி செயல்படுவதாலேயே மொழிப்பயிற்சியைச் சிறப்பாக எய்த முடியும்.

**இரட்டைப் பகுதிகள் உள்ள நாடாக்கள்**

இவ்வகை நாடாக்கள் மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புகள் எனலாம். சில பயிற்சிகளுக்கு இவ்வகை நாடாக்கள் பயன்படுத்தப்படும். சான்றாக, ஒலித்திருத்தத்திற்கான பயிற்சிகளில் அல்லது ஒலி அழுத்தத்திற்கான பயிற்சிகளில் மாதிரிப் பேச்சுகள் நாடாவின் ஒரு

பகுதியில் அமைந்திருக்கும். பயிற்சியாளர்களின் ஒலிப்பு அடுத்த பகுதியில் பதிவாகும். மாதிரி ஒலிப்பதிவு அழியாது (Permanent); பயிற்சியாளரின் ஒலிப்பதிவு அழியக்கூடியது. இது,

| மாதிரி ஒலிப்பு | மாதிரி ஒலிப்பு | ____ நாடா |
|---|---|---|
| பயிற்சியாளர் ஒலிப்பு | | |

என்ற வகையில் அமைந்திருக்கும்.

### ஒலிப்பதிவு நாடாக் கருவிகள்

பயிற்சியாளர் ஒவ்வொருவரும் தனித்தனியே பயிற்சி பெறுவதற்காக இக்கருவிகள் கூடத்தில் இருக்கும். ஆய்வுக்கூடத்தில் வசதிக்கேற்ப இக்கருவிகளின் எண்ணிக்கை அமைந்திருக்கும். பிற கருவிகளினின்றும் தடுப்புகளால் பிரிக்கப்பட்ட பகுதிகளில், ஏற்ற இருக்கை வசதிகளுடன் கூடியதாக இக்கருவிகள் வைக்கப்பட்டிருக்கும்.

### தலையணித் தொகுதிகள்

பயிற்சியாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் சென்று அமர்ந்து ஒலிப்பதிவு நாடாக் கருவிகளுடன் இணைந்த தலையணித் தொகுதியை அணிந்த பின்னர்ப் பயிற்சிக்கு ஆயத்தமாகுதல் வேண்டும். இத்தொகுதியில் இரண்டு காதுகளுடனும் இணைந்த காதொலிக் கருவிகளும் (Ear phones)அத்துடன் பயிற்சியாளர் பதில் தருவதற்கு அமைந்த நுண்ணொலிக் கருவியும் அமைந்திருக்கும். இத்தலையணித் தொகுதியை அணிந்தவுடன் பயிற்சியாளர் ஒலிப்பதிவு நாடாவுடனோ அல்லது கருவறைக் கருவியுடனோதான் தொடர்புகொள்ள முடியும். பிற பயிற்சியாளர்களின் ஒலிப்புகள் பயிற்சியாளரைப் பாதிக்காவண்ணம் தலையணித் தொகுதி அமைந்துள்ளது. கவனச்சிதைவைத் தடுக்கவும் பயிற்சியில் தீவிரமாக ஈடுபடவும் இவ்வமைப்புத் துணைபுரிகிறது.

### நுண்ணொலிக் கருவிகள்

பயிற்சியாளர்கள் பயிற்சியின்போது தூண்டலுக்கு ஏற்ற துலங்கல்களைச் செய்தால், அவற்றை ஒலிப்பதிவு நாடாக்களால் பதிய வைப்பதற்காக அமைந்த நுண்கருவி இதுவாகும். பொதுவாக, இக்கருவி தலையணித்தொகுதியுடனேயே இணைந்திருக்கும். தலையணித் தொகுதியை அணிந்தவுடன ஒலிப்பேசிகள் இரண்டும் இரு காதுகளில் அமைவதுபோலவே நுண்ணொலிக்கருவி வாய்க்குச் சற்றுமுன்னர் ஒலியை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையும். இதுவரை மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் அமைப்பைக் கண்ட நாம், அடுத்துப் பயிற்சியைக் காண்போம்.

### பயிற்சி/கற்பித்தல்

ஆசிரியர் முதன்மைநிலை நாடாவை இயக்குவார். அவ்வொலியானது, பயிற்சியாளர் களுக்காக அமைந்த ஒலிப்பதிவு நாடாக்கருவிகளில் உள்ள ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவாகும்.

பின்னர்ப் பயிற்சியாளர் தன் ஒலிப்பதிவு நாடாவில் கேட்கவேண்டும். சிலவிடங்களில் பதில் கூறவேண்டும். அவை அவ்வப்போது ஒலிப்பதிவு செய்யப்படும். பயிற்சியாளர் தன் ஒலிப்பதிவு நாடாவை எத்தனைமுறை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்; ஒப்பிட்டுப் பார்க்கலாம்; மீண்டும் கேட்கலாம். முன்னதைப்போல அதாவது, மாதிரியைப்போல இல்லையேல் அல்லது பிழையேற்பட்டிருப்பின் திரும்பவும் ஒலிப்பதிவு செய்து திறன் பெறலாம்.

சில பயிற்சிகளுக்கு இரட்டைப் பகுதிகள் உள்ள நாடாக்கள் தரப்படும். ஆசிரியர் பகுதி முதற் பகுதியில் இருக்கும்; தொடர்ந்து இடைவெளி இருக்கும். இவ்விடைவெளி, பயிற்சியாளரின் துலங்கலுக்காகவே தரப்படும். மீண்டும் கேட்கும்போது தொடர்ச்சியாகக் கேட்க முடியும். இதன்மூலம் மூலப்பகுதிக்கும் பயிற்சியாளர் பகுதிக்கும் உள்ள வேறுபாட்டைக் கற்பவரே புரிந்து செயல்படலாம். பேச்சுப் பயிற்சிகள் (Speech drills) இவற்றின்மூலம் தரப்படுகின்றன.

இவை:

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பகுதி | தூண்டல் - 1 | தூண்டல் - 2 |
| | மீளக்கூறல் -1 | மீளக்கூறல் - 2 |
| | ... ... | ... ... |
| மாணவர் பகுதி | துலங்கல் - 1 | துலங்கல் - 2 |

என்ற வகையில் இருககும்.

**கற்பித்தல்/கற்றல் வகைகள்**

ஆய்வுக்கூடங்களில் கற்பித்தலில் பின்பற்றப்படும் முறைகளாவன:

1. ஒலிபரப்பு வகை (Broadcast Procedure)
2. நூலக வகை (Library Operation)
3. தொலைபேசி வகை (Dial Access)
4. இணைந்தமுறை (Combination Type)

**ஒலிபரப்பு வகை**

அடிப்படையான மொழிப்பயிற்சிகளுக்கு இம்முறை பயன்படுகிறது. கருவறையிலிருந்து முதன்மைநிலை நாடாப்பதிவு ஒலிபரப்பப்பட்டு, அவ்வொலி பரப்பு அனைத்து ஒலிபரப்பு கருவி களுக்கும் பகிர்ந்தளிக்கவேண்டும். பின்னர், இவற்றில் பயிற்சியாளர் பயிற்சி பெறல்வேண்டும்.

இம்முறையில் பயிற்சியாளர்கள் தங்கள் விருப்பம்போல் தேர்ந்தெடுத்துப் பயிலும் வாய்ப்பு இல்லை; ஆசிரியர் திட்டமிட்டபடிதான் செயல்படலாம்.

**நூலக வகை**

பயிற்சிகளை ஏற்கெனவே பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ள ஒலிப்பதிவு நாடாக்களில் தங்களுத் தேவையான நாடாவைப் பெற்றுக்கொண்டு, அதில் பயிற்சிபெறும் வாய்ப்பு இதில் உண்டு. இம்முறையில் மாணவர் தம் தேவைக்கேற்பச் செயல்பட முடியும். இதனால், தனி மாணவர் தேவை முழுமை பெறுகிறது.

**தொலைபேசி வகை**

பயிற்சிபெறும் மாணவர் தன்இடத்திலிருந்து குறிப்பிட்ட எண்ணை இயக்கினால் தொடர் புடைய பயிற்சியானது ஒலிபரப்பப்படும்; உடனே பயிற்சி பெறலாம். இம்முறையைப் பயன் படுத்த அதிகச் செலவு ஏற்படும். ஒரே காலத்தில் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் ஒரே பயிற்சி யில்கூடப் பதிவு செய்யப்பட்ட பல நாடாக்கள் வேண்டும்.

**இணைந்த முறை**

ஒலிபரப்பு வகையும், அதே நேரத்தில் தனித்தனிக் கற்றலுக்கான மொழிப் பயிற்சிக் கருவிகள் அமைப்பும், செயல்முறையும் கொண்டது இணைந்தமுறை எனப்படும்.

தற்போதைய மொழிப்பயிற்றாய்வுக் கூடங்களில் இம்முறையே பின்பற்றப்படுகிறது.

## மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத் தன்மைகள்:

### அ) மீளச் செய்தல் (Retracing)

மொழி, சில வரையறைகட்குட்பட்ட முறைகளில் அமைகிறது. எனவே கேட்க, போலச் செய்ய, ஒலிக்க, மீண்டும் ஒலிக்க, பிழைகளை உணர, திருத்த, ஒப்பிட பயிற்றாய்வுக் கூடத்தில் வாய்ப்புள்ளது.

### ஆ) பாடப்பகுதிகள் தேர்ந்தெடுத்தல் (Material Selection)

பதிவுசெய்யப்பட்ட மொழிப்பயிற்சி நாடாக்கள் இங்குள்ளதால் பயிற்சியாளர் எப்பகுதியில் சிறப்புக் கவனம் தேவை என உணர்கிறாரோ அப்பகுதிக்கான பதிவுகளைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சிபெற வாய்ப்புண்டு.

### இ) தனிவேகக் கற்றல்

மொழிப்பயிற்சிகளில் கற்பவர்கள் தங்கள் தனிவேகத்திற்கேற்பச் செயல்படலாம். பிறர் குறுக்கீடு இதில் இல்லை.

### ஈ) திருத்தம் பெறுதல்

பயிற்சி பெறும்போது பயிற்சியாளர்களிடம் குறைகள் காணப்படின் கருவறையின்மூலம் ஆசிரியர் திருத்தம் தருவார். தனிப்பட்டமுறையில் திருத்தம் பெறுவதால் செம்மை செய்து கொள்ள அரிய வாய்ப்புக் கிடைக்கிறது.

**பயன்கள்:**

1. தாய்மொழியாளரின் இயல்பான பேச்சைக் கேட்டுப் பயிற்சி பெறும் வாய்ப்புள்ளது.
2. பயிற்சியாளர்கள் வாய்மொழிப் பயிற்சியில் கலந்துகொள்ள அதிக காலம் கிடைக்கிறது.
3. குறுக்கீடு இல்லையாதலால் பயிற்சியாளர்கள் எந்தவிதமான அச்சமும் கூச்சமுமின்றிப் பயிற்சி பெறலாம்.
4. கருவறை மூலமாக ஆசிரியர் தனிக்கற்றலுக்கு உதவ முடியும்.
5. மாணவர்மீது தனித்தனியாகக் கவனம் செலுத்த ஆசிரியரால் முடியும்.
6. தங்கள் வேகத்திற்கும் திறமைக்கும் ஏற்பக் கற்க இயலும்.
7. விரும்பிய பயிற்சிகளில் பன்முறைப் பயிற்சி பெறலாம்.
8. தங்கள் தவறுகளைத் தாங்களே கண்டு திருத்திக் கொள்ள முடியும்.

இனி, மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தில் நடைபெறும் பயிற்சிகளைக் கற்போம்.

**பயிற்சிகள்:**

1. ஒலித்தல் பயிற்சிகள்
2. கேட்டல் பயிற்சிகள்
3. மொழிப் பயிற்சிகள்
4. கருத்துணரும் பயிற்சிகள்

போன்றவற்றில் மொழிப்பயிற்றாய்வுக்கூடம் கவனம் செலுத்துகிறது.

### 1) ஒலித்தல் பயிற்சி

ஒவ்வொரு மொழியிலும் ஒலித்தற்கரிய ஒலிகள் உள்ளன. அவ்வொலிகளைச் செம்மை யாகப் பேச்சில் ஒலித்தால்தான் பொருள்புரிவதில் தெளிவு ஏற்படும். எனவே, அவ்வொலிகளைக் கொண்டு சொற்கள், சொற்றொடர்களில் பயிற்சி தருதல்.

### 2) கேட்டல் பயிற்சி

தொடர்ச்சியாக, தொடர்புடைய நல்ல மாதிரிப் பேச்சுகளைக் கேட்பதால் போலப் பேசுவதற்கு, எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் எப்படிக் கூறுவது என்று அறிவதற்குத்

துணைபுரியும்; உரையாடல் முறையிலும் இப்பயிற்சி இடம்பெறும்; பாடல்களையும் கேட்கச் செய்யலாம்.

### 3) மொழிப் பயிற்சி

மொழியின் அடிப்படைக் கூறுகளில் திறன்பெற இப்பயிற்சி தருதல் உண்டு. சான்றாக, வினாக்கள் அமைத்தல் என்று எடுத்துக்கொண்டால்,

**ஒலிப்பதிவு நாடாவில்:**

**ஆசிரியர்** : நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

**பயிற்சியாளர்** : நீ எங்கே போகிறாய்?

என உடனே கேட்டல் வேண்டும். இவ்வாறு பல நிலைகளுக்கேற்ற பயிற்சிகள் அமையும்.

### 4) கருத்துணரும் பயிற்சி

சிறு நிகழ்ச்சிகள் சிறு காலஅளவில் ஒலி பரப்பப்படும். பின்னர்த் தொடர்ந்து அது தொடர் பான சிறு வினாக்கள் கேட்கப்பட்டு விடைகள் எதிர்பார்க்கப்படும். இப்பயிற்சியில் பயிற்சியாளர் முழுக் கவனம் செலுத்தினால்தான் விடைதர இயலும். அதோடு கூட நினைவாற்றலும் தேவை.

இப்பயிற்சிகள்மூலம் திருத்தமான ஒலிப்பு, உரையாடல் நுணுக்கம், பேச்சின் கூறுகள் ஆகியவற்றிலும் செம்மை பெறலாம்.

### மொழிப்பயிற்றாய்வுக் கூடம் - மதிப்பீடு

இவ்வாய்வுக் கூடங்களில் பல நிறைகளோடு சில குறைகளும் உள்ளன.

1. பயிற்சியாளர்களுக்கு ஆர்வம் இல்லையேல் பயிற்சிகள் பயன் இல்லாது போய்விடும்.
2. பாடத்திட்டங்கள் - பயிற்சிகள் தயாரிப்பதில் ஆசிரியருக்குச் சுமைகள் அதிகம்.
3. மொழிப்பாடக் கருவிகளை இயக்குவதில் சிலருக்கு இடர்ப்பாடுகள் ஏற்படக்கூடும்.
4. பொருட்செலவு அதிகமாகும். அதோடுகூட மிகச் சிலருக்கே குறிப்பிட்ட நேரத்தில் பயிற்சி தரமுடியும்.

தமிழைக் கற்றுக்கொள்ள இது பயன்படும் தன்மையை அடுத்து அறிந்து கொள்ளலாம்.

### மொழிப்பயிற்றாய்வுக் கூடமும் தாய்மொழியும்

பிறமொழிகளைக் கற்கப் பெரிதும் பயன்படும் இவ்வாய்வுக் கூடங்கள் தாய்மொழி கற்பித்தலிலும் துணைபுரியும்.

ஒவ்வொரு தாய்மொழியும் பிறருக்கு அன்னிய மொழியாகும். எனவே, கற்பித்தலில் தொடக்கநிலை, நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஒலித்தல் பயிற்சிகள் தரலாம்.

கேட்டல் பயிற்சி, மொழிப்பயிற்சி ஆகியவற்றிலும் அந்தந்த நிலைகளுக்கேற்ப மாணவர்களுக்குத் தாய்மொழியில் பயிற்சி தரலாம்.

எழுத்துகளை முறையாக ஒலித்தல், மயங்கொலி வேறுபாடு உணர்ந்து படித்தல், சரியாக ஒலிப்பதற்குரிய பயிற்சிகளை அறிதல், பொருளுணர்வுக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல், தொடர்களை உரிய வேகத்துடன் படித்தல் முதலானவற்றிற்கு மொழி ஆய்வுக்கூடத்தைக் கையாளலாம். மேலும்,சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்டல், செய்யுளை உரிய ஓசையோடு படிக்கும் முறைகள், சுவையான பகுதிகளைக் குறிப்பிடும்விதங்கள் ஆகியனவற்றில் மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் பயன்பாடு பெரிதும் துணை செய்யும்.

## 2. கணினியும் தமிழும்

இந்த நூற்றாண்டின் அறிவு விரிவுக்கும் உலகத் தொடர்புக்கும் வாயிலாகத் திகழ்வது கணினி. கணினி இல்லாதவர் உலகத் தொடர்பில்லாதவரே. அந்த அளவிற்குக் கணினியின் பயன் பாடுகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. எல்லாத் துறைகளுக்கும் ஏற்றவாறு கணினியை வடிவமைத்துள்ளனர். ஒரு கணினியின் வாயிலாக அச்சிடலாம், கணக்கெழுதலாம், படம் வரையலாம்; நிழற்படம் எடுக்கலாம்; பாடம் நடத்தலாம்; உலகெங்கும் கிடைக்கும் செய்திகளைத் திரட்டலாம்; வேண்டிய பொருள்களை வீட்டுக்கே வரவழைக்கலாம்;உலகெங்கும் உள்ளவர் களோடு அறிமுகப்படுத்திக் கொண்டு நேருக்கு நேராகப் பேசலாம்; வீட்டிலிருந்து கொண்டே உலக வரைப்படத்தினைக் கொண்டு உலாவரலாம்; எங்கிருந்துகொண்டும் தங்களின் வீட்டை நோட்டமிடலாம்; தங்கள் வாகனங்கள் எங்குச் சென்றுகொண்டிருக்கின்றன எனப் பார்வை யிடலாம்; திரைப்படம் எடுக்கலாம். இவ்வளவு வசதிகளையும் வாய்ப்புகளையும் வீட்டுக்கே தேடித் தரும் வியத்தகு பொறியே கணினி. சிறப்பாக வாழக் கணினிக் கல்வியும் கணினிவழிக் கல்வியும் இன்றியமையாதன. அந்நோக்கில், இவ்வியலில் கணினிபற்றியும் கணினிவழிக் கல்விபற்றியும் கற்க இருக்கின்றோம்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்." (குறள்: 140)

உலக முன்னேற்றத்தோடு நாமும் நம்மை மேம்படுத்திக்கொண்டு உயரவேண்டும். இல்லையேல், உலகம் நம்மைப் புறந்தள்ளிவிடும்.

### கணினிவரலாறு

கி.மு. 3000 ஆண்டுகளுக்குமுன் பாபிலோனியர்கள் எண்களை எண்ணுவதற்கும் அவற்றைக் கூட்டவும் பெருக்கவும் களிமண்ணால் தோற்றுவித்த மணிப்பலகையே இன்றைய கணினிக்கு வித்தாகும். கி.மு. 500 ஆண்டுகளுக்குமுன் கம்பிகளில் மணிகளைக் கோத்து எண்ணும் மணிச்சட்டத்தை எகிப்தியர்கள் உருவாக்கினர். கி.பி. 200 ஆண்டுகளுக்குமுன் சீனர்களும் ஜப்பானியர்களும் மணித்தட்டுகளை( Saun-pan computing tray) உருவாக்கிக் கணக்கிட்டனர். கி.பி. 1617 இல் ஸ்காட்லாந்து நாட்டு ஜான் நேப்பியர் என்பவர் வகுத்தல், பெருக்கலுக்கான சுருக்கக் கூட்டல் முறைக் கட்டைகளைக் கண்டுபிடித்தார். கி.பி. 1642 இல் பாரிஸைச் சார்ந்த பிளேஸ் பாஸ்கல் (Blaise Pascal) என்பவர் எண்களைக் கணக்கிடுவதற்கான கணிதக் கருவியை முதன்முதலாக உருவாக்கினார். கி.பி. 1673 இல் காட்பிரைடு லெபினிஸ் (Gottfried Leibniz ) என்பவர் கூட்டல், பெருக்கல், கழித்தல், வகுத்தலுக்கான இயந்திரத்தை (mechanical calculating machine) உருவாக்கினார். கி.பி.1833இல் இங்கிலாந்து நாட்டுச் சார்லஸ் பாப்பேஜ் (Charles Babbage) எண் பகுப்பாய்வுக் கருவி(Analytical Machine) துளைத்தாள் அட்டைகளைப் பயன்படுத்திக் கட்டளைகளுக்கேற்பக் கணக்கிடும் முதற் கணினியை வடிவமைத்தார். அதனால், இவரே கணினியின் தந்தையெனப் போற்றப்படுகிறார்.

.

http://www.cyberstreet.com/hcs/museum/chron.htm இணையத்தளத்திற்குச் சென்று கணினியின் வரலாற்றை காண்க. முதல் தலைமுறை, இரண்டாம் தலைமுறை, மூன்றாம் தலைமுறைக் கணினிகளின் படங்களை இணையத் தளத்தில் தேடித் தொகுக்கவும்.



பாபிலோனியர் மணிப்பலகை



தற்கால மணிச்சட்டம்



ஜான் நேப்பியர்



பிளேஸ் பாஸ்கல்



சால்ஸ் பாப்பேஜ்



லேடி லவ்லேஸ்



ஜான் ஜே. அட்டனாசாஸ்ப்



கிளிப்போர்டு பெர்ரி



**பாப்பேஜின் பகுப்பாய்வுப் பொறி (Analytical Engine)**



**இனியாக் (ENIAC) கணினி**

கி.பி. 1842 இல் ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகள் லேடி லவ்லேஸ், பாப்பேஜின் கணினிச் செயல் பாட்டிற்குத் தேவையான கட்டளைகளைத் தயாரித்தளித்ததனால் இவரே கணினிச் செயல் பாட்டுக்கான முதற் செயல் திட்ட வரைவாளர் (writes programs for Babbage) ஆவார். 1890 இல் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹெர்மன் கோல்ரித் (Dr. Herman Hollerith) மக்கள்

தொகையைக் கணக்கெடுக்க மின்னியக்கத் துளையட்டைக் கருவியை வடிவமைத்தார். 1924இல் ஐ.பி.எம். நிறுவனம் உருவானது (IBM International Business Machines).1931இல் முதற் கணிப்பானை ( First calculator) ஜெர்மனியைச் சேர்ந்த கொன்ராட் சூஸ் (Konrad Zuse.) என்பவர் வடிவமைத்தார்.1946இல் ‘இனியாக்’ ( ENIAC -Electronic Numerical Integrator and Computer), கணினி உருவாக்கப்பட்டது. 18,000 மின்குமிழ்களும் 80 டன் எடையும் கொண்ட இக்கணினி ஒரு வினாடியில் 5,000 கூட்டல்களையும் 360 பெருக்கல்களையும் கணக்கிடும் வேகம் மிக்கது. 1939இல் ஜான் ஜே. அட்டனாசாஃப், கிளிப்போர்டு பெர்ரி ஆகியோர் இணைந்து தானியங்கி எண்ணிலக்கக் கணினியை உருவாக்கினர்.

1946 இல் கணினியில் இருநிலை எண்களுக்கான ‘துமி’ (bit) என்னும் சொல்லாட்சியை முதன் முதலில் பயன்படுத்தியவர் ஜான் துகே ஆவார். 1948 இல் மின்னியக்கக் கணிப்பானைக் (Electronic Calculator) ஐ.பி.எம்.வெளியிட்டது. 1954 இல் ‘போர்ட்ரான்’ என்னும் செயல்திட்ட வரைவு மொழியை(FORTRAN Program) ஜான் பேக்கஸ் என்பவர் எழுதினார். 1959 இல் ‘கோபால்’ (COBOL) செயல் திட்டமொழி எழுதிவெளியிடப்பட்டது.1965 இல் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் ரிச்சர்டு எல். வெக்சல்பிளேட் என்பவருக்குக் கணிப்பொறி அறிவியலுக்கான முனைவர் பட்டத்தை முதன்முதலாக வழங்கியது. 1965 இல் ஒருங்கிணைந்த மின்சுற்றுகளால் இயங்கும் மூன்றாம் தலைமுறைக் கணினிகள் உருவாக்கப்பட்டன.1967 இல் கம்ப்யூட்டர் உலகம் (Computerworld) எனும் முதல் செய்தி இதழ் வெளியிடப்பட்டது. 1969 இல் ‘பாஸ்கல்’(PASCAL) செயல்திட்ட வரைவுமொழி நிக்கோலஸ் விர்த் (Nicklaus Wirth) என்பவரால் எழுதி கணினியில் நிறுவப்பட்டது.1971 இல் கணினிக் குறுந்தட்டுகள்(Floppy disks) உருவாக்கப்பட்டன. 1971இல் ஜான் பிளாக்கென்பேக்கர் என்பவரே மனைக் கணினிகளை முதலில் அமைத்தார். 1972 இல் ‘இண்டெல்’ நிறுவனம் எட்டியல் அலகு(byte) கொண்ட நுண்ணியக்கக் கணினியை (microprocessor.) அறிமுகப்படுத்தியது. இதே ஆண்டில் முதல்தரக் கணினிகள் வெளியாயின. 1976இல் அதிவேகக் கணினி ( Superminicomputers)யைப் பெர்கின்-எல்மர், குட்செல் ஆகியோர் அறிமுகப்படுத்தினர். 1990இல் மைக்ரோசாப்ட் விண்டோஸ் (Microsoft Windows 3.0) அறிமுகப் படுத்தப்பட்டது.1993இல் மைக்ரோசாப்ட் விண்டோஸ் என்.டி. (Microsoft unveils Windows NT) வெளியிட்டது. இன்றைய நிலையில் எல்.சி.டி.(LCD Monitor) திரை யுடன் பல்லூடக வசதிகளுடன் கணினிகள், மடிக்கணினிகள், சிறுகணினிகள் எனப் பல்வகைக் கணினிகள் பயன்பாட்டில் வந்துவிட்டன. மேலும், கணினிகள் தொலைபேசி இணைப்புகளுடன் இணைக்கப்பட்டு இணையத்தள (Internet)வசதிகளும் வந்துவிட்டன. அகன்ற பட்டை (Broad band connection) இணைய இணைப்பு, நேரடி இணைய இணைப்பு (Wi Fi connection)எனக் கணினி வாயிலாகச் செய்திகளையும் நிகழ்வுகளையும் எங்கிருந்தும் பெறுவதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் வந்துவிட்டன.

மணிப்பலகையில் தொடங்கி முதல் தலைமுறை, இரண்டாம் தலைமுறை, மூன்றாம் தலைமுறை, நான்காம் தலைமுறை, ஐந்தாம் தலைமுறையென இன்றுவரை பலரின் தொடர் முயற்சியின் விளைவாக அளப்பரும் பணிகளைச் செய்யும் கணினி உருவாகியுள்ளது. கணினியையும் இணைய இணைப்புகளையும் நன்முறையில் பயன்படுத்தி உலக அரங்கில் நாட்டினை முன்னேற்றுவது ஒவ்வொருவரின் கடமையாகும். கணினிக் கல்வி, கணினிவழிக் கல்வி, கணினிவழி மொழிக்கல்வி ஆகியன ஒவ்வோராசிரியரும் அறிந்துகொள்வது காலத்தின் தேவை. கால் நடைவளம், வேளாண் வளம், தொழில் வளம் எனப் பொருளாதார வளமேம்பாடு காலத்திற்கேற்ப மாறி, இன்று செய்தி வளமே வளமாகக் (Information is wealth)கருதப்படுகிறது. ஒரு செய்தியை நொடியில் தவறவிட்டால் இழப்புகள் கோடிகளில் நிகழ்ந்துவிடுகின்றன. ஆகவே, செய்திகளைத் தருவதிலும் பெறுவதிலும் ஒவ்வொரு நொடியும் மேம்பாடடைய இணைய இணைப்புகள் பேருதவிபுரிகின்றன.

விற்பனைப் பிணைப்பகம்

விற்பனை முனையங்கள்

இணையம்

தீ அரண்

Firewall

வழிகாட்டி Router சேவை மையம் Server

**இணைய உருவாக்க அமைப்பு**

**கணினிக் கல்வி**

மையச் செயலக அலகு (CPU = Central Processing Unit), கணினித் திரை (Monitor), விசைப்பலகை (Keyboard) ஆகியன கணினிக்கான அடிப்படைப் பொருள்களாகும். இவற்றை வன்பொருள்( Hardware) என்பர். கணினியில் செயல்படும் உருப்பொருள்கள், இயங்கு பொருள்கள், செயல் உறுப்புகள், மின்னணுப் பொருள்கள், காந்தப்பொருள்கள், பிற இயந்திரப் பொருள்களனைத்தும் **வன்பொருள்களெ**னக் கூறப்படும். இவையனைத்தும் வல்லியல்பு மிக்க பொருள்களாதலால் வன்பொருள்களென அழைக்கப்படுகின்றன. இத்தன்மைக்கு மாறாக மெல்லியல்புமிக்கவை மென்பொருள்களென (Software) அழைக்கப்படுகின்றன. செயல்முறை களின் தொகுதியைக் குறிக்கும் சொற்கள், கணினிப் பொறியமைவின் செயற்பாட்டையும் வன்பொருள்களின் இயக்கத்தையும் கட்டுப்படுத்துகின்றன. கணினிப் பொறியமைவுக்கான மென்பொருள்கள், பயன்பாட்டுச் செயல்முறைகள் என்றும், பொறியமைவுக்கான செயல்முறை கள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விசைப்பலகையின் வாயிலாகச் செய்திகளை மையச் செயலகத்திற்கு உள்ளீடு செய்து, மென்பொருள்களின் வாயிலாகத் தீர்வுகளைக் கண்டு முடிவுகளைக் கணினித் திரையில் காணலாம். அவற்றைக் கணினியில் சேமித்துத் தேவையானபோது பார்க்கலாம்; அல்லது அச்சியந்திரத்தின் வாயிலாக அச்சிட்டு ஏடாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

**கணிப்பான் மொழிகள்**

கணிப்பானுக்குத் தெரிந்த ஒரே மொழி ‘இருநிலை எண்’(Binary) மொழிதான். அதாவது, எண்களில் ‘0’ உம் ‘1’ உம் கொண்ட மொழி. இதை இயந்திர மொழி (Machine level language) என்று கூறுவர். ‘இருநிலை எண்’ (Binary) மொழியில் செயல்திட்ட வரைவு செய்தல் மிகவும் கடினமான பணி. இச்சிக்கலைத் தீர்க்கும் பொருட்டுக் குறியீடுகளையும் சுருக்கச் சொற்களை யும் பயன்படுத்தி இடைநிலை மொழியை (Assembly level language) உருவாக்கினர். இந்த இடைநிலை மொழியை ‘இருநிலை எண்’ மொழிக்கு மாற்ற மொழிமாற்றியை உருவாக்கினர். இடைநிலை மொழியிலுள்ள குறியீடுகளை நினைவில் வைத்துக் கொள்வது கடினம். மேலும் ‘இருநிலை எண்’ (Binary) மொழியும் இடைநிலை மொழியும் இயந்திரத்திற்கு இயந்திரம் மாறுபடக் கூடியது. எனவே, அடுத்த நிலையில் உயர்நிலை மொழிகள் உருவாக்கப்பட்டன. இதற்கும் மொழிமாற்றிகள் தேவைப்பட்டன. கணினிமொழிகளாவன ‘பேசிக்’ (Basic), ஃபோர்ட்ரான் (Fortron), கோபால் (Cobol), பாஸ்கல் (Pascal) முதலியன. இம்மொழிகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சொற்களையும் குறிப்பிட்ட இலக்கண விதிகளையுங் கொண்டு அமைக்கப்பட்டவை. இவை பெரும்பாலும் கணக்குத் தொடர்பான செயல்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. மேலும், செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆய்வுகளுக்காகப் பயன்படுகிற மொழி ‘ஃப்ரோலாக்’ (Frolog) என்பது. ‘ஃப்ரோலாக்’ மொழியில் இடப்படும் ஆணைகள் ஆங்கில மொழியின் வாக்கியத்தோடு மிகவும் ஒத்திருக்கும். விளக்க முறையில் கொடுக்கப்படும் இத்தகைய செய்திக் கூறுகளின் தொகுப்பே செய்தித்தொகுப்பு (Data Base) எனப்படும்.

## 3.தமிழ் மென்பொருள்கள்

கணினிச் செயல்முறைகளை நிறைவேற்றுகிற மென்பொருள் (OS = Operating System) என்பது, அட்டவணைப்படுத்துதல், தவறுகளைக் கண்டறிதல், கணக்கிடுதல், தொகுத்தல், சேமித்தல், தகவல் மேலாண்மை, உட்செலுத்துதல், வெளிப்படுத்துதல் முதலிய செயல்பாடுகளுக்கான இயக்கமுறைச் செயலாக்க ஆணைத் தொகுப்பான இயக்கக் கட்டளை அமைப்பு. MS Word, Excel, Power Point, Pagemaker, Fonts, Virus, Access முதலிய அனைத்தும் மென்பொருள்களே. இவற்றைக் கொண்டே செய்திகள் உள்ளீடு செய்து தீர்வுகள் பெறப்படு கின்றன.

தமிழில் பல்வேறு வகையான மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் மென்பொருள்கள் உருவானதற்கான காரணம் தமிழ் இணைய மாநாடுகளாகும்.கணினி யில் தமிழ் எழுத்துருவைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னர்த் தமிழ் மென்பொருள்கள் பல உருவாயின. ஆயிரக்கணக்கான தமிழ் இணையத் தளங்கள் அமைக்கப்பட்டன. தமிழ் கற்றுத் தரும் குறுந்தகடுகள் பல வெளிவந்தன.பொறியியக்க மென்பொருள், பயன்பாட்டு மென்பொருள் என மென்பொருள் இரு வகைப்படும்.

**மென்பொருள்**

| **பொறியியக்க மென்பொருள்** | **பயன்பாட்டு மென்பொருள்** |
|---|---|
| (இயந்திர மென்பொருள் - System Software) | (செயல்பாட்டு மென்பொருள் - Application Software) |

தமிழ் 99 மாநாட்டிற்குப்பின் தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்குத் தனித்தனி மென்பொருள்கள் உருவாயின. ‘சார்ட்’ என்னும் மென்பொருளைப் பயன்படுத்தி, கணினிவழிச் சொற்றொடர்களை இயற்கை மொழியாய்வில் (Natural Language Processing) பகுத்துள்ளனர்.

## மென்பொருள் பயன்பாட்டில் தமிழ்

தமிழைப் பயன்படுத்த பல்வேறு மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 'எம்.எஸ். வேர்டு (M.S. Word), எக்சல் (Excel), அக்சஸ் (Access), அவுட்லுக் (Outlook), பேஜ்மேக்கர் (Pagemaker) முதலிய மென்பொருள்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கான எழுத்துரு மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சான்றாக, 'இளங்கோ தமிழ் 2000' என்னும் மென்பொருளைக் கணினியில் நிறுவி விசைப்பலகை வடிவமைப்பைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னர்ப் பயன்பாட்டுமுறையைத் தேர்வு செய்யவேண்டும். இதன் பின்னணியிலிருந்து தமிழ் மென்பொருள் செயல்படும். பத்திரிகைகள், புத்தகங்கள் மட்டுமன்றிக் கணினித் திரைகளில் வெகுகாலந்தொட்டே தமிழ்மொழி உலாவந்து கொண்டிருக்கிறது. குழந்தைப் பாடல்கள், மாணவர்க்கான பாடங்கள், வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் கற்றுக் கொள்வதற்கான பாடங்கள், கணினி அடிப்படை யிலான பாடப் பயிற்சிகள், (Computer based tutorials) பல்லூடக விளையாட்டுகள் (Multimedia Games) போன்ற மென்பொருள்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றுட் சில வருமாறு:

- சொற்செயலிகள் (Word Processors)
- உரைத்தொகுப்பான்கள் (Text editors)
- செயல்திட்ட வரைவு மேலாண்மை (Database Management)
- கணக்கியல் தொகுப்புகள் (Accounts Packages)
- இணைய உலாவிகள் (Web Browsers)
- தேடுபொறிகள் (Web Search Engines)
- மின்னஞ்சல் (e-mail)

தற்பொழுது இன்னும்பல புதிய தமிழ்மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கணினி அடிப்படையிலான பாடப் பயிற்சிகள், பல்லூடக விளையாட்டுகள், தமிழில் 'வைரஸ்' நீக்கிகள், தமிழ் ஒளிப்பட எழுத்துணரிகள் (Optical Character Recognition) முதலிய மென்பொருள்கள் கிடைக்கின்றன. கணினியில் தமிழ்த் தட்டச்சு செய்யத் தமிழ் எழுத்துருக்களைக் (Fonts) கணினி யில் நிறுவியிருக்கவேண்டும். தமிழில் குறள் சாப்ட் (Kuralsoft), இந்தோவேட் (Indoword), கீமேன் (Keyman) பதமி, பொன்மொழி, பொன்மடல், பொன்துணை, வானவில், இளங்கோ, ஆங்கூர், கவிதை, கம்பன் எனப் பொது மென்பொருள்களும் பொன்விழி, சக்தி, வணிகம், கணக்கர் என மென்பொருள்களும், பால்ஸ் அகராதி, ஆன் லைன் தமிழ் லெக்சிகன், கணியம் முதலிய அகராதி களுக்கென வெளியிடப்பட்டுள்ள மென்பொருள்களும், குறளமுது, பொன்துணை, தமிழ் கற்பீர், தேன்மொழி, பஞ்ச தந்திர கதைகள், அடிப்படைத் தமிழ், பாப்பாப் பாடல் முதலிய பல்லூடக மென்பொருள்களும் உள்ளன.

### எழுத்துருக்கள்

செய்திகளை உள்ளீடு செய்வதற்கு எம்மொழியில் உள்ளீடு செய்கிறோமோ அம்மொழிக் கான எழுத்துருக்களைக் கணினியில் நிறுவியிருக்கவேண்டும். எல்லாக் கணினிகளிலும் ஆங்கில எழுத்துருக்கள்(Fonts) இருக்கும். ஆனால், தமிழ் எழுத்துருக்களை இணையத்திலிருந்து கட்டணமின்றிப் பதிவிறக்கம் (Download)செய்து நிறுவலாம்; அல்லது, தேவையான எழுத்துருக்களை விலைக்கு வாங்கியும் நிறுவிக்கொள்ளலாம். தமிழில் பலவகையான எழுத்துருக் கள் கிடைக்கின்றன. தேவைக் கேற்பவும் வணிக நோக்கிலும் எழுத்துருக்களைப் பெற்றுக் கணினியில் நிறுவலாம். ஆங்கிலத்தைப் போலப் பொதுவான எழுத்துருக்களைத் தமிழில் உருவாக்காததால், எந்த எழுத்துருவைப் பயன்படுத்தி உள்ளீடு செய்தோமோ அந்த எழுத்துருவையும் சேர்த்துச் செய்தியோடு அனுப்ப (upload) வேண்டும். அப்பொழுதுதான் அச்செய்தியினைப் பதிவிறக்கம் செய்து படிக்கமுடியும். எழுத்துருவைச் சேர்த்து அனுப்பவில்லை யென்றால், செய்தியைப் பெறுபவரிடம் அவ்வெழுத்துரு இல்லாதபோது, அச்செய்தி வேறு எழுத்துருக்களாக மாற்றம்பெற்று விளங்காமல் போய்விடும்.

**தமிழ் விசைப்பலகை**

செய்திகளை, ஆணைகளை, உள்ளிடுவதற்குப் பயன்படுங் கருவி விசைப்பலகை. ஆங்கில விசைப்பலகை அமைப்பே எல்லாக் கணினிகளுடனும் இணைத்துத் தரப்படுகின்றன. பிறமொழி விசைப்பலகைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆங்கில விசைப்பலகையிலுள்ள எழுத்துகளின்மீது உரிய தமிழ் வரிவடிவங்களைப் பொருத்தியும் தட்டச்சு செய்யலாம். தமிழ்த் தட்டச்சு விசைப்பலகையில் முடுக்குவிசைக் குமிழ்கள் (Active Keys), முடக்கப்பட்ட விசைக் குமிழ்கள் (Dead Keys) என இருவகை விசைக்குமிழ்கள் உள்ளன. மெய்யெழுத்திலிடப்படும் புள்ளிகள், இகர, ஈகார, (கி, கீ) எழுத்துகளில் இடம்பெறும் குறில் நெடில் கொக்கி வரி வடிவமைப்புகள், உகர, ஊகாரத்தில் இடம்பெறும் (பு, பூ, ளு, தூ) குறிலுக்கான சிறுகோடு, நெடிலுக்கான சுழி, அரைத் துணைக்கால் ஆகியன முடக்கப்பட்ட விசைகளைப் பயன்படுத்திய பின்னர் முடுக்குவிசைக் குமிழ்களைப் பயன்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் தமிழ்த் தட்டச்சில் எழுத்துகள் உருவாகும்.

மூன்று வகையான தமிழ் விசைப்பலகைகள் கணினியில் பயன்படுத்தப்படுகின்றன. அவை: 1. தமிழ்த் தட்டச்சு விசைப்பலகை (Tamil typewriting Keyboard), 2. ஒலியியல் விசைப் பலகை (Phonetic Keyboard), தமிழ் 99 விசைப்பலகை,(Tamil 99 Keyboard) ஆகியன. பயனாளர், தம்தேவைக்கேற்ப இவ்விசைப் பலகைகளைப் பயன்படுத்துகின்றனர்.

**தமிழ்த்தட்டச்சு விசைப்பலகை (Tamil Typewriting Keyboard)**

தமிழ்த் தட்டச்சுமுறையைத் தமிழக அரசு 1960-களில் ஒருநிலைப்படுத்தி அரசாணை பிறப்பித்துள்ளது. தமிழ்த் தட்டச்சுமுறையைக் கற்றவர்களும் பதிப்புத் துறையில் இருப்பவர்களும் பெரும்பாலும் தமிழ்த் தட்டச்சுமுறையையே பின்பற்றிச் செய்திகளை உள்ளீடு செய்கின்றனர். ஆங்கிலத்திலுள்ள மென்பொருள்கள் அனைத்தும் 'ASCII' என்னும் ஒரே உட்குறியீட்டு முறையைப் (Coding Standard) பயன்படுத்தி, அம்மொழிக்கு எளிமையும் வளமையும் மேம்பாடும் சேர்த்துள்ளனர். தமிழ்மொழிக்கு மட்டுந்தான் ஐந்து (Encoding standards) குறியீட்டுத் தரங்கள் உள்ளன. அவை: டாம், டாப், டிஸ்கி, இஸ்கி, யுனிகோடு (TAM -Tamil Monolingual, TAB-Tamil Bilingual, TSCII - Tamil Standard Code for Information Interchange, ISCII-Indian Standard Code for Information Interchange, UNICOD -Universal Trunk-out-of-Service Code) என்பன. ஆங்கில மொழிக்குள்ளதுபோல் தமிழுக்கும் ஒரே குறியீட்டுத் தரத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரே குறியீட்டுத் தரம் வரும்போது அனைவரும் ஒரே மாதிரியான எழுத்துருக்களைப் பயன்படுத்தும் நிலை உருவாகும்.

தமிழ் இணைய இரண்டாவது மாநாட்டில் (தமிழ் இணையம் 99) தரப் படுத்தப்பட்ட, மென்பொருளாளர் ஒப்புதலோடு 'தமிழ் 99 விசைப்பலகை' அறிமுகப்படுத்தப்பட்டது. இது தமிழக அரசினால் ஏற்பளிப்புப் பெற்றது. 'தமிழ் 99 விசைப்பலகை'யில் ஒலியியல் விசைப்பலகை யும் தமிழ்த்தட்டச்சு விசைப்பலகையும் உள்ளன. தமிழ்த்தட்டச்சு அறிந்தோர் தமிழ்த்தட்டச்சு விசைப்பலகையையே பயன்படுத்துகின்றனர்; அறியாதோர் ஒலியியல் விசைப்பலகையைப் பயன்படுத்துகின்றனர்.

**ஒலியியல்முறை (PHONETIC METHOD)**

ஒலியை அடிப்படையாகக் கொண்டு தட்டச்சு செய்யும் முறையே ஒலியியல் முறையாகும். தமிழ்த்தட்டச்சு தெரியாதோரும் ஆங்கிலமொழி அறிந்த அனைவரும் இவ்விசைப் பலகையைப் பயன்படுத்தித் தட்டச்சு செய்யலாம். எடுத்துக்காட்டாக, ஆங்கில விசைப்பலகை யிலுள்ள 'K' என்னும் எழுத்தை அழுத்தினால், தமிழில் 'க' என்னும் எழுத்து அச்சாகும். 'amma' என ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தால், அச்சொல் தமிழில் 'அம்மா' வெனக் கணினித் திரையில் தோன்றும். தமிழ்த் தட்டச்சு தெரியாதோர் இம்முறையைப் பயன்படுத்தி விரைவாகச் செய்திகளை உள்ளீடு செய்கின்றனர். தற்பொழுது கூகுள் (Google) இணையத் தளத்திலேயே இவ்வசதி கிடைக்கிறது.

**‘தமிழ் 99 முறை’ (Tamil 99 Method)**

தமிழ் 99 முறை என்னும் விசைப்பலகையை 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி , 8 ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் தமிழ் இணைய மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விசைப்பலகைமுறையைக் கணினியில் அனைவரும் பயன்படுத்தலாமெனத் தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. மாற்றுவிசைக் குமிழியை (Shift Key) அழுத்தாமலே இவ்விசைப் பலகையைக் கையாள்வது தமிழ் 99 முறையின் சிறப்புக் கூறாகும். இவ்விசைப்பலகை முறையைத் தமிழகத் திலுள்ள அனைத்து மென்பொருள் தயாரிப்பாளர்களின் கருத்திற்கிணங்கத் தமிழக அரசு வடிவமைத்தது.

மூன்று விசைப்பலகைகளையும் பயனாளர் தம் தேவைக்கேற்பப் பயன்படுத்திச் செய்திகளை உள்ளீடுசெய்துவருகின்றனர். இருப்பினும் ஆங்கிலமொழிக்கு உள்ளதைப் போன்று தமிழுக்கு ஒரே வகையான எழுத்துருக்களை அனைவரும் பயன்படுத்தும்படியாக உருவாக்கவும் ஒரே விசைப்பலகையை அனைவரும் பயன்படுத்தும்படியாகவும் உருவாக்குவது மொழி வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பேருதவியாக இருக்கும். காலவோட்டத்தில் பெரும்பான்மை யோர் பயன்படுத்தும் எழுத்துருக்களும் விசைப்பலகையுமே நிலைபெறும்.

**குழந்தைகளுக்கான மென்பொருள்கள்**

குழந்தைகள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் வண்ண விளக்கப் படங்களுடன் பாடல்கள், சிறுகதைகள், அறநெறிக் கதைகள் பின்னணிக் குரலோடு பயன்படுத்தும்வகையில் மென்பொருள்கள் பல கிடைக்கின்றன. இவை குழந்தைகளை எளிதில் கவர்வதோடு ஆர்வத் தைத் தூண்டிக் கற்றலை மேம்படுத்துகின்றன.




**மழலைக் கல்வி**




**கற்பதற்கான அடிப்படைத் திறன்கள்**

### மாணவர்க்கான மென்பொருள்கள்

மாணவர்கள் கடினமான பாடங்களையும் எளிமையாகக் கற்பதற்குப் பல மென்பொருள் கள் வெளிவந்துள்ளன; இலக்கிய இலக்கணப் பாடங்களைப் படிநிலைகளில் பயிற்சிபெற உதவு கின்றன. இம்மென்பொருள்கள் கடினமான பாடங்களையும் எளிதாக மாணவர் மனத்திற் பதிக்கின்றன.

### தமிழ்மொழியைக் கற்பதற்கான மென்பொருள்கள்

தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள அடிப்படையான தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் வகையில் மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பறவைகள், விலங்குகளின் படங்களைக் காட்டி, அவற்றின் பெயர்களை ஆங்கிலத்திலும் பின்னர்த் தமிழிலும் எளிதில் கற்றுக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளன. களப்பயணஞ் செய்து கற்கும் பட்டறிவை இம்மென்பொருள் கள் மாணவர்களுக்கு ஏற்படுத்துகின்றன.

### பல்லூடக விளையாட்டு மென்பொருள்கள்

சொல் விளையாட்டுகள், சொல்லுருவாக்கங்கள், சொற்களஞ்சியப் பெருக்கம் முதலிய மொழித்திறன்களை வளர்க்க மென்பொருள்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஒரு சொல்லிலுள்ள ஓரெழுத்தை நீக்கிவிட்டு, அதனை நிரப்புவதற்குக் கோடிடப்பட்டிருக்கும்; கோடிட்ட இடத்தை நிரப்பிச் சொல்லைக் கண்டுபிடிக்கவேண்டும்; படங்களுக்குப் பெயரிடுதல், படங்களுக்கு வண்ணந் தீட்டுதல், பிரித்த படங்களைப் பொருத்துதல் எனப் பல கற்றல், விளையாட்டுச் செயல்பாடுகளுக்கு மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இம்மென்பொருள்கள் குழந்தைகளின் செய்து கற்கும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

இந்த இணையத் தளங்களுக்குச் சென்று குழந்தைகள் மென்பொருள் காண்க.

**www.tamilvu.org** **www.kids.yahoo.com** **www.pebbles-india.com**
**www.kids.com** **www.everythinggirl.com** **www.links4kids.co.uk**

### மின்னஞ்சல் மென்பொருள்

மின்னஞ்சலுக்கான மென்பொருள்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாகச் செய்திகள், படங்கள் அனுப்பப்படுகின்றன; கருத்துப் பரிமாற்றம் (Chatting) நேரடியாக நடைபெறு கிறது.

### தமிழ்த் தேடுபொறி மென்பொருள்கள்

தமிழ்மொழி வாயிலாகவே முழுமையாகத் தேடும் முயற்சிகளை மென்பொருள் வல்லுநர் ஆராய்ந்து வருகின்றனர். இது சிறு அளவிலேதான் பயன் பாட்டில் உள்ளது. இது, வெகுவிரை வில் தமிழ் மொழியின் அனைத்துக் கூறுகளையும் தேடிக்கொணரும் வகையில் அமையும்.

## 4.இணையம்

உலகெங்கும் கணினியில் உள்ள செய்திகளை இணைத்தலையே ‘இணையம்’ என்கின்றனர். இதனை ஆங்கிலத்தில் ‘இண்டர்நெட்’ (Internet) என அழைக்கின்றனர். இலக்கியம், வரலாறு, புவியியல், வானவியல், அறிவியல், கணிதம்,திரைப்படம் என எண்ணற்ற துறைகளில் பல்வேறு தலைப்புகளில் இணையத்தின் வழியாகச் செய்திகளைப் பெறமுடிகின்றது.

உலகெங்கும் சிதறிக் கிடக்கும் செய்திகளை இருக்கும் இடத்திலிருந்துகொண்டே பெற இணைய இணைப்பு உதவுகின்றது. இந்தக் கணினி இணைய இணைப்புப் படிப்படியாகத்தான் வளர்ந்தது. 1960இல் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர். இது மிகுந்த கால விரயத்தை ஏற்படுத்தியதால், இதற்குத் தீர்வு

காணும்பொருட்டு ஒரு கட்டடத்துக்குள் இருக்குங் கணினிகளை யெல்லாம் கம்பிச்சுருளுடன் இணைப்பதில் கணினி வல்லுநர்கள் வெற்றி கண்டார்கள். இந்தக் கணினிகளிடையேயான இணைப்பை 'ஈதர்நெட்' அட்டை (Ethernet Card) என்னுஞ் சிறுபலகையைப் பொருத்திப் பயன்படுத்தினர். இந்தக் குறும்பரப்பு இணைப்புக்குக் (LAN - Local Area Network) 'குறும்பரப்பு வலைப்பின்னல்' என்று பெயர்.

நாளடைவில் குறும்பரப்பு வலைப்பின்னல்கள் பல தோன்றின. இதனைத் தொடர்ந்து ஒரு வட்டாரத்துக்குள் உள்ள கணினிகளை இணைத்தனர். இது 'அகன்ற பரப்பு வலைப்பின்னல்' (WAN - Wide Area Network) கொண்டது. இந்த வலைப்பின்னலைக் கொண்டு உலகம் முழுவதும் உள்ள கணினிகளை ஓரளவு இணைக்க முடிந்தது. இவ்விணைப்பின்போது நாடுகள், கண்டங்கள், கடல்கள், மலைகள் என இடையூறுகள் பல ஏற்பட்டன. இத் தடைகளை நீக்கும் பொருட்டுச் செயற்கைக்கோள் வழி இணைப்புத் தரப்பட்டது. பூமியைச் சுற்றி, நாடுகளின்மீது வளையவரும் விண்வெளிக் கலன்களிடையே இணைப்பை ஏற்படுத்தினர். இது உலகம் முழுமைக்குமான வலையமைப்பை உண்டாக்க வழி வகுத்தது. இந்த முழுமைக்கு 'இணையம்' (Internet) எனப் பெயர் சூட்டினர்.

சுவிட்சர்லாந்து நாட்டில் 'செர்ன்' என்னும் அணுத்துகள் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அங்கு, ***'பிம் பெர்னர் லீ'*** என்ற இயற்பியல் வல்லுநர் பணியாற்றினார். இவர் 1989இல் உலகளாவிய வலைப்பின்னலுக்கு 'World Wide Web' எனப் பெயரிட்டார். இது 'www' எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது. தமிழில் இதனை 'வையக விரிவு வலை' என அழைக்கின்றனர். 1991 மே மாதம் 'வையக விரிவு வலை' அறிமுகமானது. இன்று இவ்வலையமைப்புப் பல செய்திகளை அழியாமல் பாதுகாக்க உதவுகிறது.

### இணையச் செயல்பாடு

இணையத் தொடர்பைப் பெறப் பின்வரும் பொருள்களைப் பெற்று ஒன்றிணைக்க வேண்டும். அவை:

1. கணினி (Computer)
2. தொலைபேசி( Tele-communication)
3. மாற்றி (Modem)
4. தொடர்பு மென்பொருள் (Communication Software)
5. இணையச் சேவை வழங்குநர் (Internet Service Provider - ISP)

தொலைபேசிவழி இணையத்தைப் பயன்படுத்தத் தொடர்பு மென்பொருள்கள் உதவு கின்றன. இப்பொழுது ஒளியிழைத் (Optical fiber) தடங்கள்வழி இணைய இணைப்பை எளிதிற் பெற முடிகிறது.

### இணையத்தில் இணையும் முறை

இணையத்தைப் பயன்படுத்த, இணையச் சேவைக்குரியவரிடம் (ISP = Internet Service Provider) தனிக்கணக்கு (Account) தொடங்கவேண்டும். பின்பு, கணினியை இணையத்தளத் தடத் தில் இணைக்க வேண்டும்.

### இணைய இணைப்பு வகைகள்

தொலைபேசி வழியாகக் கணினிகளையும் மாற்றிகளையும் இணைத்துப் பயன்படுத்தும் இணைய இணைப்புமுறையினைத் 'தொலைபேசி இணைப்புச் சேவை' (Dial Up Service) என அழைக்கின்றனர். இது முதலில் பயன்படுத்திய 'இண்டர்நெட்' இணைப்பு முறையாகும். இதில் வேகமும் வசதியும் குறைவு. எனவே, இதன் பயன்பாடும் குறைவாகவே இருந்தது. அன்றாடம் வேலை நேரத்தில் இணைப்புப் பெறுவதில் சிக்கல்களும் தடங்களும் ஏற்பட்டன. ஆகவே, இதிலிருந்து விடுபெறப் புதிய அணுகுமுறை தேவைப்பட்டது.

**அதிவேக இணைய இணைப்பு**

உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு (DSL = Digital Subscriber Line), வட மாற்றி (Cable Modem), செயற்கைக்கோள் (Satellite), கண்ணறை (Cellular) என நான்கு வகைகளில் 'வையக விரிவு வலை' கிடைக்கின்றது. 'வையக விரிவு வலை' செயல்படுவதைக்கொண்டு, அதன் வேகத்தை அறியலாம்.

**உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு (DSL)**

உறுப்பினர் எண்ணிலக்க இணைப்புவழி அதிவேக 'வையக விரிவு வலை' இணைப்பினைப் பெறலாம். இது '30 Mbps'(mega bits per second) வேகத்திற் செயல்படுகிறது. இந்த இணைப்பினையே பெரும்பாலானோர் பயன்படுத்துகின்றனர்.

**வட மாற்றி (CABLE MODEM)**

இந்த வகை இணைய இணைப்பு அதிவேகமாகச் செயல்படுவதோடு செலவும் குறைவு. 'வடஇணைப்புத் தொலைக்காட்சி' (Cable TV) முறையிலும் 'வையக விரிவு வலை' இணைப்புக் கொடுக்கப்படுகின்றது. இந்த இணைப்புப் பெறுவது எளிது. இது உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பைவிட (DSL) வேகமாகச் செயல்படும்.

**செயற்கைக்கோள் சேவை (SATELLITE SERVICE)**

உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு (DSL), வடம் மாற்றி (Cable Modem) போன்ற இணைப்புகளைவிட இதன் வேகங் குறைவு. ஆனால், தொலைபேசி இணைப்பை (Dial Up) விட ஏழு மடங்கு வேகமாகச் செயல்படும். இதன்வழியாக, உலகின் எந்த மூலையிலிருந்தும் இணைப்பைப் பெறலாம் என்பதே இதன் சிறப்பு.

**கண்ணறைச் சேவை (CELLULAR SERVICE)**

கண்ணறைச் சேவைமுறையானது மடிக்கணினி (Laptop), நடமாடும் செல்பேசி (mobile) வகை இணைப்பிற்கு ஏற்றதாக உள்ளது. இது புதுமுறையில் செயல்படுகின்றது. காட்டாக, '3 G Cellular Network Laptop' மற்றும் செல்பேசிகள்வழி இணைப்புகள் பெற்றுச் செய்திகளை எளிதாகப் பதிவிறக்கம் (download) செய்ய உதவியாக இருக்கிறது. செல்பேசியிலிருந்து '50 Kbps' (Kilo bits per second) வேகத்தில் செய்திகளை அனுப்பலாம். வேகமாகப் பதிவிறக்கம் (Download 400 kbps முதல் 700 Kbps) செய்து செய்திகளைப் பெறலாம். இனிவருங் காலங்களில் இந்த இணைப்பு அதிகம் பயன்படும் என்று இணைய இணைப்பாளர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**இணைய இணைப்புக்கான 'மாற்றி' (Modem) வகைகள்**

பெரிய நகரங்கள்முதல் குக்கிராமங்கள்வரை அனைத்து இடங்களிலும் பரவலாக இணையம் பயன்படுத்தப்படுகின்றது. இணைய இணைப்பிற்குக் கணினி மற்றும் தொலைபேசி இணைப்பு ஆகிய இரண்டும் தவிர, 'மாற்றி' (Modem) எனப்படும் பொறி இன்றியமையாதது. 'மாற்றி' வழியாகத் தான் செய்திகளை ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்கு அனுப்பவும் பெறவும் முடியும்.

**தமிழ் இணைய மாநாடுகள்**

உலகத்தமிழ் இணைய முதல் மாநாடுகள் 1997ஆம் ஆண்டு சிங்கப்பூரிலும், இரண்டாவது மாநாடு 1999ஆம் ஆண்டு சென்னையிலும், மூன்றாவது மாநாடு 2000ஆம் ஆண்டு சிங்கப்பூரிலும், நான்காவது மாநாடு 2001ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும், ஐந்தாவது மாநாடு 2002ஆம் ஆண்டு கலிபோர்னியாவிலும் நடைபெற்றன. ஆறாவது தமிழ் இணைய மாநாட்டினைத் தமிழக அரசின் உதவியோடு தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் உத்தமம் மற்றும் கணினித்தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து 2003 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 22முதல் 24வரை சென்னையில் நடத்தின.

**மாநாட்டுத் தீர்மானங்கள்**

முதலிரு மாநாடுகளில் தமிழ் எழுத்துக் குறியீட்டுத் தரங்கள், விசைப்பலகைத் தரப்பாடு முதலிய அடிப்படைத் தேவைகள் ஆய்வு செய்யப்பட்டுத் தரங்கள் உருவமைக்கப்பட்டன. அடுத்து நடைபெற்ற மாநாடுகளில், கணினியிலும் இணையத்திலும் தமிழ்மொழியின் பயன் பாட்டை மிகுதிப்படுத்தத் தேவையான சொற்செயலிகள்(Word Processors), தேடுபொறி கள்(Search Engines), மொழியாக்கப் பொறிமொழிகள்(Machine Translation), இணையத் தள உலவிகள்(Internet Browsers), ஒளிவழி எழுத்துரு அறியும் மென்பொருள்கள்(Optical Character Recognition Softwares), உரை-ஒலி(Text to Voice) மாற்றிகள் முதலிய பயன்பாட்டு மென்பொருள்கள் பற்றிய முறைகள், சிக்கல்கள் ஆகியன ஆய்வு செய்யப்பட்டன. இவ்வகையில் ஆறாவது மாநாடு ‘தமிழ்க் கல்விக்குத் தகவல் தொழில் நுட்பம்’ என்னுங் கருப்பொருளுடன் நடைபெற்றது.

கணினியில் தமிழ்மொழி ஆய்வு, மின்பதிப்பு, மின்வணிகம், மின்ஆளுமை, இணையவழிக் கல்வி, இணையத் தொழில்நுட்பம், தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ் மென்பொருள் வளர்ச்சி முதலிய தலைப்புகளிற் கட்டுரைகள் படிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**உலகத் தமிழர் பயன்பாட்டில் இணையம்**

தம்பண்பாட்டு அடையாளங்களை நிலைநிறுத்திக்கொள்ளப் பாரம்பரியமிக்க சடங்கு களை, விழாக்களைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தாய்மண்ணோடு தாய்மொழியோடு தொடர்பு அறாமலிருக்க இணையத்தை 1986இல் வெளிநாடுவாழ் தமிழர்கள் பயன்படுத்தத் தொடங்கினர். ஆங்கிலவழி மட்டும் இணையத்தில் செய்திகளைப் பெற முடியும் என்ற நிலை மாறி, 1995 இல் இணையத்தில் தமிழ்வழிச் செய்திகளைப் பெற முடியும் என்ற நிலை உருவானது.

‘அக்டோபர் 1995இல் சிங்கப்பூர் அதிபர் ***திரு. ஓங் டாங் சாங்*** தொடங்கி வைத்த ‘Journey, Words, Home and Nation - Anthology of Singapore Poetry (1984-1995) என்கிற நான்கு தேசிய மொழிக் கவிதைகளுக்கான வலையகத்தில் தான் முதன்முதலில் ‘தமிழ் இணையம்’ அறிமுகமானது.

தமிழ், இணையத்தில் அறிமுகமான பின்பு தமிழ் இணையம் குறித்து 1997, 1999, 2000 ஆகிய ஆண்டுகளில் மாநாடுகள் நடத்தப் பெற்றன. இம்மாநாடுகளில் தமிழ் விசைப்பலகை மாற்றங் குறித்தும் கணினித் தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்றும் இன்றுவரை அப்பணி தொடர்ந்து நடைபெறு கிறது. இப்பணிகளினால், ‘கணினித்தமிழ்’ என்னுஞ்சொல்லாட்சி தமிழர்களால் பரவலாகப் பயன்படுத்தப் பெற்றது; இணையம் என்னுஞ் சொல் தமிழ் அகராதியில் நுழைந்தது.

**தமிழ் இணையம்**

தமிழ், கணினித்திரையின்வாயிலாகத் தகவல் நெடுஞ்சாலையில் பயணஞ் செய்கிறது. இந்தியமொழிகள் பலவற்றை ஒப்புநோக்கும்போது, கணினியில் தமிழ் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ்மொழியே. தமிழாட்சி மொழி யாகவுள்ள அரசுகளும் உலகளாவிய தனியார் நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களும் தமிழார் வலர்களும் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் இணையத்தில் இடம்பெறச் செய்துள்ளனர். மேலைநாடுகளில் பணிபுரியும் தமிழர்கள் கணினி வசதியுடன் தமிழார்வமும் ஒன்றுசேர, அவர்கள் தன்னார்வமாக முயற்சிகள் பல மேற்கொண்டு இணையத்தில் தமிழ் விரிவாகவும் விரைவாகவும் பரவும்வகை செய்துள்ளனர்.

**இணையச் சிறப்பு**

இணையத்தளம் உலகமயமாக்கலுக்குப் பெரிதும் துணைபுரியக் கூடிய ஒன்று. இதனை உணர்த்தும் வகையில் **அறிவியல் தகவல் வளர்ச்சி உலகத்தை ஒரு குக்கிராமமாக மாற்றி விட்டது** எனும் ***மாக் லூகனின்*** கூற்று உண்மையென்பதை உணர முடிகிறது.

**தமிழ் இணையத்தின் சிறப்பு**

இணையம் மிகப்பெரிய நூலகமாகும். கல்வி, தொழில், இதழ்கள், வணிகம், நிருவாகம் முதலிய அனைத்துத் துறைகளும் தமிழ் இணையத்தில் வந்துவிட்டன. இணையத்தின் உதவி யால் காலத்தையும் உழைப்பையும் பொருளையும் மிச்சப்படுத்த முடிகிறது.

இணையவழி நன்மைகளும் தீமைகளும் உண்டெனினும் இணைய வளர்ச்சி தொடர்ந்து வளர்ந்துகொண்டே செல்கிறது. இதனை, “கடந்த 20 ஆண்டுக் கணினிப் பயணத்தில் **இணையம்** முக்கிய மைல்கல் என்றே சொல்லுவேன்” என்று ***பில்கேட்ஸ்*** குறிப்பிடுகிறார்.

**இணையத் தேடுபொறிகள்**

இணையத் தளத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு கணினிக்கும் ஓர் எண் உண்டு. ஆனால், எண்ணைப் பயன்படுத்துவது கடினம் என்று எழுத்துகளைப் பயன்படுத்துகிறோம். முகவரியைத் தேடப் பல தேடுபொறிகளைப் பயன்படுத்துகிறோம். அவை: யாகூ (Yagoo), கூகுள் (Google), அல்டா விஸ்டா (Alta Vista) முதலியன.

இணையத் தளத்தில் உலகப் புகழ்பெற்ற கூகுள் நிறுவனம் தற்போது ஒலிபெயர்ப்புத் தொழில் நுட்பத்தை (Transliteration Technology) அறிமுகஞ் செய்துள்ளது. அதாவது, ‘அம்மா’ என்னுந் தமிழ்ச்சொல்லை ஆங்கிலத்தில் ‘amma’ எனத் தட்டச்சு செய்தால், அது தமிழ் எழுத்து களாக மாறிவிடும். ஆனால், மொழிபெயர்ப்பு எனப்படும் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றித் தரும் தொழில் நுட்பம் (Translation) இன்னும் ஆய்வு நிலையில்தான் உள்ளது.

தேடுபொறிகளில் முழுமையான மொழிபெயர்ப்பு ரஷ்ய, அரேபிய, சீன மொழிகளில் மட்டும் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

**தேடுதல் சேவை வழங்கும் இணையத்தளம் (<u>www.sputtr.com</u>)**

இந்தத் தேடுதல் சேவைத்தளம் 37 வகையான இணையத் தளங்களின் தேடுதல் சேவையை வழங்குகிறது. கூகுள், யாகூ, எம்.எஸ்.என் முதலிய தேடுதல் இணையத்தளங்கள், குழு இணையத் தளங்கள், செய்தி இணையத்தளங்கள் என அனைத்துவகையான இணையத் தளங்களின் தேடுதல் சேவையை நேரடியாக வழங்குகிறது. இந்த இணையத் தளத்திற்குச் சென்று கட்டணமில்லா உறுப்பினராகித் தேடுதல் சேவையைப் பெறலாம். காட்டாகத் தமிழ் நாட்டைப் பற்றிய தகவல்களைத் தேடவேண்டுமானால், தமிழ்நாடு (tamilnadu) எனத் தட்டச்சு செய்து, கூகுள் காட்சியகத்தில் (Video) தமிழ் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் பெறலாம். இவ்வாறு 37 இணையத்தளச் சேவையில் எதைச் சொடுக்கினாலும் (click) அந்தந்த இணையத் தளத்திலிருக்கும் தகவல்களை எளிதாகப் பெறலாம்.

**கணினிவழிக் கல்வி**

கணினியைப் பயன்படுத்திக் கற்கும் கல்வியே கணினிவழிக் கல்வியாகும். தமிழ், ஆங்கிலம் அறிவியல், கணிதம், சமூகஅறிவியல், கணினி,பொதுஅறிவு, நடனம், கைவேலைப்பாடு, சமையலென எந்தவொன்றையும் எளிதாக வீட்டிலிருந்தபடியே கணினியின் வாயிலாகக் கற்க முடியும். தொலைதூரக் கல்வியையும் இணையவழிக் கல்வியையும் கணினி வாயிலாகப் பலரும் கற்று வருகின்றனர். இணையத் தளத்தின் வாயிலாக ஐயங்கள், சிக்கல்கள், ஆலோசனைகள், தேவைகள், வழிகாட்டுதல்கள் முதலியவற்றுக்கான தீர்வுகளைப் பெறமுடியும். சான்றாக, யாஹூ(yahoo) இணையத்தள முகப்புப் பக்கத்திலுள்ள பதில்கள் (Answers) என்பதனைச் சொடுக்கினால் (Click) கேள்(ask) என்னும் திறவில் (Window) கேள்வியைத் தட்டச்சு செய்தனுப்பினால், இதைக் கண்டறிந்தோர் பதில் தருவர். ஒவ்வொரு மனிதனுள்ளும் யாரிடம் கேட்பது, எப்படிக் கேட்பது என்னும் ஆயிரமாயிரங் கேள்விகள் புதைந்து கிடக்கும் அவற்றுக் கெல்லாம் இப்பகுதியில் விடைபெறலாம். பதில் பெறுவதற்கு மின்னஞ்சல் முகவரிமட்டும் கொடுத்தால் போதும். அதேபோல், இதில் இடம்பெறும் கேள்விகளுக்கு விடைதெரிந்த யார்

வேண்டுமானாலும் பதிலும் அனுப்பலாம். இன்று பெற்றோரிடம், ஆசிரியர்களிடம், நண்பர் களிடம், பெண்களிடம், அறிஞர்களிடம் கேட்டுப் பெறவியலாத, எப்படிக் கேட்பதென அச்சப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் இணையத்தளங்கள் பதிலளிக்கின்றன.

ஆய்வுகள், வடிவமைப்புகள், திட்டங்கள், மருத்துவம், பொறியியல், அறிவியல், வானியல், கோளியல், சமையல், சோதிடம், கைவேலைப்பாடு, வண்ணங்கள் என ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஏற்படும் ஐயங்களைப் போக்கவும் கற்பிக்கவும் இணையத் தளங்கள் உள்ளன. இணையத் தளத்தின் வாயிலாக நேருக்குநேர் கற்கவும் முடியும். உலகில் எங்கிருப்பவருடனும் வீட்டிலிருந்த படியே நேருக்குநேர் தொடர்புகொண்டு கற்கும் வாய்ப்பும் இன்று கிடைக்கிறது. முயன்றால் முடியாததில்லை; முயற்சி திருவினையாக்கும் என்பது இன்றைய இணையத்தளங்கள் செய்திகளைப் புயலென வாரி வழங்குகின்றன. வருங்காலக் கல்வி கணினிவழிக் கல்வியாக அமையும். தட்டுங்கள் இணையத்தின் கதவை, உலகச் சாளரம் திறக்கும்; தேடுங்கள் இணையத்தளத்தில் உலக அறிவெல்லாம் கிடைக்கும். இணையத்திற்கு இணையானது இணையமொன்றே. இணையத்தில் எல்லாமிருக்கிறது. தேடுவோரின் தேவைகளை நிறைவு செய்வது இணையமே.

### கணினிவழி மொழிக்கல்வி

இணையங்கள் எல்லாம் தரும் எனக் கண்டோம். தமிழ்மொழிக் கல்வியையும் பல்வேறு இணையத்தளங்கள் வழங்குகின்றன. மொழியின் அடிப்படைத்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் எனத் தொடங்கி உயர்நிலைத் திறன்களான கதை, கட்டுரை, செய்யுள், பாடல், கடிதம், சுருக்கி எழுதுதல், விரித்தெழுதுதல், குறிப்பெடுத்தல், அகராதி காணல் என அனைத்தையும் இணையத்தின் வாயிலாகக் கற்கவியலும். தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உலகெங்கும் வாழுந்தமிழர்களுக்கும் தமிழறிய விழைவோருக்கும் இவ்வாய்ப்பினை நல்குகிறது. மதுரைத் திட்டம் என்னும் இணையத்தளம் பெரும்பாலான தமிழ் இலக்கியங்களை இணையத்தில் கட்டணமின்றிப் பதிவிறக்கஞ் செய்து கற்க வாய்ப்பளித்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம், செம்மொழி நிறுவனம், தனியார் நிறுவன இணையத் தளங்கள், தனியொருவர் இணையத் தளங்கள் என மொழிபயில இணையத்தளங்கள் தமிழில் பல உள்ளன. ‘தமிழம்’ (www.thamizham.net) என்னும் இணையத் தளம் 32 செயலட்டைகளின் வாயிலாகத் தமிழ் எழுத்துகளை எழுதவும் உச்சரிக்கவும் கற்பிக்கிறது. கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜெர்மன் ஆகிய நாடுகளில் வாழும் தமிழறிஞர்களும் வெளிநாட்டவரும் தமிழ் பயிற்றுவிக்க இணையத்தளங்களை உருவாக்கியுள்ளனர்.

## 5.தமிழ் இணையப் பல்கலைகக்கழகம் (TAMIL VIRTUAL UNIVERSITY)

உலகந் தழுவிய நிலையில் வாழுந் தமிழ் மக்களுக்கும், தமிழ் ஈடுபாடுகொண்ட பிறமொழி யினருக்கும் தமிழ்மொழியைக் கற்பிப்பதும், தமிழ் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு பற்றி அறியச் செய்வதும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும். 1999ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற “தமிழ் இணைய மாநாட்டின் நிறைவு விழாவில், ‘தமிழ் இணையப் பல்கலைக்கழகம்’ ஒன்று இதற்கென அமைக்கப்படும்” எனத் தமிழக அரசு அறிவித்தது.

### குறிக்கோள்கள்

- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடுபற்றிய கல்வித் திட்டத்தைத் தமிழில் உருவாக்கி, இணையம் வழியாக உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமிழில் ஈடுபாடுள்ள மற்றவர்களுக்கும் அளித்தல்.

- உலகெங்கும் வாழுந் தமிழர்களின் தேவைகேற்றவாறு பாடத்திட்டங்களை உருவாக்கித் தருதல். அவர்கள் தங்கள் பாரம்பரியத்துடன் தொடர்பு கொண்டு வாழத் துணைபுரிதல்.

- உலகில் பல நாடுகளில் வாழுந் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து, அவற்றைப் பரவலாகத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகக் கல்வித் திட்டங்கள்

அரிச்சுவடி (அ, ஆ) முதல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி வரையிலான தமிழ்க் கல்வியைச் சான்றிதழ், பட்டயம், பட்ட வகுப்புகளுக்கான இணையவழிக் கல்வித் திட்டத்தைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

### கல்வித் திட்டத்தின் பிரிவுகள்

அ) தொடக்கக் கல்வி ஆ) உயர் கல்வி இ) பிற இணையவழிக் கல்வி

தமிழகப் பள்ளிகளில் 1முதல் 12ஆம் வகுப்புவரை கற்பிக்கப்படும் பாடத் திட்டங்களைச் சான்றிதழ், மேற்சான்றிதழ்-1,2,3 எனும் நிலைகளில் திட்டமிட்டு இணையம்வழி வழங்கி வருகிறது. மழலைக் கல்வி தனிநிலையில் வழங்கப்படுகிறது.

அ) மழலைக் கல்வி
ஆ) சான்றிதழ்க் கல்வி ( 1-6ஆம் வகுப்புவரை)
இ) மேற்சான்றிதழ் நிலை -1 (7, 8ஆம் வகுப்புவரை)
ஈ) மேற்சான்றிதழ் நிலை - 2 (9, 10 ஆம் வகுப்புவரை)
உ) மேற்சான்றிதழ் நிலை-3 (11-12ஆம் வகுப்புவரை)

**தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையத்தள முகப்புப்**






**மழலைக் கல்வி மென்பொருள் தொடக்கப் பக்கம்**




**மழலைக் கல்வி**

**மழலைக் கல்வி**

மழலைக் கல்வியில் பாடல்கள், கதைகள், வழக்குச் சொற்கள், நிகழ்ச்சிகள், உரையாடல்கள், விலங்குப் பெயர்கள், எழுத்துகள் ஆகியன பயிற்சிகளுடன் பல்லூடக முறைகளைப் பயன்படுத்தி இயங்குபடங்களுடன், படிப்பவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப் படுகிறது. பல அறநெறிக் கதைகளும் மழலைப் பாடல்களும் இயங்கும் படங்களாக வழங்கப் பட்டுள்ளன. இவ்வகை மழலைக் கல்வி, குழந்தைகளின் அடிப்படைத் திறன்களை வளர்க்கும். உலகளாவிய தமிழ்க் குழந்தைகளுக்கும் தமிழார்வமிக்கோருக்கும் கிடைத்தற்கரிய மொழிச்செல்வம் இம்மழலைக் கல்வியாகும்.

**சான்றிதழ்**

முதல் வகுப்புமுதல் ஆறாம் வகுப்புவரையுள்ள தமிழ்க் கல்விப் பாடத்திட்டங்கள் மூன்று படிநிலைகளில் வழங்கப்படுகின்றன.

அ) அடிப்படைநிலை (முதல், இரண்டாம் வகுப்புப் பாடங்கள்)
ஆ) இடைநிலை(மூன்றாம், நான்காம் வகுப்புப் பாடங்கள்)
இ) மேல்நிலை (ஐந்தாம், ஆறாம் வகுப்புப் பாடங்கள்)

**அ) அடிப்படை நிலை**

அடிப்படை நிலையில் தமிழ் எழுத்துகள் அனைத்தும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. எழுத்துகளின் ஒலிவடிவங்களைக் கேட்டு, வரிவடிவங்களைப் பயின்று, எழுதிப் படிக்கும் வகையில் பயிற்சிகளுடன் பாடங்கள் தரப்பட்டுள்ளன. இப்பாடப்பகுதியில் 14 பாடங்கள் உள்ளன. அவை எளிய வரிவடிவங்கொண்ட எழுத்துகளில் தொடங்கிக் கடின வரிவடிவங்கொண்ட எழுத்துகளில் முடியுமாறு அத்தனை எழுத்துகளையும் ஒத்த வடிவங்கொண்ட எழுத்துகளின் தொகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு தொகுதியும் ஒரு பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 13ஆவது பாடத்தில் தமிழ் எழுத்துகளின் அகரவரிசை அறிமுகப்படுத்தப்படுகின்றது. இறுதியில் 16 மழலைப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிக்கான பாடங்கள் அனைத்தும் இணையத் தளத்தில் கிடைக் கின்றன.

**ஆ) இடைநிலை**

20 பாடங்கள், இணையத்திற்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டுக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், உரையாடுதல், இலக்கணக் கூறுகள் முதலிய மொழித் திறன்களைப் பெற்று வளர்த்துக்கொள்கின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**இ) மேல்நிலை**

மேல்நிலையில் பயில்வோர் அறிவியற் கட்டுரை, கலந்துரையாடல், வருணனை, கவிதைகள், செய்தி வெளியிடல், சிறுகதை, இலக்கியக் கட்டுரை, நாடகம், பயணக் கட்டுரை முதலிய இலக்கிய இலக்கண மொழித்திறன்களைப் பெறும்வகையில் 18 வகையில் 18 பாடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

**மேற்சான்றிதழ் நிலை**

இந்நிலையில் ஏழுமுதல் பன்னிரண்டாம் வகுப்புவரையுள்ள பாடங்கள் இடம் பெற்றுள்ளன. மேற்சான்றிதழ் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றது. தொடக்கநிலைக் கல்விப் பாடங்கள் குறிப்பாக அடிப்படைப் பாடங்கள் ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜெர்மன், இந்தி முதலிய பிறமொழிச் சூழல்களில் வாழுங் குழந்தைகளுக்கேற்றவாறு அமைத்து வழங்கப் பட்டுள்ளன. தொடக்க நிலைக் கல்விக்கான பாடங்கள், கணினியின் பல்லூடக (Multimedia) முறையைப் பயன்படுத்தி அச்சு வடிவம், ஒலி வடிவம், ஒளி வடிவம் ஆகியவற்றின் வாயிலாக மிகவும் ஆர்வமூட்டுகின்ற வகையில் எளிய இனிய முறையில் படிக்கத் திகட்டாமல் விறுவிறுப்பு ஊட்டுபவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தன்மதிப்பீட்டுச் சோதனைகளும் தொடக்கநிலைப் பாடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**உயர்கல்வி**

உயர்கல்விப் பாடத்திட்டத்தின்கீழ்த் தமிழ்மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு, கலைகள் ஆகியன அறிமுக நிலையில் தொடங்கி, ஆய்வு நிலைவரை பல்வேறு பாடத்

தொகுதிகளாக வகுத்தமைக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திட்டம் இளநிலை (தமிழியல்), முதுநிலை (தமிழியல்) தமிழாய்வு முதலிய கல்வித் திட்டங்களைக் கொண்டுள்ளது.

இளநிலை (தமிழியல்) படிப்புக்கான பாடங்கள் பட்டயம், மேற்பட்டயம், பட்டம் ஆகிய மூன்று பாடத்திட்டங்களாக ஒருங்கிணைப்புப் பாடத்திட்ட முறையில் (Integrated Credit Scheme) வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாடங்கள் எழுத்து, ஒலி, ஒளி வடிவங்களைக் கொண்ட பல்லூடக அமைப்பில் தானே கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் பொது விளக்கங்கள், பாடச் சுருக்கங்கள் ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒலி வடிவிலும் எழுத்து வடிவிலும் கொடுக்கப்பட்டுள்ளன. பாடத்தின் கருத்துகளும் செய்திகளும் படங்கள், இயங்கும் படங்கள், ஒலி-ஒளிக் காட்சிகள் ஆகியவற்றைக்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. பாட இறுதியில் அப்பாடக் கருத்துப் பற்றிய ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஒலி-ஒளிக் காட்சியாக அமைக்கப் பட்டுள்ளது. மாணவர்கள், தான்கற்ற நிலையை மதிப்பீடுசெய்துகொள்ளத் தன்மதிப்பீட்டு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள், பாட ஆசிரியருடன் இணையவழித் தொடர்புகொண்டு ஐயங்களைப் போக்கிக்கொள்ள மின்னஞ்சல், மின்னுரையாடல் முதலிய வசதிகள் உள்ளன.

இளநிலை (தமிழியல்) பட்டப் படிப்பில் பகுதி-1, பகுதி-2, பகுதி-3 என மூன்று பிரிவுகள் உள்ளன. ஏதேனும் ஒரு துறையில் ஏற்கப்பட்ட கல்லூரி/ பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றுள்ள மாணவர்களுக்கு முதலிரு பகுதிகள் விதிவிலக்கு அளிக்கப்படும். பகுதி-1இல் 4 தாள்களும், பகுதி-2இல் 4 தாள்களும், பகுதி-3இல் 2 தாள்களும் உள்ளன. ஒவ்வொரு தாளும் நான்கு தொகுதி களையும் ஒவ்வொரு தொகுதியும் 6 பாடங்களையும் கொண்டவையாகப் பாடத்திட்டம் அமைக்கப் பட்டுள்ளது. மொத்தம் 696 பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் பேச்சுத் தமிழ்ப் பாடங்கள், பயணியர் தமிழ், எளிய பாடங்கள், இசைக்கலை, நாட்டியக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை முதலிய சிறப்புப் பாடங்கள் இணையத்தளவழி வழங்கப்படுகின்றன.

www.tamilvu.org இணையத்தளம் சென்று மழலையர் கல்விச் செயல்பாடுகளைக் காணவும். இதிலுள்ள மின் நூலகத்தில் ஏதேனும் ஒரு நூலைப் படிக்கவும்.

www.tamiluniversity.ac.in இணையத்தளம் சென்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முகப்புப் பக்கத்தைக் குறுந்தகட்டில் பதிக்கவும். இப்பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளை ஒப்படைப்பாக எழுதவும்.

இச்செயல்பாட்டினால் இணையத்தளம் செல்லவும், கற்பிக்கத்தேவையான நூல்களைத் தேடவும் பயிற்சி ஏற்படும்.

## தமிழ் இணையப் பண்பாட்டுச் செய்திகள்

தமிழர்கள், தங்கள் பண்பாட்டு வேர்களை நினைவுகூரும்வகையில், தமிழ் மரபுகளான கலைகள், விளையாட்டுகள், வரலாற்றுச் சின்னங்கள், வழிபாட்டுத் தலங்கள் முதலியவற்றை ஒலி-ஒளிக் காட்சித் தொகுப்புகளாகப் பதிவுசெய்து உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் செய்திகளைத் தமிழ் இணையம்வழி அறியலாம். அவை:

- தமிழகத்துக் கலைகளான நாட்டியம், கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், புரவியாட்டம், கட்டையாட்டம், கும்மி, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தமிழிசை, கருவியிசை, தாலாட்டு ஆகியனவற்றின் தரமான கலைப்பதிவுகள் இடம் பெற்றுள்ளன.
- தமிழகத்து விளையாட்டுகளான ஜல்லிக்கட்டு, சிலம்பம், பல்லாங்குழி, தாயம், பம்பரம், சேவற்சண்டை, ஆகியன விளக்கப்பதிவுகளுடன் இடம் பெற்றுள்ளன.
- வரலாற்றுச் சின்னங்களான மாமல்லபுரம், கன்னியாகுமரி, சித்தன்னவாசல் முதலான இடங்களின் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. பொங்கல் முதலிய தமிழகத்துத் திருவிழாக் களும் இடம்பெற்றுள்ளன.

- சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்துவம் முதலிய சமயங்களின் எழுச்சி அடையாளமாகவும் தொடர்ச்சியின் பதிவாகவும் இருக்கும். குறிப்பிடத்தக்க சிறப்பான வழிபாட்டுத் தலங்களின் சிறப்புகளும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.
- பண்பாட்டுக் காட்சியகத்தில் சமயத் தலங்களின் நிழற்படங்கள் பல தரப்பட்டுள்ளன. இணையத்தில் பார்வையிடும்போது இத்தலங்களுக்குச் சென்றுவந்த உணர்வு கிடைக்கும்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், இலங்கை, ஜெர்மனி முதலிய நாடுகளிலுள்ள இணையத்தளங்கள் ஆற்றும் தமிழ்ப் பணிகளைப் பார்வை யிடவும்.

தமிழ்க் கடவுள் முருகனின் படைவீடுகள் ஆறு. ஆனால், இன்று உலக அளவில் தமிழ்க் கடவுளுக்கு உள்ள கோயில்களை இணையத்தளத்தில் கண்டு பட்டியலிடவும். அக்கோயில்கள் ஆற்றும் தமிழ்ப்பணிகளையும் செயல்பாடுகளையும் கோயில் படங்களையும் கண்டறியவும். **www.sydney murugan temple.org** இந்த இணையத் தளத்திலுள்ள பக்திப் பாடலைக் கேட்டு மகிழவும். இக்கோயில் திருவிழாப் படத்தொகுப்பைக் (**Photo gallery)** கண்டு களிக்கவும்.

தமிழ் இணையத்தளங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றில் தமிழ் கற்பித்தலுக் கான தளங்களைத் தேடித் தொகுக்கவும். இத்தளங்களிலுள்ள பயிற்சிகளைத் தொகுக்கவும்.

தமிழ் இணையத்தளங்களுக்குச் சென்று ஏதேனும் ஒரு தமிழிலக்கியத்தைப் பதிவிறக்கம் செய்து படிக்கவும். தமிழ் நாளிதழ்களின் இணையத்தளங்களுக்குச் சென்று மின்னிதழைக் காணவும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தமிழிலக்கியங்களைக் கணினிவழி உலகம் முழுவதும் பரப்புவதை முதன்மைப் பணியாகக் கொண்டுள்ளது. இதுதவிர, 'மதுரைத் திட்டம்' இலக்கியங் களைக் கணினியில் பதித்துள்ளது. கோலோன் பல்கலைக்கழகம் (Cologne University) ரோமன் வரிவடிவ முறையில் இலக்கியங்களைப் பதித்துள்ளது. செம்மொழி நிறுவனமும் தமிழ் இலக்கியங்களைக் கணினியில் பதிப்பித்து வருகின்றது.

**சுவடிக் காட்சியகம்**

செம்மொழித் தமிழின் இலக்கியச் சுவடிகள் பல ஒடிந்தும் பொடிந்தும் அழிந்து வருகின்றன. நுண்சுருளில் அவற்றைப் பதிவுசெய்து எதிர்காலச் சமுதாயத்திற்கு வழங்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், நுண்சுருள் வடிவில் இச்சுவடிகளைப் பார்ப்பதும் படிப்பதும் எளிதான செயலன்று. தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பதிவுசெய்யப்பட்ட சுவடிகளை மின் நூலகத்தின் வாயிலாக எல்லாரும் பார்த்துப் பயன்படுத்தும்வகையில் சுவடிக்காட்சியகம் ஒன்றை உருவாக்கியுள்ளது. சுவடிகளைக் காலத்தால் அழிக்கமுடியாத பாதுகாப்பையும் பலரும் பார்க்கும் பயன்பாட்டையும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது.

***உ.வே.சாமிநாதையர்*** திரட்டிவைத்த பழஞ்சுவடிகள் பலவற்றைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மின் நூலகத்தில் உள்ளீடு செய்து வருகிறது. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, இறையனார் களவியலுரை, சீவக சிந்தாமணி முதலான நூற்சுவடிகள் இப்பொழுது உள்ளீடு பெற்றுள்ளன.வேண்டுஞ் சுவடியைத் தேடிப்பெறும் வசதியும், ஒவ்வொரு சுவடியையும் தனியாகப் பெரிதாக்கிப் பார்க்கும் வசதியும் கணினியில் தரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சுவடிகளில் எழுதப்பட்டிருக்கும் பாடலையோ உரையையோ படிப்பது எளிதன்று. ஆகவே, ஒவ்வொரு சுவடியிலும் இடம்பெறும் பாடலடிகளையும் உரை வரிகளையும் தட்டச்சு வடிவில் உடன்தரும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதனால், சுவடிகளின் எழுத்து வடிவத்தைப் புரிந்துகொள்ளவும் சுவடியை வாசிக்கக் கற்றுக்கொள்ளவும் இயலும். இதன்வழி, இச்சுவடிகளை இருக்கும் இடத்திலிருந்தே பார்த்துப் பயன்பெற முடியும்.

**குறுந்தகடுகளை உருவாக்கல்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி ஆகியவற்றுக்குப் பயன்படும்வகையிலும் பயணியரின் தமிழ் உரையாடலுக்குப் பயன்படும்வகையிலும் குறுந்தகடு களை உருவாக்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக மின் நூலகத்தில் உள்ளீடு பெற்றிருக்கும் தமிழ் நூல்களை இணைய வசதியற்றவர்களும் மற்றவர்களும் பயன்படுத்தும் வகையில் தேடுதல் வசதிகளோடு குறுந்தகடு களை அளிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது. முதற்கட்டமாகத் தமிழினத்தின் வான்புகழுக்குக் காரணமான திருக்குறளைக் குறுந்தகடாகக் கொண்டுவந்துள்ளது. இக்குறுந்தகட்டில் திருக்குறள் சொல் பிரித்துத் தரப்பட்டுள்ளது. உரையின் துணையின்றியும் குறளைப் புரிந்துகொள்ள இச்சொற்பிரிப்புமுறை உதவியாக இருக்கும். அத்துடன், திருக்குறளுக்கான பல உரைகளில் வெவ் வேறு காலக் கட்டங்களில் அளிக்கப்பட்ட உரைகளுள் மாதிரிகளாகப் ***பரிமேலழகர், மணக்குடவர், பாவாணர், மு.வ., கலைஞர்*** ஆகியோரது குறள் உரைகள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ் அறியாதவர்கள் பயன்படுத்தும் வகையில் ***ஜி.யு,போப், சுத்தானந்த பாரதியார்*** ஆகியோருடைய ஆங்கில மொழிபெயர்ப்பு களும் தரப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் குறள் உரை யாசிரியர்கள் தந்துள்ள வடிவத்திலே தரப் பட்டுள்ளன. பரிமேலழகர் உரையடங்கிய திருக்குறள் ஓலைச்சுவடி இத்துடன் தரப்பட்டிருக்கிறது.

தனித்தனியாகவும் மொத்தமாகவும் இவ்வுரைகளைப் பார்க்கும்வகையில் தேடுதல் வசதி தரப்பட்டுள்ளது. குறளின்மூலப் பகுதியிலேயே உரை என்ற பகுதியைச் சுட்டி, வேண்டும் உரையைப் பெற முடியும். குறிப்பிட்ட எண்ணுடைய குறளைத் தேடிப்பெறல், குறிப்பிட்ட சொல் இடம்பெறுங் குறளைத் தேடிப் பெறல், குறளின் முதற்குறிப்பைக் கொண்டு குறளைத் தேடும் வசதி, முப்பால், இயல், அதிகாரம், முதலியவற்றைத் தேடுதல் என இருக்கும் வசதிகள், கற்பதற்கு ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

குறளைத் தொடர்ந்து, தொல்காப்பியம் உள்ளிட்ட பழைய நூல்களையும் பிற நூல்களையும் ஏடுகளையும் குறுந்தகடுகளாக வெளியிடும் பணியைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

இதேமுறையில் மதுரைத் திட்டம், முதுசொம் காப்பகம் போன்ற தமிழமைப்புகள் இலக்கியம் பதிப்பித்தலைச் சொற்பிரித்து உரையுடன் அனைவரும் தமிழிலக்கியத்தை எளிதாக அறியும் வகையிலும், தமிழரின் பண்பாட்டை உலக மக்கள் அனைவரிடமும் பரப்பும்வகையிலும் கணினிவழி இலக்கியங்களைப் பதித்துள்ளன. இன்னும் பல அரிய நூல்களை வெளியிட இந்நிறுவனங்கள் திட்ட மிட்டுள்ளன.

## 6.பல்லூடகமும் தமிழ் கற்பித்தலும் (Multimedia and Tamil Teaching)

கணினியில் ஒலி, ஒளி, பட இயக்கம், வரைகலை, உரை முதலிய ஊடகங்களை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துதலைப் பல்லூடகம் என்பர். ஒரே நேரத்தில் இவ்வனைத்தையும் கணினியில் பெற்றுப் பயன்பெற முடியும். இன்றைய கணினிகளில் அனைத்திலும் இவ்வசதிகள் உள்ளன. இதனால் ஒரே நேரத்தில கணினியில் காணவும் கேட்கவும் வரையவும் படிக்கவும் இயலுகிறது.

கற்பித்தலில் எழுத்தட்டைகள், சொல்லட்டைகள், விளக்க அட்டைகள், பொருத்து அட்டைகள், சுழலட்டைகள், மின்னட்டைகள், வானொலி, ஒலி-ஒளிநாடாக்கள், தொலைக் காட்சி, தலைமேல் வீழ்த்தி, நழுவங்கள், திரைவீழ்த்திகள், கணினி, மாதிரிகள், முப்பரிமாணங்கள், இயங்கும் மாதிரிகள், உண்மைப் பொருள்கள் எனப் பல்வகைத் துணைக்கருவிகளைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தினர். இவையனைத்தையும் பல்லூடகத்தின் வாயிலாகச் செய்து விடலாம். சிறப்பான கற்பித்தலுக்குப் பல்லூடகப் பயன்பாடு பெரிதும் உதவும். ஆசிரியர்கள் கணினிப் பயற்சிபெற்றுக் காலத்திற்கேற்ற கருவிகளைப் பயன்படுத்திக் கற்பித்தல் வேண்டும். குழந்தைகள், எழுத்துப் போக்குகளையும் அவற்றுக்கான ஒலிகளையும் இயக்கத்தோடு காண்பதற் கான வாய்ப்புள்ளதால், மழலைக் கல்வி முதல் பல்லூடகத்தைப் பயன்படுத்தலாம். குழந்தைகள் கணினியை இயக்கித் தானே கற்பதனால், கற்றல் விரைவாக நடைபெறுகிறது. ஆசிரியர் ஏதுவாளராக இருந்து தேவையான கற்றல் பொருள்களையும் மென்பொருள்களையும் வகுப்பு நிலைக்கேற்பக் கொடுத்தால் போதும். ஐயமேற்படும் இடங்களில் காரண காரியத்தோடு விளக்கினால் குழந்தைகள் எளிதாகக் கற்றுக்கொள்கின்றனர்.

பல்லூடகத்தின் வாயிலாகத் தமிழ் கற்பித்தல் மிகவும் எளிது. வருங்காலங்களில் ஒவ்வொரு பள்ளியிலும் பல்லூடகக் கணினியும் இணைய இணைப்புமே கற்பித்தல் கருவிகளாக இருக்கும்.

### கணினிக் கல்விப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

பல்வேறு துறைகளில் மாணவர்களின் திறன்களை வளர்ப்பதாகக் கணினிக் கல்வி அமையவேண்டும். ஆர்வமிகுதியினால் கணினித் துறையில் உயர்நிலைச் செயல்திட்ட வரைவுகளை (High Level Programming) மேற்கொள்ளும் பணியை மாணவர்களிடம் திணிக்கக் கூடாது. இது கணினி வல்லுநர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்.

1. இப்பொழுதுள்ள கற்றல்-கற்பித்தல் முறையில் முழுப் பயனையும் பெற இயலாத கற்றல் குறைபாடுடைய மாணாக்கர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குக் கணினிவழியிற் கற்பித்து, அவர்களையும் கற்றலின் முழுப் பயனையும் பெற்றவர்களாக்க வேண்டும்.
2. நான்காம் வகுப்பு மாணாக்கர்களிடமும் கணினிவழிக் கல்வி நல்ல கற்றல் திறனை ஏற்படுத்தியிருப்பதால், கணினிவழிக் கல்வி தொடக்கநிலையிலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
3. ஏழை மாணாக்கர்களுக்கு எட்டாக்கனியாக இருக்கும் கணினிவழிக் கல்வி, அனைத்துத் தரப்பினருக்கும், குறிப்பாகக் கிராமப்புற மாணாக்கர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

கணினி விழிப்புணர்வை ஆசிரியர், மாணாக்கர், பெற்றோர் ஆகியோரிடம் ஏற்படுத்திக் கற்றலின் முழுப் பயனை அனைவரும்பெற வழி வகுக்கவேண்டும். எண்ணங்களும் நிலைத்தத் தன்மைபெற முடியாது. தகவல் தொழில் நுட்பம் பற்றிய அறிவியல் வளர்ச்சியும், தத்துவ வளர்ச்சியும் மொழியின்றித் தடைப்படும். மக்களின் சிந்தனைத் திறனை வளர்க்கும் இன்றியமையாத ஒரு கருவி மொழி.

### கணினி உதவியுடன் மொழி கற்றலின் (Computer Assisted Learning) பயன்கள்

1. அதிக அளவிலான திறன்களைக் கையாள முடியும்.
2. ஈடுபாட்டோடு கூடிய கற்றலை உருவாக்க முடியும்.
3. மாணவர்கள் மீள்திறனை அளவிடவும் உடனடியாக அறிந்துகொள்ளவும் முடியும்.
4. மிகத் துல்லியமாகவும் சுருக்கமாகவும் மொழி கற்றல் நடைபெறும்.
5. மொழி கற்றல் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் சிறப்பாக அமைய உதவும்.

**இலக்கண, இலக்கியம் கற்பித்தலில் கணினி**

இலக்கணக் கூறுகளை உள்ளடக்கிய மொழிப்பயிற்சி என்பது பதிலீடு செய்தல், மாற்றம் செய்தல், கோடிட்ட இடங்களை நிரப்புதல், திரும்ப எழுதுதல், படியெடுத்தல் எனப் பலதிறப்படும் மொழியமைப்புக் கூறுகளை, உள்ளடக்கிய பலவகைப் பயிற்சிகளை உருவாக்கிக் கற்பிக்கும் பணியில் கணினி பெரிதும் உதவுகிறது. தொடக்கநிலை வகுப்புகளில் செய்யுளைக் கற்பிக்கும்போது இலக்கிய அறிவு வளர்க்கும் பணிகளில், கற்பித்தல் நிலையில் கணினியைப் பயன்படுத்தலாம்.

**பயிற்றுக் கருவிகள் உருவாக்கும் பணி**

பாடங்கள் பயிற்றுவிப்பதற்கான தயாரிப்புகளைக் கணினியில் தயாரிக்கலாம். கணினி நழுவங்களில் எழுத்துகள், சொற்கள், வாக்கியங்கள், பாடல்கள், அருஞ்சொற்பொருள்கள், விடுபட்ட எழுத்துகள், மின்னட்டைகள், செயல்பாட்டு அட்டைகள் தயாரிக்கலாம். இயங்கும் படங்களை இணையத்திலிருந்து இறக்கியும் சேமித்தும் பாடம் நடத்துவது எளிது. ஆசிரியரின் தேவைக்கேற்பக் கணினியையும் இணையத்தையும் பயன்படுத்தலாம்.பல்வேறு நிலைகளில் கூட்டல், குறைத்தல் மாற்றம் செய்யக் கணினி பயன்படுகிறது. வினாத்தாள்களை உருவாக்கும் போது படிப்படியாக ஒவ்வொரு நிலையிலும் கூட்டல் குறைத்தல் மாற்றங்களைச் செய்துகொள்ள முடியும்.

**அகராதிகள்/சொல்லடைவுகள் தயாரிப்பதில் கணினி**

இருமொழி அகராதிகள், கலைச்சொல், அகரவரிசைப் பட்டியல், இலக்கியச் சொல்லடைவுகள் தயாரிக்க கணினி உதவும். இவ்வாறான திருக்குறள் சொல்லடைவு ஒன்றினைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது. ஆசிரிய மாணவர்கள் ஏதேனும் ஒரு பாட நூலிலுள்ள சொற்களைத் தொகுத்து கணினியில் அகராதி உருவாக்கலாம்.

**கணினியும் தமிழாசிரியரும்**

கணினி வழியாகத் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனத்தைப் பயன்படுத்தி, தமிழாசிரியர்கள் கற்பிக்கும்போது தம்கற்பித்தலில் மேம்பாடும் உயர்நிலையும் அடையலாம். கணினி நழுவங்களைத் தயாரித்துத் தமிழ்ப்பாடங்கற்பிக்கும்போது மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கின்றனர். பாடப் பொருளுக்கேற்பப் படங்கள் ஒலியுடன் இயங்கும்போது மாணவர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. வருங்காலத்தில் வகுப்பறையிலும் ஒவ்வொரு மாணவனிடம் ஆசிரியரிடமும் கணினிகள் இருக்கும். அறிவை விரிவுசெய்து ஆற்றல்பெறச் செய்யும் அரும்பணியில் அயராதுழைக்க ஆசிரியர் தம்மைத் தாமே மேம்படுத்திக்கொள்ளவேண்டும். மொழியறிவு கிடைக்குமிடங்களைத் தேடிக்கொணர்ந்து மாணவர்க்கு ஊட்டுவது தமிழாசிரியர்தம் தலையாய கடமை.

**கணினியியல் வல்லாரும் தமிழ் கற்பித்தலும்**

கணினி மென்பொருள் உருவாக்கும் ஆற்றல் படைத்தவர்கள் தமிழ் கற்பித்தலுக்குத் தேவையான மென்பொருள்களை உருவாக்கித் தர முன்வர வேண்டும். ஆண்பால் - பெண்பால், சேர்த்தெழுதுதல், பிரித்தெழுதுதல், ஒருமை-பன்மை, வலிமிகுதல், மிகாமை போன்ற இலக்கணப் பிழைகளைத் தவிர்ப்பது முதலிய கூறுகளைக் கற்பிக்கப் பாடக் கட்டளைகளை உருவாக்கலாம். இவற்றைப் பயன்படுத்துவோரும் வாங்குவோரும் பெருகினால்தான் கணினி இயல் வல்லாரும் மிகுதியான மென்பொருள்களை உருவாக்குவர். அந்த வகையில் அவர்களுக்கு ஆதரவும் ஆக்கமும் ஊக்கமும் ஊட்டவேண்டும். கணினி இயல் வல்லாரும் தமிழ்மொழிப் புலமை உடையாரும் இணைந்து முயன்றால்தான் இத்தகைய பாடக் கட்டளைகளை உருவாக்கமுடியும். மொழியியல் வல்லாரும், கணினியியல் வல்லாரும் சேர்ந்து மேற்கொள்ளும் இணைப்பு முயற்சிகள் தமிழ்மொழியைக் கணினிக்குக் கொண்டுசெல்லும் முயற்சிகளாக அமையும். இவர்கள் இருவரையும் இணைக்க ஓர் ஒருங்கிணைப்புக் குழு தேவை.

பின்வரும் இணையத் தளங்களுக்குச் சென்று குழந்தைகளுக்கான பாடல்கள், கதைகள், செயல்பாடுகள், விளையாட்டுகள், பயிற்சிகளைக் கண்டறிந்து கற்பித்தலை வளமாக்கிக் கொள்ளவும். மேலும், தேவையானவற்றைக் குறுந்தகட்டில் பதிந்து வைத்துக்கொள்ளவும்.

www.links4kids.co.uk www.surfnetkids.com
www.kidsites.org
www.coolmath.com
www.coolmath4kids.com
www.spikesgamezone.com
www.kids.yahoo.com
www.hitentertainment.com )
www.pbskids.org
www.nickjr.com www.uptoten.com
www.kidsgames.org
www.gameskidsplay.net
www.funbrain.com
www.everythinggirl.com
www.bonus.com
www.cyberkids.com
www.kid_space.org.
www.kidlink.com
www.kids.com
www.kidsword.com
www.kotb.com
www.tince.com
www.xkides.com
http://app.de.mingoville.com/
http://www.hellokids.com

## தொகுப்புரை

இவ்வியலின் வாயிலாக மொழிப்பயிற்றாய்வுக் கூடம், அதில் இடம்பெற்றுள்ள கருவிகள், பயன்பாடு, கற்றல்-கற்பித்தல் பயிற்சிகள், மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புகள் குறித்தும், கணினியும் தமிழும், தமிழ் மென்பொருள்கள், இணையம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பல்லூடகமும் தமிழ் கற்பித்தலும் முதலியன குறித்துக் கண்டோம். இவ்வியலைக் கற்றதனால் மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தைக் கையாளவும், மொழித்திறன்களை வளர்த்துக்கொள்ளவும், மேன்மேலும் மேம்படுத்திக் கொள்ளவும் ஆசிரியப் பயிற்சி மாணவர்களால் இயலும். மேலும், கணினியைப் பற்றி அறியவும், இயக்கவும் மென்பொருள்களைத் தேடிக் காணவும் மாணவ ஆசிரியர்கள் முயற்சி மேற்கொள்வர். இணையத்திலிருந்து சிறந்த பாடப்பொருள் களைத் தேடித் தொகுக்கவும், தொகுத்தவற்றைப் பள்ளிகளில் பயன்படுத்திக் கற்பிக்கவும், கற்றலடைவை மேம்படுத்தவும் மாணவ ஆசிரியர் பயிற்சி பெறுவர்.

# 6. தேர்வும் மதிப்பீடும்

## அறிமுகம்

கல்வி கற்றலென்பது தொடர்ந்து நிகழ்வதொரு செயலாகும். இச்செயல்முறையில் பல்வேறு சிக்கல்கள் பலநேரங்களில் தோன்றுகின்றன. இச்சிக்கலைத் தீர்க்க நினைப்போர் சிக்கல் தொடர்பான, துல்லியமான, தேவையான உண்மைகளை முதலில் திரட்டவேண்டும். பின்னர் அவற்றை அலசி ஆராய்ந்து முடிவுகாண வேண்டும். இதற்கு அளவிடுதலும் மதிப்பிடுதலும் உதவும். இவ்விரண்டு செயல்பாடுகளும் கல்வி மாற்றத்தில், கல்வி வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றன.

இன்று, கல்விச் செயல்பாட்டில் தேர்வு என்பது முதன்மை இடத்தைப் பெறுகின்றது. தேர்வு என்னுஞ் சொல்லுக்குத் 'தரத்தை மதிப்பிடல்' என்பது பொருள். இது 'தேர்' என்னும் வினையடியாகத் தோன்றிய சொல். இதனோடு தொடர்புடையதாக அளவீடு (Measurement), மதிப்பீடு (Evaluation) என்னுஞ் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இவற்றிற் கிடையே சிறு வேறுபாடுகளும் உள்ளன.

இவ்வியலில் அளவீடு, மதிப்பீடு பற்றிய விளக்கங்கள், தேர்வின் வகைகள், அவற்றின் நிறைகுறைகள், தேர்வின் பண்புகள், திறன்களை மதிப்பிடும் முறை, தொடர் மதிப்பீடு, வினாத்தாள் வடிவமைப்பு ஆகியவை பற்றி விளக்கப்படுகின்றன.

## படிநிலைகள்

1. அளவீடும் மதிப்பீடும்
2. மதிப்பீட்டின் வகைகள்
3. மதிப்பிடும் முறைகள்
4. மதிப்பீட்டின் தேவை
5. திறன்களை மதிப்பிடல்
6. தேர்வின் வகைகள்
7. சிறந்த தேர்வின் பண்புகள்
8. வினாத்தாள் அமைக்கும்முறை
9. வினாத்தாள் தயாரிக்கும் முறை
10. வினாத்தாள் வடிவமைப்பு
11. வினாத்தாள் திட்ட வரைவு
12. மாதிரி வினாத்தாள்
13. மதிப்பீடு பற்றிய இந்தியக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்

## 1. அளவீடும் மதிப்பீடும்

வளர்ந்துவரும் கல்வியுலகில் தொடக்கக் கல்விமுதல் அனைத்து நிலைகளிலும் பல்வேறு தரப்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இம்மாணவர்கள் கல்வியால் எத்தகைய பயன்களை எந்த அளவில் பெற்று வருகின்றனர் என்பதை அவ்வப்போது அளவிடலும் மதிப்பிடலும் பள்ளிச் செயல்முறையில் தொடர்ந்து நிகழவேண்டிய செயல்களாகும்.

மாணவர்களிடம் ஏற்படும் கற்றல் திறன் வளர்ச்சியை அளவிடுதலோடு, கல்வியின் பிற முக்கிய விளைவுகளான நன்மனப்பான்மை, நற்பழக்கம், செய்திறன், அழகுணர் ஆற்றல் போன்றவற்றின் வளர்ச்சியை ஆராய்வதும் மதிப்பீட்டில் அடங்கும். மதிப்பிடலில் அளவிடுதலும் அடங்கும். கல்வியின் குறிக்கோள், நோக்கம் ஆகியவற்றைப் பொருத்தே கல்விமுறையில் காணப்படும் மதிப்பிடல், அளவிடல் தன்மையும் அமையும். இவை மாறினால் கல்வி கற்பிக்கும் முறைகள், கற்றல் பட்டறிவு, அளவிடல் முறைகள், மதிப்பிடல் முறைகள் ஆகியனவும் மாறுபடும்.

இன்றைய கல்வியுலகில் கல்வியாளர்கள் மாணவர்களின் அடைவுத்திறனை அறிய அளவிடுதலையும் மதிப்பிடுதலையும் தலையாய பணியாகக் கருதுகிறார்கள். இவை ஆசிரியப் பெருமக்களின் முதன்மைப் பொறுப்புகளில் ஒன்றாகவும் திகழ்கிறது.

## அளவிடுதல் (Measurement)

அடைவுச் சோதனை ஒன்றில் மாணாக்கன் எந்த அளவு **(Quantity)** மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறான் என்பது அளவீடாகும். இது கற்றலின் விளைவைக் கண்டறிதலாகும். ஒரு நிலைமையின் இயல்பினைத் திட்டமாக விவரித்துக் கூறுதலை அளவிடல் எனலாம். எடுத்துக் காட்டாக ஒருவன் தமிழ்மொழிப் பாடத்தில் 85 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறான் என்றால், அது அளவிடுதல் ஆகும். இதற்குக் காரணம், அளவிடுதல் என்ற செயல்முறை எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளதாகும்.

## மதிப்பிடுதல்

மதிப்பிடலில் அளவிடல் முறைகள் அடங்கியுள்ளன. மதிப்பீடு என்பது ஒரு நிலைமை யின் இயல்பினையும் உண்மைப் பயன்களையும் ஆராய்ந்து முடிவுக்கு வருதலாகும். கிடைத்த மதிப்பெண்களை ஆய்ந்து பொருள் விளக்கம் தருவதைத்தான் மதிப்பீடு என்கிறோம்.

எடுத்துக்காட்டாக, ஒருவன் பெற்ற மதிப்பெண்களை, உடன்பயிலும் ஏனைய மாணாக்கர் பெற்ற மதிப்பெண்களுடன் ஒப்பிட்டு, அவன் பெற்ற அடைவினைப்பற்றி ஒரு முடிவுக்கு வருதலாகும். அதாவது,வகுப்பில் அழகன் என்பவன் முதல் தரம் பெற்றுள்ளான் என்கிறோம். இவன் பெற்ற மதிப்பெண்ணை மற்ற மாணவர் பெற்ற மதிப்பெண்களுடன் ஒப்பிட்ட பிறகே நாம் இம் முடிவுக்கு வர முடிகிறது. இத்தகைய செயல்முறை மதிப்பீடு எனப்படுகிறது.

மேலும், அறிவரசன் என்பவன் தமிழ்ப்பாடத்தில் 50 மதிப்பெண் பெற்றுள்ளான் என வைத்துக் கொள்வோம். இது அளவிடுதல் ஆகும். இச் செயல்முறையினால் மட்டும் நாம் ஒரு தெளிவான முடிவுக்கு வந்துவிட முடியாது. அவ் வகுப்பிலுள்ள மாணவர்கள் பெரும்பான்மை யினர் தமிழ்ப் பாடத்தில் 75 முதல் 85வரை மதிப்பெண்கள் பெற்றிருப்பார்களே யானால், இப்போது அறிவரசன் நல்ல தேர்ச்சி பெறவில்லை என்னும் முடிவை நாம் பெறுகிறோம். ஆனால், இதற்கு மாறாக மற்ற மாணவர்கள் தமிழ்ப் பாடத்தில் 15 முதல் 30 வரை மதிப்பெண்கள் பெற்றிருப் பார்களேயானால், அறிவரசன் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளான் என்னும் முடிவுக்கு நாம் வரலாம். மேற்கூறிய இவ்விரு முடிவும் மாறுபடுகிறது. இவை மதிப்பீடுகளாகும். எனவே, மதிப்பீடு என்பது ஒரு நிலைமையின் உண்மைப் பயன்களை ஆராய்ந்து முடிவுக்கு வருதலைக் குறிப்பதாகும். கல்வியின் நோக்கங்களும் இலக்குகளும் குறிக்கோள்களும் மாறினால் கல்வி கற்பிக்கும் முறைகளும் அளவிடல், மதிப்பிடல் முறைகளும் மாறுபடும்.

கல்விச் செயல்முறையில் மூன்றுவகை அடிப்படைக் கூறுகள் உள்ளன. அவை முறையே கல்விக் குறிக்கோள் (Educational objectives), கற்றல் அனுபவங்கள் (Learning experience), மதிப்பீடுகள் (Evaluation) எனப்படும். இம்மூன்றையும் முக்கோணத்தின் மூன்று முனைகளுக்கு ஒப்பிடலாம்.




இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. ஒன்றின் வளர்ச்சிக்குத் தடையேற்படின், மற்ற இரண்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது என்பதும், ஒன்றின் வெற்றி, மற்ற இரண்டினைப் பொருத்தே அமைகிறதென்பதும் அறிய முடிகிறது.

ஒரு மாணாக்கன் தொடக்கத்திலிருந்த நிலையையும் (Entering behaviour), கற்பித்தலின் விளைவாக இறுதியில் எதிர்பார்க்கப்படும் நடத்தைக் கோலங்களையும் (Terminal behaviour) பொருத்தமான நுண்முறைகளைக்கொண்டு தீர்மானித்தலும் கல்வி மதிப்பீட்டில் அடங்கும்.

இத்தகைய மதிப்பீடு பள்ளி வாழ்க்கை முழுவதிலும் தொடர்ச்சியாக அளவிட வழி வகுக்கிறது. நிறைகுறைகளை நுண்ணிய அளவில் காட்டவல்லது; ஒரு மாணவனை வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தும் முதன்மை இடத்தை வகிக்கிறது. தற்போது மதிப்பெண் பதிவேடுகள், திறன் பதிவேடுகள் வாயிலாக மதிப்பீடு சிறந்ததொரு பரிணாமம் பெறுகிறது. மதிப்பீட்டின் முழு அமைப்பைக் கீழ்க்காணும் வரைவு வாயிலாக அறியலாம்.




**மதிப்பீட்டின் பயன்கள்**

1. ஒவ்வொரு மாணவனும் பாடப்பொருளை எந்த அளவுக்குக் கற்றிருக்கிறான் என்பதை அறியவும் பிற கல்வி இலக்குகளில் எந்த அளவு முன்னேற்றம் காணப்படுகிறது என்பதை மதிப்பீட்டின்மூலம் அறிந்துகொள்ளவும் முடிகிறது.
2. மாணவர்கள் கற்றலில் அடைகின்ற இடர்ப்பாடுகளை அறிந்து, அவற்றை நீக்கவும் நிறைகளை வளர்த்துக்கொள்ளவும் முடிகிறது.
3. ஆசிரியர் கற்பித்த பாடப்பொருளின் கருத்துகளையும் அதனை விளக்குவதற்காக அவர் கூறிய எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் முதலியனவற்றையும் எந்த அளவுக்கு மாணாக்கர் நினைவிலிறுத்தியுள்ளனர் என்பதை அளந்தறிவதும் மதிப்பிடுதலின் பயனாகும்.

4. நுண்ணறிவு, ஆளுமை முதலிய காரணிகளின் அடிப்படையில் மாணவர்களை வகைப்படுத்தி அதற்கேற்பக் கற்பித்தலை மாற்றியமைத்துக்கொள்ள முடிகிறது.
5. கற்பித்தல் பணியில் தாம் கண்டுள்ள வெற்றியின் அளவையும் தரத்தையும் ஆசிரியர்கள் எளிதாக அறிந்துகொள்ள உதவுகிறது.
6. மாணாக்கர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான ஊக்குவிப்பைச் செய்ய உதவுகிறது.
7. பாட அமைப்பு, கல்வி ஏற்பாடு, பாடத்திட்டங்கள் ஆகியவற்றில் அவ்வப்பொழுது தேவையான மாறுதல்களைச் செய்வதற்கும் மதிப்பிடுதல் உதவுகிறது.

## 2. மதிப்பீட்டின் வகைகள்

மதிப்பீடு இரண்டு வகைப்படும். அவை:

1. புற மதிப்பீடு
2. அக மதிப்பீடு

### புற மதிப்பீடு

மதிப்பிடுவோர் மாணவனின் விடைத்தாளை மட்டும் நோக்கி அவனை மதிப்பிடுவது. அதாவது, புற நிலையை மதிப்பிடுவது புற மதிப்பீடாகும். தற்போது பல வகுப்புகளில் இம் முறையே நடைமுறையில் உள்ளது. இதில் பாடப்பொருளை அறிதல் மட்டுமே மதிப்பிடப் படுகிறது. மாணவனின் நற்பண்புகள், நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் முதலிய வற்றை புற மதிப்பீடு ஆய்வு செய்யாது.

இம் மதிப்பீடு கால எல்லைக்கு உட்பட்டது; யாராலும் தீர்மானிக்கப்படலாம். மதிப்பீட்டாளருக்கும் ஆசிரியருக்கும் தொடர்பில்லாமலும் அமையலாம். ஆண்டு முழுவதும் கற்றது மூன்று மணிநேரத்தில் தீர்மானித்து மதிப்பிடப்படுகிறது.

### அக மதிப்பீடு

மாணவனின் அன்றாடச் செயல்முறைகள், கல்வியில் செலுத்தும் நாட்டம், தேர்வில் பங்குபெறுதல் முதலிய நிலைகளை ஆய்வு செய்தல் அக மதிப்பீடாகும். இதில் மதிப்பீட்டாளருக் கும் மாணவனுக்கும் நேரடித்தொடர்பு ஏற்படுகிறது. மாணவனைப் பற்றிய பல்நிலைத் தொடர் மதிப்பீடாக அக மதிப்பீடு அமைகிறது.

மாணவனின் பாடப்பொருளறிவு மட்டுமல்லாமல் அவனுடைய நற்பண்புகள், நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் முதலியனபற்றியும் மதிப்பீடு செய்வது. ஒட்டுமொத்தத்தில் மாணவனின் முழு ஆளுமைத்திறனையும் அறியும்வகையில் அக மதிப்பீடு அமைகிறது.

### அக மதிப்பீட்டிற்கு உதவும் கருவிகள்

1964-'66 இல் அமைக்கப்பட்ட தேசியக் கல்விக்குழு அக மதிப்பீடு செவ்வனே அமை வதற்கு உதவும் கருவிகளை வகைப்படுத்தியது. இம் மதிப்பீட்டிற்கு நிகழ்ச்சிப் பதிவேடு, மற்ற மாணவர்கள் வாயிலாக அறிதல் (Information from ones peers), நேர்முகப்பேட்டி (Interview), தனியாள் ஆய்வு (Case study), விருப்புகள் பட்டியல் முதலியன உதவும்.

தணிக்கை நிரல் (Check list), முன்னேற்ற அறிக்கை (Progress report), தரமிடும் அளவு கோல் (Rating scale), கேள்வி நிரல் (Questionnaire), அடிப்படைத் திறன் சோதனை (Basic skill test) முதலியவற்றைக் கருவியாகப் பயன்படுத்தலாம்.

மொழிப்பாடத்தில் மாணவரின் மொழியார்வம், படைப்பாக்கத்திறன், சொற்போர். கலந்துரையாடல், கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளில் பங்கேற்றல், செய்திகள் சேகரித்தல், இதழ் தயாரித்தல், இலக்கிய இலக்கண ஆர்வம் முதலியவற்றையும் மதிப்பிடவேண்டும்.

இவற்றை ஆசிரியர்கள் சிறந்தமுறையில் பயன்படுத்த பணியிடைப்பயிற்சி அளிக்க வேண்டும். மாணவர்கட்குத் தரப்படும் சான்றிதழில் அக மதிப்பீடு, புற மதிப்பீட்டு மதிப்பெண்கள் தனித்தனியே தருதல்வேண்டுமெனத் தேசியக் கல்விக்குழு கூறியுள்ளது. இன்று கல்வியில் பல நிலைகளில் இம் முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

## 3. மதிப்பிடும் முறைகள்

இன்றைய மதிப்பிடுதலில் காணப்படும் தேர்வுகளும் சோதனைகளும் தொகுநிலை (ஒட்டுமொத்த) மதிப்பிடல் ( Summative evaluation) ஆகும். குறிப்பிட்ட கால இடைவெளியில் அதுவரை கற்பிக்கப்பட்டவற்றைத் தேர்வுப் பொருளாகக்கொண்டு நடத்தப்பெறும் மதிப்பிடுதலே தொகுநிலை மதிப்பிடல் எனப்படும். இதன் நோக்கம் உயர்வகுப்புக்கு மாணவரை மாற்றலாமா வேண்டாமா என்பதைக் கண்டறிதலே ஆகும்.

கற்றல் கற்பித்தலில் மாணவர் திறன் பெற்றிருக்கிறார்களா என்பதைக் கண்டறியும் நோக்கத்தோடு அவ்வப்போது மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் எல்லாம் வளர்வறி மதிப்பீடு (தொடர்ச்சியான மதிப்பீடு) (Formative evaluation) எனப்படும். தொடர்ச்சியான முழுமையான மதிப்பீடு (Continuous Comprehensive Evaluation) எனவும் இதனைக் கூறலாம். இன்றைய கல்விமுறையில் திறன் அடிப்படையிலான கற்றல் கற்பித்தலுக்கு (Competency Based Learning and Teaching) வளர்வறி மதிப்பீடே மிகவும் பொருத்தமானதும் பயனுடையதும் ஆகும்.

## 4. மதிப்பீட்டின் தேவை

கல்வி என்பது மாணவர், ஆசிரியர், பாடப்பொருள்/திறன் என்னும் மூன்றையும் சார்ந்தது. இம் மூன்றனுள் எதிலும் குறைகளோ நிறைகளோ ஏற்பட வழியுண்டு. குறைகளாயின் களையப் பட வேண்டும் நிறைகளாயின் அடுத்த கல்வி முயற்சிக்குப் படிக்கல்லாகப் பயன்படுத்தப் படவேண்டும். இதனைக் கண்டறிய கற்றல் கற்பித்தல் பற்றிய முறையான தகவல்களைத் திரட்டி, முறைப்படி ஆராய்ந்து சரியாகத் தரநிலைப்படுத்த மதிப்பீடு இன்றியமையாததாகிறது.

மதிப்பீடு இல்லையெனில் கற்றல் கற்பித்தல் வெற்றிகரமாக நிகழ வாய்ப்பில்லை. இது கற்றல் கற்பித்தலில் எங்குக் குறை ஏற்பட்டுள்ளது, அதாவது இது ஆசிரியர் அணுகுமுறையிலா, கற்பித்தல் முறையிலா, துணைக்கருவியிலா, மாணவரிடத்திலா, பாடப்பொருளிலா என்பதனைக் கண்டறிய முடிகிறது.

மதிப்பீட்டின்மூலம் கற்றல் கற்பித்தலை மேலும் ஆழமானதாகவும் ஆக்கப்பூர்வ மானதாகவும் ஆக்க வழியேற்படுகிறது. மதிப்பீடின்றிக் கற்றல் கற்பித்தல் நிகழ்ச்சி முழுமை யடையாது. கல்விச் செயல்பாட்டின் ஒவ்வொரு நிலையிலும் நிறைகுறைகளைக் கண்டறிய மதிப்பீடு உதவுவதால், அதன் தேவை இன்றியமையாததாகிறது.

## 5. திறன்களை மதிப்பிடல்

திறன் பாடமான மொழிப்பாடத்தில் பாடப்பொருள் என்பது திறன்களை வளர்ப்பதற்கு ஆசிரியர்க்குக் கொடுக்கப்பட்ட ஓர் எடுத்துக்காட்டு (Model) ஆகும். எடுத்துக்காட்டே கல்வியாகி விடாது. மாணவர்கள் கற்றல் கற்பித்தல் செயலால் பெற வேண்டியது திறன்களேயன்றி எடுத்துக் காட்டாகிவிடாது. மாணவன் அடிப்படைத்திறன்கள் நான்கிலும் வல்லமை பெறவேண்டும். இவ்வடிப்படைத்திறன்கள் நான்கும் மதிப்பீட்டிற்கு உள்ளாகின்றனவா எனில், கேள்விக்குறியாகவே உள்ளது. எழுதுதல் திறன் ஒன்றையே மதிப்பிடுவதாக இன்றைய தேர்வு முறைகள் அமைந்துள்ளன. அனைத்துத் திறன்களும் மதிப்பீட்டிற்கு உள்ளானால்தான் மொழிப்பாடத்தை மதிப்பிட்டதாகும். மொழித்திறன்கள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. கேட்டல் திறன் முறையாக நிகழவில்லை யென்றால், பேசுதல் செம்மையடைய முடியாது. பேசுதல் முறையாக இல்லையென்றால் கேட்டலும் சிறப்பாக அமையாது. இதனை

மனத்திற்கொண்டே ஒருங்கிணைந்த திறன்கள் அடிப்படையில் முன்னேற்றம் ஏற்பட வழிவகை செய்தல்வேண்டும் எனக் (Integrated Competency Based Development) கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர். இதற்கு மாறாக, ஒரு திறன் வளர்ச்சியை மட்டும் மதிப்பிடுவது மொழி மதிப்பீடாகாது.

**கேட்டல் திறன்**

பாடப்பொருளோடு கூடுதலாகக் கதைகள், பாடல்கள், உரையாடல்கள், நாடகங்கள், சொற்போர்கள் முதலியவற்றை ஆசிரியரோ மாணவர்களைக் கொண்டோ ஒலிநாடா மூலமோ நிகழ்த்திக் காட்டி, மாணவர்களைக் கேட்கச் செய்யவேண்டும். மாணவர்களின் கேட்டல் திறனை அறிய வினாக்கள் கேட்கவேண்டும். சரியாக விடையிறுக்காத மாணவர்களின் குறைகளைக் கண்டறிந்து நீக்கவேண்டும். கேட்டல் திறனை மதிப்பிடுவதில் ஆசிரியர், மாணவர்கள் பேச்சுத் தெளிவாகவும் திருத்தமானதாகவும் இருத்தல்வேண்டும். மாணவர்களின் கேட்டல்திறனை மதிப்பிட வீட்டிலும் பொதுவிடங்களிலும் பேசும் பேச்சுகளை ஒலிப்பதிவுசெய்து, மாணவரைக் கேட்கச் செய்யவேண்டும் அல்லது இத்தகைய சொற்களை அறியத்தக்கவாறான வினாக்களைக் கேட்டும் கேட்டல் திறனை மதிப்பிடலாம்.

மாணவர்கள் மயங்கொலிச் சொற்களை அடையாளங்கண்டு கூறுகிறார்களா என்பதைக் கேட்டல் திறன்வாயிலாக மதிப்பிடலாம். ஆசிரியர் மயங்கொலிச் சொற்கள் கொண்ட சொற் பட்டியலை அல்லது படங்களை மாணவர்க்கு வழங்கி, ஆசிரியர் அச்சொற்களை ஒலிக்கும்போது, மாணவர் சரியெனக் குறியிட்டுக் காட்டச் செய்யவேண்டும்.

**பேசுதலும் படித்தலும்**

பேசுதல், படித்தல் திறன்கள் பலவகையில் ஒற்றுமை உடையன. அவற்றை மதிப்பிடும் போது சரியான உச்சரிப்பு, ஏற்ற இறக்கம், இடைவெளி நிறுத்தம், அழுத்தம் ஆகிய வற்றை மனத்திற் கொள்ளவேண்டும்.

கீழ் வகுப்புகளில் ஒரே ஒலியுடைய எழுத்துகள் பன்முறை பயின்றுவரும் தொடர்களைக் கொடுத்தும் ஒத்த ஒலிப்புடைய எழுத்துகள் பயின்றுவரும் தொடர்களைக் கொடுத்தும் பேசச் செய்வதன்மூலம் ஒலிப்புமுறையினை மதிப்பிடலாம்.

எடுத்துக்காட்டு: கள்ளன் குள்ளனைப் பள்ளத்தில் தள்ளினான்.
ஆளுக்கு நாலு பழம் கொடு.

தெளிவான பேசுதல், படித்தல் திறன் பெறாத மாணவர்களும் பேசவும் படிக்கவும் செய்வர். பொருள் விளங்கிக்கொள்ளாத மாணவர்களும் சில தொடர்களைத் தவறாகப் பேசவும் படிக்கவும் செய்வர். ஆசிரியர் இவற்றை ஏற்ற வினாக்கள்வழி மதிப்பிடல்வேண்டும்.

எடுத்துக்காட்டாகப் பெண்கள் விரும்பினர் என்னுந் தொடரைப் பெண் கள் விரும்பினர் எனத் தேவையில்லாத இடத்தில் இடைவெளிவிட்டுப் பேசுதல் அல்லது படித்தல் பொருள் மாற்றத்தை ஏற்படுத்தும்.

கலையரசி பாவம் செய்தாள் எனுந் தொடரில் பாவம் என்பதில் பா வை அழுத்திச் சொன்னால் கலையரசி செய்த நாட்டிய முகபாவம் என்னும் பொருள் மாறிக் கலையரசி பெருங் குற்றம் செய்தாள் எனப் பொருளாகிவிடும். இவற்றையெல்லாம் ஆசிரியர் மனத்திற் கொண்டு பேசுதல், படித்தல் ஆகிய இரண்டு திறன்களையும் மதிப்பிடல்வேண்டும்.

**எழுதுதல் திறன்**

எழுதுதல் திறனை மதிப்பிடும்போது எழுத்து வடிவங்கள் சரியாக உள்ளனவா என்பதைக் காணவேண்டும். உருவ ஒற்றுமை உடைய ள, ன, ழு, மு, ச, க முதலிய எழுத்துகளை எழுதும்

போது திருத்தமாக எழுதவேண்டும். ‘கள்ளல்’ என்னுஞ் சொல்லை விரைவாக எழுதும்போது ‘ள’ சுழிபெற்று ‘கன்னல்’ எனப் படிக்க நேரிடும்.

கடிதம், கட்டுரை எழுதும்போது அதற்குரிய வடிவத்தைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை மதிப்பிடும்போது கவனத்திற் கொள்ளவேண்டும்.

சந்திப் பிழைகள், வாக்கியப் பிழைகள், எழுத்துப் பிழைகள், ஒருமைப் பன்மை மயக்கம், திணை, பால், எண், இட வழுக்களிலும் கவனஞ் செலுத்தவேண்டும்.

எழுதுதல் திறனை மதிப்பிடும்போது தொடக்க வகுப்புகளில் ஓரிரு சொல்லிலோ எளிய சிறிய தொடர்களிலோ தமது கருத்தை மாணவர் வெளிப்படுத்துகின்றனரா என்பதற்கு முதலிடம் அளிக்கவேண்டும்.

தொடக்க வகுப்பில் மாணவனின் அடைவைச் சோதிப்பதற்காகச் செயல்வழிக் கற்றலில், ‘நாய்’ குறியீடுகொண்ட அட்டைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இடம் பெற்றுள்ள வினாக்கள் அறிதல், புரிதல், பயன்படுத்துதல், ஆளல் ஆகிய முறைப்படி அமைந்துள்ளனவா? அவை மொழியின் நோக்கங்களை நிறைவேற்றக் கூடியனவாய் உள்ளனவா? என்பதைக் கண்டறிக.

## 6. தேர்வின் வகைகள்

பாடப்பொருள் அளவை வரையறுத்துக்கொண்டு கற்றல் விளைவைக் குறிப்பிட்ட கால அளவில் எழுதுவதற்கு வகுத்துக்கொண்ட வினாக்களுக்கு விடைதரும் செயல் தேர்வு எனப்படும். தேர்வு என்பது, கற்பவரைப் பற்றியும் கற்பிப்பவரைப் பற்றியும் போதுமான விவரங்களை அறிந்துகொள்ளும் நடைமுறையாகும்.

இம்முறை மாணவர்கள் அனைத்துப் பாடங்களையும் கற்றறிந்துள்ளனரா என்பதை அறிவதையும், அவர்களது நினைவாற்றலை, சீராக எழுதும் வல்லமையைச் சோதிப்பதையும், அவர்களது முன்னேற்றம் குறித்துப் பெற்றோர்களுக்கு அறிக்கை அனுப்புவதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது எனலாம்.

1986 இல் உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக்கொள்கை, தேர்வில் பல சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்துள்ளது. தேர்வுச் சீர்திருத்தத்தின் தேவை உணரப்பட்டு புதுமுறைத் தேர்வு முறைகள் மொழிப்பாடத்தில் புகுத்தப்பட்டன. அவ்வகையில் தேர்வின் வகையினை,

- அடைவுத் தேர்வு (Achievement test)
- மொழி வல்லமைத் தேர்வு (Proficiency test)
- குறையறித்தேர்வு (Diagnostic test)
- புறவயத் தேர்வு (Objectivity test)

என நான்காகப் பிரித்துக் காணலாம்.

### அடைவுத் தேர்வு

மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தில் அடைந்துள்ள அடைவினை அளவிடுவதற்குப் பயன்படும் தேர்வு அடைவுத் தேர்வாகும். டென்னிஸ்பேரன், ஹெரால்டு பெர்னால்டு குறிப்பிடுவது போல ஒரு மாணவனின் அடைவு அவன் கற்றலில் செலுத்திய நாட்டம், கற்றலுக்கான ஆயத்தநிலை, கற்றலுக்கான வாய்ப்புகள் இம்மூன்றின் விளைவால் ஏற்பட்ட சாதனையைக் குறிக்கும்.

பாடத்திட்டத்தில் (Syllabus) உள்ள செய்திகளை மாணவர் அறிந்துள்ளனரா? வகுப்பறையில் கற்பித்ததையெல்லாம் மாணவர் அறிந்துள்ளனரா? என்பதை அறியவும் பயன்படும். குறிப்பாகச் சொன்னால், கற்பித்தல் செயலின் வெற்றியையும் கற்றல் செயல் நிகழ்ந்துள்ள அளவையும் அறிய அடைவுத் தேர்வு உதவும்.

**அடைவுத் தேர்வின் நோக்கங்கள்**

அடைவுத் தேர்வு,

- மாணவரின் அடைவினை அறிதல்,
- நினைவாற்றலை அறிதல்,
- பொருளுணராற்றலை அறிதல்,
- கற்பித்தலிலுள்ள குறைகளைக் கண்டறிதல்,

முதலியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

**அடைவுத் தேர்வின் வகை**

நடைமுறையில் பயன்படுத்தப்படும் அடைவுத் தேர்வுகள் இரண்டு வகைப்படும்.

**அடைவுத் தேர்வு**
**(Achievement test)**

ஆசிரியரால் உருவாக்கப்பட்டது.
(Teacher made test)

வாய்மொழித் தேர்வு

1.உச்சரிப்பு
2.மொழிவளம்
3.மொழி நடை
4.குரல் வளம்

தரப்படுத்தப்பட்டது.
(Standardised test)

எழுத்துத் தேர்வு

1.கட்டுரை வினா
2.குறு வினா
3.புறவய வினா

**ஆசிரியரால் உருவாக்கப்பட்டது**

கற்றலுக்குப்பின் மாணவர்களின் அடைவினைக் கண்டறிய ஆசிரியரே உருவாக்கும் தேர்வாகும். இது ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடும். கற்றலுக்கு முன்னும் கற்றலுக்குப் பின்னுமுள்ள மாற்றத்தை ஆசிரியரால் அளந்தறிய முடியும். கற்பித்தலில் தேவைப்படும் மாற்றங்களை உணர்த்தும் வழிகாட்டியாகவும் அமையும். இது வாய்மொழித் தேர்வு, எழுத்துத் தேர்வு என இருவகைப்படும்.

**வாய்மொழித் தேர்வு**

ஆசிரியர் மாணவனிடம் வாய்மொழியாக வினாக்களைக் கேட்டு விடை பெறுதலை வாய்மொழித் தேர்வு என்பர். மாணவர்களின் பேச்சில் காணப்படும் மொழிவளம், உச்சரிப்பு, மொழிநடை, குரல் வளம், உணர்வு வெளிப்படும் பாங்கு ஆகிய மொழிக் கூறுகளை வாய்மொழித் தேர்வின்மூலம் மதிப்பீடு செய்யலாம்.

**நிறைகள்**

- பாடப்பகுதி முழுமையும் வினாக்கள் கேட்கலாம்.
- மாணவனின் மொழியாற்றல் திறனை உடனுக்குடன் அறியலாம்.
- வினாக்கள் புரியவில்லையெனில் உடனுக்குடன் மாற்றிக் கொள்ளலாம்.
- ஆர்வமுள்ள, ஆர்வங் குறைந்த மாணவர்களைக் கண்டறியலாம்.
- மாணவனின் கூச்ச சுபாவம்குறையும்; ஆர்வம் பெருகும்.

**குறைகள்**

- மாணவர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது அனைவரையும் மதிப்பீடு செய்ய இயலாது.
- ஆசிரியரின் விருப்பு வெறுப்பிற்கேற்ப மதிப்பீடு மாறும் வாய்ப்புள்ளது.
- நம்பகத்தன்மை குறைவாக இருக்கும்.
- கூச்ச சுபாவமுள்ள மாணவர்கட்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.
- முறையான வினாக்கள் இடம்பெறும் வாய்ப்புக் குறைவு.

> குறைகள் இருப்பினும் அவற்றைத் திருத்தி வாய்மொழித் தேர்வினைத் தொடக்க வகுப்புமுதலே மேற்கொள்ளவேண்டும்.
> மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள வகுப்பறையில் வாய்மொழித் தேர்வை எங்ஙனம் நடத்தலாம் என்பதைப் பயிற்சி மாணவர்களுடன் கலந்துரையாடித் திட்டமிடுக.

## தரப்படுத்தப்பட்ட தேர்வு

ஒரு வகுப்பிற்கு ஒரே பாடநூல் இருக்கும்பொழுது தேர்வு அமைப்பும் ஆளுக்கு ஆள் மாறு படாமலும் காலத்திற்குக் காலம்மாறுபடாமலும் இருக்கத் தேர்வுகள் முறைப்படுத்தப்பட்டன. இதனைத் தரப்படுத்தப்பட்ட தேர்வு என்பர்.

தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் வல்லுநர் குழுவால் உருவாக்கப்படுகின்றன. அவை பகுப்பாய்வு மற்றும் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் பொருந்தும் வகையில் அமைக்கப்படுகின்றன. வினாக்களை எழுதுவதற்குரிய தேவையான விளக்கக் குறிப்புகளையும் உதவும் தர அட்டவணை குறிப்புகளைக்கொண்டு ஆசிரியர் பலரால் பல இடங்களில் சோதிக்கப்பட்ட வினாக்களின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட தேர்வு அமையும். இத்தேர்வினை எந்த ஆசிரியரும் எந்தச் சூழலிலும் எந்த மாணவர் குழுவிலும் பயன்படுத்தலாம். ஆசிரியரால் உருவாக்கப்படும் தேர்வைவிடத் தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் சிறப்புடையனவாக அமையும்.

## மொழி வல்லமைத் தேர்வு/மொழியாளுமைத் தேர்வு

மொழிப்பாடத்தின்வழி மாணாக்கரின் மொழியாளுமையைச் சோதிப்பது மொழி வல்லமைத் தேர்வாகும். மொழியின் அடிப்படைத் திறன்கள் மட்டுமன்றி, மொழியின் பல்வேறு கூறுகளை உள்ளடக்கி மொழியின் வல்லமையைக் கண்டறிய உதவும் வினாக்களை உருவாக்கி நடத்துதல் மொழி வல்லமையை வளர்க்க உதவும். மொழிவன்மைச் சோதனைகளில் திறம் பெற்றோர் மொழியடைவுச் சோதனைகளிலும் திறன்பெற்றவர்களாயிருக்கின்றார்களா? என்பது ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்ப்பதாய் உள்ளது.

**நிறைகள்**

- மொழியின் தன்மையை உணர முடியும்.
- மொழியின் ஆற்றலை வகைப்படுத்த முடியும்.
- பிழையின்றிப் பேசவும் எழுதவும் வழியேற்படும்.
- படைப்பாக்க முயற்சியில் ஆர்வம் பிறக்கும்.
- மொழித்திறன் உணரல்மூலம் மரபுத்தொடர், பழமொழிகளின் பயன்பாடுகளை அறிய முடியும்.
- பேசுதல், எழுதுதலில் உள்ள கூச்ச நிலையை நீக்க முடியும்..

**குறைகள்**

- எல்லா மாணவர்களும் மொழியாளுமை பெறுவதில் கவனஞ் செலுத்துவர் எனக் கூற இயலாது.
- போதுமான தனிக்கவனம் இல்லையேல் வளர்ச்சி தோன்றாது.

தமிழ்மொழியைப் பயன்முறைத் தமிழாக்கிமாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதன் மூலம் மாணவர்களை மொழியில் வல்லமைபெறச் செய்யலாம். இதன்மூலம் ஓர் இலட்சிய மனிதனாக மாணவனை உருவாக்க முடியும்.

**குறையறித் தேர்வு**

மாணவர்கள் கற்றலில் ஈடுபடும்பொழுது அவர்களுக்கேற்படும் குறைகளைக் கண்டறிய உதவும் தேர்வு குறையறி தேர்வு எனப்படும். குறையறிதல் என்பது மருத்துவத் துறையில் பரவலாகப் பயன்படுத்தும் சொல்லாகும். மருத்துவத்தில் நோயாளியின் உடல் நோயைக் கண்டறிந்து அதனை நீக்கும் முறையைக் கையாள்வர். அதுபோலக் கற்றலில் மாணவர்களிடம் காணப்படும் குறைகளைக் கண்டறிந்து அவற்றை நீக்க ஆசிரியர் மேற்கொள்ளும் முறை குறையறி தேர்வு எனப்படும். மாணவன் கற்றலில் எவற்றைச் சரியாக அறியவில்லை? அவற்றை ஏன் அறியவியலவில்லை? என்பதற்கான காரணங்கள், சூழல்களை அறியவும் இத்தேர்வு பயன்படும்.

தமிழ்ப்பாடங் கற்றலில் மாணவர்களிடம் பொதுவாக,

- ஒற்றுப் பிழைகள்
- எழுத்துப் பிழைகள்
- சொற் பிழைகள்
- ஒருமைப் பன்மை மயக்கப் பிழைகள்
- திணை, பால், எண் முடிவுகளில் காணப்படும் பிழைகள்
- நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துவதில் காணப்படும்பிழைகள்

முதலிய பல்வேறு பிழைகள் இயல்பாகத் தோன்றுகின்றன. இவற்றைக் களையும் வழிவகைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டும்.

**குறைதீர்க்கும் பயிற்சிகள்**

- மாணவன் பெற்ற அடைவின்மூலம் குறைபாடுள்ள மாணவர்களைக் கண்டறியவேண்டும். எத்தகைய பிழைகள் காணப்படுகின்றன. அதற்குரிய காரணம் யாது என்பதையும் கண்டறிந்து குறை நீக்க மொழிப் பயிற்சிகள் அளித்தல் வேண்டும்.

- மயங்கொலிப் பிழைகளை நீக்கப் பொருள் வேறுபாடுணர்த்தும் சொற்களைப் பட்டியலிட்டு விளக்குதல்.
- பிழையான சொற்களும் அவற்றிற்குரிய சரியான சொற்களையும் விளக்குதல்.
- தொடர்ப்பிழைகளையும் திருத்தங்களையும் எழுதி விளக்குதல்.
- ஒற்றுமிகுவதாலும் மிகாமையாலும் ஏற்படும் பொருள் வேறுபாட்டை மின்னட்டைகள் கொண்டு விளக்குதல்.
- பேச்சு வழக்கிற்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களை எழுதிக் காட்சிப்படுத்துதல். மாணவர்கள் அதனை மீண்டும் மீண்டும் படிக்கச் செய்து பிழைகளை நீக்குதல்.
- திணை, பால், எண் இவற்றைப் பயன்படுத்தும்போது காணப்படும் பிழைகளைச் சொற்றொடர்கள்மூலம் விளக்கி நீக்குதல்.

**குறைகள்**

- மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள வகுப்பறைகளில் குறைகளைக் கண்டறிந்து நீக்குவது ஓரளவு கடினமான செயலாகும்.

இதில் குறைகள் மிகமிகக் குறைவு. இம் முறையைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதன்மூலம் மாணவர்களை மொழியில் வல்லமை பெறச் செய்ய முடியும்.

**புறவயத் தேர்வு**

தேர்வுச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் தோன்றிய புதுமுறை புறவயத் தேர்வாகும். நுழைவுத் தேர்வு, வங்கித் தேர்வு முதலியவற்றில் இம் முறையைப் பயன்படுத்தி இதன் வெற்றி நன்குணரப்பட்டுள்ளது. பள்ளித் தேர்விலும் இது பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம் முறையில் மேற்கொள்ளும் மதிப்பீடு துல்லியமாகவும் சரியாகவும் அமைய வாய்ப்புள்ளது. மதிப்பிடுவோனின் மனநிலைக்கேற்ப மாறாத் தன்மையை இம் முறை உருவாக்கு கிறது. இத் தேர்வுகளில் விடைக் குறிப்புகள் முன்கூட்டியே தயாரிக்கப்படுவதால், சரியான விடையை முன்கூட்டியே தீர்மானிக்க முடிகிறது. இதில் மதிப்பீட்டாளனின் விருப்புவெறுப்புக்கு இடமில்லை.

**புறவயத் தேர்வை உருவாக்கும்பொழுது பின்பற்றப்பட வேண்டியவை:**

- வினாக்களைத் தெளிவான முறையில் தயாரித்தல்.
- துல்லியமான பொருள்தரும் சொற்களையே பயன்படுத்துதல்.
- சரியான விடையைத் தேர்ந்தெடுக்க ஏற்புடைய அடிப்படைகளைத் தருதல்.
- ஒரே மாதிரியான சொற்களைப் பயன்படுத்துதலைத் தவிர்த்தல்.
- பாடப்புத்தகத்திலுள்ள தொடர்களை அப்படியே பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
- ஒரு வினாவுக்குரிய விடை பிறிதொரு வினாவிற்கு விடையாகாமல் பார்த்துக் கொள்ளல்.
- குறிப்பாகப் பொருள்தரும் வினாக்களைத் தவிர்த்து நேரடியான விடைகள் தரும் வினாக்களையே பயன்படுத்துதல்.

## மொழிப்பாடத்தில் புறவயத் தேர்வை அமைக்கும் முறை

**புறவய வினா**

- சரி/தவறு வகை (True/False)
- பல்விடையில் தெரிவுசெய்தல் (Multiple Choice)
  - சரியாகத்தோன்றும் விடை
  - தவறான விடை
  - மிகச் சிறந்த விடை
- பொருத்துதல் வகை (Matching)
- நிரப்புவகை (Fill in the blanks)
- மாற்றியமைக்கப் பட்டவகை (Rearranged type)

### சரி, தவறு சுட்டுதல்

கொடுக்கப்பட்டிருக்கும் கருத்துச் சொற்றொடர் அருகே சரி, தவறு அல்லது ஆம், இல்லை என்பதில் ஏதாவது ஒன்றை மாணவர் சுட்டுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டு: திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. சரி/தவறு.

### பல்விடையில் தெரிவுசெய்தல்

நான்கு விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் சரியான ஒன்றை மட்டும் மாணவர்கள் தெரிவுசெய்து விடையாக எழுதவேண்டும்.

எடுத்துக்காட்டு: 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனக் கூறியவர்.

அ) இளங்கோவடிகள் ஆ) திருவள்ளுவர்
இ) கணியன் பூங்குன்றனார் ஈ) கம்பர்

### பொருத்துதல் வகை

இரண்டு வரிசைகளில் அமைந்திருக்கும் வினாக் கூறுகளுள் சரியான, தொடர்புடைய வற்றை இணைத்தல் அல்லது விடையின் எண்ணை எழுதுதல்வேண்டும்.

| **நூல்** | **ஆசிரியர்** |
|---|---|
| 1. நாலடியார் | அ) திருவள்ளுவர் |
| 2. சிலப்பதிகாரம் | ஆ) சமண முனிவர்கள் |
| 3. மணிமேகலை | இ) திருத்தக்கத் தேவர் |
| 4. சீவக சிந்தாமணி | ஈ) இளங்கோவடிகள் |
| | உ) சீத்தலைச் சாத்தனார் |

### நினைவுகூர் வகை

இவ்வகையில் கோடிட்ட இடம் நிரப்புதல், ஒரு சொல் அல்லது ஒரு தொடர் விடையாக அமைத்து எழுதுதல். இவ்வகையில் வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கும். மாணவர் விடையை எழுதுதல்வேண்டும்.

எடுத்துக்காட்டு:

1. நன்னூலை ------------------------- இயற்றினார்.
2. அதியமானின் அவைக்களப் புலவர் ---------------.
3. உயிர்க்குறில் எழுத்துகள் -----------------

இவ்வகை வினா இலக்கண அறிவை அளப்பதற்குப் பெரிதும் உதவும். இதனை வாய்மொழித் தேர்விலும் பயன்படுத்தலாம்.

கோடிட்ட இடம் நிரப்புதலில் விடைகள் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுச் சரியானதைத் தேர்ந்தெடுத்தல், சொல்லுக்குரிய எதிர்ச்சொல்லை எழுதுதல் என்னும் வகையிலும் வினாக்கள் அமைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு:

1. பந்தை மேலே ----------------------(எறி/எரி)
2. குழந்தைகளுக்குச் சுற்றுலா என்றாலே ஒரே --------------( கவலை)

**மாற்றியமைக்கும் வகை**

வடிவ மாற்ற வகை வினாவும் மொழிப்பாடத்தில் பெருமளவு பயன்படுத்தப்படுவதாகும். வாக்கிய அமைப்பு அறிவினைத் தேர்ந்தறிவதற்கு இவ்வகை வினா சிறந்ததாகும்.

எடுத்துக்காட்டு:

1. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிற்கேற்ப மாற்றுக.

நான் காலையில் என் நண்பனைப் பார்த்தேன். (வினா வாக்கியமாக மாற்றுக.)

2. ‘வா’ என்னுஞ் சொல்லை வினைமுற்றாக எழுதுக.

**புறவய வினாக்களின் நிறைகள்**

கட்டுரைத் தேர்வின்முறைகளை நீக்குவதற்காகப் புறவயவினாக்கள் உருவாகியுள்ளன. இவ்வகை வினாக்களுக்கு விடைகளை மதிப்பிடுவதில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாது. ஏனெனில், குறிப்பிட்ட ஒரு வினாவிற்கு ஒரு விடைதான் உண்டு. பொருள்புரியாமல் மனப்பாடஞ் செய்வதை இவ்வகை வினாக்கள் முழுமையாக அகற்றுகின்றன. பாடப்பகுதி முழுமையும் வினாக்கள் அமைக்கமுடியும். இம்முறை அனைவரும் விரும்பத்தக்க, நம்பத்தக்க, மனநிறைவான ஒன்றாகும். மதிப்பிடுவோர் பலர் இருப்பினும் மதிப்பீட்டில் ஒற்றுமை காணப்படும். விடைத் தாளை யார்வேண்டுமானாலும் சரிபார்த்து மதிப்பெண்களைச் சரியாக அளிக்கமுடியும். கணிப்பொறி இயந்திரங்களாலும் மதிப்பிட முடியும். இம்முறையில் விடையளிக்குங் காலமும் மதிப்பீடு செய்யுங் காலமும் குறையும்.

**புறவய வினாக்களின் குறைகள்**

வினாத்தாள்களைத் தயாரிக்க நீண்டகாலம் பிடிக்கும்; ஆசிரியருக்குக் கடினமானதாகும். எடுத்துக்காட்டாகப் பல்விடைத்தேர்வில் கொடுக்கப்படும் விடைகளுள் ஒன்றுதான் சரியானதாக இருக்கவேண்டும். மற்றவை சரியானதாகத் தோன்றவேண்டும். உண்மையில் சரியானதாக இருத்தற் கூடாது. திறமையும் பட்டறிவுமிக்க ஆசிரியர்களால்தான் இத்தகைய வினாக்களைத் தயாரிக்க முடியும். மாணவர்களுக்குச் சரியான விடைதெரியாவிடினும் ஏதேனும் ஒன்றை ஊகித்து எழுத வாய்ப்புண்டு. மாணவர்களின் படைப்பாற்றல் பெருக வாய்ப்பில்லை.

புறவய வினாக்களிலும் குறைகளிருப்பினும் மதிப்பீட்டில் நம்பகத்தன்மை பெருக இம்முறை தேவையானதாகும்.

மொழிப்பாடத்தில் புறவயத் தேர்வுமூலம் மொழித்திறனை எவ்வகையிலெல்லாம் மதிப்பிடலாம் என்பதுபற்றிச் சிந்திக்க. தொடக்கப் பள்ளியில் இவ்வகை வினாக்களை எவ்வாறு அமைக்கலாம் என்பதுபற்றியும் விவாதிக்க.

**அகவய வினாக்கள்**

அகவய வினாக்கள் மூன்று வகைப்படும்.

1. மிகக் குறுவிடை வினாக்கள்
2. குறுவிடை வினாக்கள்
3. கட்டுரை வினாக்கள்

**மிகக் குறுவிடை வினாக்கள்**

இவ்வகை வினாக்களுக்கு ஓரிரு வாக்கியத்தில் விடை எழுதவேண்டும். ஒரு கருத்தைப் பிழையின்றி ஒரு தொடரில் எழுதத் தெரிகின்றதா என்பதைத் தேர்ந்தறிய இது பயன்படுகிறது.

எடுத்துக்காட்டு: சுட்டெழுத்து என்பது யாது?

**குறுவிடை வினாக்கள்**

இவ்வகை வினாக்களுக்கு ஒரு பத்தியில் அதாவது ஆறு அல்லது ஏழு வாக்கியங்களில் விடை எழுதவேண்டும். ஒரு கருத்தை விளக்கப் பல வாக்கியங்கள் எழுதத் தெரிகின்றதா என்பதைத் தேர்ந்தறிய இது பயன்படுகிறது.

இவ்வகை வினாக்களைத் தயாரிப்பது மிகவும் எளிது. உண்மைத் தகவல்கள் கிடைக்கும்; பாடப்பொருள் அனைத்தும் உள்ளடங்கும்; நம்பகத்தன்மை குறையும்; மொழிப் பிழையினால் மதிப்பீடு பாதிக்கப்படலாம்.

**கட்டுரை வினா**

இவ்வினாக்களின் மூலம் மொழிப்பாடத்தில் மொழிநடை, கருத்துவளம், கருத்துகளின் வைப்புமுறை ஆகியவற்றை மதிப்பிட இயலும். ஒரு கருத்தைக் குறித்து முன்னுரை, பொருளுரை, முடிவுரை எனப் பிரித்து முறையாக எழுதுவதைத் தேர்ந்தறியும் வினாக்களே கட்டுரை வினாக்கள் ஆகும். சிலபோது மூன்று அல்லது நான்கு பத்திகளில் விடை எழுத வேண்டியிருக்கும்.

**நிறைகள்**

இவ்வகை வினாக்களைத் தயாரிப்பது எளிது. இதன்மூலம் குறிப்பிட்ட செய்தியினைத் தொகுத்து ஒழுங்குபடுத்தி எழுதுவதற்கு வாய்ப்பேற்படும். மாணவன் தன்மொழித் திறமையை மேலும் விரிவாக்கிச் சொல்லமைப்பு, பத்தியமைப்பு, கருத்துத் தொடர்ச்சி ஆகியவற்றில் பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்க வாய்ப்பு ஏற்படுகிறது. மாணவனின் சிந்தனைத் திறனையும் படைப்பாற்றல் திறனையும் அறியமுடியும்.

**குறைகள்**

பாடப்பொருளை நன்குபுரிந்து கொள்ளாத மாணவர்கூட ஒன்றிரண்டு வினாக்களுக்கு நன்கு விடையெழுதி அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்புண்டு. இவ்வகை வினாக்களை மதிப்பிடுபவர்களிடையே வேறுபாடுகள் காணப்படும். இதனால் நம்பகத்தன்மை இருக்காது. மதிப்பிடுவோரின் விருப்பு வெறுப்பு ஆகியவற்றால் உண்மைத்தன்மை மாறுபடக் கூடும். விடையளிக்க நேரம் அதிகம் தேவைப்படும்.

## 7. சிறந்த தேர்வின் பண்புகள்

நல்ல தேர்வின் இன்றியமையாப் பண்புகளாகக் குறிப்பிடப்படுவன:

- ஏற்புடைமை (Validity)
- நம்பகத்தன்மை (Reliability)

- புறவயப்பாடு (Objectivity)
- எளிமைப்பாடு (Simplicity)
- தர அளவுப்பாடு (Standardization)
- சமன்பாடு (Equity)
- ஒருமைப்பாடு (Uniformity)
- பயன்பாடு (Applicable)

**ஏற்புடைமை அல்லது முறைமைத் தகுதிப்பாடு**

அளந்தறியப்படும் பண்பினைச் சரியாகத் துல்லியமாக அளவிட ஒரு சோதனை உதவுமாயின், அது ஏற்புடைமை உடையதெனலாம்.

எந்த நோக்கத்திற்காக வினா தயாரிக்கப்பட்டதோ அந்நோக்கம் நிறைவேறும்வகையில் அமையவில்லையென்றால், அவ்வினா ஏற்புடைமையற்றது எனப்படும். ஏற்புடைமை பெற்ற வினாவானது சோதிக்கப்படும் பண்பினைத் தவிர வேறு எப்பண்பினையும் அளவிடாது. எடுத்துக் காட்டாகச் சொல்திறனைச் சோதிப்பதற்காகத் தயாரித்த சோதனை, அத்திறனை மட்டும் சோதிக்க வேண்டுமேயன்றி எண்ணாற்றல், சொல்வேகம் போன்ற திறன்களைச் சோதிப்பதாய் இருந்தால், அச்சோதனை ஏற்புடையதன்று. எனவே, ஏற்புடைமை பெற்ற சோதனையானது சோதிக்கப்படும் பண்பினை மட்டும் அளவிடவேண்டும்.

**நம்பகத்தன்மை**

ஒரு குறிப்பிட்ட பண்பினை ஒருதேர்வு எத்தனைமுறை அளந்தறிந்தாலும் மாறாத முடிவுகளைக் கொடுக்குமானால். அதனை அத்தேர்வின் நம்பகத்தன்மை என்கிறோம். சோதனை ஒன்றை ஒரு குறிப்பிட்ட மாணவர் குழுவிற்கு மீண்டும்மீண்டும் கொடுத்தாலும் அளிக்கும் விடைகளின் தன்மையும் மதிப்பெண்களும் மாறாது இருந்தால், அதுவே நம்பகத்தன்மையாகும்.

**நம்பகத்தன்மையை அறியும் முறைகள்**

**அ) தேர்வு - மறுதேர்வு முறை (Test-Retest method)**

ஒரே தேர்வினை மறுபடியும் இடைவெளிவிட்டு நடத்திக் கிடைத்த மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஏறத்தாழ ஒரே மதிப்பெண் இருந்தால் மாணவர்களின் தேர்வு நம்பகத்தன்மை கொண்டிருக்கிறது எனக் கருதலாம். ஆனால், மறுதேர்வு நடத்த இடைவெளி அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளல்வேண்டும்.

**ஆ) இணைத்தேர்வு முறை (Paralled Forms Method)**

ஒரே பாடத்தில், ஒரே நோக்கத்தில், ஒரே தன்மையான இரண்டு வினாத்தாள்களை ஒரே மாணவர் குழுவிற்கு, ஒரே காலக் கட்டத்தில் கொடுத்துச் சோதிக்கவேண்டும். மதிப்பெண் மாறாது இருந்தால், அத்தேர்வு நம்பகத் தன்மை உடையது எனக் கருதலாம்.

**இ) வெட்டுப் பகுப்புமுறை (Split-half method)**

ஒரு பாடப்பகுதிக்குரிய வினாத்தாளினை இரு பகுதிகளாக வெட்டிப் பகுத்து, இரண்டையும் தனித்தனியாக மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டும். பிறகு, முன்னர்க் கொடுத்த வினாக்களை மாணவர்களுக்கு முறைமாற்றிக் கொடுத்து, அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்த்து, ஒரே மாதிரி மதிப்பீடு இருந்தால், நம்பகத்தன்மை இருப்பதாக உறுதி செய்யலாம்.

**புறவயப்பாடு (Objectivity)**

மதிப்பீட்டாளரின் விருப்பு வெறுப்புகள், உள்ளுணர்வுகள், தன்னுணர்ச்சி, ஒருபுறச் சார்பு ஆகியவைகளால் எத்தனைமுறை எத்தனை தேர்வர்கள் மதிப்பீடு செய்தாலும் மதிப்பெண் மாறாமல் இருக்கும் நிலையைப் புறவயப்பாடு என்பர்.

புறவயப்பாடு சிறப்பாக அமைய, புறவயப்பட்ட வினாக்கள் மட்டுமே இடம்பெறச் செய்தல் வேண்டும். மதிப்பெண் தெளிவாகச் சுட்டப்படல்வேண்டும. திட்டமிடப்பட்ட விடைக்குறிப்பு தருதல் வேண்டும்.

### எளிமைப்பாடு

தேர்வு அமைப்பு எளிமையானதாக இருத்தல்வேண்டும். மாணவர்கள் விரைவாகவும் துல்லியமாகவும் இயல்பாகவும் எழுதும்வகையில் வினா வடிவமைப்பு இருத்தல்வேண்டும். ஆசிரியர்கள் மதிப்பிடுவதற்கு ஏற்றவகையில் எளிமையாக அமைதல்வேண்டும். இத்தகைய அமைப்புக்கொண்ட வினாக்களை எளிமைப்பாடு கொண்டது எனலாம்.

### தர அளவுப்பாடு

மாணவர்களிடையே பல்வேறு சமயங்களில் பிற பள்ளிகளில், பல்வேறு தேர்வாளர்களால் கேட்கப்பட்ட வினாக்களைத் தொகுத்து, ஒப்புநோக்கித் தேர்ந்தெடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தர அளவுப்பாடு வினாக்கள் எனப்படும். ஒரே தர வகுப்பில் பயிலும் பல்வேறு பள்ளிகளின் மாணவர்கள் ஒரே மாதிரியாக விடை எழுதக்கூடிய வினாக்களே தர அளவுப்பாட்டு வினாக்கள் ஆகும்.

### சமன்பாடு

மாணவர்களில் வேகமாகக் கற்போர், மெதுவாகக் கற்போர், சராசரியாகக் கற்போர் ஆகிய மூவகையினருக்கும் ஏற்றவகையில் சமமாக எழுதுவதற்கு வாய்ப்பளிக்கும் முறையில் அமையும் வினாத்தாளைச் சமன்பாடு உடையதெனலாம்.

### ஒருமைப்பாடு

பாடப்பகுதியின் அனைத்துப் பகுதியிலிருந்தும் சமமான மதிப்பெண் அமையுமாறு வினாத்தாள் கொடுப்பதையே ஒருமைப்பாடு என்கிறோம். வினாத்தாள் இவ்வகையில் அமைக்கும்போது மாணவர்கள் எந்தவொரு பாடப்பகுதியையும் விட்டுவிடாது, விலக்காது படிக்க வாய்ப்பு ஏற்படும்.

### பயன்பாடு

தேர்வு நடத்தும் முன் எந்த நோக்கத்திற்காகத் தேர்வு நடத்தப்படுகிறது என்பதைத் திட்டமிட்டு, அந்நோக்கம் நிறைவேறும் வகையில் தேர்வு அமைக்கவேண்டும். ஒரு தேர்வு, மாணவருக்கும் ஆசிரியருக்கும் பயனளிக்கும் வகையில் அமைவதே அத்தேர்வின் பயன்பாட்டுத் தன்மையாகும்.

## 8. வினாத்தாள் அமைக்கும் முறை

வினாத்தாள் நன்கு திட்டமிட்டுத் தயாரித்தால் சரியான விடைகளும் மதிப்பெண்களும் கிடைக்கும். வினாத்தாள் அறிதல் (Knowledge), புரிதல் (Understanding), பயன்படுத்துதல் (Application,) வெளியிடல் (Expression), பாராட்டுதல் (Appreciation) முதலிய கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

### அறிதல்

அறிதல் என்பது கற்ற ஒன்றை நினைவில் நிறுத்தும் திறனாகும். கற்பிப்பின்வழி, கற்போர் நினைவிலிருந்து விடையளிக்கத் தக்கவகையில் அமைக்கப்படும் வினாக்களாகும்.

எடுத்துக்காட்டு: சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

### புரிதல்

ஒரு செய்தியின் தன்மைபற்றிய அறிவுநிலை புரிதல் ஆகும். பாடலுக்குப் பொருள் சொல்லுதல், கருத்துரை அமைத்தல், சொல் நயம், பொருள் நயம் உரைத்தல், மொழி பெயர்த்தல்

முதலியன புரிந்துகொள்ளல் என்னும் திறனால் வெளிப்படும்.

எடுத்துக்காட்டு: ‘நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ எனும் பழமொழி கூறுவது யாது?

நாலடியாரும் திருக்குறளும் சிறந்த கருத்துகளைத் தருவன என்பதை மாணவருக்குத் தெரிவிக்கும்போது செய்தியறிவு கிடைக்கிறது. நான்கு அடிகளைக் கொண்டது நாலடியார், இரண்டு அடிகளைக் கொண்டது திருக்குறள் எனத் தெரியும் அறிவுநிலை புரிதல் ஆகும்.

**பயன்படுத்துதல் அல்லது ஆளல்**

பெற்ற அறிவைப் பிறிதொரு சூழலில் எடுத்தாளுவதே பயன்படுத்துதல் ஆகும். எதிர்கொண்ட சிக்கலைக் கூர்ந்து கவனித்து அதிலுள்ள கூறுகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப மாற்றியமைத்தோ வகைப்படுத்தியோ தீர்வுக்குரிய பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி அச் சிக்கலை விடுவிப்பது பயன்படுத்துதல் திறனாகும்.

மொழிப்பாடத்தில் சொற்பொருள் நுட்பம், இலக்கண விதிகளைப் பயன்படுத்தி முன்பு அறியாத சொல் அல்லது தொடரைப் பிரித்துக் காட்டுதல், நிகழ்ச்சி அமைப்பு வரிசையில் முறைமைகளைக் கண்டறிதல் முதலியன இவ்வகையில் அடங்கும்.

**வெளியிடல்**

இலக்கியம் கருத்தைக் குறிப்பாகவும் சுவையாகவும் உரைக்கும் பாடமாகும். பாடத்தின் கருத்து, கற்பனை, உணர்ச்சி, சொல்நயம், பொருள் நயம், சொல்லாட்சி, தொடராட்சி முதலிய கருத்துகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துதல் வெளியிடல் திறனாகும்.

**பாராட்டுதல்**

பாராட்டுதல் என்பது மொழிப்பாடத்தின் சிறப்புக் கூறாகும். படைப்பின் ஆழ்பொருளைக் கண்டு தான் இன்புற்று அதனைப் பாராட்டுதல் ஆகும்.

எடுத்துக்காட்டு: ‘இட்டஅடி நோக எடுத்தஅடி கொப்பளிக்க’ என்ற பொழுது சொல்லாட்சியைப் பாராட்டுதல். ‘கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா’ என்றபொழுது அதன் உருவக நிலையைப் பாராட்டுதல் ஆகும்.

## 9.வினாத்தாள் தயாரிக்கும் முறை

தேர்விற்குரிய வினாத்தாளை உருவாக்கும்பொழுது எவையெவை எப்படி மேற்கொள்ளப் படவேண்டும் என்னும் வழிகாட்டுதலை உணர்த்தும் வடிவமைப்பு கேள்வித்தாள் வரைவு அல்லது வினாத்தாள் வடிவமைப்பு (Blue-print) எனப்படும்.

**ஆசிரியர் கவனத்திற் கொள்ளத்தக்கவை:**

- தேர்வு நடத்தவிருக்கும் பாடப்பகுதியை வரையறுத்தல்.
- காலமும் மதிப்பெண்ணும் தருதல்.
- பாடப்பகுதிகளுக்கேற்ற நோக்கங்களைக் குறிப்பிடுதல்.
- தேர்வில் இடம்பெறும் வினா வகைகளை முடிவு செய்தல்.
- வினா வகைகளுக்குரிய மதிப்பெண் வழங்குதல்.
- வினா நிலைகளில் கவனஞ் செலுத்துதல்.
- வினாத்தாளைச் செம்மையாகத் தயாரித்தல்.
- வினா வடிவமைப்புத் தயாரித்தல்.
- விடைக்குறிப்பு எழுதுதல்.
- விடைகளுக்கு மதிப்பெண் வழங்குதல்.
- வினாவைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய குறிப்பு வழங்குதல்.

முதலியவற்றை வினாத்தாள் வடிவமைக்கும்போது ஆசிரியர் மனத்திற் கொள்ளவேண்டும்.

## 10. வினாத்தாள் வடிவமைப்பு

மாதிரி வினா வடிவமைப்பின் படிநிலைகள் தமிழ்ப்பாடத்தைப் பொருத்தவரை ஐந்தாம் வகுப்பில் உரைநடை, செய்யுள், இலக்கணம், துணைப்பாடம் என்னும் பகுதிகள் அமையும். தொடக்க வகுப்புகளில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், மொழியை ஆளுதல் என்னும் பகுதிகள் அமையும். பாட வகைகளுக்கேற்ப மதிப்பெண் தரவேண்டும்.
எடுத்துக்காட்டாக,

| | | |
|---|---|---|
| செய்யுள் | - | 30% |
| உரைநடை | - | 50 % |
| இலக்கணம் | - | 10% |
| வாய்மொழி | - | 10% |
| மொத்தம் | - | 100 |

இங்கு மதிப்பெண் வழங்குவது என்பது ஆசிரியரே முடிவு செய்வதாகும்.

ஐந்தாம் வகுப்பில் மாணவர்களின் மொழித்திறனை வளர்ப்பதற்காகப் பதினெட்டுப் பாடங்கள் உரைநடைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. உரைநடைப் பாடங்களின் இறுதியில் இலக்கணம் இடம்பெற்றுள்ளது. செய்யுட் பகுதி மிகக் குறைந்த அளவே இடம்பெற்றுள்ளது. எனவே, உரைநடைப் பகுதிக்கு அதிக மதிப்பெண்களும் அடுத்தபடியாகச் செய்யுட் பகுதிக்கும், இலக்கணத்திற்கும் மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கேட்டல், பேசுதல், படித்தல் திறனைச் சோதிக்கும்பொருட்டு வாய்மொழித் தேர்வுக்கு மதிப்பெண் ஒதுக்கப்பட்டுள்ளது. வாய்மொழித் தேர்வுக்குரிய மதிப்பெண்ணைத் தேர்வின்போது அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவது கடினம். அவ்வப்போது சோதனை செய்து வழங்கிய மதிப்பெண்ணின் சராசரியை எடுத்துக் கொள்ளலாம்.

### காலமும் மதிப்பெண்ணும்

தேர்வுக்குரிய மதிப்பெண்ணையும் காலத்தையும் ஆசிரியரே நிருணயிக்கிறார்.

### நோக்கங்களைக் குறிப்பிடுதலும் மதிப்பெண் வழங்குதலும்

| | | |
|---|---|---|
| அறிதல் | - | 20 % |
| புரிதல் | - | 20% |
| பயன்படுத்துதல் | - | 30 % |
| திறன் | - | 20 % |
| வாய்மொழித்திறன் | - | 10% |
| மொத்தம் | - | 100 |

இங்கும் நோக்கங்களுக்கேற்ற மதிப்பெண் ஆசிரியருக்கேற்ப மாறுபடும்.

### வினா வகைகளை உறுதிசெய்து மதிப்பெண் வழங்குதல்

மொழிப்பாடத் தேர்வுகளில் பெரும்பாலும் புறவய வினா, குறு வினா, கட்டுரை வினா என அமையும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எடுத்துக்காட்டு: | புறவய வினா | - | 40 % | (அ) | 30 % |
| | குறு வினா | - | 40 % | (அ) | 40 % |
| | கட்டுரை வினா | - | 20% | (அ) | 30 % |

**வினா நிலைகள்**

ஒரு தேர்வில் எளிய, சுமாரான, கடின நிலை வினாக்கள் கலந்தளிக்கப்படவேண்டும்.

**வினா வடிவமைப்புத் திட்டம் தயாரித்தல்**

முடிவு செய்யப்பட்ட அனைத்தும் வினா வடிவமைப்புத் திட்ட அட்டவணையாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.

**வினாத்தாள் எழுதுதல்**

வினாத்தாள் உரிய படிவத்தில் செம்மையாக எழுதப்படவேண்டும்.

**கவனிக்கப்பட வேண்டியவை:**

- பலவுள் தெரிதலில் நான்கு விடைகள் தருதல்வேண்டும்.
- கோடிட்ட இடம் நிரப்புதலில், நிரப்பும் பகுதி வினாவின் இடையில் அமையவேண்டும்.
- பொருத்துக வகையில் ஒருபுறம் குறைவாகவும் மறுபுறம் அதாவது விடைக்குறிப்பு வகையில் ஒன்றிரண்டு விடைகள் அதிகமாக அமையவேண்டும்.

**விடைக்குறிப்பு**

வினாவைத் தயாரிக்கும் ஆசிரியரே விடைக்குறிப்பும் தயாரிக்கவேண்டும். புறவய வினா விடையையும் குறுவினா விடை வகையையும் அப்படியே எழுதவேண்டும. கட்டுரை வினாவிற்கு முக்கியமான செய்திகளை மடும் சுட்டவேண்டும்.

## 11. வினாத்தாள் திட்ட வரைவு

திட்ட வரைவின் அடிப்படையில் தயாரிக்கப்படும் வினாத்தாளில் மொத்த வினாக்கள் 32. அவற்றுள்,

| | | |
|---|---|---|
| ஒரு மதிப்பெண் உடைய புறவய வினாக்கள் | - | 20 |
| இரண்டு மதிப்பெண்கள் உடைய குறுவிடை வினாக்கள் | - | 10 |
| மூன்று மதிப்பெண்கள் உடைய கட்டுரை வினா | - | 2 |

வினாத்தாளில் வினா எண்கள் ஒன்றுமுதல் முப்பத்திரண்டு வரை புறவய வினாக்களும் இருபத்தொன்றுமுதல் முப்பதுவரை குறுவிடை வினாக்களும் முப்பத்தொன்று, முப்பத்திரண்டு கட்டுரை வினாக்களும்அமைந்து வரும்.

ஐந்தாம் வகுப்பிற்கு வினாத்தாள் தயாரிப்பதற்கான திட்டவரைவும், மாதிரி வினாத்தாளும் எடுத்துக்காட்டாக ஈண்டுத் தரப்பட்டுள்ளன. மாணவ ஆசிரியர்கள் இவற்றை நன்காய்ந்து வினாத்தாள் திட்டவரைவு தயாரிக்கலாம்.

திட்ட வரைவின் அடிப்படையில் தயாரிக்கப்படும் வினாத்தாளில் மொத்த வினாக்கள் 40. அவற்றுள், ஐந்து மதிப்பெண் வினாவிற்குக் கூடுதலாக மூன்று வினாக்கள் தெரிநிலை வினாக்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஒரு மதிப்பெண் உடைய புறவய வினாக்கள் | - | 25 |
| ஐந்து மதிப்பெண்கள் உடைய குறுவிடை வினாக்கள் | - | 11 |
| பத்து மதிப்பெண்கள் உடைய கட்டுரை வினா | - | 1 |

வினாத்தாளில் வினா எண்கள் ஒன்றுமுதல் இருபத்தைந்துவரை புறவய வினாக்களும் இருபத்தொன்றுமுதல் முப்பத்தொன்பதுவரை குறுவிடை வினாக்களும், நாற்பதாவது கட்டுரை வினாவாகவும் அமைந்து வரும்.

கற்பித்தல் பயிற்சியின்போது மேற்கொள்ளும் அலகுத் தேர்வுக்கு வினாத்தாள் திட்டவரைவு தயாரித்து, அதற்குரிய வினாத்தாளை அமைக்க.

## 12. மாதிரி வினாத்தாள்

### ஐந்தாம் வகுப்பு
### தமிழ்

**நேரம் : 2.00 மணி** **உச்ச மதிப்பெண்கள்: 100**

**அ) பிரித்தெழுதுக.** **1 x 25 = 25**

1. கூத்தாட்டுவான் : ------------------------------
2. சிறிதெனினும் : ------------------------------
3. இழுதாவர் : ------------------------------
4. சிற்றூர் : ------------------------------
5. வெங்காரம் : ------------------------------

**ஆ) சேர்த்தெழுதுக.**

6. பழமை + காலம் ; ------------------------------
7. கருமை + இருள் : ------------------------------
8. வேற்றுமை+இன்றி: ------------------------------
9. உலகு + அளாவிய : ------------------------------
10. உயிர் + ஓட்டமான : ------------------------------

**இ) சரியான பொருளை எழுதுக.**

11. அரங்கு : -------------------------------------
12. அம்புலி : -------------------------------------
13. நானிலம் : -------------------------------------
14. கேளிர் : -------------------------------------
15. சேவை : -------------------------------------

**ஈ) தடித்த சொல்லுக்குரிய எதிர்ச்சொல்லால் கோடிட்ட இடத்தை நிரப்புக:**

16. கணினிமூலம் ------------கணக்குகளையும் **எளிதாகச்** செய்யலாம்.
17. மழைபெய்து **முடிந்ததும்** தலைவர் பேசத் ---------------------
18. இந்திய மக்கள் **வேற்றுமை**யின்றி ---------------- வாழவேண்டும்.

19. நீங்களோ மிகவும் **நல்லவர்** அவரோ மிகவும் -----------------.
20. சூரியகாந்தி ---------மலர். முல்லை **சிறிய** மலர்.

**உ) பொருள் வேறுபாடு எழுதுக.**

21. மரம் --------------- மறம் ----------------
22. அரிய -------------- அறிய ---------------
23. பனை ------------- பணை --------------
24. கலம் -------------- களம் ----------------
25. மனம் -------------- மணம் ---------------

**ஊ) அடி பிறழாமல் எழுதுக.** **2 1/2 x 2 = 5**

26. 'மிகுதியான்', 'எல்லார்க்கும்' எனத் தொடங்கும் திருக்குறள்கள்.
27. 'இனியவர்' எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கம். **1 x 5= 5**

**எ) எவையேனும் ஒன்பது வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 9 x 5= 45**

28. துறைமுகத்தைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
29. குமணன், புலவருக்கு ஆசனம் அளித்து அமரச் சொன்னவுடன் புலவர் வாழ்த்திக் கூறியன யாவை?
30. பல்கலைக்கழகங்கள் டாக்டர் இராதாகிருஷ்ணனை எவ்வாறு பாராட்டிப் பெருமைப் படுத்தின?
31. பூம்பொழில் நாட்டின் சிறப்பை விளக்குக.
32. கற்றறிந்தோர் குணமாகச் சிவப்பிரகாசர் கூறுவது யாது?
33. நல்லவர் தீயவர் பேச்சுக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?
34. எது அறிவுடைமையாகும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
35. பால் எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
36. 'வாணி இலக்கணம் பயின்றாள்' இச்சொற்றொடரிலிருந்து எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை எடுத்து எழுதுக.
37. அறிவுநம்பி, தன்செயலுக்கு மன்னனிடம் கூறிய விளக்கம்யாது?
38. பின்வரும் பகுதியை உரிய நிறுத்தக் குறியுடன் எழுதுக.

    "ஓகோ இந்தப் புதுமையான குரலொலி இதனுடையதுதானா இதற்கா நாம் அஞ்சி நடுங்கினோம் இறங்கி வா நாம் போய் அதை விசாரிப்போம் என்றது"

39. 'நாடு நலம்பெற' - பாடப் பகுதியில் மன்னன் அமைச்சரையும் அறிஞரையும் நாடு கடத்திவிட்டான்... அதனால் நாட்டின் நிலை என்னவாகி இருக்கும்? சிந்தித்து எழுதுக.

**ஏ) கீழுள்ள வினாவுக்கு இரு நூறு சொற்களுக்கு மிகாமல் எழுதுக. 1 x 10 = 10**

37. உன் ஊரில் நடைபெறும் விழாவிற்கு விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு விண்ணப்பம் எழுதுக.

அல்லது

நீ கண்டு களித்த இடம்பற்றிக் கட்டுரை வடிவில் எழுதுக.

## 13. மதிப்பீடு பற்றிய இந்தியக் கல்விக்குழுவின் பரிந்துரைகள்

- மதிப்பீடு என்பது தொடர்ச்சியாகவும் கல்விக்குறிக்கோள்களை அளப்பதாகவும் அமைதல் வேண்டும்.
- தொடக்கக் கல்வியின் மதிப்பீடு மாணவனின் அடிப்படைத் திறன்களையும் நன்னடத்தை யினையும் வெளிக்கொணரும் வகையில் அமைதல்வேண்டும்.
- நடுநிலை வகுப்புகளில் எழுத்துத் தேர்வுடன், வாய்மொழித் தேர்வுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.
- குறையறிச்சோதனை முக்கிய இடத்தைப் பெறுதல் வேண்டும்.
- வினா வகைகள் பலதரப்பட்டதாக இருத்தல்வேண்டும்.
- தொடக்கக் கல்வி நிலையில் பள்ளி மதிப்பீட்டுமுறைமூலம் மாணவர்களின்அடைவைச் சோதித்து அறிய வேண்டும்.
- மாவட்ட அளவிலான தேர்வு நடத்தித் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் திறன் அடைவைச் சோதித்தறிய வேண்டும்.
- பள்ளிகளில் அகமதிப்பீட்டுச் சோதனை தொகுப்புமுறையில் அமைக்கப்பட்டுப் பொதுத்தேர்வு மதிப்பெண்களும் தனித்தனியே வழங்கப்படுதல் வேண்டும்.

## தொகுப்புரை

இவ்வியலில் அளவிடுதல், மதிப்பிடுதல் பற்றித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மதிப்பீட்டின் வகைகளும் பயன்களும் விளக்கப்பட்டுள்ளன. அகமதிப்பீட்டின் தேவையும் தொடர்ச்சியான மதிப்பீட்டின் தேவை குறித்தும் விரித்துரைக்கப்பட்டன. திறன்களை மதிப்பிடுதல் குறித்த விளக்கம் திறன்வாரியாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

தேர்வின் வகைகளும் நல்ல தேர்வின் பண்புகளும் சுட்டப்பட்டுள்ளன. ஆசிரியர் வினாத்தாள் தயாரிப்பதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டுள்ளன.

வினாத்தாள் தயாரிப்புமுறைகள், வினாத்தாள் திட்டவரைவு தயாரித்தல், திட்ட வரைவுக்கு ஏற்ற வினாத்தாள் தயாரித்தல் முதலியனபற்றிய விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன.

# பின்னிணைப்பு - 1

## தமிழ்மொழி கற்பித்தல்
## மாதிரி வினாத்தாள் - 1

**காலம்: 3 மணி** **உச்ச மதிப்பெண்கள்: 100**

### பகுதி - அ

**I) ஒவ்வொரு வினாவுக்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 10x2=20**

1. ‘தானங்கொடுக்கும்’ - இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதியை எழுதுக.
2. ‘கேட்டார்ப் **பிணி**க்கும் தகையவாய்க் கேளாரும்
   வேட்ப மொழிவதாம் சொல்’
   - ‘பிணி’ எனும் சொல் தரும் பொருள்களைக் கூறி, இக்குறட்பாவில் இச்சொல் எத்தகைய பொருளைத் தருகிறது என்பதை விளக்குக.
3. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
   கானகத்துக் கவினைக் கானகத்திலன்றி வேறெங்கும் காணல் இயலாது. எத்தனை வடிவான இலைகள்! எத்தனை நிறமான மலர்கள்! எத்தனை சுவையான காய்கள்! எத்தனை இனிப்பான பழங்கள்! அம்மம்ம! கானகங்களின் அடர்ந்துயர்ந்த தோற்றத்தைக் காண்கையில் உள்ளமும் உயர்ந்து மேலுயர்ந்து செல்கின்றது.
   1. இப்பத்தியின் மையக் கருத்து யாது?
   2. இப்பத்தியில் இடம்பெறும் அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.
4. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
   சான்றோர் பழிக்கும் வினை.
   - இக்குறட்பாவின் நயத்தை விளக்குக.
5. தெரிநிலை வினைமுற்றை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
6. ‘வெற்றிலை போட்டான்’ - விளக்குக.
7. நகர்ப்புறம் என்பதைப் புறநகர் என்பது எத்தகைய தன்மையது என்பதை விளக்க மேலும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
8. ‘இருபெயரொட்டுப் பண்புத்தொகை’ - எவ்வாறு அமைந்துவரும் என்பதை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.
9. **பொற்குடம்** - என்பதைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
10. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
    நாகம் உயிர்ப்பக் கெடும்.
    - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

**II) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இரு நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 5x4=20**

11. பேச்சாற்றலை வளர்க்கப் பின்பற்ற வேண்டியவை யாவை?
12. சிறுகதை எழுதும் திறனை வளர்க்க எத்தகைய செயல்களை மேற்கொள்ளவேண்டும்?
13. கீழுள்ள பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
    ‘முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும் பாசிமூடிய பவளத்தின் நிறமும், பாசியில் மறைந்த பவளத்தின் நிறமும், பாசியில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்போல் நம்மை மூடிக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டுள்ளோம்.’
    1. இப்பத்தியில் அமைந்துள்ள உவமைகளை எடுத்தெழுதுக.
    2. இப்பத்தியில் இடம்பெறும் அருஞ்சொற்களை எடுத்தெழுது.

14. கீழுள்ள பகுதியைப் படித்து உரை நயத்தை எழுதுக.

‘மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் கருவியாகவும் உள்ளது. பெற்றதாயின் முதல் வேட்கை தன் குழந்தையிடம் பேசுதல்; அவள் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும்.

15. கற்குறை, சொன்னயம் - இச்சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதியை விளக்குக.

16. தோன்றல், திரிதல், விகாரம்- இம்மூன்றும் மொழி மூவிடத்தாகும். இந்நூற்பாவை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

17. ‘இது பொறுப்பதில்லை; தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்’

- இப்பாடல் வரி உணர்த்தும் நயத்தை விளக்குக.

18. ‘காண்டகு, சேவடி - இச்சொற்களை எங்ஙனம் பிரித்து விளக்குவாய்?

## பகுதி - ஆ

**III) கீழுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் நூறு சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.**
**10 x 2 = 20**

19. அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்துஞ் சொற்களஞ்சியம் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பினை எழுதுக.
20. பாட ஏற்பாடு வரையறுக்க.
21. விதி விலக்கு அறியாமையால் ஏற்படும் பிழைக்கு இரண்டு எடுத்துக்காட்டுத் தருக.
22. மென்பொருள் - விளக்குக.
23. பேச்சுத்திறன் - வரையறுக்க.
24. அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்தும் சொற்களஞ்சியம் - விளக்குக.
25. இணைமொழிகள் சொற்களஞ்சியம் பெருக்க எவ்வாறு உதவுகின்றன?
26. தவறு - பிழை இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுக.
27. கற்றலில் பிழையின் இடம் யாது?
28. அளவிடுதல் என்றால் என்ன?

**IV) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இரு நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.** **5 x 4 = 20**

29. நல்ல பாடத்திட்டத்தின் கூறுகள் யாவை?
30. கணிப்பான் மொழிகளை விளக்குக.
31. கணினிவழி மொழிக்கல்வி பெறுவது குறித்து எழுதுக.
32. தாய்மொழிக் கற்பித்தலில் மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் பங்கினை விளக்குக.
33. கருத்தரங்கில் பங்கேற்பதற்கான திறன் குறித்தெழுதுக.
34.சொற்களஞ்சியப் பெருக்கும் உத்திகள் எவையேனும் நான்கினைச் சான்றுடன் விளக்குக.
35. ஒப்புமையாக்கப் பிழைகளைச் சான்றுடன் விளக்குக.
36. உடம்படுமெய் பிழையைத் தவிர்க்க எத்தகைய பயிற்சிகளை வழங்குவீர்?

**V) ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.**
**2 x 10 = 20**

37. படைப்பாற்றல் திறனை வளர்க்க மேற்கொள்ள வேண்டிய செயல்கள் குறித்தெழுதுக.

அல்லது

கணினி வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

38. புறவயத் தேர்வின் நிறை குறைகளை விளக்குக.

அல்லது

பாட ஏற்பாட்டின் இயல்புகளைத் தொகுத்துக் கூறுக.

*****

## பின்னிணைப்பு -2

## தமிழ்மொழி கற்பித்தல்
## மாதிரி வினாத்தாள் - 2

**காலம்: 3 மணி** **உச்ச மதிப்பெண்கள்: 100**

## பகுதி - அ

**I) ஒவ்வொரு வினாவுக்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 10x2=20**

1. 'பொருணீங்கிய' - இசசொல்லைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.
2. 'னல முன் றனவும் ணளமுன் டணவும்' - இந்நூற்பாவை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
3. பாவின் நலமெல்லாம் யானும் பகரவல்லேனோ?
   ஆவின் பாற்சுவையை நாழி அளந்து காட்டுமோ?
   - இச்செய்யுள் உணர்த்தும் நயத்தை விளக்குக.
4. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
   'உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம்; ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது!
   - இப்பத்தியின் மையக் கருத்து யாது?
   - இப்பத்தியில் இடம்பெறும் அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.
5. 'செத்தாரைத் துஞ்சினார்' - இது எவ்வகை வழக்கு என்பதை விளக்கி, இரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.
6. வினைத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
7. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
   - இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.
8. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
   அவையகத்து அஞ்சா தவர்.
   - இக் குறட்பா உணர்த்தும் கருத்தை உரைநடைப்படுத்துக.
9. தொடக்கநிலைப் பேச்சாளர் பேச்சுத்திறனை வளர்க்கப் பின்பற்ற வேண்டியவை யாவை?
10. ஒன்பான் சுவைகளை விளக்குக.

**II) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இரு நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 5x4=20**

11. நல்ல கவிதையின் பண்புகளாக அறிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.
12. கதை எழுதுவதற்கு முன்னோடிச் செயல்களாகப் பின்பற்ற வேண்டியவை யாவை?
13. பின்வரும் பகுதியின் நடைச்சிறப்பை விளக்குக.
    'மனம் என்பது பெரும்பாலும் மொழியால் அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.'
14. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

    'வெள்ளத்தால் அழிந்துபோவதும் வெந்நெருப்பால் வெந்துபோவதும் அரசர்களாற் கைப்பற்றப்படுவதும் கொடுக்கக் கொடுக்கக் குறைந்துபோவதுங் கள்வர்க்காக நம்மை அஞ்சுவிப்பதும் பாதுகாப்பதற்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதுமான இச்செல்வம் நம்மால் எந்நேரமும் விரும்பத்தக்கதன்று.
    1. இப்பகுதியின் மையக் கருத்து யாது?
    2. எது விரும்பத்தக்கதன்று?
    3. இப்பத்தியில் அமைந்துள்ள அருஞ்சொற்கள் யாவை?
15. மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
    வன்மைக்கு இனமாத் திரிபவு மாகும். - இந்நூற்பாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
16. முட்குறை, பொருணயம் - இச்சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
17. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

“ஓரறிவுடைய புட்பூண்டுகள்முதல் ஆறறிவுடைய மக்களீறான பலகோடி உயிர்களுள் மக்கட் பிறவியே சிறந்ததென்பது எல்லார்க்குந் தெரிந்த உண்மையன்றோ? ஏனெனில், ஆறாவதான பகுத்தறிவு மக்கட் பிறவியெடுத்த உயிர்கட்குப் பேரளவினதாய் அமைந்தாற்போல ஏனைச் சிற்றுயிர்க்கு அமையவில்லை.”

1. இப்பத்தியின் மையக் கருத்து யாது?
2. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களை விளக்குக.
3. இப்பத்தி உணர்த்துஞ் செய்தி யாது?

18. பின்வரும் பத்தியைப் படித்து உரைச்சிறப்பை விளக்குக.

“உழைக்காமல் உயிர்வாழ எவருக்கும் உரிமை இருக்கக் கூடாது. திருடன் உழைக்காமல் பிறருடைய உழைப்பின் பயனைப் பெற்று வாழ்கிறான். அதனால்தான் அவன் சமுதாயத்தால் வெறுக்கப்படுகிறான். எதிர்காலத்தில் உழைக்காமல் உயிர் வாழ்வோர் எவரும் வெறுக்கப்படுவர்.”

## பகுதி - ஆ

### III) கீழுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் நூறு சொற்களுக்குமிகாமல் விடையளிக்க. 10 X 2 = 20

19. பாடத்திட்டம் - வரையறுக்க.
20. ஒருபொருள் குறித்த பல சொற்களுக்கும் பலபொருள் குறித்த ஒருசொல்லுக்கும் எடுத்துக் காட்டுகள் தருக.
21. மாணவர்களிடத்தில் காணப்படும் எழுத்துப்பிழைகளைக் களைய எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீர்?
22. அவன் அதிகம் கோபங்கள் படமாட்டான் - இவ் வாக்கியத்தில் உள்ள பிழையைச் சுட்டிக் காரணத்தைக் குறிப்பிடுக.
23. எழுத்துப் பிழைகளெல்லாம் வரிவடிவப் பிழைகள் இல்லை. சான்று தருக.
24. ஒலியியல் தட்டச்சு என்றால் என்ன?
25. கணினிக் கல்வியின் இன்றியமையாமையை விளக்குக.
26. குழந்தைகளுக்கான இணையத்தளங்கள் ஐந்தனைக் குறிப்பிடுக.
27. கதைப்பாடல் விளக்கம் தருக.
28. புறவயத் தேர்வை உருவாக்கும்பொழுது பின்பற்றப்பட வேண்டியவை யாவை?

### IV) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இரு நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 5 X 4 = 20

29. பாடத்திட்டம், பாடநூல், ஆசிரியர் - தொடர்பினை விளக்குக.
30. வல்லெழுத்து மிகுதலின் தேவையை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
31. பலபொருள் தரும் ஒரு சொல்லைக்கொண்டு எவ்வாறு சொற்களஞ்சியம் பெருக்குவீர்?
32. குழந்தை இலக்கியம்பற்றி விளக்குக.
33. கற்பித்தலில் மென்பொருள் பயன்பாட்டினை விளக்குக.
34. விளையாட்டுமுறையில் எவ்வாறு சொற்களஞ்சியம் பெருக்குவீர்?
35. வேற்றுமையில் எவ்வாறெல்லாம் பிழைநேர வாய்ப்புள்ளது என்பதைச் சான்றுடன் விளக்குக.
36. இரட்டைப் பகுதி நாடாவின் பயன்பாட்டை விளக்குக.

### V) ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 2 X 10 = 20

37. பேச்சுத்திறன் வளர்க்கும் வழிமுறைகளை விவரிக்க.

அல்லது

பாடநூலின் பண்புகளை விவரிக்க.

38. தேர்வின் வகைகளை விளக்கி வரைக.

அல்லது

தமிழ் இணையப் பல்கலைக்கழகச் செயல்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

*****

## பின்னிணைப்பு - 3

## அகமதிப்பீட்டுச் செய்முறைப் பயிற்சி

**அகமதிப்பீட்டு மதிப்பெண்கள்: 25**

| வ. எண் | தலைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | முதல் வகுப்புமுதல் ஐந்து வகுப்புவரையுள்ள பாடநூல்களில் ஏதேனும் ஒன்றை மதிப்பீடு செய்தல் | 4 |
| 2. | சொற்களஞ்சியப் பெருக்கும் வழிமுறைகள் - தொகுப்புத் தயாரித்தல் | 4 |
| 3. | பாடப்பொருள் விளக்கம், இலக்கணங் கற்பித்தல் ஆகியவற்றிற்கான துணைக் கருவிகள் தயாரித்தல். | 4 |
| 4. | சொல் விளையாட்டுகள் தயாரித்தல். | 4 |
| 5. | குறிப்பிட்ட தலைப்பில் உரையாடுதல், பேசுதல் - பதிவு செய்தல். | 4 |
| 1. | குறிப்பிட்ட தலைப்புகளில் கவிதை எழுதுதல் (2) | 4 |
| 2. | குறிப்பிட்ட தலைப்புகளில் கதை எழுதுதல் (2) | 4 |
| 3. | ஐந்தாம் வகுப்பிற்கு அலகுத் தேர்வு நடத்துவதற்கான வினாத்தாள் திட்ட வரைவு தயாரித்தல். | 4 |
| 4. | கட்டுரை எழுதுதல் (4) | 4 |
| 5. | ஐந்தாம் வகுப்பிற்கு ஏதாவது ஒரு பாடத்திற்குக் கணினி நழுவங்கள் தயாரித்தல் (Power Point Presentation slides) | 4 |
| 1. | கருத்தரங்கு - இரண்டு தலைப்புகளில் நடத்துதல் - பதிவு செய்தல் | 20 |
| 1. | உள்நிலைத் தேர்வுகள் | 20 |
| 1. | வினாவங்கி தயாரித்தல்<br>அ) தமிழ் வளநூல் - பகுதி - அ) மொழித்திறன் வளர்த்தல்<br>ஆ) " - பகுதி - ஆ) ஏதேனும் ஓர் இயல் | 20 |
| | மொத்த மதிப்பெண்கள் | 100 |

**குறிப்பு: மொத்த மதிப்பெண்கள் 100 ஐ 25 மதிப்பெண்களுக்கு மாற்றுக.**

## பின்னிணைப்பு - 4
## பார்வை நூல்கள்


1. ஆறுமுக நாவலர், - நன்னூல் காண்டிகை உரை
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை.

2. இரத்தினசபாபதி, டாக்டர் பி. - கல்வியில் தேர்வு,
சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை - 14.

3. டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், - வளரும் தமிழ்,
அருணோதயம், சென்னை-14.

4. சுப்பு ரெட்டியார், ந., - கவிதையனுபவம்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை.

5. தேவிதாசன், டாக்டர் தி. - கவிதை எழுத வேண்டுமா?
திருமலர் பதிப்பகம்,
திருமுடி நகர், புதுச்சேரி-605 001.

6. நடராஜ பிள்ளை,ந. & விமலா, ச., - பிழை ஆய்வு - மொழி கற்பித்தலில் ஒரு புதிய பார்வை,
தென்னிந்திய மொழிகளின் பயிற்று மையம்,
மைசூர், 1981.

7. பரசுராமன், த. - பள்ளி மாணவர்களின் தமிழ்ப் பிழை ஆய்வு,
முத்து வெளியீடு,
புதுச்சேரி, 2005.

8. பரமசிவம், டாக்டர் சொ. - நற்றமிழ் இலக்கணம்,
பட்டுப் பதிப்பகம்,
அண்ணா நகர் மேற்கு, சென்னை-40.

9. பழனிவேலு, முனைவர் பி. - தமிழ் கற்பித்தலில் புதுமைப் போக்குகள்,
கபிலன் பதிப்பகம்,
ஒரத்த நாடு, 2005.

10. பொற்கோ, முனைவர் - தமிழில் நீங்களும் தவறில்லாமல் எழுதலாம்,
புதுவாழ்வுப் பதிப்பகம்,
சென்னை, 2000.

11. மணவை முஸ்தபா, - கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி,
மணவை பப்ளிகேஷன், சென்னை-40,

12 --- --- --- - தொல்காப்பியம் - செய்யுளியல்,
சேனாவரையருரை.
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை


*****

| **பின்னிணைப்பு - 2**<br>காலம்: 3 மணி நேரம் | **வினாத்தாள் - 1 திட்ட வரைவு, ஐந்தாம் வகுப்பு -தமிழ்**<br>**உச்ச மதிப்பெண்கள்: 100** | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாட அலகு/கற்பித்தல் நோக்கம் | அறிதல் (20) | | | புரிதல் (20) | | | பயன்படுத்துதல் (30) | | | திறன் (20) | | | மொத்தம் (90) | | |
| | **பு(1)** | **கு(5)** | **க(10)** | **பு(1)** | **கு(5)** | **க(10)** | **பு(1)** | **கு(5)** | **க(10)** | **பு(1)** | **கு(5)** | **க(10)** | **பு(1)** | **கு(5)** | **க(10)** |
| உரைநடை (50) | 10 | | | 5 | 1 | | 5 | 2 | | | 1 | 1 | 20 | 4 | 1 |
| செய்யுள் (30) | 5 | 1 | | | 1 | | | 2 | | | 1 | | 5 | 5 | |
| இலக்கணம் (10) | | | | | 1 | | | 1 | | | | | | 2 | |
| வாய்மொழி (10) | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் (100) | 15 | 1 | | 5 | 3 | | 5 | 5 | | | 2 | 1 | 25 | 11 | 1 |

**குறிப்பு:-** பு - புறவய வினா
கு - குறுவினா (100 சொற்களுக்கு மிகாமல்)
க - கட்டுரை வினா (200 சொற்களுக்கு மிகாமல்)
( ) - பிறைக்குறிக்குள் உள்ள எண்கள் மதிப்பெண்களைக் குறிக்கும்.
கட்டங்களுக்குள் உள்ள எண்கள் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்

| **பின்னிணைப்பு - 2** | **வினாத்தாள் - 1 திட்ட வரைவு** | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலம்: 3 மணி நேரம் | | | | | | | | | | | **உச்ச மதிப்பெண்கள்: 100** | | | | |
| பாட அலகு/கற்பித்தல் நோக்கம் | அறிதல் (20) | | | புரிதல் (20) | | | பயன்படுத்துதல் (30) | | | திறன் (30) | | | மொத்தம் (100) | | |
| | சி | ப | க | சி | ப | க | சி | ப | க | சி | ப | க | சி | ப | க |
| தமிழ்மொழித்திறன் (40) | 2 | 1 | 0 | 2 | 1(*1) | 0 | 4 | 1(*1) | 0 | 2 | 2(*1) | 0 | 10 | 5(*3) | 0 |
| பாட ஏற்பாடு (6) | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | (*1) | 1 | 1 | (*1) |
| சொற்களஞ்சியப்பெருக்கம்(10) | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 3 | 1 | 0 |
| உயர்நிலைத்திறன்கள் (12) | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | (*1) | 0 | 0 | 0 | 1 | 1 | (*1) | 1 |
| பிழைஆய்வும் குறைகளைதலும் (10) | 0 | 0 | 0 | 2 | (*1) | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 3 | 1(*1) | 0 |
| தமிழ் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பம் (10) | 1 | 1 | 0 | 0 | (*1) | 0 | 0 | 0 | (*1) | 0 | 1 | 0 | 1 | 2(*1) | (*1) |
| தேர்வும் மதிப்பீடும் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 |
| மொத்தம் (100) | 4 | 2 | 0 | 7 | 2(*3) | 0 | 7 | 2(*2) | 1(*1) | 2 | 4(*1) | 1(*1) | 20 | 10 (*6) | 2(*2) |

**குறிப்பு:-** சி - சிறுவினா (100 சொற்களுக்கு மிகாமல்) - மதிப்பெண்கள் - 2
ப - பத்தி வினா (200 சொற்களுக்கு மிகாமல் ) - மதிப்பெண்கள் - 4
க - கட்டுரை வினா (500 சொற்களுக்கு மிகாமல் ) - மதிப்பெண்கள் - 10
( ) - பிறைக்குறிக்குள் உள்ள எண்கள் மதிப்பெண்களைக் குறிக்கும்.
( *) - நட்சத்திரக் குறியீடு உள்ள எண்கள் தெரிவுநிலை வினாக்களைக் குறிக்கும்.
- கட்டத்திற்குள் உள்ள எண்கள் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

**பின்னிணைப்பு - 2** **வினாத்தாள் - 1 திட்ட வரைவு**

காலம்: 3 மணி நேரம் **உச்ச மதிப்பெண்கள்: 100**

| பாட அலகு/கற்பித்தல் நோக்கம் | அறிதல் (20) | | | புரிதல் (20) | | | பயன்படுத்துதல் (30) | | | திறன் (30) | | | மொத்தம் (100) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **சி** | **ப** | **க** | **சி** | **ப** | **க** | **சி** | **ப** | **க** | **சி** | **ப** | **க** | **சி** | **ப** | **க** |
| தமிழ்மொழித்திறன் (40) | 2 | 1 | 0 | 2 | 1(*1) | 0 | 4 | 1(*1) | 0 | 2 | 2(*1) | 0 | 10 | 5(*3) | 0 |
| பாட ஏற்பாடு (6) | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | (*1) | 1 | 1 | (*1) |
| சொற்களஞ்சியப்பெருக்கம்(10) | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 | 0 |
| உயர்நிலைத்திறன்கள் (12) | 1 | 0 | 0 | 0 | (*1) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | (*1) | 1 |
| பிழைஆய்வும் குறைகளைதலும் (10) | 1 | 0 | 0 | 1 | (*1) | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 3 | 1(*1) | 0 |
| தமிழ் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பம் (10) | 0 | (*1) | 0 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | (*1) | 3 | 1(*1) | (*1) |
| தேர்வும் மதிப்பீடும் | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 |
| மொத்தம் (100) | 4 | 3(*1) | 0 | 8 | 1(*3) | 0 | 4 | 3(*1) | 1 | 4 | 3(*1) | 1(*2) | 20 | 10 (*6) | 2(*2) |

**குறிப்பு:-**
சி - சிறுவினா (100 சொற்களுக்கு மிகாமல்) - மதிப்பெண்கள் - 2
ப - பத்தி வினா (200 சொற்களுக்கு மிகாமல் ) - மதிப்பெண்கள் - 4
க - கட்டுரை வினா (500 சொற்களுக்கு மிகாமல் ) - மதிப்பெண்கள் - 10
( ) - பிறைக்குறிக்குள் உள்ள எண்கள் மதிப்பெண்களைக் குறிக்கும்.
( *) - நட்சத்திரக் குறியீடு உள்ள எண்கள் தெரிவுநிலை வினாக்களைக் குறிக்கும்.
- கட்டத்திற்குள் உள்ள எண்கள் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.